# ஸ்ரீகலா SRIKALA




ஸ்ரீகலா SRIKALA
ஸ்ரீகலாவின்
மன்னிக்க வேண்டுகிறேன்!
MANNIKKA
VENDUKIREN


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER

தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS

Download

# Contents

ஸ்ரீகலாவின் “மன்னிக்க வேண்டுகிறேன்”
அத்தியாயம் - 1
அத்தியாயம் - 2
அத்தியாயம் - 3
அத்தியாயம் - 4
அத்தியாயம் - 5
அத்தியாயம் - 6
அத்தியாயம் - 7
அத்தியாயம் - 8
அத்தியாயம் - 9
அத்தியாயம் - 10
அத்தியாயம் - 11
அத்தியாயம் - 12
அத்தியாயம் - 13
அத்தியாயம் - 14
அத்தியாயம் - 15
அத்தியாயம் - 16
அத்தியாயம் - 17
அத்தியாயம் - 18
அத்தியாயம் - 19
அத்தியாயம் - 20

PDF தமிழ்.com
WWW.PDFTAMIL.COM

அதிகாலை வேளையின் ஏகாந்த சூழ்நிலையை ரசித்துக் கொண்டு நடந்த இளவஞ்சி மனம் மிகவும் சந்தோசமாக இருந்தது. அந்த வானத்தையே வசப்படுத்திய ஒரு உணர்வு அவளை ஆக்கிரமித்து இருந்தது. கால்கள் வழக்கம் போல் அவள் வீட்டு தெரு முனையில் இருக்கும் பிள்ளையார் கோவில் வந்ததும் தாமாக நின்று அதன் உள்ளே சென்றது. அங்கு ஒலிப் பெருக்கியில் ஒலித்துக் கொண்டு இருந்த பாடல் அவள் செவியை தீண்டிச் சென்றது.

“கணபதியே வருவாய்
அருள்வாய்
கணபதியே வருவாய்
அருள்வாய்
கணபதியே
வருவாய்

மனம் மொழி மெய்யாலே தினம் உன்னை
துதிக்க
மனம் மொழி மெய்யாலே தினம்
உன்னை
துதிக்க
மங்கள இசை எந்தன் நாவினில் உதிக்க
மங்கள இசை எந்தன் நாவினில் உதிக்க
கணபதியே வருவாய் . . . . . . . “

அந்த பாடலை பாடிக் கொண்டு இருந்தவரின் பரவசம் அவளையும் தொற்றிக் கொண்டது. வாய் தானாக பாட்டை முணுமுணுக்க சுவாமி சந்நிதியை நோக்கி சென்றாள். அர்ச்சகரிடம் அர்ச்சனை தட்டை நீட்டியவள் மனம், தன் கனவு நனவானதற்காக அந்த ஆனை முகத்தனுக்கு நன்றி சொன்னது.

"இன்று நான் முதன் முதலாக வேலைக்கு செல்கிறேன். என் கனவை, என் தந்தையின் கனவை நனவாக்கியதற்கு நன்றி கடவுளே. இறைவா நான் செய்ய போகும்

PDF தமிழ் .com

காரியங்கள் அனைத்திலும் என்னுடன் சேர்ந்து துணை நிற்பாயாக."

கண்கள் தெய்வத்தை தரிசத்தபடி நிற்க மனதில் அவளை பெற்று ஆளாக்கி தெய்வமாகி போன  தந்தையை நினைத்துக் கொண்டு அப்படியே நின்று இருந்தாள். அர்ச்சனை தட்டை நீட்டிய அர்ச்சகர் குரலில் தன்னுணர்வு பெற்று வீடு நோக்கி நடந்தாள் .

"அம்மா இங்கே வாங்க." குணவதியை பூஜையறைக்கு அழைத்து சென்ற இளவஞ்சி அவரின் பாதம் தொட்டு வணங்கி எழுந்தாள். மகளை ஆசிர்வதித்து திருநீறு பூசி விட்ட குணவதியின் கண்கள் கலங்கியது.

"அம்மா, இனி எல்லாம் நல்லதே நடக்கும் கவலைப்படாதீங்க" என்று தோளை ஆதரவாக பற்றிய மகளை, ஒரு புரியாத பார்வை பார்த்து விட்டு உள்ளே சென்றார் குணவதி. அம்மாவின் பார்வையின் அர்த்தம் இளவஞ்சிக்கு புரியாமல் இல்லை. ஆனால் அவளால் அதற்கு ஒன்றும் செய்ய முடியாது. உதட்டை அழுந்தக் கடித்து தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டவள், உடை மாற்ற தன் அறைக்குள் சென்றாள்.  அணிந்து இருந்த சுடிதாரை கழற்றி விட்டு கஞ்சி போட்டு மொடமொடவென இருந்த ஆகாய வண்ண பருத்தி சேலையை உடுத்திக் கொண்டு எளிமையாக ஒப்பனை செய்து முடித்து அறையை விட்டு வெளியில் வந்தாள்.

"அக்கா ஆல் த பெஸ்ட்" என்றபடி கையில் சாக்லேட்டுடன் நின்று கொண்டு இருந்த தம்பி இளஞ்செழியனை கண்டவுடன், யாருக்காகவும் எதற்காகவும் கலங்காத அவள் விழிகள் கலங்கியது.

"தேங்க்ஸ்டா....... தேங்க்ஸ்டா........." என்றவளின் குரல் உணர்ச்சி வசப்பட்டு இருந்தது. அவளின் குரலிலும், முகத்திலும் தெரிந்த உணர்ச்சியைக் கண்டு இளஞ்செழியன் அவளை ஆதரவுடன் அணைத்துக் கொண்டான். அவனின் கரங்கள் பரிவுடன் தமக்கையின் தலையை வருடியது. இளவஞ்சியை விட இரண்டு

ஆண்டுகள் இளையவன் அவன். ஆனால் இன்று மூத்த சகோதரனாக மாறி அவளைத் தோள் தாங்கி நிற்கிறான். இன்று மட்டுமல்ல என்றுமே அவன் அப்படித்தான்.

அன்று அவர்கள் தந்தை மறைவிற்கு பின் நான்குஆண்டுகளு கழித்து பொருளாதார சிக்கல் வந்த போதுஅவளுக்காக தன் மேல் படிப்பை கூட வேண்டாம் என்றுவேலைக்கு சென்றவன் அவன். ஆம் ....................................................அப்பொழுது அவன் பொறியியல் படிப்பு முடித்து இருந்த சமயம்இருவரில் யாராவது ஒருவர் தான் படிப்பை தொடர முடியும்என்ற நி லையில், தன் மேற்படிப்பு எம்.இ படிக்க வேண்டும்என்ற கனவை அவளுக்காக தூக்கி எறிந்து விட்டு வேலைக்குச் சென்று அவளின் மேற்படிப்புக்கு உதவினான். இளஞ்செழியன் மட்டும் இல்லை என்றால் அவளின் கனவு கனவாகவே போய் இருக்கும்.

"செழியா.... நீ மட்டும் இல்லை என்றால்......" வார்த்தை சொல்ல முடியாமல் அன்றைய நினைவில் இளவஞ்சியின் கண்கள் கலங்கியது.

"அக்கா என்ன பெரிய வார்த்தை எல்லாம் சொல்லிட்டு... இது என் கடமையும் கூட" என்ற தம்பியின் ஆறுதல் வார்த்தையில் கண்களை துடைத்தவள் புறப்படுவதற்கு தயாரானாள்.

"அம்மா வர்றேன்...... செழியா பை..." அவர்கள் இருவரிடமும் விடை பெற்று தன் இருசக்கர வாகனத்தில் ஏறி பறந்தாள்.

"ம் ..........." குணவதியிடம் இருந்து ஒரு பெருமூச்சொன்று கிளம்பியது.

"என்னம்மா?"

"நம்ம கிட்ட இவ்வளவு பாசமா அன்பா இருக்கா. ஆனால் வெளியில் அவள் காண்பிக்கும் முகம் கண்டு எனக்கே சில சமயம் பயமா இருக்குடா. இரும்பின் உறுதியோடு இருக்கும் அவள் மன வலிமை, அந்த தைரியம் இதெல்லாம் பார்க்கும் போது எனக்கு கலக்கமா இருக்கு."

PDF தமிழ் .com

"அம்மா என்னம்மா இது? இந்த காலத்து பெண்கள் அக்கா மாதிரி தான் இருக்கணும். இதில் நீங்க பயப்படற மாதிரி ஏதும் இல்லை."

"இது அவள் வாழ்க்கையும் சேர்த்து அல்லவா பாதிக்குது. அவள் மற்ற பெண்கள் போல் சராசரியான பெண்ணாக இல்லாமல் போனாளேன்னு என் மனசில் தோன்றுவதை என்னால் தவிர்க்க முடியல. அப்படி இருந்து இருந்தால் இந்நேரம் இரண்டு குழந்தைக்கு அம்மா ஆகி இருப்பா." குணவதியின் பேச்சை இளஞ்செழியனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அதை அவனின் இறுகிய முக பாவமே உணர்த்தியது.

"அம்மா இந்த பேச்சை இதோட விடுங்க. அக்கா முன் ஏதாவது பேசி அவங்க மனசை கஷ்டப் படுத்தாதிங்க. அதுவும் இது அவங்க வாழ்க்கை பிரச்சினை. அவங்க தான் முடிவு பண்ணனும்" என்றவன் அதற்கு மேல் அங்கு நிற்காமல் தன் அலுவலகத்திற்கு கிளம்ப சென்றான். குணவதியும் அவனுக்கு உணவு எடுத்து வைக்க உள்ளே சென்றார்.

இளவஞ்சி தன் இரு சக்கர வாகனத்தில் பறந்து கொண்டு இருந்தாள். அவளின் மனமோ அதை விட இறக்கை கட்டிக் கொண்டு சந்தோசத்தில் பறந்தது. மனதின் மகிழ்ச்சியை அவள் முகம் அப்படியே பிரதிபலித்தது. போக்குவரத்து நெரிசலில் மிகவும் லாவகமாக தன் வாகனத்தை ஓட்டிக் கொண்டு சென்ற அவளை மிகுந்த ஆச்சரியத்துடன் ஒரு சிலர் பார்த்தனர். எதையும் உணரும் மனநிலையோ இல்லை கண்டு கொள்ளும் மனநிலையோ அவளுக்கு இல்லை.

இளவஞ்சி இன்று தான் முதன்முதலாக வேலைக்குப் போகிறாள். அலுவலகத்தில் குளிரூட்டப்பட்ட அறையில் கணினி முன் அமர்ந்து பார்க்கும் வேலை அல்ல அவள் வேலை. அவளை போன்றவர்களை அந்த படைக்கும் பிரம்மாவிற்கு அடுத்து துதிப்பார்கள் போற்றுவார்கள். இன்னும் சொல்ல போனால் அந்த கடவுளை விட ஒரு படி

மேல் என்று கூட சொல்வார்கள். இப்பொழுது புரிந்து இருக்குமே இளவஞ்சியின் வேலை பற்றி. இன்னமும் தெரியவில்லையா?

இளவஞ்சி மருத்துவ (MBBS ) படிப்பு முடித்து, மேலும் மகளிர் நோய் மருத்துவயியலில் பட்டம் (MD Gynecology ) இப்பொழுது தான் முடித்து இருக்கிறாள். பிரபல தனியார் மருத்துவ மனையில் அவளுக்கு வேலை கிடைத்து இருக்கிறது. இன்று தான் அதில் சேரப் போகிறாள். இனி வரும் நாட்களில் அந்த மருத்துவமனையில் நிகழும் ஜனனத்திற்கு அவளும் உறுதுணையாக இருக்கப் போகிறாள். அந்த நினைப்பே அவளுக்கு புது உற்சாகத்தைக் கொடுத்தது.

கம்பீரமாக நின்று இருந்த அந்த மருத்துவமனையை ஏறிட்டுப் பார்த்தவள் மனம் பெருமிதப்பட்டது. பின்னே இருக்காதா இந்த மருத்துவமனை இலவச சேவையில் புகழ் பெற்றது. பணம் மட்டுமே பிரதானம் என்ற கொள்கையைக் கொண்டு இது செயல் படவில்லை. அந்த ஒரு காரணத்திற்காகவே இந்த மருத்துவமனையில் வேலைக்கு சேர விரும்பினாள். அவளின் அதிர்ஷ்டம் அவள் நினைத்தபடி இங்கேயே வேலை கிடைத்து இருக்கிறது. அதே உற்சாகத்துடனும், மகிழ்ச்சியுடனும் மருத்துவமனைக்குள் காலடி எடுத்து வைத்தாள்.

"வெல்கம் டு அவர் ஹோம். ஆல் த பெஸ்ட் இளவஞ்சி." முதன்மை மருத்துவர் அருள்நாதன் அவளை வரவேற்றார். அவர் தான் இந்த மருத்துவமனைக்குச் சொந்தக்காரரும் கூட. பார்ப்பதற்கு கையெடுத்து வணங்கக் கூடிய கண்ணியமான தோற்றம். கண்களில் இருந்த கனிவு அவரின் மரியாதையை இன்னமும் கூட்டியது. அந்த மருத்துவமனையை வீடாக பாவித்து அதில் பணி புரியும் ஊழியர்களை தன் வீட்டாராக எண்ணி அவர் அன்பை காட்டுவதால் ஊழியர்களும் ஏதோ பணி செய்தோம், ஊதியம் வாங்கினோம் என்று இல்லாமல் மிகுந்த நேசத்துடனும், பற்றுடன் வேலையை சேவையாய் எண்ணி செய்தனர்.

PDF தமிழ் .com

"தேங்க்யூ டாக்டர்." அவரிடம் விடை பெற்று வெளியில் வந்தவள், தான் பணியாற்ற வேண்டிய மருத்துவரின் அறைக்கு சென்றாள்.

"டாக்டர் கனிமதி " என்ற பெயர் பலகை பொறித்த அறைக் கதவைத் தட்டி, அனுமதி கிடைத்ததும் உள்ளே நுழைந்தாள். கனிமதி பேருக்கு ஏற்ப கனிவாக இருந்தார். அவளின் விவரத்தைக் கேட்டு அறிந்தவர், தன்னிடம் பயிற்சி எடுக்கும் மருத்துவர் அமுதாவை அழைத்து இளவஞ்சிக்கு எல்லாவற்றையும் சொல்லிக் கொடுக்கும்படி அனுப்பினார்.

"இளவஞ்சி வாங்க...வாங்க.......' என்று அமுதா வரவேற்றபடி தன் மற்ற சக மருத்துவர்களுக்கும் அறிமுகம் செய்து வைத்தாள்.

"இது செல்வி, பாரதி, மேகலை........... எங்க கூட்டணியில் இப்ப நீயும் ஐக்கியமாகிட்ட" கலகலப்பாக பேசியவளை ஆச்சரியமாகப் பார்த்தாள் இளவஞ்சி.

"என்ன இப்படி ஒரு ஆச்சரியப் பார்வை? என்னடா இவள் சீரியசாக இல்லாம கலகலப்பா இருக்காளேன்னா? நம்ம வேலையில் மட்டும் தான் சீரியசாக இருக்கணும் மற்ற நேரம் இப்படித் தான் இருக்கணும்." என்று சொன்னவளை இளவஞ்சிக்கும் பிடித்து தான் போயிற்று. இளவஞ்சியும் அவர்கள் கூட்டத்தில் ஐக்கியமாகி விட்டாள்.

பேசிக் கொண்டு இருக்கும் போதே ஒரு பெண்ணிற்கு பிரசவ வலி வந்து விட்டதாக செவிலிப் பெண் வந்து கூற, மறுநிமிடம் எல்லோரும் அங்கே விரைந்தனர். கனிமதியும் அங்கே விரைந்து வந்தவர், அந்த பெண்ணை சோதித்தவர், இன்னும் நான்கு மணி நேரத்தில் குழந்தை பிறந்து விடும் என்று அதற்கான ஏற்பாட்டை செய்ய சொல்லி விட்டுச் சென்றார்.

வலியில் போராடிக் கொண்டு இருந்த பெண்ணை விட அவள் கணவன் தான் அதிகம் வேதனைப் பட்டான். மனைவிக்கான அவனின் துடிப்பை பார்க்கும் போது இளவஞ்சியின் மனதில் ஏதோ இனம் புரியாத ஒரு

உணர்வு. இளவஞ்சியின் முக மாறுதலை அமுதா வேறு மாதிரி எண்ணிக் கொண்டு அவளது தோளை தட்டிக் கொடுத்து, "உனக்கு இன்று தான் முதல் கேஸ். அதான் இப்படி இருக்க. போகப் போக உனக்கும் பழகிப் போய் விடும்" என்றாள். இளவஞ்சி நினைத்ததோ வேறு, ஆனால் அதை அமுதாவிற்குச் சொல்லாமல் மறைத்தாள்.

மிகவும் போராடி அன்னையை ஒரு வழி படுத்தி விட்டு அந்த பிஞ்சு பூலோகத்தை தரிசித்தது. அதை கையில் வாங்கிய இளவஞ்சி முதன் முதலாக தன்னுள் ஒளிந்து இருந்த பெண்மையை, தாய்மையை அன்று தான் உணர்ந்தாள். இது நாள் வரை அவள் போட்டு இருந்த இரும்பு கவசம் அந்த நிமிடம் உடைத்தெறியப்பட்டது போல் அவளுக்கு தோன்றியது. அன்று முழுவதும் அந்த பட்டு உடலின் ஸ்பரிசமே நியாபகத்தில் இருந்து அவளை சிலிர்க்க வைத்தது.

"ஹலோ அமுதா, யார் இந்த தேவதை? இதற்கு முன் இங்கே பார்த்ததில்லையே?" என்ற குரலில் தான் தன் நினைவு அடைந்தாள் இளவஞ்சி.

நல்ல உயரத்தில் முகம் நிறைந்த புன்சிரிப்புடன் பார்ப்பதற்கு அழகாக இருந்தவனைக் கண்டு திகைத்துப் போய் அமுதாவை பார்த்தாள் இளவஞ்சி. அவனால் அந்த புன்னகை அழகா, இல்லை புன்னகையால் அவன் அழகா என்று அவளுக்கு சந்தேகமாக இருந்தது. ஆனாலும் ஆண்களைக் கண்டால் அவளுக்கு வரும் இயல்பான வெறுப்பு வந்து அவள் எண்ணத்தை தடை செய்தது.

"டாக்டர் சார் உங்க கண்ணுக்கு நாங்க எல்லாம் தேவதையா தெரியலையா? இது ரொம்ப அநியாயம்." அமுதா அவனைப் பார்த்து கேட்டாள்.

"ரொம்ப அநியாயம் தான். இப்படி ஒரு ராட்சசி கிட்டே இருந்து இப்படி ஒரு வார்த்தை கேட்பது ரொம்ப அநியாயம் தான்." அவன் அமுதாவை பார்த்து கிண்டல் அடித்தான்.

PDF தமிழ் .com

"அமுதா வா போகலாம்" இளவஞ்சி அவளை அவசரப் படுத்தினாள்.

"ஹேய் நீ பயப்படாதே. சார் எப்பவும் இப்படி தான். ஓ...... சொல்ல மறந்துட்டேன். இவர் டாக்டர். புகழேந்தி சைக்கியாட்ரிஸ்ட். புகழ் சார் இவங்க இளவஞ்சி. இப்ப தான் இங்கே ஜாயிண்ட் பண்ணி இருக்காங்க."

"ஓ..... மி...... " புகழேந்தி இழுத்துக் கொண்டே இளவஞ்சியின் அடையாள அட்டையை பார்த்தான். பார்த்தவன் திகைத்து போய் அப்படியே நின்று இருந்தான். திகைத்தது என்னமோ ஒரு நிமிடம் தான் பின் தன்னை சமாளித்துக் கொண்டு, "வெல்கம் மிசஸ். மித்ராதன்" இளவஞ்சியை வரவேற்றான்.

"மிசஸ். மித்ராதன் இல்லை மிசஸ். இளவஞ்சி" கம்பீரமாகக் கூறி விட்டுச் சென்றவளை குழப்பத்துடன் பார்த்தவன் முகத்தில் கொஞ்ச நேரம் கழித்து புன்னகை சாயல் தோன்றியது.

"சரியான ஜொள்ளு பார்ட்டி" முணுமுணுத்தாள் இளவஞ்சி.

"அப்படி எல்லாம் சொல்லாதே. புகழ் ரொம்ப நல்ல டைப். எல்லார் கிட்டேயும் இப்படித் தான் பழகுவார். அதை நீ தப்பா எடுத்துக்காதே. ஆங்.....சொல்ல மறந்துட்டேன் நம்ம டீன் டாக்டர். அருள்நாதனோட ஒரே சன் தான் இவர். ஆனால் அந்த பந்தா கொஞ்சம் கூட கிடையாது. அவர் அப்பா காலத்துக்குப் பின் இவர் தான் இந்த மருத்துவமனையை நடத்தப் போறார். அதனால வருங்கால முதலாளி கொஞ்சம் பார்த்து நடந்துக்கோ." கேலி போல் புகழேந்தியின் முக்கியத்துவத்தை அவளுக்கு உணர்த்தினாள் அமுதா.

"ம்....... ம்......" என்று இளவஞ்சி வாய்க்குள் முணங்கினாள்.

இரவு படுக்கும் போதும் புகழேந்தி சொன்ன "மிசஸ். மித்ராதன்" என்ற சொல்லே இளவஞ்சியின் காதில் ஒலித்துக் கொண்டு இருந்தது. இத்தனை வருடங்களில்

யாரும் அவளுக்கு மணமானதை நினைவூட்டியது இல்லை. கல்லூரியில் படிக்கும் போது இடையில் அவளுக்கு திருமணமானதாலோ என்னவோ கல்லூரியைப் பொறுத்த வரை அவள் இளவஞ்சி மட்டுமே. வீட்டிலும் அன்னையும், தம்பியும் மறந்தும் அவள் திருமணத்தை நியாபகப்படுத்தியது இல்லை. இன்று புகழேந்தி அந்த நியாபகத்தை கிளறி விட்டு விட்டான்.

இளவஞ்சியின் உடலில் உள்ள ஒவ்வொரு அணுவும் கணவனின் அணைப்புக்காக ஏங்கியது. அவனின் அருகாமையை அவள் மனம் நாடியது. கண்களில் கண்ணீர் வழிய அவனைப் பற்றிய எண்ணங்களை அடக்க வழி தெரியாமல் அப்படியே அமர்ந்து இருந்தாள். இப்படி எல்லாம் இளவஞ்சி இருப்பாள் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு. கணவனைப் பற்றிய நினைவு வந்தவுடன் அவள் கண்கள் வெறுப்பை உமிழ்ந்தது. முகம் அருவருப்பைக் காட்டியது. அதோடு மனதில் சொல்லவொண்ணா கோபம் ஆத்திரம் எழுந்தது.

அவளையும் அறியாமல் அவள் கை அவள் கழுத்தில் கிடந்த மாங்கல்யத்தை வருடியது. ஏழு வருடங்களாக அவள் கழுத்தில் தான் இருக்கிறது. ஆனால் எந்த ஒரு அர்த்தமும் இல்லாமல் இருந்ததாலோ என்னவோ அவளுக்கும் தனக்கு மணமாகி விட்ட உணர்வே தோன்றவில்லை. அதை கட்டியவனின் நியாபகம் கொஞ்சமும் அவளிடத்தில் இல்லை. இவ்வளவு ஏன் அவன் முகம் கூட நியாபகத்தில் இல்லை. அவளின் பெயர் உடன் இந்த 'மித்ராதன்' என்று சொல் ஒட்டிக் கொண்டே வந்ததாலோ என்னவோ அந்த சொல் மட்டுமே அவளுக்கு அன்னியமாக தெரியவில்லை. ஆனால் ஒன்று இத்தனை வருடங்களில் ஆண்களிடமிருந்து அவளை விலக்கி வைத்ததோடு மட்டுமில்லாமல் அவளை யாரும் நெருங்காமல் வேலி போல் அவளைப் பாதுகாத்தது.

PDF தமிழ் .com

சென்னை விமான நிலையம் பரபரப்பாக இயங்கிக் கொண்டு இருந்தது. ஆனால் அதற்கு கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல் மித்ராதன் நிதான நடையுடன் சென்று தன் பயணப் பொதிகளை எடுத்தவன் அதே நிதான நடையில் வெளியில் வந்தான். முன்பு எல்லாம் காலில் சக்கரம் வைத்தது போல் பம்பரமாக சுழன்று கொண்டு இருப்பான். வாழ்க்கையில் மிகப் பெரிய அடி விழுந்த பின் தான் இந்த நிதானம் அவனிடத்தில் வந்து இருக்கிறது.

வந்து இருக்கிறது என்ன...... அவனாக வரவழைத்துக் கொண்டான். இனி மேலும் அடி பட அவனால் முடியாது. இனி வாழ்க்கையில் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் மிகவும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்ற கொள்கையை மனதில் அழுந்த பதிய வைத்துக் கொண்டான். இளவஞ்சியை நேரில் பார்த்த பின்பும் இந்த நிதானம் அவனுக்கு கை கொடுக்குமா?

வெளியில் வந்தவன் கண்கள் பெற்றவர்களைத் தேடியது. அவனின் எண்ணத்தை பொய்யாக்காமல் அவர்கள் வருகை தந்து இருந்தனர். அவர்களும் தங்கள் மகனை தான் பார்த்துக் கொண்டு இருந்தனர். ஏழு நெடிய ஆண்டுகளுக்குப் பின் தரிசனம் தந்து இருக்கிற மகனின் உருவத்தைக் கண்களில் நிறைத்து கொண்டனர். மேலை நாட்டு வாசம் அவனின் அழகை பன் மடங்கு கூட்டி இருந்தது. அழகும் கம்பீரமும் ஒருங்கிணைந்து இருந்த மகன் நடந்து வரும் அழகை பார்த்துக் கொண்டு இருந்தனர் பெரியவர்கள் இருவரும்.

"ஹாய் டாட்.......ஹாய் மாம்..." உற்சாகத்துடன் அவர்களைப் பார்த்துக் கையை உயர்த்தி ஆட்டினான்.

'"மித்ரா எப்படி இருக்கடா?" ஒரே குரலில் கேட்டவாறு அருணகிரியும், அமராவதியும் அவனை கட்டித் தழுவிக் கொண்டனர். அவர்களின் கண்கள் அவர்களையும் அறியாமல் கலங்கியது.

"ஓஹ்.........டாட் மாம் என்ன இது சின்ன பசங்க மாதிரி. அதான் நான் வந்துட்டேனே. அப்புறம் எதுக்கு வருத்தம்?"

"ஆமாம்.....ஆமாம்...... ரொம்ப சீக்கிரம் திரும்பி வந்துட்ட" முகத்தை நொடித்தார் அன்னை.

"அம்ரு......என் செல்லம்ல இனி உன்னை விட்டுட்டு நான் போக மாட்டேன் போதுமா?"

"நிஜமா?" அப்பாவியாக கண்ணை விரித்த அன்னையைக் கண்டு அவன் மனமும் நெகிழத் தான் செய்தது.

"உங்க மேலே ப்ராமிஸ் போதுமா?" என்று அன்னையிடம் வாக்கு கொடுத்தவன், தந்தையிடம் அவரின் தொழிலைப்பற் றி விசாரித்தபடி நடந்தான். அவர்களின் கார் இருக்கும்இடம் வந்ததும் பயணப் பொதிகளை அதில் போட்டு விட்டுஅதில் ஏறி அமர்ந்து தங்கள் வீடு நோக்கிப் பயணப்பட்டனர்.

மகனிடம் ஏதோ பேச வாயெடுத்த அருணகிரி, அவன்வெளிப் றத்தை ஒருவித ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டுவரு வதைக் கண்டு பேசாமல் இருந்து விட்டார். ஏழுவருடங்களுக் பார்த்த ஊருக்கும் இப்பொழுதுஇருக்கும் ஊருக்கும் மிகுந் த வேறுபாடு இருப்பதை ஆச்சர்யத்துடன் பார்த்தான். தான் பிறந்த மண்ணை ஆசையுடன் பார்த்துக் கொண்டே வீடு வந் சேர்ந்தான்.

"மாம் உங்க கையால சமைச்ச சாப்பாடு சாப்பிட்டுஎவ்வளவு நாள் ஆச்சு? நான் போய் குளிச்சிட்டு வர்றேன். சீக்கிரம் ரெடி பண்ணுங்க" என்று தன் அறைக்குசென்றான்.

குளித்து முடித்து வந்தவன் நேராக உணவு மேஜைக்கு தான் சென்றான். அன்னையிடம் கொஞ்சி குலாவி அவரை ஊட்டி விடச் செய்து உண்டவனின் மனம் நிறைந்து இருந்தது. அந் த பெற்றோரின் மனமும் கூட தான்.

"டாட் இன்னையில் இருந்து கம்பெனிக்கு வரலாம் என்றுஇரு கேன். நீங்க என்ன சொல்றிங்க?"

"நீ வர மாட்டியா, வந்து பொறுப்பு ஏத்துக்க மாட்டியான்னுநான் ஏங்கிட்டு இருக்கேன். எப்ப வேணும்னாலும் வா ராஜா."

PDF தமிழ் .com

"அப்பா போகலாமா?" மித்ராதன் தந்தையுடன் செல்ல ஆயத்தமானான்.

"மித்ரா இன்னைக்கு தானே வந்து இருக்க. இன்னைக்கு ரெஸ்ட் எடுத்துட்டு நாளைக்கு போகக் கூடாதா?" அமராவதி கோபித்துக் கொண்டார்.

"மாம் ரெஸ்ட் எல்லாம் உன்னை மாதிரி வயசானவங்களுக்கு. என்னை மாதிரி யூத்துக்கு இல்லை." கண்சிமிட்டியபடி அம்மாவின் தாடையை பற்றி செல்லம் கொஞ்சியபடி சொன்னான்.

"அப்படி சொல்லுடா என் சிங்கக் குட்டி. வர வர இந்த கிழவி தொல்லை தாங்கலைடா. நம்ம மாதிரி யூத்தோட தாட்ஸ் அவளுக்குப் புரிய மாட்டேங்குது." அருணகிரி மனைவியை மகனுடன் சேர்ந்து கொண்டு கலாய்த்தார்.

"இப்ப தப்பிச்சுட்டிங்க. பிறகு இங்கே தானே வந்தாகணும்" முறுக்கிக் கொண்டாலும் அமராவதி வாயில் வரை வந்து கணவனையும் மகனையும் வழியனுப்ப தவறவில்லை.

அருணகிரி பெரிய தொழிலதிபர். கிரானைட் ஏற்றுமதி தொழிலில் கொடி கட்டிப் பறப்பவர். வருமான வரித்துறையினரால் சோதனை செய்யப்பட்டு பல கிரானைட் தொழிற்சாலைகள் மூடப்பட்ட நிலையில் இவரது மட்டும் கம்பீரம் குறையாமல் அன்று போல் இன்றும் ஓடிக் கொண்டு இருப்பதற்கு காரணம் இவரின் நேர்மையே. அருணகிரியின் ஒரே வருத்தம் அவரின் ஒற்றை மகன் தொழிற்சாலையை பார்க்காமல் எங்கோ வெளிநாட்டில் இருந்து வந்தது மட்டுமே.

அதுவும் இதோ மகனின் வரவு மூலம் களைந்து விட்டது. ஏழு ஆண்டுகள் வராமல் இதோ அதோ என்று போக்கு காட்டிய மகன் வந்தது மட்டுமில்லாமல், தொழில் பொறுப்பையும் கையில் எடுத்துக் கொண்டது அவருக்கு நிம்மதியாக இருந்தது.

அலுவலகத்தில் நுழைந்தவுடன் நேரே கூட்டம் நடப்பதற்காக இருந்த அறைக்கு சென்றனர் அருணகிரியும் மித்ராதனும். ஏற்கெனவே அலுவலக ஊழியர்களுக்கு அறிவித்துஇருந் ததால் இவர்களுக்கு முன்னமே அவர்கள் அங்கு குழுமி இருந்தனர். எல்லோருக்கும் தன் மகனை அறிமுகப்படுத்தியவர் இனி மகன் தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளப் போவதாக கூறினார். மகன் பதவிஏற் பதை முன்னிட்டு எல்லோருக்கும் ஒரு மாத ஊதிய தொகையை ஊக்க தொகையாக அறிவித்ததால் எல்லோரும் சந்தோசத்துடன் சென்றனர்.

மாலை வரை அங்கேயே இருந்து தொழிலைக் கவனித்த மகனின் பொறுப்பை பார்த்து அருணகிரிக்கும் இனி மகனைப் பற்றிய கவலை இல்லை என்றே தோன்றியது. அதிலும் அவனின் நிதானம் பொறுமை எல்லாம் அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

"போதும் மித்ரா இன்னைக்கு இவ்வளவு வேலை போதும். நாளை காலை வந்து மீதியைப் பார்த்துக் கொள்வோம்."

"ஓகே டாட். நானும் என் பிரண்ட்சை பார்க்க போகணும். வீட்டுக்கு போயிட்டு ரெப்ரெஷ் பண்ணிட்டு போறேன்" என் றவாறு எழுந்தவன் தந்தையுடன் வீட்டை நோக்கிப் பயணமானான்.

"ஹாய் மித்து கண்ணா எப்படா யூ எஸ்ல இருந்து வந்த? நீ திடீர்ன்னு போன் பண்ணி வர சொன்னதும் எனக்குஒண்ணு மே புரியல. எப்படிடா ஏழு வருஷம் இந்த பக்கமே வராதவன் இப்ப வந்து இருக்க. இங்கேயே செட்டில் ஆகிற முடிவா? இல்லை மறுபடியும் விஸ்க்.......... போக போறியா?" கையை விமானம் பறப்பது போல் காட்டிய எழிலரசனை பார்த் சிரித்தபடி வந்து அமர்ந்தான் மித்ராதன்.
"எங்கேடா மத்தவங்க எல்லாம்?"

"உன்னை மாதிரி எல்லோரும் பேச்சுலரா என்ன? புள்ளை குட்டின்னு ஆகி போச்சு இல்ல. அவங்களை எல்லாம் சரி கட்டி வர வேண்டாமா என்ன? முதல்ல நான் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லு?"

தமிழ் நாவல்

"ம்......சொல்றேன். நான் இங்கே தான் இருக்க போறேன். அப்பாவுக்கு ஓய்வு கொடுக்கலாம்ன்னு நினைக்கிறேன். வந்த இன்னைக்கே தொழிலை கையில் எடுத்தாச்சு. இனி நான் யூ எஸ் போக மாட்டேன். உன் கேள்விக்கு பதில் போதுமா?"

"டேய்......... எவ்வளவு சந்தோசமான விஷயம் சொல்லி இருக்க." என்று மித்ராதனை இறுக்கி அணைத்துக் கொண்டான் எழிலரசன்.

"டேய்...... நான் சிஸ்டர் இல்ல. இவ்வளவு வேகம் என்னால் தாங்காதுடா." சிரித்தபடி எழிலரசனை விடுவித்தான் மித்ராதன்.

"ம்.... சித்துவா இருந்தா அது வேற மாதிரி இருக்கும்." கண் சிமிட்டி சிரித்தான் எழிலரசன். அதற்குள் மற்ற நண்பர்களும் வர அந்த இரவு நேர விடுதி களை கட்டியது. எல்லாம் பணக்கார வீட்டு இளவரசர்கள் ஆட்டத்திற்கு கேட்கவா வேணும். எல்லோரும் என்ன ஆட்டம் போட்ட போதும், தண்ணி அடித்த போதும், இளம் பெண்களுடன் ஆடிய போதும் மித்ராதன் அமர்ந்து கொண்டு ஒரு புன்சிரிப்புடன் அதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்தான்.

ஒரு இளம் சிட்டு அவன் அருகில் வந்து, "ஹாய் ஹேன்ட்சம், என்னுடன் ஆட வருகிறாயா?"

"சாரி. ஐம் என்கேஜ்ட்"

"சோ வாட்?" இளம் பெண் தைரியமாக அவனைப் பார்த்து கேள்வி கேட்டாள்.

"உனக்கு ஒன்றும் இல்லை பெண்ணே. எனக்கு தான் கஷ்டம். உன்னுடன் நான் ஆடியதை என் மனைவி பார்த்தால் என்னை தான் உதைக்க வருவாள்." சிரிப்புடன் சொல்லியவனை எழிலரசன் ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே அவன் அருகில் வந்தான்.

மித்ராதன் திருமணம் முடிந்து மனைவியை விட்டு விட்டு வெளிநாடு சென்றது எழிலுக்கு தெரியும். அதிலும் ஏழு ஆண்டுகளாக இந்த பக்கம் அவன் எட்டிப் பார்க்காமல் இருந்ததிலேயே தெரிந்தது அவனின் மண வாழ்க்கையில் குழப்பம் என்று. அதிலும் பிரிந்து இருக்கும் மனைவி பற்றி அவன் பேசியது கண்டு எழில் குழப்பம் அடைந்தான். வேண்டாத மனைவியை தூக்கி தூர எறிந்து விட்டு வாழ்க்கையை அனுபவிப்பது விட்டு விட்டு மனைவியைப் பற்றி பேசுகிறானே முட்டாள் என்று தான் அவனுக்கு தோன்றியது.

"என்ன எழில்?" கண்களில் ஆச்சிரியத்துடனும் கேள்வியுடனும் பார்த்த நண்பனைப் பார்த்து கேட்டான்.

"இல்லை நீயா இப்படின்னு பார்க்கிறேன்"

"ஹேய் நான் என்ன பொய்யா சொல்றேன். எனக்கு கல்யாணம் ஆகி விட்டது தானே. அது உண்மை தானே. இதில் மறைக்க என்ன இருக்கு?"

"ஒன்றும் இல்லை தான்." என்று கூறிய எழிலரசன் மேற்கொண்டு எதுவும் கேள்வி கேட்கும் முன் மித்ராதன் எழுந்தான்.

"ஓகே எழில் மத்தவங்க கிட்ட சொல்லிடு. நான் கிளம்பறேன்." எழில் பேச வாய் திறக்கும் முன் அங்கிருந்து வெளியேறினான். வெளியேறும் நண்பனின் முதுகைப் பார்த்த எழிலுக்கு பெருமூச்சு தான் வந்தது.

வீட்டிற்குள் நுழையும் போதே அம்மாவும் அப்பாவும் தூங்காமல் விழித்துக் கொண்டு இருப்பதைப் பார்த்தவன் நேரே அவர்களிடம் சென்றான். அம்மாவின் மடியில் தலையை வைத்துப் படுத்தான். அமராவதி அவன் தலையை வருடி விட்டார். கண்களை மூடி அதன் சுகத்தில் லயித்து இருந்தான் மித்ராதன்.

"இதை எல்லாத்தையும் நான் ரொம்ப மிஸ் பண்ணினேன் மாம்." என்றவனின் குரல் ஏனோ நடுங்கியது. மகனின்

தமிழ் நாவல்

குரலில் இருந்த வேதனை பெற்றவர்களுக்கு தெரியாதா என்ன?

அருணகிரி பேசு என்பது போல் மனைவியைப் பார்த்து சைகை செய்தார். மனைவியோ கெஞ்சுவது போல் அவரைப் பார்த்தவள் நீங்களே பேசுங்களேன் என்று பதிலுக்கு சைகை செய்தார். இருவரும் சைகை செய்வதை மித்ராதன் கண்டு கொண்டு விட்டான். அன்னையின் மடியில் இருந்து எழுந்தான்.

"என்கிட்ட என்ன சொல்லணும் சொல்லுங்க மாம்?"

"அது....... வந்து...... உனக்கு....... மருமகள்.... " தான் சொல்ல வந்ததை கோர்வையாக சொல்லாமல் திக்கி திணறினார் அமராவதி, மகன் என்ன சொல்வானோ என்ற பயமும் கூட.

"ஓ...... உங்களுக்கு மருமகள் கொண்டு வர முடிவு செய்துட்டிங்க அப்படித் தானே?" மகனின் பேச்சு புரியாமல் பெற்றோர் இருவரும் புரியாமல் அவனைப் பார்த்தனர்.

"ஒகேம்மா. உங்க இஷ்டம்."

அருணகிரிக்கும் அமராவதிக்கும் ஒரே நேரத்தில் முகம் மலர்ந்தது. "அப்ப நாளைக்கே........ "

"நாளைக்கே பெண் பார்க்க ஏற்பாடு செய்யுங்க." அலட்டிக் கொள்ளாமல் சொன்ன மகனைக் கண்டு இருவருமே ஒரு சேர அதிர்ச்சி அடைந்தனர். பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் மித்ராதன் தன் அறைக்குச் செல்ல எண்ணி மாடிப்படியில் கால் வைத்தான்.

"அம்ரூ....... " தந்தையின் கூக்குரலில் திரும்பி பார்த்தான். அங்கே அமராவதி நெஞ்சை பிடித்துக் கொண்டு கீழே சரிந்து விழுந்து கொண்டு இருந்தார்.

"மாம் ........ " என்று அலறியபடி அமராவதியின் அருகில் ஓடி வந்தவன் அவரை தன் கரங்களில் ஏந்திக் கொண்டு காரை நோக்கி ஓடினான். அருணகிரி மனைவியின் அருகில் அமர்ந்து கொள்ள கார் மருத்துவமனை நோக்கி விரைந்தது.

அவசர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டு அமராவதிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. அவரின் உடல்நலம் குறித்துஎந்த ஒரு தகவலும் இல்லை. அருணகிரி அப்படியே ஒடிந்து போய் அமர்ந்து விட்டார். மித்ராதன் தந்தைக்கு எப்படிஆறுதல் சொல்வது என்று புரியாமல் தவித்தான்.

"டாட் நான் வேணும்ன்னு........ " தான் கூறியதற்கு காரணத்தை கூற முற்பட்டான்.

"வேண்டாம் மித்ரா. நான் எதையும் கேட்கும் மன நிலையில் இல்லை." வேறு வழியின்றி மித்ராதனும் தந்தையுடன்சேர்ந்து தாயின் உடல் நலம் குறித்து நல்ல செய்தி வர வேண்டும் என் மனதில் பிராத்தித்துக் கொண்டு அமர்ந்துஇருந்தான்.

இளவஞ்சி தன் கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். அது மணி பதினொன்றைக் காட்டியது. இன்று நடந்த பிரசவத்தில்சிக்கல் ஏற்பட்டதால் அவளுக்கு கொஞ்சம் தாமதமாகிவிட்டது. அவளை மாதிரி உள்ள மருத்துவர்களுக்கு ஏதுநேரம் காலம் எல்லாம். அவள் வீட்டிற்குச் செல்லும் முன்அவசர சிகிச்சை பிரிவில் வைக்கப்பட்டு இருந்த சிறிதுநேரத்திற்கு முன் பிறந்த குழந்தையைப் பார்க்க எண்ணினாள். மூச்சு விடவே சிரமப்பட்டுக் கொண்டுஇருந்த அந்த குழந்தையை பார்க்கும் போது அவளுக்குபரிதாபமாக இருந்தது. அதை பார்க்கும் ஆவல் மனதில்உந்த அங்கே சென்றாள்.

குழந்தையை பார்த்தவள் மனம் கொஞ்சம் லேசானது. ஏனெனில் இப்பொழுது சீராக மூச்சு விட்டபடி குழந்தை உறங்கிக் கொண்டு இருந்தது. ஆனால் மூக்கில் செயற்கை

சுவாசக் குழாய் சொருகி பார்க்க கொஞ்சம் பரிதாபமாகவும் இருந்தது.

'ஹப்பா............. பிறந்த போது என்ன பாடு படுத்தி விட்டது. இப்பொழுது எப்படி நிம்மதியாக தூங்கிக் கொண்டு இருக்கிறது.' என்று எண்ணிக் கொண்டு வந்தவள் முகத்தில் புன்னகை தோன்றியது.

நீண்ட அந்த வாராந்தாவில் நடந்து வந்து கொண்டு இருந்தவளுக்கு யாரோ தன்னைப் பார்ப்பது போல் தோன்றியது. நிமிர்ந்து பார்த்தவள் விழி வட்டத்தில் ஒருவன் தெரிந்தான். அவனின் விழிகள் இவளை விட்டு அகலவில்லை. அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். அதைக் கண்டு அவளுக்கு எரிச்சல் வந்தது.

'ஹாஸ்பிட்டல் வந்தும் இவங்க எல்லாம் அடங்குறாங்களா? தெரிந்தவர் யாருக்கோ உடம்பு சரியில்லாமல் தானே ஐசியூ பக்கம் வந்து நிக்கிறாங்க. அங்கேயும் வந்து அவர்களுக்காக வருத்தப் படுவதை விட்டு விட்டு சைட் அடிக்கிறதை பாரு. கண்ணு ரெண்டையும் நோண்டினால் தான் சரிப்படுவான்.' எரிச்சலுடன் யோசித்துக் கொண்டு வந்தாள். அவனைத் தாண்டி போகும் போது தான் அவன் அருகில் கண் மூடி அமர்ந்து இருந்தவரை கவனித்தாள்.

'இவர்........ இவர்......' அவள் உடல் நடுங்கியது.

'அப்படி என்றால் இவன்......... ' நினைக்கும் போதே உடல் ஆத்திரத்தில் நடுங்கியது. அங்கே நிற்காதே போ என்று மனம் அறிவுறுத்தினாலும் அவளின் மருத்துவ அறிவு அவரை நோக்கிப் போக வைத்தது.

"க்கும்......... " அருணகிரி அருகில் சென்று தொண்டையை செருமினாள். அதில் கண் திறந்து பார்த்தவர் இளவஞ்சியைக் கண்டு திகைத்தார். மறுநிமிடம் அவர் முகம் மகிழ்ச்சியைக் காட்டியது.

"இளா நீயா? நீ எங்கே இங்கே? நல்லா இருக்கியாம்மா?"

"இங்கே தான் வொர்க் பண்றேன். யாருக்கு உடம்பு சரியில்லை?"

"ஆன்டிக்கு தான் உடம்பு சரியில்லை. திடீர்ன்னு நெஞ்சைப் பிடிச்சுட்டு விழுந்துட்டா." மகன் பேசிய வார்த்தையை சொல்லாமல் விட்டுட்டு மீதியை மட்டும் சொன்னார்.

"பயப்படாதிங்க நான் போய் என்னன்னு பார்த்திட்டு வர்றேன்." மறந்தும் அவள் மித்ராதன் பக்கம் திரும்பவில்லை. இளவஞ்சி செல்வதைப் பார்த்துக் கொண்டு இருந்தவர் மகனை ஒரு பார்வை பார்த்தார். அவனோ அவர் பார்வையைக் கவனிக்காத மாதிரி வேறு புறம் திரும்பிக் கொண்டான்.

மித்ராதனுக்குமே இளவஞ்சியை பார்த்ததும் சற்று அதிர்ச்சியாக தான் இருந்தது. அவள் மருத்துவர் ஆனதில் அதிர்ச்சி இல்லை. ஏனெனில் அவள் இரண்டாம் வருட மருத்துவ படிப்பு படிக்கும் போது தானே அவர்கள் திருமணம் நடந்தது. அவளிடம் காணப்பட்ட புன்னகை கண்டு தான் அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான். அவனிடம் அவள் புன்னகை முகம் காட்டியது கிடையாது அதனால் தான் இந்த அதிர்ச்சி.

ஏழு வருடங்களில் அவள் அழகு கூடித் தான் இருந்தது. அழகோடு அறிவும் சேர்ந்து ஒருவித கம்பீரம் அவளிடம் வந்திருந்தது. எதை எதையோ நினைத்தவன் முகம் வேதனையில் கசந்தது. மறுநொடி முகம் ஆத்திரத்தை பிரதிபலித்தது. இவளை நினைக்க கூடாது. இவளை மறக்க வேண்டும், இவளின் செயலை மறக்க வேண்டும் என்று தான் அவன் ஏழு வருடங்கள் தவம் இருப்பது போல் வெளி நாட்டில் போய் இருந்து விட்டு வந்தான். ஓரளவு அதில் வெற்றியும் கண்டு தான் திரும்பி வந்தான். அதான் அம்மா மருமகள் என்றதும் மறுமணத்திற்கு சரி என்று சொன்னான்.

ஏழு வருட பிரிவால் மண விலக்கு கூட எளிதாக கிடைக்கும். அவ்வளவு ஏன் மணவிலக்கு கூட அவசியம் இல்லை. இதை எல்லாம் கணக்கிட்டு தான் அவன் இங்கே வந்தது. ஆனால்

அம்மா இன்னமும் மனதில் இவளை நினைத்துக் கொண்டு தான் தன்னிடம் கேட்டு இருக்கிறார்கள் என்று அவனுக்குமே தெரியாமல் போய் விட்டது. அம்மாவின் உடல் நிலைக்கு காரணம் இவள் தான் என்று அவன் கோபம் முழுவதும் இளவஞ்சியின் மீது திரும்பியது. அவன் இவ்வளவு நாள் முடிவு செய்து வைத்து இருந்த நிதானம் அவனிடம் இருந்து பறந்தது.

எவ்வளவு நேரம் யோசனையில் உழன்று கொண்டு இருந்தானோ தெரியாது. யாரோ அருகில் வரும் உணர்வு தோன்ற கண்களைத் திறந்தான். இளவஞ்சி தான் அங்கு நின்று கொண்டு இருந்தாள். அவள் தன்னை ஏறெடுத்தும் பார்க்காதது அவனுக்கு இன்னமும் ஆத்திரத்தைக் கிளப்பியது.

"மைல்ட் அட்டாக் தான். இப்ப பயப்படும்படி இல்லை, அவங்க நல்லா இருக்காங்க. ஆனா இப்ப பார்க்க முடியாது. காலையில் தான் பார்க்க முடியும். நீங்க வேணா காலையில் வந்து பார்க்கிறிங்களா?"

அவள் கூறியதைக் கேட்டு அருணகிரி, மித்ராதன் மனதில் நிம்மதி வந்தது.

"அம்மாடி இளா ரொம்ப தேங்க்ஸ்மா." என்று அவள் கையைப் பிடித்து கண் கலங்கிய அருணகிரி, "இல்லைம்மா நாங்க இங்கேயே இருக்கோம்"' என்று அவளுக்கு பதில் சொன்னார்.

"சரி.......உங்களுக்கு ரூமுக்கு வேணா ஏற்பாடு பண்றேன்." என்றவள் மருத்துவமனையில் முக்கிய பிரமுகர்கள் வந்தால் தங்குவதற்கு என்று இருந்த பிரத்யேக அறையை இவர்களுக்காக ஒதுக்கிக் கொடுக்கும் படி ஏற்பாடு செய்தாள்.

அதன் பின் அருணகிரியிடம் வந்து, "நான் கிளம்பறேன்" என்றாள். இளவஞ்சி அதற்கு மேல் தான் அங்கு நின்று என்ன செய்வது என்ற எண்ணம் தோன்ற அங்கு இருந்து நகர்ந்தாள்.

"இளா ........ " அருணகிரி தான் அவளை அழைத்தார்.

என்ன என்பது போல் திரும்பி பார்த்தவளிடம், "இந்த நேரத்தில் தனியா போக வேண்டாம்." அவர் சொன்னவுடன் தான் மணியை பார்த்தாள். அதிகாலை மணி ஒன்று ஆகி இருந்தது.

"பரவாயில்லை ....நான் போய்க்குவேன்" என்றவளைத் தடுத்தவர், "எங்களால தான் உனக்கு இவ்வளவு லேட்ஆகிருச . மித்ரா இளாவை அழைச்சிட்டு போய் அவங்க வீட்டில் விட்டு விடு." மகனுக்கு உத்தரவிட்டார். இளவஞ்சிக்கு அவரின் உத்தரவை மீறவும் முடியவில்லை. அவனுடன் செல்லவும் அவளுக்குப் பிடிக்கவில்லை.

மித்ராதனுக்கோ மனதில் எரிச்சல் மண்டியது. அவளுக்கா பயம்? அவளைப் பார்த்து மற்றவர்கள் தான் பயப்பட வேண்டு என்று நினைத்தவனுக்கு வேறு ஏதோ எண்ணம்வந்து முகத் தைக் கடினமாக்கியது. ஆனாலும் தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டி தான் அவளுக்கு தாமதமானதால் மறுத்துப் பேசாமல் இருக்கையை விட்டுஎழு தான். இளவஞ்சியும் மேற்கொண்டு எதுவும் பேசாமல்அவன் பின் நடந்தாள்.

காரை நெருங்கியதும் முன் இருக்கையில் அமராமல் பின் இருக்கையில் அமர்ந்தவளைக் கூர்ந்து நோக்கியவன்அலட் சியமாக தோளைக் குலுக்கிக் கொண்டு காரை எடுத்தான். அவனும் பேசவில்லை. அவளும் பேசவில்லை.

காரின் சொகுசோ என்னமோ அவளுக்கு தூக்கம்கண் களை சொக்கியது. அப்படியே தூங்கியும் போனாள்.

யாரோ தன் தோளை உலுக்குவது புரிந்து கண்களைத்திறக் க முடியாமல் திறந்தாள். அவள் கண்களைத்திறந்ததைப் பார்த்த மித்ராதன், "சாரி பே ............................ சாரி. கூப்பிட்டு பார்த்தேன் நீ எழாமல் இருக்கவும் தான்....." அவன் குரலில் உண்மையில் வருத்தம் இருந்தது. ஆனால் அவளோ அதை உணரும் நிலையில் இல்லை. அவன் தன்னைத் தொட்டு

தமிழ் நாவல்

எழுப்பியதே அவள் கோபத்தை அதிகரிக்க போதுமானதாக இருந்தது.

அதிலும் அவன் "பே" என்று வேறு சொல்லியது எரியற நெருப்பில் எண்ணையை ஊற்றியது போல் இருந்தது. அவன் தன்னை "பேபி" என்று சொல்ல வந்ததை தான் சொல்லாமல் விட்டு விட்டான் என்று அவளுக்கு புரிந்தது. அந்த சொல் இன்று மட்டுமல்ல என்றுமே அவளுக்கு ஆத்திரத்தை அளிக்க கூடியது என்பது அவளுக்கு மட்டுமே தெரியும்.

"மேல தொட்டு பேசற வேலை எல்லாம் என்கிட்ட வேண்டாம்." அவள் குரல் சீறியது.

அதை கேட்டு அவனுக்குமே கோபம் வந்தது.

"என்னடி ரொம்ப தான் துள்ளுற. போயும் போயும் உன்னை போய் யாராவது தொடுவாங்களா? நினைப்பு தான் பொழைப்பு கெடுக்குது. ச்சே.....உன்னை போய் கூட்டிட்டு வந்தேன் பாரு என்னை சொல்லணும்".

பதிலுக்கு வாயை திறக்க போன இளவஞ்சி தன் வீட்டின் கதவு திறப்பதைப் பார்த்து காரில் இருந்து வேகமாக இறங்கினாள்.

"இளா ஏன்மா இவ்வளவு லேட்?" என்றபடி கதவைத் திறந்த குணவதி மகளுக்கு பின் நின்று இருந்தவனைக் கண்டு ஒரு கணம் ஸ்தம்பித்தார். தன்னை சுதாரித்துக் கொண்டு, "வாங்க மாப்பிள்ளை........வாங்க...... செழியா யார் வந்து இருக்காங்க பாரு" என்று மகனை வேறு அழைத்தார்.

மித்ராதனுக்கோ மிகவும் சங்கடமாக இருந்தது. ஆனாலும் மகள் மேல் உள்ள கோபத்தை அந்த தாயிடம் காண்பிக்க இயலவில்லை.

"இல்லை ஆன்ட்டி. லேட் ஆகிருச்சு நான் கிளம்பறேன்."

அன்னையின் குரல் கேட்டு வெளியில் வந்த இளஞ்செழியன் அங்கு அக்காவின் கணவன் இருப்பதை

கண்டு முகம் சுளித்தான். அக்காவின் வாழ்வையே கேள்விக் குறியாக்கியவன் அல்லவா அவன் அந்த கோபம். ஆனாலும் அம்மாவிற்காக அவனை வரவேற்றான்.

"வாங்க...... " ஒற்றைச் சொல்லோடு நிறுத்திக் கொண்டான்.

"பரவாயில்லை மாப்பிள்ளை உள்ளே வாங்க." குணவதி மறுபடியும் அழைக்க இதற்கு மேல் போகாமல் இருந்தால் நன்றாக இருக்காது என்று எண்ணி உள்ளே வந்தான்.

வழக்கமான நலன் விசாரிப்புக்கு பின்னர், "இளா நீ எங்கே மாப்பிள்ளையை பார்த்தே?" குணவதி மகளிடம் கேட்டார். அப்பா......இப்பவாவது கேட்கணுமுன்னு தோணியதே இந்த அம்மாவுக்கு என்று மனதில் நினைத்தவள், "அவங்க அம்மாவுக்கு உடம்பு முடியலம்மா. ஹாஸ்பிட்டல்ல சேர்த்து இருக்காங்க."

இதைக் கேட்டதும் மித்ராதனுக்கு கோபம் வந்தது. அவனும் பார்த்துக் கொண்டு தான் இருக்கிறான். அவன் அப்பாவையோ இல்லை அம்மாவையோ அவள் மாமா என்றோ அத்தை என்றோ அழைக்கவில்லை. திமிர் திமிர் உடம்பு முழுக்க திமிர் எரிச்சலுடன் அவளைப் பார்த்தான்.

"ஏன் என்ன ஆச்சு?"

"மைல்ட் அட்டாக்."

"அய்யோ கடவுளே.........இப்ப எப்படி இருக்காங்க?"

"இப்ப நல்லா இருக்காங்கம்மா." இளவஞ்சி தான் பதில் சொன்னாள்.

"சரி ஆன்ட்டி நான் கிளம்பறேன்." மித்ராதன் எழுந்தான்.

"சரி மாப்பிள்ளை காலையில் வந்து அம்மாவை பார்க்கிறேன்." சரி என்பது போல் தலையசைத்தவன் வெளியேறினான். இளவஞ்சியிடமும் செழியனிடமும் சொல்லிக் கொள்ளவில்லை. அதை பற்றி இருவரும் கண்டு கொள்ளவும் இல்லை.

காலையில் தனக்கு முன்னே தயாராகி இருந்த அன்னையை வியப்புடன் பார்த்தாள் இளவஞ்சி. இத்தனை நாள் ஒரே ஊரில் இருந்தும் அவர்களை பார்க்காதவள் இன்று உடல் நலம் சரியில்லை என்றதும் முதல் ஆளாய் கிளம்பி இருப்பதைக் கண்டு ஆச்சரியம் அடைந்தாள்.

"என்னம்மா இவ்வளவு சுறுசுறுப்பா கிளம்பிட்டிங்க?" கிண்டலுடன் கேட்டாள்.

"பாவம்டி இந்த மாதிரி நேரத்தில் தான் உதவணும்." வேறுவழியின்றி அன்னையுடன் ஆட்டோவில் ஏறி மருத்துவமனை சென்றாள். இளஞ்செழியன் அவன் வண்டியில் பிறகு வருவதாகக் கூறி விட்டான்.

அமராவதி மருமகளைக் கண்டதும் அப்படியே கண் கலங்கி விட்டார். இளவஞ்சிக்கோ என்ன சொல்வது என்று தெரியவில்லை.

"குணா என் மருமகள் பெரிய டாக்டர் ஆகி விட்டாள் பார்த்தியா?" குணவதியிடம் பெருமை பட்டுக் கொண்டார்.

"சரிங்க எனக்கு வேலை இருக்கு." அமராவதியிடம் சொல்லியவள், அன்னையிடம், "அம்மா நீங்களே போய்க்குவிங்க தானே?" என்று கேட்டாள்.

"நான் ஆட்டோ பிடிச்சு போய்க்கிறேன். நீ உன் வேலையை போய் பாரு இளா." மகளுக்கு அனுமதி அளித்தார்.

"இளா........" அமராவதி அவளை அழைத்தார்.

"என்ன சொல்லுங்க?" அவரின் கையை பிடித்துக் கொண்டு கேட்டாள்.

"என்னை அத்தைன்னு கூப்பிட மாட்டியா?" கண்களில் ஏக்கம் நிறைய கேட்டார். அவர் இப்படி கேட்டதும் இளவஞ்சி திடுக்கிட்டு தான் போனாள். மித்ராதன் கண்களோ அவளைக் கூர்மையுடன் அளவெடுத்தது. முடிந்து போன பந்தத்தை மீண்டும் தொடங்க நினைக்கும் அமராவதியை கையாலாகாதனத்துடன் பார்த்தாள்.

அவள் கணவனின் அம்மாவாக அவரை எண்ணி அவளால் அவ்வாறு அழைக்க முடியவில்லை. கணவன் என்ற பந்தமே வெறும் பெயரளவில் தான் அவளுடன் ஒட்டிக் கொண்டு இருக்கிறது. இதில் அவன் அம்மா எங்கே இருந்து அதில் வர?

"அப்படி கூப்பிட கூட உனக்கு பிடிக்கவில்லையா?"

"இல்லை அத்......." தொண்டையை செருமிக் கொண்டவள்,

"அப்படி எல்லாம் இல்லை அத்தை." இளவஞ்சியின் வார்த்தையை கேட்டதும் அந்த தாயுள்ளம் மலர்ந்தது. சின்னவள் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டாள் பெரியவள்.

"இந்த அத்தை என்ற வார்த்தை உன் உள்ளத்தில் இருந்து வருவதாக இருந்தால் என்னுடன் நம் வீட்டுக்கு வந்து விடுகிறாயா? என் மகனுக்கு மனைவியாக, எங்களுக்கு மருமகளாக." பெரியவளின் வார்த்தை கேட்டு திகைத்து நின்றனர் சின்னவர்கள் இருவரும்.

"பாருங்க அமரா இப்பவாவது வாயை திறந்து சொல்றாளான்னு. அழுத்தம் அழுத்தம். இவள் வாழ்க்கை இப்படி வீணா போகுதேன்னு நான் தான் கவலைப்படுறேன். இவள் என்னடான்னா வாயவே திறக்க மாட்டேங்கிறா." படபடவென பொரிந்தார் குணவதி.

மகள் என்ன தான் கணவனைப் பிரிந்து வந்தாலும் குணவதி அருணகிரியிடமும், அமராவதியிடமும் உள்ள தொடர்பை துண்டிக்கவில்லை. என்றாவது ஒருநாள் மகள் வாழ்க்கை சீராகும் என்ற நம்பிக்கையுடன் அவர் இருந்தார். அதனால் அமராவதியுடன் தொலைப்பேசியில் பேசுவார். மகள், மகனுக்கு தெரியாமல் அங்கே செல்வார். அதே போல் தான் அமராவதியும் குணவதியைப் பார்க்க இளவஞ்சி இல்லாத நேரம் பார்த்து வருவார். ஏனெனில் இளவஞ்சி தங்களிடம் பேசவும் தயங்கியதால் அவரை பார்த்து அவள் வருந்த வேண்டாம் என்ற நல்ல எண்ணம் தான்.

"அத்தை முதல்ல உங்க உடல் நலம் சரியாகட்டும். பிறகு பேசலாம். இப்ப எனக்கு வேலை இருக்கு நான் போயிட்டு பிறகு வர்றேன்". இளவஞ்சி அமராவதியின் கேள்விக்கு பதில் சொல்லாமல் மழுப்பி நழுவி விட்டாள். அதை கேட்டு ஆத்திரம் அடைந்த மித்ராதன் அங்கு இருந்து வெளியேறினான். எஞ்சியவர்கள் பெரியவர்கள் மட்டுமே.

"குணா கொஞ்சம் அமைதியா இரு. மருமகள் மனதில் என்ன இருக்கோ? இவள் மட்டுமா பேச மாட்டேங்கிறா? என் பையனும் தான் வாயைத் திறக்க மாட்டேங்கிறானே. அதனால சும்மா என் மருமகளை குறை சொல்லாதே."

இளவஞ்சியின் மீது அமராவதிக்கு இருந்த பாசம் கண்டு குணவதியின் கண்கள் கலங்கியது. இத்தகைய அன்பை புரிந்து கொள்ளாமல் போனாளே தன்னுடைய பெண் என்ற ஆதங்கம் அவர் மனதில் எழுந்தது.

"இளாவாவது பரவாயில்லை. இந்த மித்ரா எனக்கு கல்யாணத்திற்குப் பெண் பாருங்கன்னு சொல்றான்.

அதனால தான் அம்ருவுக்கு நெஞ்சு வலி வந்து விட்டது." அருணகிரி குணவதியிடம் சொன்னார்.

அதை கேட்டதும் பதறி தான் போனார் குணவதி. "அய்யோ என்ன சொல்றிங்கண்ணா. மாப்பிள்ளை அப்படி சொன்னாரா? இப்ப என்ன பண்றது?" என்று புலம்பியவர் பின் மனதை திடப் படுத்திக் கொண்டு, "எவ்வளவு நாள் தான் மாப்பிள்ளையும் தனியா இருக்கிறது. அவருக்கும் ஆசை இருக்காதா என்ன? அன்னைக்கும் என் மகள் தான் பிடிவாதம் பிடிச்சா. இன்னைக்கும் அவள் தான் பிடிவாதமா இருக்கா. அவரும் எவ்வளவு நாள் தான் பொறுமையா இருப்பாரு. இன்னொருத்தரா இருந்து இருந்தா இந்நேரம் வேறு கல்யாணம் பண்ணி இருப்பாங்க. அவர் சொல்றதும் சரி தான்." என்ன தான் மனதை திடப் படுத்திக் கொண்டு கூறினாலும், அவரின் குரலில் வருத்தம் இழையோட தான் செய்தது.

"குணா........ " அமராவதி குரலை உயர்த்தி சத்தம் போட்டார்.

"அமரா சத்தம் போடாதே. உடம்புக்கு ஏதாவது ஆகி விடப் போகுது." குணவதி கவலைப் பட்டார்.

"பின்னே என்ன குணா? என்ன பேசற நீ? என்னைக்கு இருந்தாலும் இளவஞ்சி மட்டும் தான் எங்க மருமகள். மித்ரா சொன்னா நாங்க அவனுக்கு கல்யாணம் பண்ணி வைத்து விடுவோமா என்ன? இவ்வளவு நாள் அவனும் வெளி நாட்டில் இருந்து கொண்டு வராமல் பிடிவாதம் பிடித்தான். அதனால் இளாவிடம் மட்டும் பேசி பிரயோஜனம் இல்லை என்று எண்ணிப் பேசாமல் இருந்தேன். அதன் பின் அவளும் மேலே படிக்க எண்ணியதால் படிப்பு கருதி பேசாமல் விட்டாச்சு. இதோ இப்பொழுது மித்ராவும் வந்து விட்டான். இளாவும் படித்து முடித்து அவள் கனவை நனவாக்கி விட்டாள். இனி அவளை எப்படி மித்ராவுடன் சேர்த்து வைப்பது என்று மட்டும் யோசியுங்கள்." கணவருக்கும் சேர்த்து கூறினார் அமராவதி.

அமராவதி சொல் கேட்டு மற்ற இருவரும் யோசிக்க தொடங்கினர். மூன்று பெரியவர்களுமே  தத்தம்

யோசனையில் மூழ்கினர். ஆனால் அவர்கள் எல்லோரின் எண்ணமும் சிறியவர்களை எப்படி ஒன்றாக இணைப்பது என்று மட்டுமே இருந்தது.

மாறன்-குணவதி தம்பதியரின் செல்ல மகள் தான் இளவஞ்சி, மகன் இளஞ்செழியன். மாறன் தனியார் நிறுவனத்தில் நிர்வாகப் பொறுப்பில் இருந்தார். மத்தியதர வாழ்க்கை என்றாலும் மனதுக்கு நிறைவான அமைதியான வாழ்க்கை. பெரிதாக சொத்து சேர்க்காத போதும் அவர் தன் மக்களின் படிப்பிற்கு எந்த குறையும் வைக்கவில்லை. அதே போல் அவர்களின் சின்ன சின்ன ஆசைகளை பூர்த்தி செய்யவும் மறக்கவில்லை. அதிலும் இளவஞ்சி பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் நல்ல மதிப்பெண்கள் எடுத்து மருத்துவ கல்லூரியில் இடம் கிடைக்கவும் அப்படியே பூரித்து போய் விட்டார். பிறவி பலன் அடைந்து விட்டதாக எண்ணிப் பெருமிதம் அடைந்தார்.

"பாப்பா நல்லா படி. மேலே MD படிக்கணும் என்றாலும் படி. நான் இருக்கேன்டா." மகளை உற்சாகப்படுத்தினார்.

இளவஞ்சி மருத்துவ கல்லூரியில் இரண்டாம் ஆண்டு படித்துக் கொண்டு இருக்கும் போது தான் அருணகிரி தன் மகன் மித்ராதனுக்கு அவளைப் பெண் கேட்டு வந்தார். அருணகிரி வேறு யாரும் அல்ல. மாறனுக்கு சிறுவயது முதல் நண்பர். அவரின் ஒரே செல்ல மகன் தான் மித்ராதன். பார்ப்பதற்கும் நல்ல அழகன். வெளிநாட்டில் படிப்பு முடிந்து இங்கே வந்து இரு ஆண்டுகள் ஆகிறது.

வேலைக்கு வெளிநாடு போகலாமா? இல்லை தந்தை தொழிலைப் பார்க்கலாமா என்ற குழப்பத்தில் இப்பொழுது நண்பர்களுடன் ஊரைச் சுற்றிக் கொண்டு இருக்கிறான். அதற்காக கெட்டவனும் கிடையாது. இன்றைய இளைய சமுதாயத்தின் பிரதிபலிப்பு இந்த மித்ராதன்.

"மாறா மித்ரா திரும்பவும் யூ எஸ் போய்டுவானோன்னு பயமா இருக்கு. அதான் கல்யாணம் பண்ணி இங்கே தொழிலை பாருன்னு சொல்லிடலாம் என்று இருக்கேன்.

மனைவின்னு வந்துட்டா அவளை விட்டு பிரிய யோசிப்பான் இல்லையா? மற்ற பெண்ணாக இருந்தால் அவன் கூட வெளிநாடு செல்ல தான் யோசிப்பாள். ஆனால் நம்ம இளா அப்படி இல்லை. அவளுக்கு இங்கே தான் சேவை செய்யும் எண்ணம் இருக்கு. அதனால் அவளுக்காகவாவது அவன் இங்கே இருப்பான் இல்லையா? அம்ருவும் அதையே தான் சொன்னாள். அவளுக்கும் இளா மருமகளாக வருவதில் சம்மதம் தான். உன் விருப்பம் என்ன மாறா?"

அருணகிரி இவ்வளவு சொல்லி கேட்கும் போது மாறனுக்கும் மறுத்து பேச வழியில்லை. அதிலும் அருணகிரியோ அவர் மனைவி அமராவதியோ இன்னும் சொல்ல போனால் மித்ராதனோ யாரிடமும் ஒரு குறை காண முடியாது. மாறனால் கனவிலும் நினைக்க முடியாத சம்பந்தம். ஆனால் அவருக்கு ஒரே ஒரு குறை தான்.

"கிரி மித்ரா இளா இருவருக்கும் சிறு வயது. இன்னும் கொஞ்ச நாள் போகட்டுமே. அதற்குள் இளாவும் படித்து முடித்து விடுவாள்."

"மாறா நீ சொல்வதும் சரி தான். ஆனால் அதுவரை இவன் வெளிநாடு போகாமல் இருக்க வேண்டும். வேண்டுமானால் நிச்சயம் மாதிரி வைத்து கொள்வோமா? இளாவை பார்த்தால் அவன் மனம் கொஞ்சம் மாறும்."

"சரி வீட்டில் எல்லோரிடம் கேட்டு விட்டு சொல்கிறேன். நீயும் மித்ரா கிட்ட ஒரு வார்த்தை கேட்டு விடு."

"அதெல்லாம் சரின்னு தான் சொல்வான். இளாவை போய் யாராவது வேண்டாம் என்று சொல்வாங்களா? நீ இளாவிடம் தான் கேட்க வேண்டும். மித்ராவை திருமணம் செய்ய அவள் சம்மதிப்பாளா?"

"கிரி மித்ராவுக்கு என்ன குறை? அவனை கட்டிக்க இளாவுக்கு என்ன கசக்கவா போகுது? முதல்ல மித்ரா கிட்ட கேளு என்ன?"

அதன் பின் மாறன் இளவஞ்சியிடம் மித்ராதன் பற்றிச் சொல்லி அவளின் அபிப்ராயம் கேட்டார். முதலில் தயங்கிய இளவஞ்சி தந்தையின் கண்களில் இருந்த எதிர்ப்பார்ப்பு கண்டு சரி என்று கூறினாள். மித்ராதன் புகைப்படத்தை காட்டிய போதும் மற்றவர்களுக்காக பார்த்தாளே ஒழிய ஆழ்ந்து பார்க்கவில்லை. அவள் மனம் படிப்பில் மட்டுமே நாட்டம் கொண்டு இருந்தது. எப்படியும் திருமணம் செய்ய போகிறோம் அது தந்தைக்கு பிடித்தவனாக இருந்தால் நல்லது தானே என்ற அளவில் தான் அவள் எண்ணம் இருந்தது.

மித்ராதனிடம் இளவஞ்சியின் புகைப்படம் காட்டி திருமணத்திற்கு சம்மதம் கேட்க அவன் அவள் புகைப்படம் பார்த்தவுடன் சரி என்று சொல்லி விட்டான். என்ன தான் மாறன் அருணகிரியின் நண்பர் என்றாலும் தன் குடும்பத்தாரை அனாவசியமாக அங்கே கூட்டிக் கொண்டு வந்தது கிடையாது. மித்ராதனும் வெளிநாட்டில் படித்து வந்ததால் இளவஞ்சியை சந்திக்கும் வாய்ப்பு அதிகம் இருந்ததில்லை. ஆனால் தந்தை தாயின் வாய் வார்த்தையில் அவளைப் பற்றி சொல்ல கேட்டு இருக்கிறான். அதனால் அவனுக்கும் அவள் அன்னியமாகத் தெரியவில்லை.

இதை எல்லாம் விட இளவஞ்சியின் அழகு அவனைக் கவர்ந்தது. அதிலும் அவள் மருத்துவத்திற்குப் படிக்கிறாள் என்று கேள்விப்பட்டதும் என்னவள் மருத்துவர் என்ற பெருமிதம் கர்வம் அவனிடத்தில் தோன்றியது. எல்லா ஆண்களுக்கும் இருக்கும் எதிர்ப்பார்ப்பு அவனுக்கும் இருந்ததால் நிச்சயம் நடக்கும் நாளை ஆவலுடன் எதிர் நோக்கி இருந்தான்.

எளிமையாக நிச்சயம் முடிந்தது. அதன் பின் வந்த நாட்களில் மித்ராதன் இளவஞ்சியிடம் தனிமையில் பேச எண்ணினான். கைப்பேசியில் அழைத்துப் பார்த்தான். ஏதோ சாக்கு சொல்லி அவள் நழுவி விடுவாள். அவள் பேசாமல் இருக்க இருக்க அவள் மேல் அவன் தான் பைத்தியமாகி போனான். அவளுக்கோ அவனிடம் என்ன

பேச என்று தான் தோன்றியது? இயல்பான உணர்வுகள் அவளிடம் துளி கூட இல்லை. எல்லோரும் திருமணம் செய்து கொள்கிறார்கள் அது போல் நானும் செய்து கொள்ளப் போகிறேன் என்ற எண்ணம் தான் அவளிடத்தில் இருந்தது.

இந்த மாதிரி சூழ்நிலையில் தான் மாறன் அருணகிரியிடம் வந்து மித்ரா-இளா திருமணத்தை சீக்கிரம் நடத்த வேண்டும் என்று கூறினார்.

"மூன்று நாட்களுக்கு முன் நெஞ்சு லேசா வலிக்கிற மாதிரி இருக்குன்னு டாக்டர் கிட்ட போனேன். மைல்ட் அட்டாக்காக இருக்கலாம் என்று சொல்றார்."

"மாறா என்னடா இது இப்படி ஒரு குண்டு போடற?"

"சுகர் பிரசர்ன்னு எல்லா நோயும் இருக்கு. இதெல்லாம் எதிர்ப்பார்த்தது தான். எனக்கு ஏதாவது ஆகும் முன் இளாவின் திருமணத்தைப் பார்த்து விடணும். எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் கல்யாணத்தை நடத்தி விடலாம். என்ன கிரி சொல்ற?"

"மாறா கல்யாணம் இப்ப வைக்க வேண்டும் என்றால் நாளை கூட வைத்துக் கொள்ளலாம். அதற்காக இப்படி எல்லாம் பேசாதே." என்று நண்பரை கடிந்தவர் திருமணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தார்.

மித்ராதன் இந்த செய்தியைச் சொன்ன தந்தையை கட்டிப் பிடித்து தன் சந்தோசத்தைக் கொண்டாடினான். அங்கே இளவஞ்சியோ திகைத்து, "அப்பா என் படிப்பு?" என்றாள்.

"இந்த திருமணத்தால் உன் படிப்பு எந்த விதத்திலும் தடை படாது. கிரியும் சரி அமராவும் சரி நீ படிப்பு தொடர சரி என்று சொல்லி விட்டார்கள். மித்ரா பற்றி சொல்லவே வேண்டாம். விட்டால் இப்பவே உன்னைக் கூட்டிக் கொண்டு போய் விடுவான்" என்று தன் தந்தை சொன்ன பிறகு இளவஞ்சி வாயைத் திறக்கவில்லை.

ஊரே மெச்சும்படி மிகவும் ஆடம்பரமாக மித்ராதன் இளவஞ்சி திருமணம் நடந்தது. இரு வீட்டு பெரியவர்களும் நிம்மதி அடைந்தனர். மித்ராதன் இளவஞ்சியின் அழகில் சும்மாவே மயங்கியவன், அன்று பட்டு புடவையில் தேவதை போல் மின்னியவளைக் கண்டு கிறங்கிப் போயிருந்தான்.

எல்லாம் நன்றாகத் தான் போய்க் கொண்டு இருந்தது. மறு வீட்டிற்கு தன் தாய் வீடு வந்த இளவஞ்சி மித்ராதனுடன் திரும்ப போக மறுத்து விட்டாள். என்ன கேட்டும் அவள் வாயை திறக்கவே இல்லை. அவளே சொல்லாத போது நான் ஏன் சொல்ல வேண்டும் என்று மித்ராதனும் வாயை திறக்கவில்லை. இருவரிடமும் பெரியவர்கள் கேட்டு ஓய்ந்து போனது தான் மிச்சம். அதன் பின் அவரவர் போக்கில் விட்டு விட்டனர். இறுக்கமான சூழ்நிலையே இரு குடும்பத்திலும் நிலவியது.

சரியாக இரு வாரம் கழித்து மாறன் திடீரென்று மாரடைப்பில் இறந்து போனார். இளவஞ்சிக்கு ஒரு குற்ற உணர்வு தன்னால் தான் தந்தைக்கு இப்படி ஆனதோ என்று.  அந்த நேரத்தில் தான் அருணகிரியும் அமராவதியும் அவளை தங்கள் வீட்டிற்கு வருமாறு அழைத்தனர். தன் தந்தை இறந்ததற்கு தான் ஒரு காரணம் என்றால் அவர்கள் மகனும் ஒரு காரணம் அல்லவா? அவள் கோபம் எல்லாம் மித்ராதன் மேல் திரும்பியது. அதனால் அவர்கள் கூப்பிட்ட போது போக மறுத்து விட்டாள். அவனுடன் சேர்ந்து வாழ அவளுக்கு விருப்பம் இல்லை என்று தெரிவித்து விட்டாள்.

மித்ராதனோ இளவஞ்சியின் வார்த்தை கேட்டு மிகவும் கோபம் அடைந்தான். அவனுக்குமே தான் என்ன தவறு செய்தோம் என்று விளங்க வில்லை. வேண்டும் என்றே அவள் அவனை அவமதிப்பதாக எண்ணினான். அவளை மறக்க வேண்டும் என்று எண்ணி தந்தை தாயிடம் சொல்லிக் கொண்டு வெளிநாடு சென்றான். அன்று சென்றவன் தான் ஏழு வருடங்கள் கழித்து இப்பொழுது தான் வந்து இருக்கிறான்.

இளவஞ்சியோ அவன் நினைவே இல்லாதவளாய் தன் படிப்பைத் தொடர்ந்தாள். ஆனால் ஒன்று கழுத்தில் அவன் கட்டிய தாலியையோ, இல்லை அவள் பெயர் பின்னே வரும் அவன் பெயரையோ அவள் மாற்றவில்லை. ஒருவேளை குணவதிக்கு பயந்து பேசாமல் இருந்தாளோ என்னவோ?

அருணகிரிடமும் அமராவதியிடமும் ஆரம்பத்தில் தொலைப்பேசியில் பேசிக் கொண்டு இருந்தவள், அவர்கள் இருவருமே அங்கே வருமாறு வலியுறுத்தியதால் அவர்களிடமும் பேச்சை குறைத்துக் கொண்டாள். நாள் போக்கில் அந்த பேச்சும் குறைந்து போனது.

இளவஞ்சி மருத்துவம் முடித்து மேலே படிக்க முடிவு செய்யும் போது தான் பொருளாதாரப் பிரச்சினை வந்தது. அதுவரை மாறனின் சேமிப்பும், குணவதியின் நகைகளும் இருவரின் படிப்புக்கும் உதவியது. இப்பொழுது அதுவும் கரைந்து போனது. அப்பொழுது தான் படித்து முடித்து இருந்த இளஞ்செழியன் அவளுக்கு தோள் கொடுத்தான். அவன் வேலைக்கு சென்று இளவஞ்சியை மேலே படிக்க வைத்தான். இதோ அவளும் படித்து முடித்து வேலைக்கு வந்து விட்டாள்.

இதை எல்லாம் நினைத்துக் கொண்டு இருந்த பெரியவர்களிடையே ஏக்கம் தான் எழுந்தது. இளையவர்கள் தங்கள் மனஸ்தாபத்தை உதறி விட்டு எப்போது ஒன்று சேர்வார்களோ என்று எண்ணினர். இருவரிடையே அப்படி என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. அதைப் பற்றி இருவரும் வாயை திறக்கும் வழி தெரியவில்லை. தெரிந்தாலாவது ஏதாவது சாமாதானம் பேசி சேர்த்து வைக்கலாம். மித்ராதனுக்கு முப்பத்திரெண்டு வயதாகிறது. இளவஞ்சிக்கும் இருபத்தியேழு வயதாகிறது. அவர்களின் வாழ்க்கையை முடிவு செய்ய இருவருக்குமே போதுமான அறிவும், வயதும் இருக்கிறது.

நல்ல முடிவு எடுப்பார்களா?

"ஹாய் வஞ்சி....... என்ன இங்கே உட்கார்ந்து இருக்கே?" என்று கேட்டுக் கொண்டே புகழேந்தி இளவஞ்சி எதிரில் அமர்ந்தான்.

காலையில் அமராவதி கேட்டதில் இருந்து ஆரம்பித்த தலைவலி அன்று முழுவதும் இளவஞ்சியை தொடர்ந்தது. வேலை பளுவில் அதைக் கவனிக்காமல் இருந்தாலும் ஒரு பக்கமாய் மண்டையை பிளந்தது வலி. கொஞ்சம் வேலையில் இருந்து ஓய்வு கிடைத்ததும் காபி குடிக்கலாம் என்று மருத்துவமனை வளாகத்தில் இருந்த சிற்றுண்டி சாலைக்குள் நுழைந்து காபியை வாங்கிக் கொண்டு அமர்ந்து இருந்தாள்.

ஆனால் மொத்த தலைவலியும் இப்பொழுது புகழேந்தி வடிவில் தன் முன் அமர்ந்து இருப்பதைக் கண்டவளுக்கு எரிச்சலும் கோபமும் அதிகமாகியது. அதிலும் அவன் அவளை ஒருமையில் அழைத்தது இன்னமும் கோபத்தை அளித்தது.

"என் பெயர் இளவஞ்சி. இப்படி வஞ்சின்னு கூப்பிடாதிங்க." எரிச்சலுடன் வார்த்தைகள் அவளிடமிருந்து வெளி வந்தது. இதற்கு எல்லாம் அசருவானா இந்த புகேழேந்தி என்பது போல் அவளை அமைதியுடன் பார்த்தான். அவளுக்கு தன் கோபத்திற்கு அவன் காட்டிய அமைதி ஆச்சரியமாக இருந்தது.

"எல்லாரும் உன்னை இளான்னு கூப்பிடறாங்க. அது என்னமோ பசங்களைக் கூப்பிடற மாதிரி இருக்கு. நீ அழகான பெண், அதான் வஞ்சி. எப்படி என் விளக்கம்?"

"ம்......... சகிக்கல."

"சரி அதை விடு. வேலை நேரத்தில் இங்கே என்ன பண்ற?"

"பார்த்தா எப்படி தெரியுது?"

"அய்யோ........ ஆளை விடும்மா. கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருக்கலாமேன்னு பார்த்தா பேச்சை எப்படிடா கட் பண்றது என்பதிலேயே குறியா இருக்க."

...............................

"ஏன் வஞ்சி என்னை உன் நண்பனா ஏத்துக்க கூடாதா?"

"எனக்கு ஆண் நண்பர்கள் கிடையாது. இப்போது அதற்கு அவசியமும் கிடையாது." பட்டென்று முகத்தில் அடித்தது போல் பதில் வந்தது கண்டு அவன் அசந்து தான் போனான். ஆனாலும் அப்படியே விட்டு விட்டு போனால் அவன் மனோதத்துவம் படித்ததற்கு அர்த்தம் இல்லையே.

"நட்பில் எதற்கு ஆண் பெண் என்ற பேதம் வஞ்சி?" புகழேந்தியின் பதிலில் இப்பொழுது அயர்ந்து போனது அவள்.

"எனக்கு வேண்டாம் என்று தான் சொன்னேன்." சொல்லும் போதே அவள் குரல் இறங்கி போனது.

"வஞ்சி என்னை உன் நல்ல நண்பனாக ஏத்துக்க கூடாதா?"

"எல்லா ஆண்களும் ஒன்று தான். இப்ப எல்லாம் நட்பு என்ற போர்வையில் ஒளிந்து கொண்டு பெண்களுடன் பழகுவது ஆண்களுக்கு மிக எளிதாக இருக்கிறது. ஆனால் யாரும் அந்த புனிதத்தைக் காப்பாற்றுவது இல்லை."

மனோதத்துவ மருத்துவனான அவனுக்கு இளவஞ்சியின் மனம் புரிந்தது. ஆண்களிடம் எல்லையுடன் பழகி வரும் அவள் சுபாவம் புரிந்தது. ஏனோ அவளிடம் நட்பு கொள்ள வேண்டும் என்ற அவன் மனதின் ஆவலை அவனால் கட்டுப்படுத்த முடியாமல் அவளிடம் பழக எண்ணினான்.

"வஞ்சி, ஆணுடன் பழகாமலேயே இவ்வாறு கூற கூடாது. நீ சொல்வது போல் இருக்கிற ஆண்களும் இருக்க தான் செய்கிறார்கள். நட்பை கொச்சைப் படுத்தாமல் உயிராக நினைக்கும் ஆண்களும் இருக்க தான் செய்கிறார்கள்"

என்றவன் அதற்கு மேல் அவளிடம் அதைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லை.

அதன் பின் புகழேந்தி பேச்சின் திசையை மாற்றினான். முதலில் ஏனோ தானோ என்று பதில் சொன்ன இளவஞ்சி அவன் பேச்சில் கவரப்பட்டு அதில் கவனம் செலுத்தினாள். தன் பேச்சை அவள் ஆர்வத்துடன் கவனிப்பதை உணர்ந்தவன் அவளைப் பற்றி அறிய முயன்றான்.

மெல்ல இளவஞ்சியின் வேலை கனவு இவைகளைக் கேட்டான். இளவஞ்சி அவளின் வேலை கனவுகளைப் பற்றிக் கேட்க ஆரம்பித்தால் மணிக்கணக்கில் பேச ஆரம்பித்து விடுவாள். புகழேந்தியும் அதையே கேட்கவும் அவளின் மனத் தடை அகன்று அவனிடம் சரளமாக பேச ஆரம்பித்தாள்.

அவனும் தனது லட்சியம், கனவு இதைப் பற்றி எல்லாம் கூறினான். அதன் பின் மெதுவே பேச்சு ரசனை, விருப்பு வெறுப்பு என மாறிப் போனது அவளுக்கே தெரியவில்லை. ஆனால் புகழேந்தி அதை எல்லாம் உணர்ந்தான். அவன் முகத்தில் புன்னகை தோன்றியது. மனோதத்துவனான அவனுக்கா தெரியாது ஒருவரின் மன நிலையை எவ்வாறு அறிய வேண்டும் என்று? அதை இளவஞ்சி விசயத்தில் நடத்தியும் காண்பித்து வெற்றியும் பெற்றான்.

"ஓகே புகழேந்தி எனக்கு நேரம் ஆகி விட்டது. நான் கிளம்பறேன்." இளவஞ்சி எழவும் புகழேந்தி அவள் முன் கையை நீட்டி, "பிரண்ட்ஸ்........." என்றான்.

என்ன இருந்தாலும் இவன் ஒரு ஆண் என்பதால் அவனிடம் கை குலுக்க தயங்கியனாள் இளவஞ்சி.

"என்ன வஞ்சி இன்னமும் என் மேல் நம்பிக்கை வரவில்லையா?" புகழேந்தியின் குரலில் என்ன இருந்தது என்று அவனுக்கே தெரியவில்லை. யாரோ ஒருத்தி அவனிடம் பேசப் பிடிக்கவில்லை என்றால் சரி தான் போடி என்று போகாமல் தான் ஏன் அவளிடம் கெஞ்சிக் கொண்டு இருக்கிறோம் என்று அவனுக்குமே புரியவில்லை. ஏனோ

அவன் மனம் இளவஞ்சியின் நட்பை யாசித்தது. நட்பு மட்டுமே அதில் வேறு களங்கம் இல்லை. அதை அவன் மனம் உறுதியாக அறியும். அதனால் மனதில் எழுந்த நம்பிக்கையுடன் அவளைப் பார்த்தான்.

புகழின் நேர் கொண்ட பார்வையை சந்தித்த இளவஞ்சியால் அவனை சந்தேகிக்க முடியவில்லை. அந்த கண்களில் இருந்த நேர்மை அவளையும் பாதித்தது. அவளுக்குமே புகழேந்தியின் எல்லை தாண்டாத நட்பு ரீதியான பேச்சு பிடித்து இருந்தது. அவள் சந்தித்த ஆண்களில் அவன் வித்தியாசமாக இருப்பதாக அவள் எண்ணினாள். நிச்சயம் நல்ல நண்பனாக அவன் இருப்பான் என்று தோன்றியது.

"ஓகே பிரண்ட்ஸ்." என்று சிரித்தபடி அவன் கையோடு தன் கை சேர்த்து குலுக்கினாள். தந்தை, தம்பி இவர்களுக்குப் பின் முதன் முறையாக இளவஞ்சியின் உறவு வளையத்துக்குள் அதுவும் ஆண் மகனாகிய புகழ் நுழைந்தான். தாலி கட்டிய கணவனையே நுழைய அவள் அனுமதிக்காத போது, நட்பு காரணமாக புகழேந்தி எளிதாக நுழைந்தான். புகழேந்திக்கு அவளின் மன மாற்றம் மிகுந்த சந்தோசத்தைக் கொடுத்தது.

"தேங்க்ஸ் வஞ்சி. என்னை உன் நண்பனா ஏற்றுக் கொண்டதுக்கு" இடைவரை குனிந்து அவளுக்கு நன்றி தெரிவித்தான். அதைப் பார்த்து இளவஞ்சி கலகலவென சிரித்தாள். அவள் இறுக்கம் தளர்ந்து சிரிப்பதையே பார்த்துக் கொண்டிருந்த புகழின் மனம் நிறைந்தது. அவளின் முகத்தில் இந்த புன்னகையை வாடாது நிலைக்க வைப்பேன் என்று மனதில் நினைத்துக் கொண்டான். ஏனோ இளவஞ்சியைப் பார்த்த கணம் அவனுக்குப் பிடித்து போனது கூட காரணமாகவும் இருக்கலாம்.

இதை எல்லாம் இரு கண்கள் ஒருவித யோசனையுடன் பார்த்துக் கொண்டு இருந்தது. கடைசியில் இளவஞ்சியின் சிரிப்பைக் கண்டு கண்கள் இரண்டும் சிவந்து

ஆத்திரத்துடன் அவர்கள் இருவரையும் முறைத்துப் பார்த்தது.

"அ...... அத்தை நாளைக்கு டிஸ்சார்ஜ் பண்ணிடுவாங்க. நீங்க வீட்டுக்கு போகலாம்." என்றபடி அமராவதியின் உடல் நலனை விசாரித்தாள் இளவஞ்சி. அ என்று சொல்லி சிறிது நேரம் சென்று அத்தை என்று சொன்னதை அமராவதி கவனித்தாரோ இல்லையோ மித்ராதன் கவனித்துக் கொண்டு தான் இருந்தான்.

அவன் முகம் கோபத்தில் இறுகியது. ஒன்றுமே தெரியாத மாதிரி சாதாரணமாக அன்னையுடன் பேசிக் கொண்டு இருந்த அவளைக் கண்டு அவன் ரத்த அழுத்தம் எகிறியது.

"சரி அத்தை எனக்கு டியூட்டி முடிந்தது. நான் வீட்டிற்கு கிளம்பணும். வரட்டுமா?"

"சரிடா கண்ணு. நாளைக்கு நல்ல பதிலா சொல்லணும்." என்ற அமராவதிக்கு எந்த ஒரு உறுதியும் கொடுக்காமல் நழுவினாள் இளவஞ்சி. அவள் அறையை விட்டு வெளியே சென்றதும் அவளை பின் தொடர்ந்தான் மித்ராதன். அவள் முன்னே சென்று கையைக் காட்டி நிறுத்தினான். அவளோ தன் நடையை சிறிதும் நிறுத்தாமல், "என்ன?" என்றாள்.

தன் பேரையும் சொல்லாமல் அதையெல்லாம் விட இருவருக்குமான உறவை பறைசாற்றிக் கொண்டு இருக்கிறதே அவள் கழுத்தில் கிடக்கும் மாங்கல்யம் அதற்கு உரிமையான வார்த்தையும் சொல்லி அழைக்காமல் அவள் மொட்டையாக "என்ன?" என்று கேட்டது அவனுக்கு எரிகிற நெருப்பில் எண்ணையை ஊற்றியது போலானது.

"உன் கூட பேசணும்."

"நமக்குள்ள பேசுவதற்கு ஒன்றும் இல்லை" என்றபடி அங்கு இருந்த மின் தூக்கியினுள் நுழைந்தாள் இளவஞ்சி. அவளுடன் அவனும் உள்ளே சென்றான்.

"ஒன்றுமே இல்லையா?" அவள் முகத்தில் தன் மூச்சுக் காற்று படும் அளவிற்கு நெருங்கி நின்றான் மித்ராதன். ஏனெனில் அவர்கள் இருவர் மட்டுமே அதில் தனித்து இருந்தனர். அது அவனுக்கு வசதியாக போனது. ஆனால் அதற்கு எல்லாம் பயப்படுவாளா இந்த இளவஞ்சி? அவனால் என்ன செய்து விட முடியும்? அப்படியே ஏடா கூடமாக நடந்தானானால் அவள் கைவசம் இருக்கவே இருக்கு தற்காப்பு கலை. அதை அவள் பயன்படுத்தி அவனைத் தாக்க அவளுக்கு ஒரு நொடி போதுமே என்ற நினைவில் அவனை தைரியமாக நிமிர்ந்து பார்த்தாள்.

"இந்த திமிர்......... இந்த திமிர் தான்டி......" மேலே பேச முடியாமல் இன்னமும் அவளை நெருங்கி நின்றான். அதற்காக அவளும் பயந்து விட வில்லை.

"தள்ளி நிற்க போறிங்களா இல்லையா?" அவள் கேட்டதும் தான் தாமதம் அவள் இரண்டு கையையும் பிடித்து தூக்கி மின்தூக்கியின் சுவரோரம் அழுத்தியவன்,

"ஒரு தரம் ஏமாந்தது போல் மறு தரமும் ஏமாந்து போக மாட்டேன்." கண்கள் கோபத்தில் சிவக்க கூறியவன், அடுத்து என்ன செய்ய காத்து இருந்தானோ தெரியாது. நல்ல வேளை மின்தூக்கியின் கதவு திறந்தது. அதில் திகைத்து திரும்பியவன் செய்கையில் கிடைத்த இடைவெளியில் வெளிப்புறம் பாய்ந்தாள் இளவஞ்சி.

வெளியில் வந்தவள் வாகனம் நிறுத்துமிடம் சென்று அவன் வருவதற்குள் சென்றுவிட எண்ணி தன் இரு சக்கர வாகனத்தை உயிர்பித்தாள். ஆனால் அதை செல்லவிடாமல் கையால் தடுத்தபடி அவளைப் பார்த்தான் மித்ராதன். இளவஞ்சிக்கு சலிப்பாக இருந்தது.

"அவனுக்காக தான் என்னை வேண்டாம் என்று தள்ளி வைத்தாயோ?"

"எவனுக்காக?" என்னவென்று புரியாமல் அவனைப் பார்த்தாள் இளவஞ்சி.

"அதான் அந்த டாக்டர்..... அவன் கிட்ட மட்டும் சிரிச்சு சிரிச்சு பேசிகிட்டு இருந்த. அவனை மனசில் நினைத்துக் கொண்டு தான் என்னிடம் உதாசீனம் காட்டினாயா?"

மித்ராதன் பேச்சில் இளவஞ்சிக்கு எரிச்சல் வந்தது. ஆண்கள் எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதற்கு இணங்க அவனின் பேச்சு இருந்தது அவளின் கோபத்தை கிளறியது. இதை எல்லாம் விட புகழேந்தியை, தான் விரும்புவதாக அவன் கூறியது அவளுக்கு இகழ்ச்சியாக இருந்தது. கட்டிய கணவனுக்கே அவள் மனதிற்குள் இடம் அளிக்கவில்லை. இதில் யாரையோ தன்னுடன் இணைத்து வைத்து பேசும் இவன் முட்டாள்தனத்தை என்ன சொல்வது என்று எண்ணியவள் உதடுகள் ஏளனத்துடன் வளைந்தது.

அவளின் உதட்டோரம் ஏளனத்தைக் கண்டவனுக்கு ஆத்திரமும் கோபமும் பல மடங்கு பெருகியது. அவள் முன் ஆட் காட்டி விரலைக் காட்டி கோபத்துடன் கூறினான்.

"இந்த திமிரை நான் அடக்காமல் விட மாட்டேன். உனக்கும் எனக்குமான கணக்கு ஒன்னு இருக்கு. அதையும் தீர்க்காம விட மாட்டேன். நானும் உன்னை மறந்துட்டு வேற கல்யாணம் பண்ணிக்கலாம் என்ற எண்ணத்தில் தான் இருந்தேன். ஆனால் நீ வேறு ஒருவனை நினைத்துக் கொண்டு என்னை முட்டாளாக ஆக்கியது தெரிந்ததும் என்னை நான் மாற்றிக் கொண்டேன். நீ என் கூட தான் வாழ்ந்து ஆக வேண்டும். நான் இழந்த ஏழு வருட வாழ்க்கைக்கு நீ பதில் சொல்லித் தான் ஆக வேண்டும். என்னை விட்டு விட்டு வேறு ஒருவனுடன் வாழலாம் என்று மட்டும் பகல் கனவு காணாதே".

"பேசி முடிச்சாச்சா இப்ப நான் போகலாமா?" மித்ராதன் பேசியது அவளுக்கு எரிச்சலை ஊட்டினாலும் கொஞ்சம் சிரிப்பாகவும் இருந்தது. பின்னே நாடக பாணியில் பேசினால் சிரிப்பு வராதா? அவனுடன் வாழ்ந்து தான் ஆக வேண்டுமாமே? என்ன ஒரு நம்பிக்கை? அதற்கு அவளும் மனது வைக்க வேண்டுமே. என்ன ஒரு முட்டாள்தனமாக

பேசுகிறான்? இவன் திருந்தவே மாட்டானோ? என்று எண்ணியவள் ஒரு வித கேலியான முக பாவத்துடன் அவன் முகத்தைப் பார்த்தாள்.

அவளின் பேச்சு அவளின் முகபாவம் கண்டு அவன் திகைத்து போய் நின்று இருந்தான். அவனின் அமைதியையே சம்மதமாக எண்ணி தன் வாகனத்தை முடுக்கி விட்டு வெளியில் பறந்தாள்.

இளவஞ்சி சென்ற திசையைப் பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதன் மனம் கோபத்தில் பொங்கியது. தன்னை விட வயதில் சிறியவள் அதுவும் அவன் மனைவி அவள் எத்தனை தடவை அவமதித்தாலும் தாங்கிக் கொண்டு செயலற்று நிற்க வேண்டி இருக்கிறதே என்று மனதினுள் குமைந்தான். இதற்கு எல்லாம் பதிலடி கொடுக்காமல் விட மாட்டேன் என்று மனதில் கூறிக் கொண்டவன் கண்கள் வெறியில் பளபளத்தது.

இரவு படுத்தவனுக்கு இளவஞ்சியின் உதாசீனமே நியாபகம் வந்து தூக்கத்தை துரத்தியது. மனம் பழையதை எண்ணி தன் காயத்தை மேலும் கிளறி ரணமாக்கியது. அந்த ரணத்தின் வலி கூட எரிச்சலுற்ற அவன் மனதுக்கு இதமாக தான் இருந்தது. அவனோ பழையதை நினைத்துப் பார்த்துக் கொண்டு இருக்க, அவளோ அதை நினைத்தும் பார்க்க விரும்பாதவளாய் நித்திரையில் ஆழ்ந்து இருந்தாள்.

மித்ராதன் இளவஞ்சி புகைப்படம் பார்த்ததுமே இவள் தான் என் மனைவி என்று முடிவுக்கு வந்து விட்டான். அழகான பணக்கார வாலிபனான அவனை எத்தனையோ இளம் பெண்கள் சுற்றிய போதும் அவன் யார் வலையிலும் விழவில்லை. முதன் முறையாக இளவஞ்சியிடம் அவன் மனம் விழுந்தது. நிச்சய நாளை வெகு ஆர்வத்துடன் எதிர்ப்பார்த்து இருந்தான். அந்த நாளில் உறவினர்கள் சூழ நிற்க அவள் கையில் மோதிரத்தை அணிவித்தான் மித்ராதன். பட்டு போன்ற அவளின் கை மென்மையில் தன்னைத் தொலைத்தான்.

"ஐ லவ் யூ பேபி." மோதிரம் போடும் சாக்கில் அவள் காதருகில் குனிந்து சொன்னான். அவளிடம் இருந்து வந்த பூ வாசம் அவனை வசம் இழக்க செய்தது.

ஆனால் இளவஞ்சியோ எந்த ஒரு பாதிப்பும் இல்லாமல் அவன் கையில் மோதிரத்தை அணிவித்தாள். அவளைப் பொறுத்தவரையில் திருமணம் என்பது எல்லோர் வாழ்க்கையிலும் வந்த மாதிரி தன் வாழ்க்கையில் வந்து இருக்கிறது. அதை தாண்டி அவள் யோசிக்கவில்லை. அதனால் மித்ராதனிடம் தனிப்பட்ட விருப்பு வெறுப்பு என்று எதுவும் அவளுக்கு தோன்றவில்லை. இயந்திர கதியில் போட்டு விட்டு நிமிர்ந்தவளின் பார்வைக்காகவே காத்து இருந்தவன் போல மித்ராதன் கண் சிமிட்டினான்.

அதன் பின் உறவினர்கள் ஒவ்வொருவராக வர வர அவர்களுடன் இணைந்து நின்று புகைப்படத்துக்கு நிற்க என்று நேரம் ஓடியது. அந்த இடைவெளியில் கிடைத்த தனிமையில் அவளிடம், "இந்த புடவையில் நீ அப்படியே ஏஞ்சல் மாதிரி இருக்கே பேபி."

"என் பெயர் பேபி இல்லை. இளவஞ்சி." அவன் முகம் பாராமல் எங்கோ பார்த்துக் கொண்டு கூறினாள்.

"உன் அப்பா உன்னை பாப்பா என்று தானே அழைக்கிறார். நான் அதை தான் ஆங்கிலத்தில் கூறினேன்." வெண் பற்கள் தெரிய அழகாக சிரித்தவனைக் கண்டு இளவஞ்சி மயங்கிப் போய் இருக்க வேண்டும். ஆனால் அவள் மனம் மயங்கவில்லை. மாறாக அவளிடத்தில் கடுப்பு தோன்றியது.

"அவர் என் அப்பா. நீங்க........"

"ம்....... சொல்......... நான்......." ஒற்றை புருவத்தை தூக்கி அவளை பார்த்துப் கேட்டான். அதற்கு பதில் கூறாமல் தலையை குனிந்து கொண்டாள் இளவஞ்சி. அவனுக்கோ அவளை சீண்டிப் பார்க்க தோன்றியது. மாலையின் மறைவில் அவளின் இடுப்பு பகுதியை மெல்ல வருடினான்.

"கையை எடுக்கிறிங்களா இல்லையா?" இளவஞ்சியின் கோபக் குரல் கேட்டு சற்று திகைத்து போய் அந்த அதிர்ச்சியில் கையை உடனே எடுத்தான். ஒன்று அவள் வெட்கப்பட வேண்டும் இல்லை அவன் செயலை ரசிக்க வேண்டும். இரண்டும் இல்லாமல் அவள் கோபம் அவனுக்கு ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அதை சமாளித்துக் கொண்டான். சின்ன பெண் பயந்து போய் இருப்பாள் என்று எண்ணி அதை விட்டு விட்டான்.

இளவஞ்சியின் படிப்பு முடியும் வரை அவர்களின் திருமணம் தள்ளி வைக்கப்பட்டு இருந்தது. அவன் தந்தையிடம் எவ்வளவோ மன்றாடி பார்த்தான்.

"பே..... அவள் இங்கே வந்து படிக்கட்டுமே டாட். எதுக்கு கல்யாணத்தை தள்ளிப் போட வேண்டும்." என்று மன்றாடி பார்த்தான்.

"நீ தொழிலை எடுத்து நடத்து. நீ தொழில் பற்றி புரிந்து வரும் போது அதற்குள் இளாவும் படிப்பை முடித்து விடுவாள்." என்று தந்தை அவனுக்கே கிடுக்கி பிடி போட்டார். அவன் தனக்காக தொழிலைக் கவனிக்க போனானோ இல்லையோ இளவஞ்சிக்காக போனான்.

பிற்காலத்தில் அவளை நல்ல நிலைமையில் வைக்க வருமானம் அவசியம் என்று அவனுக்கும் புரிந்தது. அதை எல்லாம் விட இளவஞ்சியின் நியாபகத்தில் இருந்து விடுபடவும் தொழிலில் மூழ்கினான்  என்றும் சொல்லலாம். ஏனெனில் பல முறை அவளிடம் பேச முயற்சித்தும் அவள் சரியாக பேசவில்லை. இல்லை என்றால் அவள் தந்தையிடம் கொடுத்து விட்டு ஓடி விடுவாள்.

இப்படியே நாட்கள் செல்ல ஒரு நாள் திடீரென்று அருணகிரி வந்து உனக்கும் இளவஞ்சிக்கும் திருமணம் என்றதும் சந்தோசத்தில் அவன் மனம் பறந்தது. இளவஞ்சிக்கோ ஐயோ என்று இருந்தது. படிப்பு பாதியில் இருக்கும் போது திருமணம் எதற்கு என்று தந்தையிடம் கேட்ட போது, அங்கேயும் சென்று படிப்பை தொடரலாம்

என்று அவள் வாயை அடைத்தார். தன் படிப்பு இந்த திருமணத்தால் கெடாது என்ற அளவில் அவளுக்கு நிம்மதி.

திருமண உடைகள் எடுக்க, பத்திரிகைகள் கொடுக்க என்று இடைப்பட்ட நாட்களில் அவன் இளவஞ்சியை சந்தித்தாலும் கலகலப்பாக பேசவில்லை என்றாலும், ஒன்றிரண்டு வார்த்தைகள் இளவஞ்சி அவனிடம் பேசினாள். அதுவும் அவள் தந்தைக்காக. மித்ராதனிடம் அவள் பேசாமல் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடுவதை கண்டு கொண்டு, மாறன் அவளை தனிமையில் அழைத்து கண்டித்தது எல்லாம் மித்ராதனுக்கு தெரியாதே.

மித்ராதன் கனவுடன் எதிர்ப்பார்த்த திருமண நாளும் வந்தது. உற்றார் உறவினர்கள் ஆசிர்வதிக்க திருமணம் இனிதே நடந்தது. அவன் மிகவும் ஆவலுடன் எதிர்ப்பார்த்த இரவும் வந்தது. அது அவன் தலையில் மிகப் பெரிய இடியை தூக்கி போடப் போவதை அறியாமல் ஆர்வத்துடன் இளவஞ்சியின் வருகையை எதிர்ப்பார்த்து காத்து இருந்தான்.

மித்ராதன் எண்ணத்தை பொய்யாக்காமல் அவன் தேவதை உள்ளே நுழைந்தாள். அவளைக் கண்டதும் அவனின் அடக்கப்பட்ட உணர்வுகள் மேலெழுந்து பேயாட்டம் போட்டது. இவ்வளவு நாள் வரை காத்து வந்த பிரம்மச்சரிய விரதம் இன்றோடு பூர்த்தி அடைய போவதை எண்ணி மனம் பரவசம் அடைய இளவஞ்சி அருகில் சென்றான்.
அவள் கையில் இருந்த பால் சொம்பை கட்டிலில் பக்கவாட்டு மேஜையின் மீது வைத்தவன், அதற்கு மேல் தாள மாட்டாதவனாய் அவளை நெருங்கினான். அவனின் விரக தாபத்தையே எண்ணிக் கொண்டு இருந்தவன் இருபது வயது பெண்ணின் பூ போன்ற மனதைப் பற்றி கொஞ்சமும் கவலைப் படாமல் போனது தான் அவன் செய்த தவறு.

இளவஞ்சிக்கோ அவனின் எதிர்பாராத இந்த தாக்குதல் அச்சத்தை கொடுத்தது. என்ன தான் அவள் மருத்துவம் படித்தாலும் ஆண் பெண் உறவைப் பற்றி படித்து இருந்தாலும் இதை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. அவை எல்லாம் அறிவுப் பூர்வமாய் படித்தது. அதில் வேலை செய்வது அறிவு மட்டுமே. ஆனால் தாம்பத்திய பந்தத்தில் மன உணர்வு முக்கிய இடம் பெறுகிறது. அவளால் மித்ராதனை இன்னமும் கணவன் என்ற உறவில் பார்க்க முடியவில்லை.

அந்த உறவை அவள் மனதில் பதிய வைக்கவும் இல்லை. இந்த நிலையில் அவனின் முரட்டுத்தனமான இந்த செயலை அவள் வெறுத்தாள். இருந்தாலும் அவன் தன் கணவன் என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். என்ன தான் மனனம் செய்தது போல் சொல்லி மனதை சமாதானப்படுத்தினாலும், அவனின் முரட்டுத்தனம் மூர்க்கமாக மாறிய பொழுது அனிச்சை செயலாக அவள் கை அவனைத் தாக்கியது.

உணர்வின் தாக்கத்தில் ஆட்கொண்டு இருந்தவனுக்கு அவளின் செயலை சமாளிக்க முடியவில்லை. எதிர்பாராத

தாக்குதலில் அவன் நிலை குலைந்து கட்டிலின் மறுபுறம் சென்று விழுந்தான். விழுந்த வேகத்தில் அவன் நாடி கட்டிலில் இடித்து ரத்தம் வழிந்தது. அவளின் இந்த செயலில் அதிர்ந்து போனவனாய் செய்வதறியாது திகைத்து அப்படியே நின்று இருந்தான். அவனின் திகைத்த நிலை கண்டவள் அதற்கு மேல் தாமதிக்காமல் பால்கனி பக்கம் சென்று கதவை வெளிப்பக்கமாக பூட்டிக் கொண்டாள்.

இளவஞ்சியின் இந்த செயலில் மித்ராதன் மனதில் அவள் மேல் இருந்த காதல் நேசம் அன்பு ஆசை எல்லாம் வடிந்து ஆத்திரம் எரிச்சல் இயலாமை ஆக்கிரமித்துக் கொண்டது. கைமுஷ்டி இறுக மெத்தையில் ஓங்கிக் குத்தினான். தலையணை அவன் கை பட்டு பறந்தது. மெத்தை விரிப்பில் அலங்காரம் செய்யப்பட்டு இருந்த பூக்கள் எல்லாம் மூலைக்கு ஒன்றாய் சிதறியது. பைத்தியம் பிடித்தவன் போல் அங்குமிங்கும் நடந்தான்.

'நான் என்ன தவறு செய்தேன்? கணவன் மனைவி உறவில் இது எல்லாம் சாதாரணம். இவள் ஏன் இப்படி நடந்து கொண்டாள்? இவளை நேசித்ததை தவிர நான் என்ன தவறு செய்தேன்? என்னவோ இவளை மானபங்க படுத்தியது போல் அல்லவா இருந்தது அவள் செய்கை. ராட்சசி என்னமாய் அடித்து விட்டாள்?' மனதில் புலம்பினான்.

நண்பர்கள் சொன்ன தவறான உபதேசம் அவனின் உணர்வுகள் எல்லாம் சேர்ந்து அவன் இவ்வாறு நடந்து கொண்டதை அவன் தவறாக எண்ணவில்லை. மாறாக இளவஞ்சியை தான் தவறாக எண்ணினான்.

ஆண் கை பட்டு பெண் உருகி குழையாமல் இணங்காமல் இருந்தால் அவள் பெண்ணே இல்லை. அதனால் இளவஞ்சி ஒரு  "ஜடம்" என்று முடிவுக்கு வந்தான். தாம்பத்யம் என்பது இரு உடல் சேர்வது மட்டுமே என்று நினைத்தவன் அது இருமனம் ஒன்று கூடும் கூடல் என்பதை ஏனோ அந்த நிமிடம் மறந்து போனான். தன்னை

இந்த அளவுக்கு அவமானப் படுத்திய அவள் தனக்கு தேவையில்லை என்று அந்த கணம் முடிவு செய்தான்.

அங்கே இளவஞ்சியோ மனம் வெறுத்து வாழ்க்கையே முடிந்து விட்டது போல் அமர்ந்து இருந்தாள். அவள் ஏன் அப்படி செய்தாள் என்று அவளுக்கே தெரியவில்லை. என்ன தான் கணவன் என்று மனதை சமாதானப் படுத்தினாலும் அவனின் கை அவளை தழுவிய பொழுது அவளுக்கு அருவருப்பாக இருந்தது. அவனின் பிடியில் இருந்து தப்பிக்க தான் அவள் மனம் நினைத்தது. இதை வெளியில் யாரிடமாவது சொன்னால் தன்னை தான் பைத்தியக்காரியை பார்ப்பது போல் பார்ப்பார்கள் என்று அவளுக்கும் தெரியும். ஆனால் ஏதோ ஒன்று அவனோடு அவளை ஒன்றி விட முடியாமல் செய்தது.

அவள் மனதை கொஞ்சமும் அறியாமல், மதியாமல் அவன் நடந்து கொண்ட முறை தான் அவளின் செயலுக்கு காரணம் என்று அவள் தன்னை நியாயம் கற்பித்துக் கொண்டாள். பெண்ணின் மனதை அறியாமல் இவனைப் போன்ற மூர்க்கர்களை என்ன தான் செய்வது என்று அவளுக்கு ஆத்திரமாக வந்தது. அவனை "காட்டான்" என்று மனதில் திட்டிக் கொண்டாள்.

'ஆண்கள் எல்லோருமே காமுகர்கள், பெண்களை போகப் பொருளாக பார்ப்பவர்கள், பெண்களுக்கு என்று ஒரு மனம் இருப்பதை புரிந்து கொள்ளாதவர்கள். அதில் இவன் மட்டும் விதி விலக்கா என்ன? அந்த கூட்டத்தில் சேர்ந்த ஒருவன் தானே இவன்' என்று நினைத்தவள் உதடு ஏளனத்துடன் வளைந்தது.

அவனோடு இனி ஒரு போதும் வாழ முடியாது. அவனைப் பிரிந்து செல்வது தான் ஒரே வழி என்று மனதில் முடிவு செய்தாள். ஆனால் அவளுக்கு தெரியவில்லை அவள் மித்ராதனை வெறுக்கவில்லை திருமண வாழ்க்கையைத் தான் வெறுத்தாள் என்று. அது அவளுக்கு தெரியும் போது?

மறுநாள் விடிந்த பின் மித்ராதன் கிளம்பி அறையை விட்டுச் சென்றபின், பால்கனியில் இருந்து உள்ளே வந்த

இளவஞ்சி, அதன் பின் குளித்துக் கிளம்பி வெளியில் வந்தாள். மித்ராதன் அவள் முகத்தைப் பார்க்க கூட பிடிக்காதவனாய் அவள் இருந்த பக்கம் கூட திரும்பவில்லை. அவளும் அவனை நாட வில்லை. அருணகிரிக்கும் அமராவதிக்கும் தெரியாமல் தான் இவ்வளவும் நடந்தது.

அவர்களால் கொஞ்சமும் சிறியவர்களை சந்தேகப்பட முடிய வில்லை. ஆனாலும் அமராவதியின் கண்ணில் மகனின் நாடியில் இருந்த காயம் பட்டது. அதைப் பற்றி மித்ராதனிடம் கேட்ட போது ஒரு அடிப்பட்ட பார்வையை மனைவியிடத்தில் செலுத்தியவன், "ஷேவ் பண்ணும் போது தெரியாமல் கீறி விட்டது மாம்" என்று சமாளித்தான். மகன் சொன்னதை அந்த அன்னையும் நம்பிவிட்டார்.

அதன் பின் மாறனும் குணவதியும் வந்து பெண் மாப்பிள்ளையை மறுவீடு அழைத்துச் சென்றனர். அன்று மாலையில் தன் வீடு செல்ல வேண்டும் என்று மித்ராதன் பிடிவாதம் பிடித்தான்.

"என்ன மாப்பிள்ளை மறுவீடு வந்து விட்டு ஒரு நாள் கூட தாங்காமல் போனால் எப்படி?" மாறன் சற்று தயங்கி தான் கேட்டார்.

"இல்லை மாமா. எனக்கு முக்கியமான வேலை இருக்கு. லோக்கலில் தானே இருக்கிறோம். எப்பொழுது வேண்டுமானாலும் வருகிறேன். இப்பொழுது ப்ளீஸ் மாமா......."

மனைவியால் நேர்ந்த விபரீதத்தை முடிந்த அளவு மறைத்து பதில் கூறினான். அவன் அந்தரங்கத்தை வெளிச்சம் போட்டுக் காட்டுவது அவனுக்குமே பிடிக்கவில்லை.

மித்ராதன் சொல்லவில்லை என்றாலும் இளவஞ்சி தன் செயல் மூலம் எல்லோருக்கும் வெளிச்சம் போட்டுக் காட்டி விட்டாள். அதாவது அவனோடு போக மறுத்து விட்டாள். மாறனும், குணவதியும் எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அழுதும் மன்றாடியும் பார்த்தனர். அவள் தன் முடிவில்

இருந்து மாறவும் இல்லை, அதே சமயம் ஏன்? எதற்கு? என்று காரணமும் சொல்லவில்லை.

இதை எல்லாம் பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதனுக்கு கோபம் தான் வந்தது. எப்படி அவளால் வாய் திறந்து சொல்ல முடியும். கணவனை அடித்தேன் என்றா? அதான் வாயை மூடிக் கொண்டு இருக்கிறாள் என்று இகழ்ச்சியாக நினைத்தவன் எக்கேடோ கெட்டுப் போ என்று அவளை அவள் வீட்டிலேயே விட்டு விட்டு போய் விட்டான். அவனும் எவ்வளவு தான் பொறுத்து போவது?

வீட்டிற்கு சென்றால் அங்கே அவன் பெற்றோர் பிடித்துக் கொண்டனர். அதற்குள் மாறன் அவர்களிடம் விஷயத்தை சொல்லி இருக்கிறார். அருணகிரிக்கும் அமராவதிக்கும் மகனையும் தப்பாக நினைக்க முடியவில்லை. அதே சமயம் மருமகளையும் தப்பாக நினைக்க முடியவில்லை. இருவருமே குணத்தில் தங்கம் தான், இருந்தாலும் மகனிடம் துருவி துருவி விசாரித்தார்கள்.

"நானா வாழ மாட்டேன்னு அவளை அவள் வீட்டிற்கு துரத்தி விட்டேன். அவளா போய் அங்கே உட்கார்ந்து கிட்டு வர மாட்டேன்னா நான் என்ன பண்றது? சும்மா சும்மா என்னை கேள்வி கேட்காமல், காரணம் சொல்லாமல் அங்கே உட்கார்ந்து இருக்காளே அவளைப் போய் கேளுங்க." என்று இரைந்து கத்தியவன் தன் கோபத்தை அறைக் கதவில் காட்டினான். அவன் அப்பொழுது உணரவில்லை தான் செய்தது தவறு என்று.

அருணகிரியும் அமராவதியும் எவ்வளவோ கேட்டுப் பார்த்தும், இளவஞ்சி அசையாததால் மன பாரத்துடன் தங்கள் வீடு திரும்பினர். இரு வீட்டிலும் நிம்மதி பறி போனது. இதை எல்லாம் புரியாமல் பார்த்துக் கொண்டு இருந்தான் இளஞ்செழியன். அக்காவின் வாழ்க்கை கெடக் காரணம் மித்ராதன் என்ற எண்ணம் அவன் மனதில் ஆழப் பதிந்தது. அதனாலேயே அவன் மேல் வெறுப்பு வந்தது.

இரு வாரங்கள் அமைதியாக கழிந்தது. திடீரென்று 'நெஞ்சு வலி' என்று நெஞ்சைப் பிடித்துக் கொண்டு சாய்ந்த மாறனை மருத்துவமனைக்கு கொண்டு சேர்ப்பதற்குள் தன் உயிரை அவர் விட்டு இருந்தார். அந்த குடும்பமே இடிந்து போனது.

இளவஞ்சிக்கு தன்னால் தான்  தந்தைக்கு இப்படி ஆனதோ என்று சுய இரக்கம் தோன்ற அப்படியே இறுகிப் போனாள். அதற்கு அருணகிரி, அமராவதி மித்ராதன் எல்லோரும் வந்து இருந்தனர்.

மாறன் முகத்திற்காக மித்ராதன் வந்து இருந்தான். ஆனால் அங்கு அழாமல் தந்தையின் இறுதிப் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு இருந்த இளவஞ்சியை கண்டதும் அவன் ஆத்திரம் பன்மடங்கானது.

'இறந்து இருப்பது அவள் தந்தை. கொஞ்சமும் கண்ணில் கண்ணீர் வருகிறதா பார்? என்ன பெண் இவள்? ஜடம் என்ற வார்த்தை இவளுக்கு பொருத்தம் தான்' என்று மனதில் கசப்புடன் நினைத்துக் கொண்டான்.

அவனுக்கு தெரியாத ஒன்று இருந்தது. மாறன் தன் உறவினர் எவரையும் அருகில் சேர்த்தது இல்லை. எல்லாம் காக்காய் கூட்டம் என்றே சொல்வார். அது போல் அவர்களின் செயல்களும் இருக்கும். அதனாலேயே தந்தையின் காரியத்திற்கு அவர்களை வைத்து பணம் செலவு செய்ய இளவஞ்சி விரும்ப வில்லை.

அருணகிரியோ நண்பரின் மறைவில் அப்படியே ஓய்ந்து போய் அமர்ந்து விட்டார். இளஞ்செழியனோ இன்னமும் அவன் தந்தை மறைந்து போனதை கூட உணராமல் திக் பிரமை பிடித்தார் போல் அமர்ந்து இருந்தான். மிச்சம் இருப்பது மித்ராதன் மட்டுமே. அவனை வேலை வாங்குவதில் அவளுக்கு விருப்பம் இல்லை. அவனால் தான் இவ்வளவும் என்று ஆத்திரம் அவள் கண்ணை மறைத்தது. அதனால் தன் துக்கத்தை அடக்கிக் கொண்டு மேற்கொண்டு ஆக வேண்டிய காரியங்களைப்

பார்க்கலானாள். அது மித்ராதன் கண்ணை உறுத்தியது போலும்.

மாறன் இறந்து பதினாறு நாள் காரியம் ஆனதும் மீண்டும் அருணகிரி, அமராவதி இளவஞ்சியை தங்களுடன் வந்து விடுமாறு அழைத்தனர். இளவஞ்சியோ தன் முடிவில் மாறாது இருந்தாள். இந்த முறை குணவதி மிரட்டிக் கூட பார்த்தார். அதற்கும் அவள் அசைய வில்லை. அவளின் வருகைக்காக அவன் மட்டுமில்லாமல் நேரம் காலமும் கூட காத்து இருக்கவில்லை.

அவளின் நிலை அது என்றால் மித்ராதன் நிலையோ பரிதாபமாக இருந்தது. என்ன தான் அவளை அவன் விரும்பி திருமணம் செய்து இருந்தாலும் முதலிரவில் மனைவி கையால் வாங்கிய அடி அவனின் ஆண் என்ற ஆதிக்க மனோபாவத்தை தூண்டி விட்டது. அதனால் அவளைப் பற்றி நினைக்காமல் மித்ராதன் வெளிநாட்டில் வேலை ஒன்றை தேடிக் கொண்டு பறந்து விட்டான்.

அருணகிரியும் அமராவதியும் அவனைத் தடுக்க வில்லை. கொஞ்ச நாள் மனமாற்றத்திற்காக அவன் அங்கே இருக்கட்டும் என்று நினைத்தனர். ஆனால் ஒரேடியாக அவன் ஏழு வருடம் அங்கேயே இருப்பான் என்று அவர்கள் கனவிலும் நினைக்க வில்லை.

இளவஞ்சி தன் படிப்பை தொடர்ந்தாள். அவளுக்கு மித்ராதன் நினைவோ எதுவுமே நியாபகத்தில் இல்லை. அவன் முகம் கூட அவளுக்கு மறந்து விட்டது. கருத்திலும் மனதிலும் பதிந்தால் தானே அவன் முகம் மறக்காமல் இருக்க. ஒன்றிரண்டு சமயங்களில் அவன் முகம் பார்த்து இருக்கிறாள் தான். இல்லை என்று சொல்லி விட முடியாது. ஆனால் ஊன்றிப் பார்த்தது இல்லை. அதனாலோ என்னமோ அவள் நினைவில் அவன் நினைவு இல்லாமல் போனது. அவன் நினைவு தான் இல்லாமல் போனது அவன் பெயர் அவள் கூடவே தான் வந்தது.

எந்த நேரத்திலும் அவள் மணமானவள் என்பதை மறைக்க விரும்பவில்லை. அதனால் என்னமோ உடன் படிக்கும்

ஆண்கள் அவளை சீண்டவில்லை. இது அவளுக்குப் பிடித்து போனது. அதனால் தைரியமாக திருமதி. இளவஞ்சி என்றே தன்னை அடையாளப்படுத்திக் கொண்டாள். தாலி பெண்களை காக்கும் வேலி என்ற சொல் உண்மை என்பது போல் அவளின் மாங்கல்யம் அவளுக்கு பாதுகாப்பு அளித்தது. அதை எல்லாம் விட ஆண் நண்பர்கள் தொந்திரவு குறைந்தது அவளுக்கு நிம்மதியாக இருந்தது.

குணவதி தான் புலம்புவார். அதையும் இளஞ்செழியன் அடக்கி விடுவான். அக்காவிற்கு திருமணம் பற்றி எந்த நியாபகமும் வர கூடாது என்பதற்காக திருமண புகைப்படம் ஒன்று கூட இளவஞ்சி கண்ணில் படாமல் மறைத்து வைத்தான். ஏன் என்று கேட்ட அன்னையிடம் அக்காவின் படிப்பிற்கு இந்த புகைப்படங்கள் இடையூறாக இருக்கும் என்று சொல்லி சமாளித்தான். அது உண்மையும் கூட என்பதால் குணவதி அதை நம்பினார்.

மித்ராதனோ தன் முழு கவனத்தையும் வேலையில் செலுத்தி இளவஞ்சியை மறக்க முயற்சி செய்து, ஓரளவு அதில் வெற்றியும் பெற்றான். அப்படி சென்று கொண்டு இருந்த அவன் வாழ்க்கையில் ஒரு நாள் அவன் அலுவலகத்தில் வேலை பார்க்கும் மெர்சி அவனை இரவு விருந்துக்கு தன் வீட்டிற்கு அழைத்தாள். சென்றால் தான் என்ன என்று அவனுக்கும் தோன்றியது.

விருந்து முடிந்து அவள் அவனை நெருங்கிய போது, மித்ராதன் மனதில் இளவஞ்சியின் உதாசீனம் நியாபகம் வந்து அவனை வெறியேற்றியது. அவளைப் பழி வாங்குவதாக எண்ணி மெர்சியை வளைத்து அணைத்தான். அவனின் வெறி மெர்சியிடம் மூர்க்கத்தனத்தை காட்டியது. ஆனால் இளவஞ்சி போல் மெர்சி அவனை ஒதுக்கி தள்ளவில்லை. மாறாக அவனுடன் ஒத்துழைத்தாள். அவள் கழுத்தில் முகம் புதைத்தவன் அதிர்ச்சியாகி அப்படியே அவளை உதறித் தள்ளினான். அவன் உதறியதில் மெர்சி தள்ளி போய் விழுந்தாள்.

கோபத்துடன் எழுந்தவளிடம் பல முறை மன்னிப்பு கேட்டு விட்டு அங்கு இருந்து வெளியேறினான்.

தன் அறைக்கு சென்றும் அலை பாய்ந்த அவன் மனதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை. மெர்சியிடம் எப்படி இளவஞ்சியின் அருகாமையை வாசத்தை உணர்ந்தான். அவனுக்கே புரியாத புதிராக இருந்தது. இளவஞ்சியின் வாசம் இத்தனை மாதங்களில் அவன் மறந்து போய் இருக்க வேண்டுமே. இன்னமும் அது அவன் நியாபகத்தில் இருக்கிறது என்றால்..... யோசிக்கவே அவனுக்கு பயமாக இருந்தது.

ஆம் அவன் இளவஞ்சியை நேசிக்கிறான். அவளை மறக்க முடியாமல் தவிக்கிறான். தலை முடியை அழுந்த கோதியவன் கண்களை இறுக மூடிக் கொண்டான். கண்களில் அவனையும் அறியாமல் நீர் துளிர்த்தது. அவனுக்கே அவன் மேல் கோபம் வந்தது. தன்னை வேண்டாம் என்று தூக்கி எறிந்தவளை நினைத்துக் கொண்டு அதுவும் அழுது கொண்டு இருப்பது அவனுக்கு அவமானமாக இருந்தது. அவளை மறக்க வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்தான். இந்த ஏழு வருடங்களில் அதில் வெற்றியும் கண்டான்.

அந்த ஏழு வருடங்களில் எத்தனையோ பெண்கள் அவன் வாழ்வில் குறுக்கிட்டனர். எல்லோரிடமும் அவன் கூறும் ஒரே பதில் தான் மணமானவன் என்பதே. சில சமயம் அந்த வார்த்தை வேலை செய்தது. சில சமயம் அதையும் தாண்டி பெண்கள் நெருக்கம் காண்பிக்கும் போது மனைவி பேர் சொல்லி தப்பித்துக் கொள்வான். அதனால் எல்லோரும் அவனும் அவன் மனைவியும் வேலை நிமித்தம் பிரிந்து இருக்கிறார்கள் என்று நினைத்துக் கொண்டனர். அது தானே அவனுக்கும் வேண்டும்.

இந்த நிலையில் தான் இளவஞ்சி படித்து முடித்து வேலைக்கு சேர போகிறாள் என்ற தகவலை அவன் அன்னை அவனிடம் கூறினார். தன் வாழ்க்கையில் முக்கிய முடிவு எடுக்கும் நேரம் வந்து விட்டதை உணர்ந்து, உடனே

கிளம்பி தாய்நாடு வந்தான். அதற்காக மனைவியுடன் சேர்ந்து வாழ வந்தான் என்று இல்லை. இனி மேலும் அவளுக்காக தன் வாழ்க்கையை அழித்துக் கொள்வதில் அர்த்தம் இல்லை. அவளிடம் இருந்து முறையாக விவாகரத்து வாங்கி மறுமணம் செய்யவே அவன் விரும்பினான். அவன் அன்னையும் அதற்கு ஏற்ப மருமகள் பத்தி பேசியதும் சரி என்றான். ஆனால் அவர் இளவஞ்சியை மனதில் வைத்துக் கொண்டு பேசினார் என்று அவனுக்குமே தெரியாது.

மீண்டும் மருத்துவ மனையில் இளவஞ்சியை பார்த்த போது அவன் கொஞ்சம் அதிர்ந்து தான் போனான். அதுவும் புன்னகை முகத்துடன் அழகாக கம்பீரமாக இருந்தவளைக் கண்டு பிரமித்தான். ஆனாலும் அவளிடம் இருந்த கோபம் இன்னமும் மனதில் அப்படியே தான் இருந்தது. தன்னை வேண்டாம் என்றவளிடம் கெஞ்ச அவன் மானம் கெட்டவனா என்ன?

(அவளை மறக்கவே உனக்கு ஏழு வருடம் ஆகி இருக்கு. இந்த லட்சணத்தில் நீயே உன்னை மானங்கெட்டவனான்னு கேட்டுக்கிறியே உன்னை என்ன செய்ய?).

அவன் பெற்றோரை அவள் மாமா என்றோ அத்தை என்றோ அழைக்காதது வேறு அவன் கோபத்தை இன்னமும் தூண்டியது. அவளின் மீதான அவன் கோபம் அதிகரித்ததே ஒழிய குறையவில்லை. அவளை விட்டு விலகிப் போனால் போதும் என்றே அவன் மனம் துடித்தது.

இந்த நிலையில் தான் இளவஞ்சி புகழேந்தி சிரித்து பேசிக் கொண்டு இருப்பதைப் பார்த்த மித்ராதன் தன் முடிவை மாற்றிக் கொண்டான். புகழேந்தியை மனதில் நினைத்துக் கொண்டு தான் தன்னை வேண்டாம் என்று இருக்கிறாள் என்ற முடிவுக்கு வந்தான். ஏனெனில் அவனை வெறுக்க வேறு காரணம் ஏதும் இல்லை. அதனால் அவனாக கண்டு பிடித்தது தான் இளவஞ்சி - புகழேந்தி காதல்.

தன் ஏழு வருட வாழ்வை வீணாக்கி விட்டு கொஞ்சமும் குற்ற உணர்வு இல்லாமல் அவள் அவனோடு சிரித்து

பேசிக் கொண்டு இருந்தது அவனின் பழிவாங்கும் எண்ணத்தை வலுவூட்டியது. அதனால் தான் அவளிடம் பேசினான். அவளோ கொஞ்சமும் அவனை சட்டை செய்யாமல் சென்றது இன்னமும் ஆத்திரத்தை அதிகரித்தது.

இதை எல்லாம் நினைத்தவன் மனம் கோபத்தின் உச்சியில் இருந்தது. 'உன்னை விட மாட்டேன். என் வாழக்கைக்கு பதில் சொல்லாமல் உன்னை விட மாட்டேன். நான் நிம்மதி இல்லாமல் இருக்கும் போது நீ மட்டும் எப்படி நிம்மதியாக இருக்க முடியும்? என்னை சகிக்காமல் தானே என்னை விட்டு ஓடினே? இனி என்னை மட்டும் நீ சகித்து தான் ஆக வேண்டும். இந்த மித்ராதன் பத்தி என்ன நினைச்ச பேபி? உன்னை விட மாட்டேன் பேபி.' வாய் விட்டு சொன்னவன் கண்கள் பளபளத்தது.

அவனின் ஆழ் மனதில் இருந்த " பேபி " என்ற சொல் அவனையும் அறியாமல் வந்ததை, அவன் உணரவே இல்லை. மறந்து விட்டேன் என்று எண்ணியவளை ஏன் அடைய துடிக்க வேண்டும்? என்று அவன் தனக்குள் கேட்டு இருந்தால் அவனுக்கு விடை கிடைத்து இருக்கும். (நானும் கதை முடித்து இருப்பேன்). ஆனால் அதற்கு பழிவாங்கல் என்ற மேல் பூச்சு பூசி மறைப்பவனை என்ன செய்ய? உணர்ந்து இருந்தால்...........

அவனைப் பற்றி  எதுவும் நினைக்காமல் நிம்மதியாக உறங்கிக் கொண்டு இருந்தாள் இளவஞ்சி. அவளின் இந்த நிம்மதி இனி நிலைக்குமா?

“காக்கை சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா
பார்க்கும் மரங்களெல்லாம் நந்தலாலா - நின்றன்
பச்சை நிறம் தோன்றுதையே நந்தலாலா”

இளவஞ்சியின் கைப்பேசி அழைத்தது. எப்பொழுதும் போல் பாரதியார் பாடலை சிறிது நேரம் ரசித்தவள் அதன் பின்னரே அலைபேசியை எடுத்து பேசினாள்.

"அம்மாடி இளா........... நான் அத்தை பேசறேன்மா." அமராவதியின் குரல் ஒலித்ததும் இளவஞ்சி ஒரு நிமிடம் என்ன பேசுவதென்று தெரியாமல் திகைத்து போனாள்.

காலையில் ஆறு மணிக்கே அழைத்து பேச வேண்டும் என்றால் அவரின் எதிர்பார்ப்பு என்ன என்பது இளவஞ்சிக்கு புரியாமல் இல்லை. இன்று தான் அமராவதி மருத்துவமனையில் இருந்து வீட்டிற்கு செல்கிறார். அதான் இவளின் முடிவை பற்றி அறிய ஆவலாக இந்த காலை நேரத்தில் அவளுக்கு அழைத்து இருக்கிறார்.

"ம்.........சொல்லுங்க அத்தை."

"நான் சொன்னதுக்கு நீ இன்னமும் பதில் தரவில்லை."

"நான் இன்னும் கொஞ்ச நேரத்தில் ஹாஸ்பிட்டல் வந்து விடுவேன். நேரில் பேசிக்கலாம்" அவரின் மனம் புண்படாதவாறு பேசி அலைபேசியை அணைத்தாள்.

இளவஞ்சியின் முகத்தில் சிந்தனை படர்ந்தது. இதில் இருந்து எப்படி தப்பிப்பது என்று அவளுக்கு தெரியவில்லை. இயந்திர கதியில் தயாரானவள் அன்னையிடம் சொல்லிக் கொண்டு கிளம்ப எண்ணிய வேளையில், குணவதி தானும் கிளம்பி மருத்துவமனைக்கு செல்ல தயாராக இருந்தார். கேள்வியுடன் நோக்கியவளைப் பார்த்தவர், "இன்னைக்கு அமரா டிஸ்சார்ஜ் ஆகப் போறா இல்ல. அதான் பார்த்துட்டு வரலாம் என்று கிளம்பினேன்"

குணவதியிடம் மேற்கொண்டு ஒன்றும் பேசாமல் அவரையும் அழைத்துக் கொண்டு புறப்பட்டாள் இளவஞ்சி. அமராவதி தங்கி இருந்த அறைக்குள் குணவதி முன்னே செல்ல இளவஞ்சி தயங்கி தயங்கி பின்னே நுழைந்தாள். இளவஞ்சியின் இயல்புக்கு இந்த செயல் கொஞ்சமும் பொருந்தவில்லை. எதையும் தெளிவாக யோசித்து தீர்க்கமாக முடிவெடுப்பவள் அவள். ஆனாலும் என்ன செய்ய? அவளுக்கே இந்த விசயத்தில் என்ன முடிவெடுப்பது என்று தெரியவில்லை.

உள்ளே நுழைந்தவள் கண்ணில் மித்ராதன் பட்டான். அவனும் இவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவன் பார்வையில் எந்த உணர்ச்சியும் இல்லை. ஆனால் அவன் மனமோ உலைக்களம் போல் கொதித்துக் கொண்டு இருந்தது. சட்டென்று அவன் புறம் இருந்து அமராவதி புறம் தன் கண்களை திருப்பினாள் இளவஞ்சி.

"வா குணா.........வாம்மா இளா." இருவரையும் வரவேற்ற அமராவதி சின்னவளின் கைப்பற்றி தன் அருகில் அமர வைத்துக் கொண்டார். அவரின் கை இளவஞ்சியின் முகத்தை வாஞ்சையுடன் தடவியது. அவரின் அன்பில் அவள் மனமும் நெகிழத் தான் தொடங்கியது.

ஆனாலும்.......ஆனாலும்....... இதற்காக எல்லாம் அவள் அங்கே அவர்கள் வீட்டிற்கு செல்ல வேண்டும் என்றால் அவளின் ஒரே பதில் முடியாது என்பது தான். அதை எப்படி இந்த தாய் மனம் வருத்தப்படாமல் சொல்வது என்று தான் அவளுக்கு தெரியவில்லை.

"இளா இப்பவே நம் வீட்டிற்கு செல்லலாமா?" அமராவதியின் கேள்விக்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் விழித்துக் கொண்டு இருந்த இளவஞ்சியை காப்பாற்றுவது போல் அருணகிரி அங்கே வந்தார்.

"அடடே......வாங்க .......... வாங்க........ " என்று அவர்களை வரவேற்றவர்,
மனைவியிடம், "ஹாஸ்பிட்டல் பில் கட்டியாச்சு. நாம புறப்படலாமா?"

"ஏங்க இளாவையும் நம்ம கூட கூட்டிகிட்டு போகலாங்க." அமராவதி கெஞ்சலாக கேட்டது அவருக்குமே கஷ்டமாக இருந்தது. ஆனால் இதில் சம்பந்தப்பட்ட இருவரும் வாயைத் திறந்து ஒன்றும் கூறாமல் இருக்கும் போது யாரையும் வற்புறுத்துவது அவருக்கு பிடிக்கவில்லை.

"அம்ரு....... மருமகளை இவ்வளவு நாள் கழித்து வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போகப் போறோம். அது ஹாஸ்பிட்டல்ல இருந்தா கூட்டிக்கிட்டு போகணும்? முதல்ல நாம வீட்டிற்கு போகலாம். அதன் பின் நல்ல நாள் பார்த்து இளாவை கூட்டிக் கொண்டு போகலாம். என்ன இளா நான் சொல்றது சரி தானே?"

அருணகிரியை நன்றியுடன் பார்த்தவள் " ஆமாம்" என்று வேகமாக தலையை ஆட்டினாள். அவளின் வேகத்தை கண்ட அருணகிரி இளவஞ்சியிடம் அவர்கள் இருவரின் வாழ்க்கையைப் பற்றி பேச வேண்டும் என்று மனதில் முடிவெடுத்தார்.

இளவஞ்சியோ அப்பாடி இப்போதைக்கு பிரச்சனை ஓய்ந்தது என்று நிம்மதி அடைந்தாள். அமராவதியிடம் நேரில் அவளால் எதுவும் கூற முடியவில்லை. அதான் ஒருவித சங்கடத்துடன் இருந்தாள். அதில் அருணகிரி வேறு அவ்வாறு சொன்னதும் அதையே பற்றிக் கொண்டாள். இதை எல்லாம் பார்வையாளனாக மித்ராதன் பார்த்துக் கொண்டு இருந்தானே தவிர ஒரு வார்த்தை கூட பேசவில்லை.

"அமரா நீ கவலைப்படாமல் போ. இளாவை உங்கள் வீட்டிற்கு அனுப்பி வைக்க வேண்டியது என் வேலை" குணவதி வேறு அமராவதிக்கு தைரியம் சொன்னார்.

அமராவதியை காரில் ஏற்றி வழியனுப்பி விட்ட பின் தான் இளவஞ்சிக்கு நிம்மதியாக இருந்தது. அவர்கள் சென்றதும் குணவதியும் புறப்பட்டார். மீண்டும் மருத்துவமனைக்குள் நுழைந்தவள் மனதில் மித்ராதனின் பார்வை வந்து போனது. அது என்ன மாதிரியான பார்வை என்று அவளால் இனம் காண முடியவில்லை.

அவன் என்ன நினைத்து பார்த்தால் நமக்கென்ன? அப்படியே அவன் ஏதாவது செய்தால் அவனின் வண்டவாளத்தை அவன் பெற்றோரிடம் சொல்ல வேண்டியது தான். அவர்கள் விருப்ப பட்டால் மணவிலக்கு கூட கொடுத்து விட வேண்டும் என்று மனதில் உறுதி எடுத்தாள்.

குணவதிக்காக இளவஞ்சி மணவிலக்கு பற்றி பேசாமல் இருந்தாள். ஆனால் இன்னமும் அமைதியாக இருந்தால் அவளுக்கே அது நஷ்டமாகி விடும். எது நடந்தாலும் பரவாயில்லை என்ற முடிவுக்கு இளவஞ்சி வந்து விட்டாள். ஆனால் மித்ராதன் முன் அவளின் முடிவு உறுதி எல்லாம் செல்லுபடியாகாமல் போகப் போகிறது என்று அவளுக்கு அந்நேரம் தெரியவில்லை. தெரிந்து இருந்தாலும் ஒன்றும் செய்ய முடியாத நிலை அவளுக்கு ஏற்படும் என்று கனவில் கூட அவள் எண்ணி இருக்க மாட்டாள்.

"அப்புறம் ஹாஸ்பிட்டல் வொர்க் எல்லாம் எப்படி போயிட்டு இருக்கு?" இளஞ்செழியன் இளவஞ்சியிடம் கேட்டுக் கொண்டு இருந்தான். இரவு பத்து மணி அக்காவும் தம்பியும் பேசிக் கொண்டு இருக்க, குணவதி தூக்கம் வருவதாக கூறி படுக்கச் சென்று விட்டார்.

"வேலை எல்லாம் நல்லா தான் போகுதுடா. இந்த அத்தையும், அம்மாவும் படுத்தறது தான் எனக்கு கஷ்டமா இருக்கு. என் மன உணர்வுகளைப் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாங்க. எனக்கு என்ன செய்றது? என்ன முடிவு எடுக்கிறதுன்னு தெரியல?"

இளவஞ்சியின் குரலில் இருந்த வருத்தம் செழியனுக்கு புரியத் தான் செய்தது. அதிலும் இந்த ஒரு வார காலமாக அவர்கள் அன்னை மகளிடம் எடுத்துக்காட்டி திட்டிப் பேசியதை அவனும் கேட்டுக் கொண்டு தான் இருந்தான். அக்காவின் வருத்தம் அவனுக்கு எந்த அளவுக்கு புரிகிறதோ அந்த அளவுக்கு அன்னையின் வருத்தமும் அவனுக்கு புரியத் தான் செய்தது. ஆனாலும் செல்ல அக்காவை வற்புறுத்த அவனுக்கு பிடிக்க வில்லை.

"சரி விடுங்க அக்கா. பெரியவங்க அவங்க அப்படித் தான் பேசுவாங்க. உங்க மனசுக்கு என்ன தோணுதோ அதை செய்யுங்க. நான் எப்பவும் உங்க கட்சி தான்".

"தேங்க்ஸ்டா"

"இப்படி தேங்க்ஸ் எல்லாம் சொன்ன அடிபடுவ?" செழியன் கோபத்தில் மட்டுமே 'வா', 'போ' என்பான்.

"ஓகே ஓகே சாரிடா"

"இப்ப தான் தேங்க்ஸ் கூடாதுன்னு சொல்லி முடிக்கல அதுக்குள்ளே சாரியா?" கண்களை உருட்டி மிரட்டியவனைக் கண்டு இளவஞ்சிக்கு சிரிப்பு வந்தது.

"தட்ஸ் குட்" செழியன் சொல்லும் போதே இளவஞ்சியின் கைப்பேசி அழைத்தது.

அதை காதில் வைத்த இளவஞ்சியின் முகம் மாறியது. பேசி முடித்து வைத்தவள் தம்பியிடம், "செழியா மாமா தான் பேசினாங்க. ஹாஸ்பிட்டல்ல இருக்காங்களாம். என்னை வர சொன்னாங்க. நான் போயிட்டு வந்திடறேன்" என்று சொல்லி விட்டு எழுந்தவளின் பின்னே அவனும் வந்தான்.

"இந்த நேரத்தில் நீங்க தனியா போக வேண்டாம். நானும் கூட வர்றேன்" மனதில் 'யாருக்கு என்ன?' என்ற கேள்வி எழுந்த போதும் அவளிடம் அவன் கேட்கவில்லை.

குணவதியை எழுப்பி விஷயத்தை சொன்னதுமே, "நான் அப்பவே சொன்னேனே. அமரா உடம்பு சரியில்லை. இனியாவது நீ அங்கே போய் இருந்து அவளுக்கு சந்தோசத்தை குடுன்னு. நீ பேசாம இருந்து அவளை மறுபடியும் ஹாஸ்பிட்டல்ல படுக்க வச்சுட்டியே" என்று புலம்ப ஆரம்பித்து விட்டார்.

"அம்மா பேசாம இருக்க மாட்டிங்க" செழியன் அவரை அதட்டினான். இளவஞ்சிக்கோ என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. அருணகிரி மொட்டையாக 'ஹாஸ்பிட்டல்ல இருக்கேன். அவசரமா நீ உடனே புறப்பட்டு

வா' என்று தான் சொன்னார். என்ன எது? என்று விபரம் சொல்லவில்லை.

"சரி நானும் உங்க கூட வர்றேன்" குணவதி அவர்களுடன் புறப்பட ஆயத்தமானார்.

மூவரும் மருத்துவமனை அடைந்து சென்று பார்த்த போது திகைத்து தான் போனார்கள். ஏனெனில் அமராவதியும் அருணகிரியும் வராந்தாவில் நின்று கொண்டு இருந்தனர். 'பெரியவர்களுக்கு ஒன்றும் இல்லை, அப்படியானால் மித்ராதனுக்கு ஏதும்.....?' மூவருக்குமே ஒன்றும் புரியாத நிலை.

குணவதி வேகமாக சென்று அமராவதியின் கையைப் பற்றிக் கொண்டு, "என்ன ஆச்சு? மாப்பிள்ளைக்கு ஏதும்?" அவரால் அதற்கு மேல் பேச முடியவில்லை.

"குணா நான் என்னன்னு சொல்வேன். இந்த ஒரு வாரமும் அவனிடம் நான் இளாவை கூட்டி வரச் சொல்லி சண்டை போட்டுக் கொண்டு தான் இருந்தேன். அவனோ அதைப் பத்தி ஒன்றும் பேசலை. இப்போ ஏழு மணி வாக்கில் மித்ரா பிரண்ட் அவனைப் பார்க்க வந்து இருந்தான். சரி மித்ராவை கூப்பிட்டு வரலாமுன்னு அவன் ரூமுக்குப் போய் பார்த்தா ..... அங்கே....." முகத்தை மூடி அழுதவர் சிறிது தன்னை சமாளித்துக் கொண்டு, "அலங்கோலமா விழுந்து கிடந்தான். என்ன ஆச்சுன்னு அவனுக்கு பக்கத்தில் போய் பார்க்கும் போது தான் தெரிந்தது அவன் கையில் தூக்க மாத்திரை பாட்டில் இருந்தது. அவனை தட்டி பார்த்தும் உணர்வு இல்லை. நல்ல வேளை மித்ரா பிரண்ட் டாக்டர் என்பதால் தப்பிச்சோம். இல்லை நினைக்கவே பயமா இருக்கு. இப்படி இவன் பண்ணுவான் என்று தெரிந்து இருந்தால் இளாவை பற்றி நான் பேசி இருக்க மாட்டேன். அவன் இஷ்டப்படி வேறு பெண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணி வச்சு இருப்பேனே" என்று மீண்டும் அழுதார்.

அமராவதி பேசியது ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மன நிலையை தோற்றுவித்தது "அம்ரு என்ன பேச்சு இது?" அருணகிரி மனைவியை கண்டித்தார்.

குணவதிக்கோ வருத்தம் மேலோங்கி இருந்தாலும் அமராவதி பேச்சில் இருந்த நியாயம் புரிந்து அமைதியாக இருந்தார். இளவஞ்சியோ மனதுக்குள் அப்பாடா தொல்லை விட்டதடா சாமி என்று நிம்மதி அடைந்தாள். திருமண விசயத்தில் தான் அந்த நிம்மதியே தவிர மித்ராதன் உடல் நலம் குறித்து அவளுக்குமே மனதில் பதற்றம் இருந்தது உண்மையே. அவன் நலம் பெற வேண்டும் என்று உயிரின் முக்கியத்துவம் அறிந்த மருத்துவராக அவள் அவனுக்காக வேண்டினாள்.

"அத்தை நான் போய் பார்த்துட்டு வர்றேன்" அமராவதியிடம் ஆறுதல் கூறி உள்ளே சென்றாள். இளஞ்செழியனோ பார்வையாளனாக ஒன்றும் பேசாமல் பார்த்துக் கொண்டு இருந்தான். உள்ளே சென்று பார்த்த இளவஞ்சிக்கு மித்ராதன் உடல்நிலை குறித்து கவலை தான் தோன்றியது. மித்ராதனின் மருத்துவ நண்பனும் அதையே தான் கூறினான். நாளை காலை வரை பொறுத்து தான் ஆக வேண்டும் வேறு வழியில்லை என்று எண்ணியவள் வெளியில் வந்தாள்.

"ஒன்னும் பயமில்லை" என்று அமராவதியிடம் கூறியவள் அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டாள். யோசிக்க யோசிக்க அவளுக்கு எரிச்சல் தான் மேலோங்கியது.

இவன் என்ன சிறுவனா? ஆ ஊன்னா தற்கொலை பண்ணிக்க முயற்சி பண்றான். மன தைரியம் வேண்டாமா? என்ன மனுசனோ? இவன் கஷ்டப்படுறதும் இல்லாமல் எல்லாரையும் சேர்த்து இல்ல கஷ்டப்படுத்தறான். மனதில் மித்ராதனை திட்டினாலும் தன்னை வேண்டாம் என்று அவன் தற்கொலைக்கு முயன்றான் என்று எண்ணி மகிழ்ந்து போனாள்.

ஏழு வருடமாக முடிவுக்கு வராமல் இழுத்துக் கொண்டு இருந்த அவள் வாழ்க்கை முடிவுக்கு வருவது குறித்து அவளுக்கு சந்தோசம் எழுந்தது. அவள் வாழ்க்கை கேள்வி குறியாக மாறப் போவதை அவள் எண்ணிப்

பார்க்கவில்லை அவளைப் பொறுத்த வரையில் திருமணம் மட்டும் தானா வாழ்க்கை. அதை விட சாதிக்க எவ்வளவோ இருக்கிறது. அதை விட்டு கல்யாணம் குடும்பம் என்று எரிச்சல் பட்டாள். அதில் மித்ராதன் கூறியதை அவள் மறந்து போனாள். அவளை பழி வாங்காமல் விட மாட்டேன் என்று கூறியதை ஏனோ அந்த நிமிடம் மறந்து போனாள்.

எல்லோரையும் அவரவர் மன நிலைக்கு ஏற்றவாறு பதற்றப்பட வைத்து தவிக்க வைத்து மறுநாள் கண் விழித்தான் மித்ராதன்.

"ஏண்டா மித்ரா இப்படி பண்ணின?" அவனை கட்டிக் கொண்டு அழுதார் அமராவதி.  மித்ராதன் பதில் சொல்லாமல் தலையை குனிந்து கொண்டான். அருணகிரி கண்களும் கலங்கி தான் இருந்தது, தவமாய் தவமிருந்து பெற்ற ஒரே மகன் அல்லவா? அவரின் ஒவ்வொரு அணுவும் அவனுக்காக துடித்தது. அதை மறைத்தபடி மித்ராதன் தலையை மட்டும் ஆறுதலாக வருடி விட்டார். மகன் பிழைத்து எழுந்ததே அவருக்கு போதுமானதாக இருந்தது.

குணவதியோ என்ன பேசுவது என்று தெரியாமல் அங்கே நின்று கொண்டு இருந்தார். செழியனோ தனக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை என்பது போல் அறையின் மூலையில் நின்று கொண்டு இருந்தான். இளவஞ்சிக்கோ அவன் பிழைத்து எழுந்தது சந்தோசத்தை கொடுத்தாலும், இதற்கு மேல் அங்கே நின்று என்ன செய்ய என்ற எண்ணமே மேலோங்கி இருந்தது.

"ஏண்டா கண்ணா உன் மனசில் என்ன இருக்கு? ஏன் இப்படி பண்ணின?" அமராவதி திரும்ப திரும்ப கேட்கவும் மித்ராதன் விழி உயர்த்தி அன்னையைப் பார்த்தான்.

"சொல்லு மித்ரா கண்ணா. சொன்னால் தானே எங்களுக்கு தெரியும்?" மித்ராதன் பதில் சொல்லாமல் தன் கையை உயர்த்தி இளவஞ்சியை சுட்டிக் காட்டினான். மித்ராதனின் செயலில் திகைத்த இளவஞ்சி தன்னிச்சையாக பின்னால் நகர்ந்தாள். மேலும் மேலும் நகர்ந்தவள் அதற்கு மேல் நகர முடியாமல் சுவர் இடிக்க அதை பற்றுகோலாக கொண்டு

அதன் மேல் சாய்ந்தவள், தன் பார்வையை தீர்க்கமாக மித்ராதன் மேல் செலுத்தினாள். மித்ராதனும் சளைக்காமல் அவள் பார்வையை எதிர் கொண்டான்.

"மித்ரா உனக்கு பிடிக்கலைன்னா இளாவை கூட்டிக் கொண்டு வர சொல்லி வற்புறுத்த மாட்டேன். எனக்கு நீ முக்கியம்டா"

"இல்லைம்மா. நான் அதற்காக இப்படி செய்ய வில்லை. எனக்கு இளா கிடைக்க மாட்டாளோ என்ற எண்ணத்தில் தான் இப்படி...." அதற்கு மேல் சொல்ல முடியாமல் தலையை குனிந்தான்.

மித்ராதன் வார்த்தையில் அமராவதியும், குணவதியும் மகிழ்ச்சி அடைந்தனர். அருணகிரியோ மகனை ஆராய்ச்சியாக பார்த்துக் கொண்டு இருந்தார். செழியனுக்கோ ஆச்சிரியமாக இருந்தது. அக்காவின் கணவன் அவள் மேல் இத்தனை அன்பு வைத்து இருக்கிறானா? என்னவோ வேண்டாத நேரம் இடையில் இப்படி நடந்து விட்டது. இனியாவது நல்லதே நடக்கட்டும் என்று மனதில் நினைத்தான். இளவஞ்சியோ கணவனை திகைத்துப் பார்த்தவள், பார்த்துக் கொண்டே இருந்தாள். அவளால் அவள் காது கேட்ட விஷயத்தை ஜீரணிக்க முடியவில்லை.

எல்லோரும் கணவன் மனைவி இருவரையும் வாழ்த்தியவர்கள் இனி மேலாவது சந்தோசமாக இருங்கள் என்று சொல்லி அவர்கள் இருவருக்கும் தனிமை கொடுத்து வெளியில் சென்றனர். மித்ராதன் மனைவியையே தீர்க்கமாக பார்த்தான். அவளை தன்னிடம் கொண்டு வர என்னவெல்லாம் திட்டம் போட வேண்டி இருந்ததை எண்ணி அவன் மனது கசந்தது.

பெற்றோரிடம் பொய்யே சொல்லி அறியாதவன் இன்று இவளுக்காக என்னமாய் பொய் நாடகம் ஆடி இருக்கிறான். அவன் மருத்துவ நண்பனிடம் முதலிலேயே பேசி வைத்து அவன் திட்டத்திற்கு ஒத்துக் கொள்ள வைத்தான். அந்த நண்பனும் மித்ராதன் தன் மனைவியுடன் சேர்வதற்காக

என்ன வேணும் என்றாலும் செய்ய தயார் என்றான். அதன் படி நடந்த நாடகம் தான் இந்த தூக்க மாத்திரை நாடகம்.

மித்ராதன் மாத்திரை உட்கொண்ட நேரம் (அதுவும் இரண்டே இரண்டு மாத்திரை தான்) அவன் நண்பன் சரியாக அவன் வீடு வந்து அவனை பாதுகாப்பாய் மருத்துவமனையில் சேர்ப்பது போல் நடித்து காப்பாற்றி விட்டான். இதோ அவன் நினைத்தது போல் அவன் மனைவி அவனிடம் தனியே மாட்டிக் கொண்டாள். இந்த சந்தர்ப்பத்தை விட்டு விட மித்ராதன் முட்டாளா என்ன?

"என்ன பேபி நம்ப முடியவில்லையா? இது சாம்பிள் தான். இனி போக போக உனக்கு புரியும். இனி மேலும் உன்னை விட்டு விட நான் என்ன முட்டாளா? இனி நீயே நினைச்சாலும் என்னை விட்டு போக முடியாது. எப்படி என்னுடைய ஆக்டிங். நல்லா இருந்ததா?" என்றவன் கையில் சொருகி இருந்த குளுகோஸ் இறங்கி கொண்டு டியூபை கழட்டி விட்டு கட்டிலை விட்டு இறங்கி அவள் அருகே வந்தான்.

"வேறு வழியே இல்லை பேபி இனி காதல் மனைவியாக இருக்க பாரு. இல்லை நடிக்கவாவது முயற்சி பண்ணு. உன்னை என்னிடம் வரவழைக்க மரணத்தின் வாயில் வரை நான் சென்று வந்து இருப்பதில் இருந்து உனக்கு புரிந்து இருக்குமே என் குணம் என்னன்னு? இனி தான் மித்ராதனோட பழிவாங்கும் படலம் ஆரம்பம். என்ன பேபி புரிந்ததா?"

அவன் பேபி என்று சொன்னாலே பிடிக்காதவள் இன்று அவன் வார்த்தைக்கு வார்த்தைக்கு பேபி என்று சொல்லியும் பதில் சொல்ல முடியாமல் மூளை மரத்து போக மூச்சு விடக் கூட மறந்தவளாய் அப்படியே அவனை கண் இமைக்காமல் பார்த்து கொண்டு இருந்தாள் இளவஞ்சி.

"வாம்மா........ இளா, வா...... வா......" அமராவதியின் குரலில் ஏகத்துக்கும் மகிழ்ச்சி நிரம்பி வழிந்தது. பின்னே அது நாள் வரை அங்கே வராத மருமகள் மனம் மாறி புகுந்த வீடு திரும்பி இருக்கிறாளே. அது எவ்வளவு சந்தோசமான விஷயம். அவர் தன் மகனை தவறாக எண்ணியதற்கு மனதில் வருத்தப் பட்டார். மனைவிக்காக அவன் தற்கொலைக்கு முயன்றதை பார்க்கும் பொழுது அவன் மேல் இருந்த வருத்தம் அவருக்கு மறைந்து விட்டது.

இந்த சந்தோசத்தில் அவர் ஒன்றை மறந்து விட்டார். அது அவன் ஏன் மறுமணத்திற்கு பெண் பார்க்க சொன்னான் என்பதை தான். அமராவதி மறந்தாலும் அருணகிரி அதை மறக்கவில்லை. மகனிடம் தனிமையில் பேச சந்தர்ப்பம் பார்த்து காத்திருந்தார்.

இளவஞ்சியின் உடல் நடுங்கியது. உள்ளே செல்லலாமா இல்லை இப்படியே ஓடிப் போய் விடலாமா? என்று மனம் சஞ்சலத்தில் ஊஞ்சலாடியது. அவளை மேலும் சிந்திக்க விடவில்லை அவள் அருமை கணவன்.

"ஹேய் பேபி ............ . என்ன நின்னுக்கிட்டே கனவா? அது நம்ம ரூமுக்கு போய் காணலாம். எல்லோரும் உன்னை தான் பார்க்கிறாங்க. முதல்ல உள்ளே வா" கண்சிமிட்டி மித்ராதன் சொன்ன பாவனையில் இளவஞ்சி தவிர அனைவரும் சிரித்தனர். அவளோ அவனை முறைத்தாள். அவனா அதற்கெல்லாம் பயப்படுவான். அவளை அழைத்து வர வேண்டும் என்று எண்ணிய போதே இதற்கெல்லாம் அவன் தயராக தான் இருந்தான்.

"இந்த ரொமான்ஸ் லுக் எல்லாம் நாம தனியா இருக்கும் போது பார்க்கலாமே, பேபி" அவள் காதருகே குனிந்து சொன்னவனைக் கண்டு எரிச்சல் ஆத்திரம் வந்தது. ஆனால் என்ன செய்ய? வெளியில் காட்ட முடியாமல் மனதின் உள்ளேயே வைத்து அமிழ்த்திக் கொண்டாள்.

(மவனே தனியா மட்டும் அவள் கிட்ட மாட்டுனே நீ அவ்வளவு தான்).

வீட்டினுள் வந்த இளவஞ்சியால் யாரிடமும் ஓட்ட முடியவில்லை. சகஜமாக பேச முடிய வில்லை. நெருப்பின் மேல் நிற்பது போல் இருந்தது அவளுக்கு. அன்னைக்காகவும், அமராவதிக்காகவும் தான் அவள் இங்கே வந்ததே. மித்ராதன் அவளுக்காக தான் தற்கொலை முயற்சி செய்தான் என்று தெரிந்ததுமே குணவதி அவளிடம் சாமியாடி விட்டார்.

"என்ன பெண் நீ? பாரு ஒரு ஆண் மகன் உனக்காக ஏங்குகிறான். ஆனால் பெண் உனக்கு கொஞ்சமாவது கணவன் நினைப்பு இருக்கா? உனக்கு மனம் என்று ஒன்று இருக்கிறதா? இத்தனை வருடங்களில் மாப்பிள்ளை உன்னை மறந்து விட்டு வேறு பெண்ணை திருமணம் செய்து இருக்கலாம். (இந்த இடத்தில் "ஆமாம் அப்படி செய்து இருந்தால் நான் தப்பித்து இருப்பேன்" என்று இளவஞ்சியின் மனம் நினைத்தது. நல்லவேளை குணவதிக்கு அது தெரியவில்லை). ஆனால் அவர் அப்படி செய்யவில்லை. பாரு இன்னமும் அவர் மனதில் நீ தான் இருக்கே. உன் மேல் அவருக்கு எவ்வளவு அன்பு இருக்கு பாரு. இப்படி பட்ட மனுசனுடன் வாழ மாட்டேன்னு பிடிவாதம் பிடிக்கிற. இனியும் நீ பிடிவாதம் பிடித்தால் நானும் மாப்பிள்ளை மாதிரி எதையாவது சாப்பிட்டு உயிரை விடறேன். அதுக்கு அப்புறமும் நீ சந்தோமா இரு. உங்க அப்பா ஆசைப்பட்ட மாதிரி நீ டாக்டர் ஆகனும்ன்னு தான் நான் இவ்வளவு காலம் வாயைத் திறக்கலை. இனியும் நான் வாயை திறக்கலனா நீ மாற மாட்ட. உன் மனசில் அப்படி என்ன தான் இருக்கு. அப்படி என்ன பிடிவாதம். வறட்டு கௌரவம்?"

குணவதியின் பேச்சில் அப்படியே தலையைப் பிடித்துக் கொண்டு அமர்ந்து விட்டாள். என்ன சொன்னாலும் அந்த காட்டானோடு நான் குடும்ப நடத்த முடியுமா? என்னால் அது முடியுமா? என்று தனக்குள் கேட்டுக் கொண்டு இருந்தாள். மித்ராதன் செய்த செயலால் அவள் பக்கம் நியாயம்

இருந்தாலும் அது இப்பொழுது எடுபடாது. அதிலும் இவ்வளவு நாள் சொல்லாமல் இப்பொழுது சொல்லும் போது அவள் அங்கு செல்லாமல் இருக்க பொய் கூறுவதாகவே தெரியும். இப்பொழுது கோபம் எல்லாம் கணவன் மேல் திரும்பியது. உனக்கு பெண் வேண்டுமென்றால் வேறு பெண்ணை கட்டிக் கொள்ள வேண்டியது தானே. என்னை ஏன் பாடாபடுத்தற என்று கணவனை தான் திட்டினாள்.

அவள் தம்பியோ, "அக்கா அத்தான் என்ன தவறு செய்து இருந்தாலும் மன்னித்து விடுங்கக்கா. இப்பொழுது உங்களுக்காக உயிர் விடவும் அவர் தயாரா இருக்கும் போது உங்க முடிவை நீங்க ஏன் மறு பரிசீலனை செய்ய கூடாது. முன்பு மாதிரி இல்லாமல் இப்பொழுது அவர் திருந்தி இருக்கலாம் இல்லையா? அவருக்கும் ஒரு சந்தர்ப்பம் குடுத்து பாருங்க. கொஞ்சம் யோசித்துப் பாருங்க உங்களுக்கே புரியும்."

அக்காவிற்கும் அவள் கணவனுக்கும் இடையில் என்ன பிரச்சினை என்று அவனுக்குமே தெரியாது. அதனால் தவறு அவள் கணவன் பக்கம் மட்டுமே என்று எண்ணி அவ்வாறு கூறினான்.

"ஐயோ தம்பி அவன் எங்கே எனக்காக தற்கொலைக்கு முயன்றான். என்னை அவனிடம் வரவழைக்கவே அந்த மாதிரி நாடகம் ஆடி இருக்கான்' என்று மனதில் நினைத்தவள் அதை இளஞ்செழியனிடம் சொல்லவில்லை. சொன்னாலும் அவன் நம்புவானா தெரியவில்லை.

அதன் பின் மித்ராதன் மருத்துவமனையில் இருந்து திரும்பும் போது அவளையும் அவனுடன் சேர்த்து இங்கே அழைத்து வந்து விட்டனர். எல்லாம் அவள் கை மீறி நடப்பதை வெறும் பார்வையாளனாய் பார்ப்பதை தவிர அவளுக்கும் வேறு வழி தெரியவில்லை. அவளின் நிலையை மித்ராதன் கண்டு கொண்டான். ஒருவித வெற்றி பெருமிதம் அவன் முகத்தில் குடி கொண்டது.

"இளா சாப்பிட வாம்மா" அமராவதியின் குரலில் தன் நினைவில் இருந்து கலைந்தாள் இளவஞ்சி.

"இளா ........ என்ன இது யாரோ வீடு மாதிரி இப்படி தனியா வந்து உட்கார்ந்து இருக்க. வா வந்து பரிமாறு" குணவதி அதட்ட பதில் ஒன்றும் பேசாமல் அவர்கள் பின்னே நடந்தாள்.

உணவு பரிமாற போனவளை தடுத்து, மித்ராதன் அருகில் இருந்த நாற்காலியில் அவளை அமர செய்து, "மித்ரா கூட சேர்ந்து சாப்பிடும்மா" என்று அன்பொழுக அமராவதி கூறும் போது அவளால் அதை மறுக்க முடியவில்லை. நாற்காலியில் அமர்ந்தவள் மறந்தும் கணவன் பக்கம் திரும்பவில்லை.

திடீரென்று மனதில் ஏதோ ஒன்று உந்த நிமிர்ந்து தனது இடப்புறம் திரும்பி பார்த்தாள் இளவஞ்சி. வேறு யார் பக்கவாட்டில் அமர்ந்து இருந்த மித்ராதன் தான் அவளைப் பார்த்துக் கொண்டு இருந்தான். இவள் பார்வைக்காகவே காத்திருந்தது போல் கண் சிமிட்டினான். இளவஞ்சிக்கு உடலெல்லாம் மிளகாய் அரைத்தது போல் எரிந்தது.

அன்று அவன் மருத்துவமனையில் கூறியது வேறு நியாபகம் வந்து அவளுக்கு புரையேறியது. அவனோ அக்கறை கொண்ட கணவனாய் அவள் தலையில் இதமாக தட்டி அருந்த தண்ணீர் வேறு எடுத்து கொடுத்தான். இதைப் பார்த்துக் கொண்டு இருந்த அனைவர் முகத்திலும் புன்னகை வந்தது. அதைக் கண்ட மித்ராதன் முகத்திலும் விசமப் புன்னகை வந்தமர்ந்தது. அவனுக்கு வேண்டியது இது தானே!

இளவஞ்சி முடிந்த வரை மித்ராதன் இருக்கும் பக்கம் போகாமல் தள்ளியே இருந்தாள். அதிலும் யாருக்கும் சந்தேகம் வராதவாறு பார்த்துக் கொண்டாள். அவள் மனம் அறிந்தோ என்னவோ அவனும் அவளை மீண்டும் சீண்டி பார்க்க எண்ணாமல் மைத்துனன் இளஞ்செழியனிடம் பேசிக் கொண்டு இருந்தான். முதலில் மித்ராதனிடம் பேச

தயங்கிய செழியன் அக்கா கணவனின் சரளமான பேச்சில் கவரப்பட்டு அவனுடன் சகஜமாக பேசத் துவங்கினான்.

என்ன தான் முயற்சி செய்தாலும் கால நேரம் யாருக்கும் காத்து இருப்பது இல்லை. மாலை மயங்கி இரவும் வந்தது. அன்னையும், தம்பியும் பிரியா விடை பெற்று சென்றனர். அதன் பின் என்ன செய்வது என்று தெரியாமல் அமராவதி பின்னே சுற்றிக் கொண்டு இருந்தாள் இளவஞ்சி.

ஒரு கட்டத்திற்கு மேல் அமராவதி அவள் கையில் பாலை கொடுத்து, "இனியாவது நல்லதே நடக்கட்டும். போம்மா மித்ரா உனக்காக காத்துக் கொண்டு இருப்பான்" என்று சொன்னதுமே இளவஞ்சிக்கு அருகில் இருந்த சுவற்றில் நங்கு நங்குன்னு என்று முட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. ஐயோ என்ன செய்ய என்று எண்ணிக் கொண்டே மித்ராதன் அறையை இல்லை இல்லை இனி அவர்கள் அறை நோக்கி சென்றாள். அதே நேரம் மித்ராதன் அருணகிரியுடன் அலுவலக அறையில் அமர்ந்து இருந்தான்.

"என்ன டாட் பேசணும் என்று கூப்பிட்டு பேசாம இருந்தா எப்படி?"

"நீ உண்மையிலேயே இளாவுக்காக தான் தற்கொலை முயற்சி செய்தாயா?" அவரின் பார்வையில் ஆராய்ச்சி தெரிந்தது.

"ஏன் டாட் என்னை பத்தி உங்களுக்கு தெரியாதா?"

"உன்னை பத்தி தெரிந்ததால் தான் கேட்கிறேன். அன்றைக்கு எங்களிடம் கல்யாணத்திற்கு பெண் பார்க்க சொன்னாய். ஆனால் இப்பொழுது நீ இப்படி செய்து இருக்கிறாய். நாங்க எப்படி எடுத்துக் கொள்வது? நீயே சொல்லு?"

தந்தை சரியாக தன் மனநிலையை கணித்து விட்டாரே என்று மனதில் திகைத்தவன், பிறகு சமாளித்து கொண்டு பேசினான்.

"டாட் உங்களுக்கே தெரியும் நான் இளாவை எந்த அளவுக்கு நேசித்தேன் என்று. அவளுக்கு என்னை பிடிக்கலைன்னதும் அவளை மறக்க தான் முயற்சி பண்ணினேன். இந்த ஏழு வருடத்தில் அதில் வெற்றியும் பெற்றேன். அப்படித் தான் நினைத்துக் கொண்டு இருந்தேன். அது எல்லாம் மீண்டும் இளாவை பார்க்கும் வரை தான். மீண்டும் அவளை பார்த்ததும் என்னால் ........ என்னால் ......... அவளை மறக்க முடியவில்லை டாட். அவள் எப்படியும் என்னிடம் வர மாட்டாள். அவளை எப்படி என்னிடம் வரவழைப்பது என்று தெரியாமல் அவளை மறக்கவும் முடியாமல் தான் குழப்பத்தில் நான்......... நான்........." மித்ராதன் பாதி பொய்யும் பாதி மெய்யுமாக உரைத்தான்.

மகனின் குரலில் வேதனை கண்டு அவன் அருகில் வந்து ஆறுதலாக தோளில் கையை வைத்து அழுத்தினார் அருணகிரி. அவருக்குமே தெரியுமே மகன் இளாவை திருமணம் செய்ய எவ்வளவு ஆர்வமாக இருந்தான் என்று. அவளுக்காக அவன் பார்த்து பார்த்து வாங்கிய உடைகள் அணிகலன்கள் இன்னும் என்னென்னவோ வாங்கி குவித்து இருந்தானே. அவ்வளவு ஆசையுடன் இருந்த அவன் மண வாழ்வில் கண் திருஷ்டி போல் ஏதேதோ நடந்து விட்டது.

இனி பழங்கணக்கு பேசி பயன் இல்லை என்று நினைத்தவர், "தெரியும் மித்ரா தெரியும். சரி சரி போ. இனியாவது சந்தோசமா இரு. இளா கோபப்பட்டாலும் நீ கொஞ்சம் பணிந்து போ. விட்டு கொடுத்து வாழ்வதும் சுகம் தான்டா மகனே."

"டாட் நீங்க வேறு இதை சொல்லணுமா? அவள் தோப்புக்கரணம் போடு என்றால் எண்ணிக்கோ என்று போட்டு விடுவேன். அந்த அளவு உங்கள் மருமகளிடத்தில் எனக்கு பயம்."

மித்ராதன் குறும்புடன் சொன்னதும் அருணகிரி சிரித்தார். அதைக் கண்டு மித்ராதனும் சிரித்தபடி தங்கள் அறைக்கு

சென்றான்.

அறைக்குள் நுழைந்த இளவஞ்சி அங்கு மித்ராதன் இல்லை என்பதை உணர்ந்து நிம்மதி அடைந்தாள். கணவன் வரும் முன் உறங்கி விடலாம் என்று எண்ணி கட்டிலை நோக்கி காலை எடுத்து வைக்கையிலேயே கணவன் குரல் கேட்டது.

"வேடனின் வலையில் தானாக வந்து மாட்டிக் கொண்ட அழகான புள்ளி மானுக்கு இந்த வேடனின் வந்தனங்கள்." சொல்லியபடி கதவை சாத்திய கணவனை முறைத்தாள். ஆத்திரத்தில் கோபத்தில் அவள் முகம் சிவந்தது. அதைப் பார்த்தபடி அருகில் வந்த மித்ராதன், "உன் முகம் சிவந்து இருப்பது அழகாக தான் இருக்கிறது. ஆனால் பேபி .... இது கோபத்தில் சிவக்காமல் வெட்கத்தில் சிவந்தால் எப்படி இருக்கும்?" ரசனையுடன் அவள் முகம் பார்த்தபடி கூறினான்.

இளவஞ்சியோ வெட்டும் பார்வை ஒன்றை அவன் புறம் செலுத்தி விட்டு கட்டிலை நோக்கி நடந்தாள்.

"இந்த திமிர் தான்டி. இதை நான் அடக்கலைன்னா......." அவன் வார்த்தையை முடிக்கும் முன்னரே இளவஞ்சி அவனை திரும்பிப் பார்த்து உறுத்து விழித்தவள், "ஏன் ஏழு ஆண்டுகளுக்கு முன் இதே அறையில் நடந்தது மறந்து போய் விட்டதா என்ன?" குரலில் எக்காளத்துடன் கேட்டாள்.

ஒரே எட்டில் அவள் அருகே வந்தவன், அவள் கை இரண்டையும் இறுக பற்றி மூச்சு காற்று அவள் முகத்தில் படும் படி நெருங்கி நின்றவன், "எப்படி மறக்க முடியும்? மறக்க கூடிய காரியமா நீ செய்தது? எந்த மனைவியும் கணவனுக்கு முதலிரவில் அப்படி ஒரு பரிசு கொடுத்து இருக்க மாட்டாள். ஆனால் அன்னைக்கு இருந்தது காதல் மயக்கத்தில் இருந்த மித்ராதன், இன்னைக்கு இருப்பவன் வேறு. உனக்கு மட்டும் தான் தற்காப்பு கலை தெரியுமா? ஏன் எங்களுக்கு தெரியாதா? அன்றைக்கு ஏமாந்த மாதிரி இன்றைக்கு ஏமாற மாட்டேன். எங்கே இப்போ உன் கை வரிசையை முடிந்தால் என்னிடம் காட்டு பார்ப்போம்."

இளவஞ்சியால் கையை அசைக்க கூட முடியவில்லை. இதில் எங்கே அவனை தாக்க? அன்று போல் ஏதும் செய்வானோ என்று மனதில் சிறிதளவு அச்சம் மூண்டது. ஆனாலும் அதை அவனுக்கு தெரியாமல் அழகாக மறைத்தவள், தைரியமாக அவன் முகம் பார்த்தாள். அவள் முகத்தில் என்ன கண்டானோ, "ச்சே......" என்றபடி  அவளை உதறி தள்ளி விட்டு அங்கிருந்து நகன்றான்.

பால்கனி பக்கம் சென்று  இருளை வெறித்தவன் அப்படியே நின்று இருந்தான். எவ்வளவு நேரம் நின்று இருந்தானோ தெரியாது. திடீரென்று சுய நினைவு வந்தவனாய் உள்ளே சென்றான்.

உள்ளே வந்தவன் இளவஞ்சி கட்டிலின் ஒரு மூலையில் சுருண்டு படுத்து இருப்பதை கண்டான். அதைக் கண்டதும் அவன் ஆத்திரம் அதிகரித்தது. எப்படித் தான் இவளுக்கு தூக்கம் வருகிறதோ என்று எண்ணியவன் கட்டிலின் மறுமூலையில் முடங்கினான். அவளே கட்டிலில் படுக்கும் போது நான் ஏன் சோபாவிலோ இல்லை கீழேயோ படுக்க வேண்டும் என்று வீம்பு கொண்டான். படுத்த சில நிமிடத்திலேயே ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்தான்.

அது இளவஞ்சியின் அருகாமையிலா? இல்லை அவளிடம் இருந்து வரும் பிரத்யேக நறுமணம் தந்த ஆறுதலாலா? இல்லை அவள் அவனிடத்தில் வந்து சேர்ந்த நிம்மதியாலா என்னவென்று அறியாத ஒரு நிம்மதியில் ஆழ்ந்த உறக்கம் அவனை தழுவிக் கொண்டது. அதை அவன் ஆராயவும் இல்லை. அவன் கோபம் கொண்ட மனது அதை ஆராய்ந்து பார்க்கவும் பிரியப்பட வில்லை.

காலையில் வழக்கம் போல் விழிப்பு வந்து எழுந்த மித்ராதன் அப்படியே கண் இமைக்க மறந்தான். அவன் என்றோ கண்ட கனவு இன்று நனவானது கண்டு இன்ப அதிர்ச்சியில் அப்படியே சாய்ந்த வாக்கில் அமர்ந்து இருந்தான். ஏனெனில் இளவஞ்சி அவன் புறம் திரும்பி படுத்து ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தாள். எத்தனை நாள் கனவில் கண்ட காட்சி இது. அந்த கனவு கொடுக்கும் வலி என்ன என்பது அவனுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம். அந்த கனவில் அவளைத் தேடி தேடி அவன் கண்ணீரில் கரைந்தது அவனுக்கு மட்டுமே தெரியும்.

ஒரு வேளை இதுவும் கனவு தானோ என்று எண்ணியவன் ஒற்றை விரலால் அவள் கையை தொட்டான். கனவு அல்ல நனவு என்பதை உணர்ந்தவன் ஒரு கணம் தன்னை மறந்தான். அமைதியாக அதே சமயம் அழகுடன் இருந்த மனைவியின் முகம் அவனை அவள் அருகில் செல்ல தூண்டியது.

தன்னை மறந்து அவள் இதழ் நோக்கி குனிந்தவனை, "டேய்....... மித்ரா......... என்ன காரியம் பண்ணிட்டு இருக்க?" என்று சத்தமிட்ட அவன் மனம் அவனை அடக்கியது. அப்பொழுது தான் அவனுக்கு ஏழு ஆண்டுகளுக்கு முன் நடந்த திருமணம், அதன் பின் வந்த பிரிவு, நேற்று நடந்தது எல்லாம் நியாபகம் வந்தது. அவன் மீதே அவனுக்கு ஆத்திரம் வர வேகமாக கட்டிலை விட்டிறங்கி குளியலறைக்குள் புகுந்தான்.

குளியலறையில் இருந்து வந்த மித்ராதன் நேரே சென்ற இடம் உடற்பயற்சி கூடம். வீட்டின் உள்ளேயே மாடியறையில் தனித்து இருந்தது. உடற்பயிற்சியில் தன் மனதை செலுத்த முயன்றவனால் அதில் வெற்றி பெற முடியாமல் அங்கு இருந்த நாற்காலியில் சரிந்து அமர்ந்தான். வியர்வை ஆறாக பெருகியது. அதை துடைக்க கூட இயலாதவனாய் மேற் கூரையை வெறித்தபடி அமர்ந்து இருந்தான். மனதில் உணர்வுகள் பேயாட்டம் போட்டன.

இளவஞ்சியை இங்கு அழைத்து வந்ததன் நோக்கமே அவள் நிம்மதியாக இருக்கக் கூடாது. அதிலும் அவள் தனக்கென்று ஒரு வாழ்வு அமைக்க கூடாது என்று தான். இந்த ஏழு வருடங்களில் அவளால் தான் பட்ட துன்பம், இழந்த வாழ்க்கை எல்லாவற்றிற்கும் அவள் பதில் சொல்ல வேண்டும் என்பதற்காக தான் அவன் அவளை இங்கே அழைத்து வந்தது. அதற்காக அவன் பொய்யாக தூக்க மாத்திரை உட்கொண்டது போல் நடித்து எல்லோரையும் நம்ப வைத்து என்னவெல்லாம் செய்து அவளை இங்கே வரவைத்து இருக்கிறான். பின்னே எப்படி அவன் மருத்துவ நண்பன் சரியாக அவன் மாத்திரை உட்கொண்ட போது இங்கே வந்தான். எல்லாம் அவன் போட்ட திட்டமே. நல்லவேளை யாரும் அதை சந்தேகிக்க வில்லை.

அவன் தந்தை கூட அவளுக்காக அவன் செய்தானா? என்று சந்தேகித்தாரே தவிர அவன் நடித்து இருப்பான் என்று சந்தேகிக்க வில்லை. அந்த அளவு நம்பிக்கை அவன் பேரில். அவன் மேல் அவன் பெற்றோர் வைத்த நம்பிக்கையை ஏமாற்ற காரணமாக இருந்த இளவஞ்சியின் மேல் அவனுக்கு இன்னமும் கோபம் அதிகரித்தது.

அவளை நிம்மதி இழக்க செய்ய வேண்டும் என்று செய்த செயல் அவனை நிம்மதியில்லாமல் ஆக்கி விடும் போல் இருக்கிறதே?. அவளுக்கென்ன நிம்மதியாக உறங்கிக் கொண்டு இருக்கிறாள். நான் அல்லவா அவஸ்தைப் பட்டுக் கொண்டு இருக்கிறேன். "ஜடம்..... ஜடம்......" எப்பொழுதும் அவளை திட்டும் வார்த்தையால் இப்பொழுதும் திட்டினான். அதற்காக என்னை வேண்டாம் என்று ஒதுக்கிய ஒருத்தியை தான் தொடுவதா? அது தன் ஆண்மைக்கே இழுக்கு என்று எண்ணினான். (கொஞ்ச நேரம் முன்னாடி அவளை முத்தமிட துடித்த அந்த ஆண் மகன் எங்கே ராசா? அவன் மனசாட்சி அவனைப் பார்த்து சிரித்தது).

அவளை வருந்தச் செய்ய வேண்டும் என்று எண்ணி தான் அவளை அவனிடத்தில் கொண்டு வந்தது. நேற்று அவளை அவன் நெருங்கும் போது அவள் கண்ணில் தோன்றிய

பயம் ஆனாலும் அதை வெளிக்காட்டாமல் அவள் நின்ற நிலை எல்லாம் அவன் மனக் கண்ணில் வந்து போனது.

நேற்று அவள் சம்மதமில்லாமல் அவளைத் தொட்டு இருந்தாலும், அதை அவளால் எதிர்த்து இருக்க முடியாது. அன்று போல் அவன் உணர்வின் பிடியில் இன்று இல்லை. இன்று எந்த நேரமும் அவன் அறிவு விழித்துக் கொண்டு தான் இருக்கிறது. அவள் அன்று போல் தாக்கினால் அதை எப்படி தடுப்பது என்று இன்று அவனுக்கு தெரியும். ஆனாலும் தான் ஏன் அவ்வாறு செய்யவில்லை? தனக்குள் கேள்வி கேட்டுக் கொண்டான்.

அன்று என்னை ஆண்மகனாகவோ இல்லை கணவனாகவோ மதிக்காமல் அவமானப் படுத்தியவளை, இன்று தான் அதை மறந்து விட்டு அவளை நெருங்குவதா? நான் என்ன மானங் கெட்டவனா? என்று பழைய இடத்திற்கே வந்து நின்றான். கொஞ்சம் யோசித்து இருந்தாலும் அவன் அடி மனதில் உறங்கி கொண்டு இருந்த அவள் மீதான நேசம் வெளி வந்து இருக்கும். அவன் கோபத்தின் குழப்பத்தின் பிடியில் இருந்து கொண்டு வேறு எதையும் யோசிக்க வில்லை.

இந்த டிவி சீரியலில் கணவன் மனைவியை கொடுமைப் படுத்துவது போல் காண்பிக்கிறார்களே அது போல கொடுமைப் படுத்தலாமா? அதை அவன் கதைகளிலேயே பார்க்கவோ, படிக்கவோ, கேட்கவோ விரும்ப மாட்டான். இந்த லட்சணத்தில் அவனே அதை அரங்கேற்றுவதா? தலையை குலுக்கி தன்னை சமன் படுத்திக் கொண்டான். அவன் மனக்கண் முன் காதல் கொண்டு கருத்தொருமித்து வாழும் தாய் தந்தை முகங்கள் வந்தது. அதை நினைத்ததும் அவன் முகம் வேதனையைக் காட்டியது. எப்படி எல்லாம் மனைவியுடனான வாழ்க்கையை கற்பனை செய்து வைத்து இருந்தான். அதை எல்லாம் ஒன்றுமில்லாததாக செய்த மனைவியிடத்தில் மீண்டும் கோபம் தான் வந்தது.

எவ்வளவு நேரம் அப்படியே அமர்ந்து இருந்தானோ தெரியாது. அவன் அமைதி கண்டு அவன் மனசாட்சி 'இவன்

தானா ஒன்னும் யோசிக்க மாட்டான். நாம தான் இவனை கிளப்பி விட வேண்டும் போலிருக்கே' என்று தன் ஆட்டத்தை ஆரம்பித்தது.

'மித்ரா இது உனக்கு தேவை தானா? காலுக்கு உதவாத செருப்பை தூக்கி தூர எறிவது போல் அவளை விட்டுவிட்டு வேறு பெண்ணை பார்த்து கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டியது தானே? நீயும் மறு மணத்திற்கு பெண் தேட சொன்னவன் தானே? அதை விட்டு விட்டு பழி வாங்கன்னு கிளம்பி இருக்க?' இகழ்ச்சியுடன் அவன் மனசாட்சி அவனைப் பார்த்து நகைத்தது.

'அதற்காக ஏழு வருடம் என்னை முட்டாளாக்கி விட்டு வேறு ஒருவனை அவள் திருமணம் செய்து கொள்வாள். அதை நான் பார்த்துக் கொண்டு இருக்கணுமா? நோ நெவர். இந்த மித்ராவை என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறாள்? அவளுக்கு இப்படி ஒரு எண்ணம் இருக்குன்னு தெரியாததால நான் வேற பெண் பார்க்க சொன்னேன். அவள் மனதின் திட்டம் தெரிந்த பின்பும் நான் கையை கட்டி வேடிக்கை பார்க்க முடியுமா?' அவன் சொன்னதைக் கேட்டு அவன் மனம் சிரித்தது.

'நீயும் வாழாமல் அந்த பெண்ணையும் வாழ விடாமல் இது என்ன மித்ரா? அது சரி நீ நினைப்பது போல் அவளை உன்னால் பழிவாங்க முடியுமா? இல்லை கொடுமை தான் படுத்த முடியுமா?' சரியான இடத்தைப் பிடித்து கேள்வி கேட்டது அவன் மனசாட்சி.

'நிச்சயம் நான் அவளிடம் சொன்னது போல் என்னால் பழி வாங்க எல்லாம் முடியாது. அவள் என்னுடன் ஒரே அறையில் இருப்பதே அவளுக்கு தண்டனை தான். என்னை விட்டு விட்டு அவனைக் கல்யாணம் பண்ணிக்க நான் விடுவேனா என்ன? அவள் காலம் முழுவதும் என் மனைவியாகத் தான் இருக்க வேண்டும். இது எனக்கும் சேர்த்து தண்டனை' முடிவாக மனசாட்சியிடம் சொன்னவன் தனக்கும் சேர்த்து சொல்லிக் கொண்டான். அதன் பின்

மனதில் தெளிவு வந்தவனாய் தன் அறை நோக்கிச் சென்றான்.

அறைக்குள் நுழைந்தவன் அங்கு இளவஞ்சி நின்று இருந்த காட்சி கண்டு அதிர்ந்து அப்படியே நின்றான். ஏனெனில் அப்பொழுது தான் குளித்து முடித்து வந்த இளவஞ்சி சேலைக் கட்டிக் கொண்டு இருந்தாள். அவளின் பின் பக்கம் தான் தெரிந்தது என்றாலும் அந்த நிலையில் அவளை அவன் பார்த்தது இல்லை என்பதால் அதிர்ச்சியடைந்தான்.

கதவு திறக்கும் ஒலியில் முகத்தை மட்டும் திருப்பியவள் அங்கே அவனை கண்டதும் அதிர்ந்து போய் சேலையை வாரிச் சுருட்டிக் கொண்டு தன் மேல் போட்டவள், "வெளியில் போங்க. நான் சேலை கட்டணும்" மெல்லிய குரலில் தான் என்றாலும் உறுதியான குரலில் சொன்னாள்.

அதைக் கேட்டதும் மித்ராதனுக்கு மெல்லிதாக கோபம் எட்டிப் பார்த்தது. யார் அறையில் இருந்து கொண்டு யாரை வெளியேற்றுவது என்று மனதில் குமைந்தவன் அங்கே இருந்த நாற்காலியில் அமர்ந்து செய்தித்தாளை கையில் எடுத்தவன் சாவகாசமாக அதைப் பிரித்தான். அவனின் செயல் கண்டு இளவஞ்சிக்கு ஆத்திரம் அதிகரித்தது. அவன் கையில் உள்ள செய்தித்தாளை பிடுங்கி சுக்கு நூறாக கிழித்து போட வேண்டும் என்ற வெறி எழுந்தது. ஆனாலும் அமராவதிக்காக பொறுமையை வரவழைத்துக் கொண்டாள்.

"உங்களை தான் சொல்றேன். கொஞ்ச நேரம் வெளியில் இருக்கிங்களா?" அவளை நிதானமாக ஏறிட்டு பார்த்தவன், "போக முடியாது என்ன செய்வ பேபி?" வார்த்தையிலும் அந்த நிதானம் வந்தது.

"நான்..... நா....... அத்தையிடம் சொல்வேன்."

அதைக் கேட்டதும் ஏதோ நகைச்சுவை கேட்டது போல் பெருங்குரலெடுத்து சிரிக்க ஆரம்பித்தான் மித்ராதன். "யார் என் அம்மாவிடம்..... அதாவது உன் அத்தையிடம்.....?"

மறுபடியும் சிரித்தவன், "போ போய் சொல்லு. நான் உடை மாற்ற வேண்டும் என் கணவனை அறையில் இருந்து போக சொல்லுங்க அத்தை என்று. அதற்கு அவர்கள் சொல்வார்கள் நல்ல பதிலை. இன்னும் நீ சின்ன பெண்ணாவே இருக்கியே பேபி?" எக்காளத்துடன் சொன்னான்.

அவன் பேச்சின் அர்த்தம் புரிந்து உதட்டை கடித்துக் கொண்டு பேசாமல் இருந்தாள் இளவஞ்சி. இனி என்ன செய்ய? அவன் கண் முன் உடை மாற்ற முடியாது. ஒன்றும் செய்ய இயலாத தன் நிலை எண்ணி கலக்கமுற்றவள் கண்ணில் அவள் அறியாமல் கண்ணீர் துளி எட்டிப் பார்த்தது. அது மித்ராதன் கண்ணில் இருந்து தப்பவில்லை. இதற்கு மேல் அவளை சோதிக்கவும் அவனுக்கு மனம் இல்லை. எழுந்து அவள் அருகில் வந்தான். அவன் அருகில் வருவதை அறிந்து தன்னிச்சையாக பின்னடைந்தாள்.

"அடச்சே........ நல்ல எண்ணமே வராதா உனக்கு?" என்று அவளைக் கடிந்தவன், "இங்கே வா." என்று அறையின் ஒரு பக்கம் திரை சீலையால் மறைக்கப் பட்டு இருந்த கதவை திறந்தான்.

"இது உன்னுடைய ரூம். இங்கே உனக்கு தேவையான எல்லாம் இருக்கு." என்றவன் அவள் பதிலை எதிர்பாராமல் போய் விட்டான்.

மித்ராதன் காட்டிய அறைக்குள் நுழைந்த இளவஞ்சி வேகமாக கதவை சாத்தி மறக்காமல் தாழ் போட்டாள். கதவின் மேல் சாய்ந்து மனதில் எழுந்த படபடப்பை சமன் செய்ய முயன்றாள் இளவஞ்சி. போயும் போயும் அவன் முன்னால் போய் இந்த நிலையில் நிற்க வேண்டி வந்ததை எண்ணி அவமானத்தில் வெட்கினாள். அன்று போல் இன்று அவன் ஏதாவது தவறாக நடந்து கொண்டு இருந்தால் அதற்கான முழு பொறுப்பும் அவளுடையதே. அதை எண்ணி மனதுக்குள் நோகாமல் இருக்க முடியவில்லை.

அறைக் கதவை தாழ் போடாமல் உடை மாற்றிய தன் மடமையை எண்ணி தன் முன் நெற்றியில் லேசாக அடித்துக் கொண்டாள். அம்மா வீட்டில் அவள் அறையில் இருந்த நியாபகத்தில் அதை மறந்து விட்டாள். தன் யோசனையில் மூழ்கி இருந்தவள் அப்பொழுது தான் அந்த அறையை பார்த்தாள். சிறிய அறை தான் என்றாலும் மிகவும் நேர்த்தியாக அழகாக இருந்தது. ஒரு பக்கம் அலமாரியும் மறுபக்கம் கண்ணாடியும் அதன் அருகே ஒரு சிறிய மேஜை, நாற்காலியும் இருந்தது. அதற்கு மேல் பார்க்க ரசிக்க ஒன்றும் இல்லாமல் மட மடவென சேலையை கட்டி முடித்தவள் வெளியில் வந்தாள்.

அவள் கணவன் அங்கே தான் இருந்தான். அவனை நிமிர்ந்து பார்க்க முடியாமல் ஏதோ ஒன்று அவளை தடை செய்ய மருத்துவமனைக்கு செல்வதற்கு வேண்டியவற்றை எடுத்து வைத்தாள். அதை பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதன் அவள் அருகில் வந்தான். அவள் எடுத்து வைத்த பையை அவளிடம் இருந்து பிடுங்கியவன், "நீ அந்த மருத்துவமனைக்கு போக வேண்டாம்". அவன் குரலில் இருந்த அதிகாரம் அவளை சீண்டியது.

"வெட்டியாக வீட்டில் உட்கார்ந்து இருப்பதற்காக நான் மருத்துவம் படிக்கவில்லை". அவன் குரலில் அதிகாரம் என்றால் அவள் குரலில் நக்கல் இருந்தது.

"நானும் அதை தான் சொல்கிறேன்" என்றவனை புரியாமல் பார்த்தவளைக் கண்டு, "எல்லாவற்றையும் அரையும் குறையுமாக கேட்டு விட்டு பேசுவதே வாடிக்கையாக போய் விட்டது" முணுமுணுத்தான்.
"அங்கே தான் போக வேண்டாம் என்று சொன்னேன். வேறு ஹாஸ்பிட்டலுக்கு போக வேண்டாம் என்று சொல்லவில்லையே. என் நண்பனின் மருத்துவமனை இருக்கிறது. இனி நீ அங்கே தான் போகப் போகிறாய்."

'என்ன நினைத்துக் கொண்டு இருக்கிறான்? குட்ட குட்ட குனிவாள் என்றா? அதுவும் இந்த இளவஞ்சியா? நோ

நெவர்.' மனதில் சிலிர்த்துக் கொணடவள் வெளியே, "ஏனோ?" ஒற்றை சொல்லோடு நிறுத்தினாள்.

"என்ன ஏனோ? ஏன்னு உனக்கு தெரியாதா? அங்கே தானே அந்த டாக்டர் இருக்கிறான்."

"எந்த டாக்டர்?"

"அதான் உன் லவ்வர்."

"லவ்வரா? வார்த்தையை பார்த்து விடுங்கள். ஒரு பொழுது போல் ஒரு பொழுது இருக்காது."

"நான் பார்த்ததால் தானே சொல்கிறேன். அன்னைக்கு கேன்டீனில் அவனுடன் சிரித்து சிரித்து பேசிக் கொண்டு இருந்தாயே. அக்கம் பக்கம் யார் பார்க்கிறார்கள் என்ற அக்கறை சிறிதும் இல்லாமல்." அவன் குரலில் வெறுப்பு மண்டி இருந்தது.

அப்பொழுது தான் அவளுக்குமே நியாபகம் வந்தது. மித்ராதன் புகழேந்தியை தான் அவ்வாறு சொல்கிறான் என்று.

"அவர் என் நண்பர்."

"நண்பரா....?" குரலில் கேலி இழையோடியது.

"நம்பினால் நம்புங்கள். அதை பற்றி எனக்கு கவலை இல்லை. என் வழியை விடுங்கள் நான் போகணும்."

"நீ சொல்லும் கட்டுக் கதையை நம்ப வேறு யாரையாவது பார். நான் நம்புவதற்கில்லை. நான் சொன்னால் சொன்னது தான்."

"நீங்கள் சொன்னால் பணிய என்னால் முடியாது. என் விருப்பத்திற்கு தான் நான் இருப்பேன்? நீங்கள் யார் அதை கேட்பதற்கு?"

"நான் யாரா? ஏழு வருடம் கழித்தும் உனக்கு இன்னமும் இந்த சந்தேகம் போகவில்லையா பேபி? பிரிந்து இருந்த

உன்னை என்னிடம் இழுத்து வந்தது எது என்று உனக்கு புரியவில்லையா? சரி உனக்கு புரியவில்லை என்றால் நானே சொல்கிறேன். உன் அருமை கணவன். உன் அன்பு அத்தான். இப்பொழுது புரிந்ததா பேபி?"

"தாலி கட்டி  விட்டால் மட்டும் என்னைக் கட்டுப் படுத்தும் இந்த உரிமையை உங்களுக்கு யார் கொடுத்தது? நிச்சயம் நான் கொடுத்ததாக எனக்கு தெரியவில்லை. எனக்கு என்று மனது இல்லையா? விருப்பம் இல்லையா? உரிமை இல்லையா? எல்லாவற்றிற்கும் உங்களை எதிர்ப்பார்த்து தான் நான் இருக்க வேண்டுமா? நான் உங்களைக் கேட்டா மருத்துவம் படித்தேன். அது போல் உங்களைக் கேட்டு தான் நான் அந்த மருத்துவ மனையில் வேலை பார்க்க வேண்டும் என்பதும் இல்லை."

"அப்புறம் புகழ் பத்தி என்ன சொன்னிங்க. அவர் என் லவ்வர் என்றா? அவர் என் நல்ல நண்பர் மட்டுமே. அதுவும் அங்கு பணிக்கு சேர்ந்த பின்பு தான் அவரை தெரியும். நீங்கள் நினைப்பது  போல் ஏழு வருடங்களுக்கு முன் அவரை நான் காதலிக்கவும் இல்லை. அதற்காக நான் உங்களை விட்டு விலகிப் போகவும் இல்லை. எனக்கு ஆண்கள் என்றால் பிடிக்காது. உங்களையும் சேர்த்து தான். மனைவியை சக மனுஷியாக, அவளுக்கும் மனம் என்று ஒன்று இருக்கும் என்பதை கூட புரிந்து கொள்ள முடியாத உங்களை மாதிரி ஆண்களை கண்டாலே எனக்கு வெறுப்பாக இருக்கிறது."

"மீண்டும் நான் இங்கு வந்து இருப்பதற்கு காரணம் உங்கள் அம்மாவும், என் அம்மாவும் மட்டும் தான். நிச்சயம் நீங்கள் இல்லை. அவர்கள் மனம் இதற்கு மேலும் புண்படக் கூடாது என்ற ஒரே காரணம் தான். உங்களுக்காக நான் வரவில்லை. அதை மட்டும் நீங்கள் புரிந்து கொண்டால் போதும். இப்பொழுதும் சொல்கிறேன் நீங்கள் நல்ல பெண்ணாக பார்த்து மறுமணம் செய்து கொள்ளுங்கள். நான் அதற்கு தடையாக இருக்கப் போவது இல்லை. அதனால் என்னைக் கட்டுப்படுத்தும் வேலைகளை தயவு செய்து செய்ய வேண்டாம். அதற்கு நான் கட்டுப்படவும்

மாட்டேன். அப்படி கட்டுப்படுத்த நினைத்தால் இதை போல் பேசிக் கொண்டும் இருக்க மாட்டேன். அதனால் வீணே என் வழியில் குறுக்கிட்டு அவமானப்பட வேண்டாம்."

அவ்வளவு தான் பேச்சு வார்த்தை என்பது போல் அவன் கையில் இருந்த தன் கைப்பையை ஏறக்குறைய புடுங்கிக் கொண்டு செல்ல முயன்றவளை தன் வலக்கரம் கொண்டு தடுத்து நிறுத்தினான் மித்ராதன்.

நீண்ட விளக்கத்துடன் பேசியவளைக் கண்டு கொஞ்சம் அயர்ந்து தான் போனான் மித்ராதன். பார்க்க அமைதியாக இருக்கும் இளவஞ்சி இவ்வளவு பேசுவாளா? அவனுக்குள் சந்தேகம் எழுந்தது. ஆனால் கடைசியில் அவள் பேசிய பேச்சு அவள் முன் பேசிய பேச்சை அவனுக்கு மறக்கடிக்க செய்தது. அதை கொஞ்சம் யோசித்து பார்த்து இருந்தால் கூட இந்த திருமண வாழ்க்கையின் சிக்கலின் நுனி அவனுக்கு புலப்பட்டு இருக்கும். ஆனால் அவன் அதை விடுத்து, அவள் தங்கள் இருவரின் அன்னைக்காக வந்ததாக கூறியது அவனை இழிவு படுத்துவதாக நினைத்தான்.

அவன் தற்கொலை முயற்சியில் அவள் பயந்து போய் தன்னுடன் சேர்ந்து வாழ வந்து இருப்பதாக அல்லவா அவன் நினைத்துக் கொண்டு இருந்தான். அந்த எண்ணத்தில் மண்ணைப் போடுவது தானே அவன் மனையாளின் வேலை. அதை எல்லாம் விட அவனை வேறு பெண்ணைப் பார்த்து திருமணம் செய்ய சொன்னது அவன் காதல் கொண்ட மனதுக்கு விழுந்த மிகப் பெரிய அடி. என்ன தான் அவளை அவன் மறந்து விட்டேன் என்று கூறினாலும் அவள் மீதான அவனின் முதல் காதலும் அதன் தோல்வியும் அவனால் உயிர் உள்ள வரை மறக்க முடியாதே.

அந்த அவமானத்தை அவனால் தாங்க முடியவில்லை. தன்னை அவள் ஒதுக்கி தள்ளும் அளவுக்கு தன்னிடம் என்ன குறை இருக்கு என்று அவன் மனதில் எண்ணம் எழுந்தது. அவள் தன்னை ஒதுக்கி தள்ள தள்ள அவளை

விட கூடாது என்ற எண்ணமே அவனுக்கு மேலோங்கியது. அவள் கைப்பையை பிடுங்கியதும், அவளை கை நீட்டி தடுத்தவன், "உனக்கு பிடிக்குதோ இல்லையோ என்னுடனான உன் வாழ்க்கையை நீ சகித்து தான் ஆக வேண்டும். அதே மாதிரி தான் எனக்கும்." ஏதோ பேச வாயெடுத்தவளை சைகையால் நிறுத்த சொன்னவன் மேலே தொடர்ந்தான்.

"ஏன்? எதற்கு? என்று தெரியாமல் ஏழு வருடம் என் வாழ்க்கையை சந்தோசத்தை பறிச்சதுக்கு உனக்கு இது தான் தண்டனை. உன்னை போட்டோவில் பார்த்து ஏதோ காணாததை கண்ட மாதிரி உன்னைக் கண்டு மயங்கி உன் கழுத்தில் தாலி கட்டினேனே அதற்கான தண்டனை என்று நானும் இந்த வாழ்க்கையை ஏற்றுக் கொள்கிறேன். இனி மேலும் வேறு பொண்ணை பாரு, கல்யாணம் பண்ணிக்கோ என்று அட்வைஸ் பண்ற வேலை எல்லாம் இங்கே வேண்டாம். இது உனக்கு மட்டும் அல்ல எனக்கும் தண்டனை தான்." என்றவன் மேலும் பேச விரும்பாதவனாய் வெளியில் சென்று விட்டான். இப்பொழுது திகைத்து நிற்பது இளவஞ்சியின் முறையாயிற்று.

"ஹாய் வஞ்சி......." புகழேந்தி முகம் மலர இளவஞ்சியை நோக்கி வந்தான். அன்று ஞாயிறு ஆதலால் இளவஞ்சி மதியத்திற்கு மேல் வீட்டிற்கு கிளம்பிக் கொண்டு இருந்தாள். மருத்துவமனை விட்டு வெளியில் வரும் நேரம் அவன் அவளை கண்டு கொண்டான்.

"என்ன ஆளையே காணோம்? ரொம்ப பிசியோ?" புகழ் கேட்ட கேள்விக்கு புன்னகை ஒன்றையே பதிலாக தந்தாள்.

"அப்புறம்......" என்ற புகழிடம்,

"நீங்க தான் சொல்லணும்." இளவஞ்சி புன்னகையுடன் பதில் கூறினாள்.

"வஞ்சி, அருகில் இருக்கும் கிராமத்திற்கு மெடிக்கல் கேம்ப் ஒன்று போகலாம் என்று அப்பாவும் நானும் முடிவு பண்ணி இருக்கோம். யாரிடமும் இன்னமும் தெரிவிக்க வில்லை. உன்னிடம் ஏனோ சொல்ல வேண்டும் போல் தோன்றியது. நீ வருகிறாயா?"

"யார் வர வேண்டும்? எங்கே வர வேண்டும்?" கேட்டுக் கொண்டே வந்தது சாட்சாத் நம்ம கதாநாயகன் மித்ராதன் ( நான்தான் அப்படி சொல்றேன். ஆனால் இவன் பண்ற காரியம் எல்லாம் ஒன்னு வில்லன் மாதிரி இருக்கு இல்லை ஜோக்கர் மாதிரியில்ல இருக்கு).

மித்ராதனின் குரலில் இளவஞ்சி திடுக்கிட்டு போய் திரும்பி அவனைப் பார்த்தாள். 'இவன் எங்கே இங்கே? ஏற்கெனவே புகழை கண்டால் இவனுக்கு ஆகாது. பின்னே எதுக்கு இங்கே ராங் டைம்ல என்ட்ரி ஆகி இருக்கான்' அவள் மனம் யோசனையில் ஆழ்ந்தது.

"ஹாய் நான் இளவஞ்சியின் கணவன் மித்ராதன். நீங்க மிஸ்டர்........" மித்ராதன் புகழிடம் கையை நீட்டினான்.

"ஓ..... நீங்கள் தானா? உங்களை சந்தித்ததில் மிகவும் சந்தோசம்." என்று புகழ் அவன் கையை பிடித்து

குலுக்கியவன், "என் பெயர் புகழேந்தி. இங்கே தான் சைக்கியாட்ரிஸ்டா வொர்க் இருக்கேன்."

"ஓகே புகழ் நாங்க கிளம்பறோம். என்ன பேபி போகலாமா?" உரிமையுடன் அவள் தோளில் கையை போட்டபடி கேட்டவனை புகழின் முன்னிலையில் அவளால் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் இம்சையை அடக்க வேண்டும் என்றால் அவனுடன் புறப்படுவதே சரி என்று உணர்ந்தவள் புகழிடம் விடை பெற்றாள்.

"ஓகே புகழ். நான் கிளம்பறேன். நீங்கள் சொன்னதில் எனக்கு சம்மதம். எப்போ என்று மட்டும் சொல்லுங்கள்."

"சரி வஞ்சி தேதி முடிவு பண்ணியதும் சொல்கிறேன்." இளவஞ்சியிடம் கூறிய புகழ் மித்ராதனிடம் விடை பெற்று தன் காரில் ஏறி சென்றான்.

"அவர் தான் போய் விட்டாரே. இனியாவது கையை எடுக்கலாமே?" தன் தோளில் படிந்து இருந்த அவன் கையை தட்டி விட்டபடி இளவஞ்சி முறைத்தாள்.

"என்ன எங்கே எப்போ என்று திட்டமிடல் எல்லாம் பலமா இருக்கு. இன்னொரு முறை என்னை முட்டாளாக்கலாம் என்று நினைக்காதே." கோபத்துடன் கூறியவனைக் கண்டு அவளுக்கு ஆயாசமாக இருந்தது.

'என்னடா இத்தனை நாளா குரங்கு வாலை சுருட்டிக்கிட்டு அமைதியா இருக்கேன்னு நினைத்தேன். அப்படி எல்லாம் இவன் அடங்கும் ஆளா என்ன? எல்லாம் இந்த அம்மாவாலும், அத்தையாலும் வந்தது. என் நிம்மதியை கெடுக்க இவங்க ரெண்டு பேர் போதும்.' மனதில் நினைத்தவள் பதில் பேசாமல் அமைதியாக அவன் ஓட்டிக் கொண்டு வந்து இருந்த காரில் ஏறி அமர்ந்தாள். என்று அவள் அவனை பார்த்து சத்தம் போட்டாளோ அதிலிருந்து இந்த பத்து தினங்களாக அவன் அவளிடம் இருந்து ஒதுங்கி தான் இருந்தான். இன்று அவள் வாகனம் பழுதாகி விடவே காலையில் ஆட்டோவில் தான் வந்தாள். அதே போல்

ஆட்டோவிலேயே சென்று இருக்கலாம். இவன் ஏன் இங்கு வந்தான்?

"என்ன நான் கேட்டதற்கு பதில் இல்லை?" காரை இயக்கி லாவகமாக அதை ஓட்டியபடி மனைவியின் மேல் கண் பதித்தவாறு தன் கேள்வியை மீண்டும் கேட்டான்.

"நாங்கள் எங்கேயும் போகணும் என்று ப்ளான் போடலை. நீங்கள் வரும் போது மெடிக்கல் கேம்ப் பத்தி தான் பேசிக் கொண்டு இருந்தோம்." நம்பினால் நம்பு நம்பாவிட்டால் போ என்ற மனப்பான்மையில் அவள் பதில் வந்தது.

"இருக்கலாம். ஆனால் உன்னை நம்ப முடியாதே......" இழுத்தபடி நக்கலாக கூறியவனைக் கண்டு ஆத்திரத்தில் அந்த கன்னத்தில் சப் சப்பென்று நாலு போட்டால் தான் என்ன என்று அவளுக்கு தோன்றிய உணர்வை அவளால் கட்டுப்படுத்த முடியவில்லை.

"கொஞ்சம் காரை நிறுத்துறிங்களா?"

"ஏன்?" என்ற கேள்வியுடன் பார்த்தவனை,

"நான் ஆட்டோவிலேயே போய் கொள்கிறேன்." என்று இறங்கப் போனவளைத் தடுத்து,

"அம்மாவுக்காக தான் வந்தேன். உன்னை அழைத்து வரவில்லை என்றால் அவர்கள் வீணாக மன வருத்தம் அடைவார்கள்." என்றவன் அதற்கு மேல் பேசவில்லை. அந்த பயம் இருக்கணும் என்று மனதில் நினைத்த அவளும் அதற்கு மேல் பேசவில்லை.

வீட்டிற்கு வந்தவள் நேரே தங்கள் அறைக்கு உடை மாற்ற சென்று விட்டாள். அந்த சிறிய அறை தான் அவள் தன் அறையாக மாற்றிக் கொண்டாள். படுப்பதும் அங்கே தான். அவள் அங்கே படுப்பது குறித்து மித்ராதன் ஒன்றும் பேசவில்லை. ஆனால் அவளுக்காக ஒற்றை கட்டிலும் மெத்தையும் வாங்கி போட்டான். வேறு எந்த பேச்சு வார்த்தையும் உறவும் அவர்கள் இடையே கிடையாது.

அவளுக்கே சில சமயம் அலுப்பாக இருக்கும். எதற்கு இந்த வாழ்க்கை? என்று. இதை எண்ணிக் கொண்டே உடை மாற்றியவள் கீழே சென்றாள். அங்கே அவள் கண்ட காட்சி கண்டு விழி விரித்தாள்.

மித்ராதன் அமராவதியிடம் உணவு ஊட்டி விடச் செய்து உண்டு கொண்டு இருந்தவன், சும்மா இராமல் அன்னையின் தாடையைப் பற்றி கொஞ்சிக் கொண்டு இருந்தான். அவள் வருவதை உணர்ந்த அமராவதி, "வா இளா சாப்பிடு."

"இல்லை அத்தை கொஞ்ச நேரம் ஆகட்டும்." பதில் கூறியவள் அவனை அதிசயமாக பார்த்தாள்.

"மாம் உங்க மருமக என்னைப் பார்த்து கண் போடறா பாருங்க. எனக்கு வயிறு வலிக்கும்."

"ஆமாம்டா என் மருமகள் பார்த்து தான் உனக்கு வயிறு வலிக்க போகுதா? அவள் எதுக்கு தெரியுமா பார்க்கிறாள்? நான் இருக்கும் போது ஏண்டா உன் அம்மா கையால் ஊட்டி விட சொல்கிறாய் மடையா என்று பார்க்கிறாளாக்கும்."

"அப்படியா பேபி?" அவளைப் பார்த்து கண் சிமிட்டிக் கேட்டவன்,

"நானா வேண்டாம் என்கிறேன்? அவளை வேண்டுமானால் ஊட்டி விட சொல்லுங்க." அன்னையிடம் பதில் கூறியவனைக் கண்டு வியர்த்து விதிர்த்து போய் அங்கு இருந்து அவசரமாக நகர்ந்தாள்.

"பேபி......"

பேபி என்றால் அவளுக்கு பிடிக்காது என்று தெரிந்திருந்தும் கூப்பிடும் அவனை என்ன செய்ய? ஆனால் மாமியார் முன் ஒன்றும் செய்ய முடியாமல் அவனைத் திரும்பிப் பார்த்தாள்.

"ஈவ்னிங் பார்ட்டி இருக்கு. செவென் ஓ கிளாக் கிளம்பி ரெடியா இரு என்ன?" அவளிடம் அனுமதி கேட்காமல்

அவனாக முடிவு எடுத்து வர சொல்வதைக் கண்டு அவளுக்கு ஆத்திரம் வந்தது. ஆனாலும் அமராவதிக்காக சம்மதமாக தலையை ஆட்டினாள்.

வரவேற்பறையில் அமர்ந்து தொலைகாட்சி பார்த்துக் கொண்டு இருந்த அருணகிரியுடன் சேர்ந்து அமர்ந்து கொண்டு தொலைகாட்சி செய்தியில் மூழ்கிப் போனாள். சிறிது நேரம் சென்று அங்கு வந்த மித்ராதன் இயல்பாக அவள் அருகில் அமர்ந்தான். அதே நேரம் இளவஞ்சி நெஞ்சம் பட படக்க முகம் முழுவதும் வியர்வை துளிர்க்க எழுந்தவள் மித்ராதனை நிமிர்ந்தும் பாராமல் தங்கள் அறையை நோக்கி வேகமாக சென்றாள்.

மித்ராதனுக்கோ கோபத்தில் நெஞ்சம் துடித்தது. ஏன் என் அருகில் உட்காரக் கூட மாட்டாளோ? அப்படி என்றால் என்ன அர்த்தம்? இதற்காகவே கணவன் என்ற உரிமையை வன்முறை கொண்டேனும் நிலை நாட்ட வேண்டும் என்று அவன் மனம் கொதித்தது.

மாலையில் விருந்துக்கு ஏற்றவாறு உடை உடுத்திக் கொண்டு வந்தவளைக் கண்டு கண் இமைக்க மறந்தான். ஆனால் அவளோ அவனை சிறிதும் கண்டு கொள்ளாமல், "போகலாமா?" என்று இயந்திர கதியில் கேட்க அவனுக்குள் எதுவோ ஒன்று உணர்விழந்தது.

மித்ராதன் முக அமைப்பு என்ன? அவன் அழகனா? மாநிறமா கருப்பா வெளுப்பா? என்று அவளுக்கு தெரியாது. அதை பற்றி அவள் ஆராயவும் இல்லை. இது எல்லாம் அவனுக்கு தெரியாதே. தெரிந்து இருந்தால் அவன் இதை சகஜமாக எடுத்து இருப்பான்.

அவளின் இயற்கை சுபாவமே அது தான் என்பது அவனுக்கு புரியாமல் போனது. அவள் வேண்டும் என்றே தான் தன்னைப் புறக்கணிக்கிறாளோ என்று அவனுக்கு சந்தேகமாக இருந்தது. அதை எண்ணியவன் முகம் கல்லை போல் இறுகியது. அவனின் முக பாவத்தை அவள் கவனிக்கவில்லை. அப்படி கவனிக்க வேண்டிய அவசியம் இருப்பதாக அவளுக்கு தெரியவில்லை. அதன் பின் எந்த

ஒரு பேச்சும் இல்லாமல் இருவரும் காரில் ஏறி விருந்து நடக்கும் இடத்திற்கு சென்றனர்.

விருந்தில் கலந்து கொண்ட இளவஞ்சிக்கு ஏண்டா வந்தோம் என்று இருந்தது. மேற்கத்திய பாணியில் உடையும் நடனமும் எங்கும் இருந்த கவர்ச்சியும் அவளுக்கு எரிச்சலைத் தான் தந்தது. அவள் சிறு வயதாக இருந்த போது இருந்த கலாச்சாரத்திற்கும் இப்பொழுது நாட்டில் நிலவி வரும் கலாச்சாரத்திற்கும் உள்ள வேறுபாடு கண்டு மனம் கசந்தது.

'எங்கே போய் கொண்டு இருக்கிறது நம் இந்திய தேசம் என்ற கவலை அவள் மனதில் எழாமல் இல்லை. இதில் சிலர் தங்கள் குழந்தைகளை வேறு அழைத்து வந்து இருந்தனர். சிறு வயதில் இதை பார்த்து வளர்பவர்கள் நாளை பெரியவர்கள் ஆகும் போது?' அவள் மனம் கேள்வி கேட்டது.

அவள் கணவனோ அதை கொஞ்சமும் உணராமல் தன் நண்பர்களுடன் உல்லாசமாகப் பேசி சிரித்துக் கொண்டு இருந்தான். எழில் அன்று வரவில்லை. அதனால் மற்ற நண்பர்களுடன் மித்ராதன் பேசிக் கொண்டு இருந்தான். பேசியபடி மனைவியைப் பார்த்தவன் அவள் இதில் எதிலும் கலந்து கொள்ளாமல் ஒதுங்கி இருப்பதைக் கண்டு எரிச்சல் அடைந்து அவளை நோக்கி வந்தான்.

"இப்படி ஓரமாக உட்காருவதற்கு தானா உன்னை கூட்டிக் கொண்டு வந்தேன்?"

"பிடிக்கவில்லை."

"ம்......... என்னை கூட தான் உனக்கு பிடிக்கவில்லை. ஆனால் என் கூட வரவில்லையா என்ன? அது போல் இதையும் பழகிக் கொள்."

"தேவையில்லை." மெதுவாக தான் என்றாலும் உறுதியாக மறுத்தாள். அவளை கூர்ந்து பார்த்தவன், "சரியான

பட்டிக்காடு." தோளை அலட்சியமாக குலுக்கியவன்,முணு முணுத்துக் கொண்டே அங்கு இருந்து நகர்ந்தான்.

"பொறுக்கி .... ராஸ்கல் ...... இடியட்......" என்று காது கொடுத்து கேட்க முடியாத தமிழிலும், ஆங்கிலத்திலும் உள்ள அனைத்து கெட்ட வார்த்தைகள் கொண்டு திட்டிக் கொண்டு இருந்த இளவஞ்சியின் குரல், நண்பர்களுடன் பேசிக் கொண்டு இருந்த மித்ராதன் காதில் விழுந்தது. அவன் அவசரமாக அங்கே வந்தான். விருந்து நடக்கும் ஹாலின் ஓரத்தில் அந்த ஹோட்டலின் பணியாள் ஒருவன் நின்று இருக்க அவனை தான் அந்த வாங்கு வாங்கிக் கொண்டு இருந்தாள். அவளின் கை சிறுமி ஒருவளை இறுகப் பற்றி இருந்தது.

மித்ராதனுக்கு ஒன்றுமே புரியவில்லை. அவன் போய் என்ன எது என்று கேட்பதற்குள் அந்த சிறுமியின் பெற்றோர் சிறுமியின் அருகில் வந்து விட்டனர். அவர்களைப் பார்த்து இளவஞ்சி, "பிள்ளைகளைப் பெற்றால் மட்டும் போதாது? அவர்களைப் பாதுகாப்பதிலும் நீங்கள் அக்கறை செலுத்த வேண்டும். இப்படியா பொறுப்பற்று இருப்பீர்கள்?" என்று அவர்களுக்கும் வசவு மழை பொழிந்தாள். யாருக்கும் ஏன்? எதற்கு? என்று புரியவில்லை.

அந்த சிறுமியின் பெற்றோர் இளவஞ்சி எதற்கு சத்தம் போடுகிறாள் என்று உணராமல் மித்ராதனிடம், "மிஸ்டர். மித்ரா உங்கள் மனைவி என்ன பேசுகிறார்கள் என்று தெரிந்து தான் பேசுகிறார்களா? இந்த மாதிரி ஆட்களை எல்லாம் ஏன் இங்கே கூட்டிக் கொண்டு வருகிறீர்கள்." அவனைக் கடிந்து கொண்டு அங்கு இருந்து நகர்ந்தனர். அதைக் கேட்டதும் மித்ராதன் முகம் கோபத்தில் சிவந்தது.

"என்ன இளா இது கொஞ்சம் கூட நாகரீகம் இல்லாமல். கொஞ்ச நேரம் வாயை மூடுகிறாயா என்ன? பொது இடத்தில் ஏன் கத்தி ரகளை செய்கிறாய்?" கோபத்தில் இரைந்தவனைக் கண்டு முறைத்தவள் ஒன்றும் பேசாமல்

அந்த ஹாலை விட்டு வெளியேறினாள். வேறு வழியின்றி மித்ராதனும் அவள் பின்னே சென்றான்.

இருவரும் வீட்டை அடையும் வரை எந்த பேச்சும் இருவருக்கும் இடையில் இல்லை. தங்கள் அறைக்குள் வந்ததும் தனது அறைக்கு செல்ல முனைந்த இளவஞ்சியை தடுத்தவன்,
"என்னை அவமானப் படுத்தணும்ன்னு முடிவு பண்ணி தான் இப்படி நடந்துக்கிட்டியா? ஏன் இப்படி செய்ற? என்ன தான் உனக்கு பிரச்சினை?" அவன் குரலில் அடக்கப்பட்ட கோபம் இருந்தது. அதை விட கோபாமாக அவள் அவனை முறைத்தாள்.

"என்னையே கேள்வி கேட்கிறிங்களே? அந்த பொறுக்கி என்ன பண்ணினான்னு உங்களுக்கு தெரியுமா?" கோபத்தில் முகம் சிவக்க மூச்சு வாங்க பேசியவளைக் கண்டு மித்ராதன் ஓரடி பின்னால் நகர்ந்தான். ஆனாலும் அவள் பேசியது கண்டு எரிச்சலுற்று,
"ஏன் அவன் உன் கையை பிடிச்சு இழுத்தானா?" நக்கலாக கேட்டான்.

"அப்படி பிடிச்சு இருந்தா இந்த இளவஞ்சி யாருன்னு அவனுக்கு தெரிஞ்சு இருக்கும்."

"அதானே நீ யாரு? புருஷன் தொட்டதுக்கே அடித்தவள் ஆயிற்றே." தனக்குள் முணுமுணுத்துக் கொண்டவன்,
"அப்படி என்ன தான் செய்தான்? சும்மா சும்மா கோபப்படுற."

"அந்த பொறுக்கி அந்த சின்ன பெண்ணை போய் தொடக் கூடாத இடங்களை எல்லாம் தொட்டுத் தடவி...... தனக்கு தவறு நேரப் போவதைக் கூட உணராமல், கயவன் அவன் என்று அறியாமல் அவனிடமே சிரித்து பேசிக் கொண்டு இருந்த அந்த பூவை கசக்கி பிழிய வேண்டும் என்று அவனுக்கு எப்படி தான் மனம் வந்ததோ?" சொல்லிக் கொண்டே இருந்தவள் வேதனையில் கண்ணை மூடிக் கொண்டாள்.

மித்ராதன் இதை எதிர்ப்பார்க்கவில்லை. அவன் அப்படியே அதிர்ச்சியில் உறைந்தான். எங்கோ செய்தியில் கேட்டது இங்கு நிஜமாக நடந்து இருப்பதை அவனால் நம்ப முடியவில்லை. ஆனாலும் நம்பாமலும் இருக்க முடியவில்லை.

"நல்லவேளை நான் வாஷ் ரூம் போனதால் அதை பார்த்தேன். இல்லை என்றால்.... . சின்ன பெண்ணை வாஷ் ரூமுக்கு கூட கூட்டிக் கொண்டு போய் விட முடியாத அளவுக்கு அந்த பெற்றோர்களுக்கு என்ன வேலை? அப்படி அக்கறை இல்லாதவர்கள் எல்லாம் எதற்கு பிள்ளைகளை கூட்டிக் கொண்டு வர வேண்டும்? அதிலும் அவர்கள் பெண்ணிற்காக தான் நான் பேசிக் கொண்டு இருக்கிறேன். அதை கூட உணர்ந்து கொள்ளாமல் அவர்கள் பாட்டுக்கு பேசிக் கொண்டு போகிறார்கள். அதை கேட்டு நீங்கள் வேறு என்னை சத்தம் போடுறிங்க."

"அது வந்து......" அவனால் பதில் பேச முடியவில்லை. தொண்டையில் முள் சிக்கிக் கொண்டது போல் வேதனையில் அவனால் பேச முடியவில்லை. கட்டிய மனைவியிடத்தில் கூட வன்முறையை கையாளக் கூடாது என்று நினைப்பவன் அவன். அவனால் இந்த மாதிரி விசயங்களை ஜீரணிக்கவே முடியாது. இதில் கண்ணால் பார்த்த சாட்சியாக எதிரிலேயே அவன் மனைவி இருக்கிறாள்.

"நீ இதை அந்த பேரண்ட்ஸ் கிட்டேயே சொல்லி இருக்கலாமே?"

"ஏன்? ஏன் சொல்லணும்? சொல்லி எல்லோரும் அவளை வேடிக்கை பொருள் போல் பார்க்கவா? மேலும் அதற்கு கண்ணு மூக்கு வைத்து கதை திரிக்கவா? வேண்டாம் அத்தகைய வேதனை அந்த சிறுமி பட வேண்டாம்." படபடவென்று பொரிந்தவளைப் பார்க்க அவனுக்கு அச்சமாக இருந்தது.

"உங்களால் பேச முடியாது. ஏனென்றால் நீங்களும் ஆண் வர்க்கம் தானே. நீங்கள் மட்டும் என்ன விதி விலக்கா

என்ன? இன்றைக்கு மதியம் டிவி நியூசில் கூட இந்த மாதிரி ஒரு சிறுமி பாதிக்கப் பட்டதை தான் சொன்னார்கள். என்னால் அதை உட்கார்ந்து பார்க்க கூட முடியவில்லை. அப்படியே எழுந்து அறைக்கு சென்று விட்டேன்."

மதியம் அவள் அருகில் அவன் அமர்ந்ததும் அவள் எழுந்ததற்கு காரணம் அவன் அல்ல. அந்த தொலைக்காட்சி செய்தியே என்று அறிந்தவனுக்கு மனதின் ஓரம் நிம்மதி வந்து குடி கொண்டது. அதை உணராமல் அவன் மனையாள் பேசிக் கொண்டே போனாள்.

"மீடியா வெளிச்சத்திற்கு இந்த மாதிரி செய்தி வருவது வரவேற்க தக்கது தான் என்றாலும். அந்த சிறுமியின் மன வேதனை, அந்த பெற்றோரின் வேதனை இதை எல்லாம் யாரும் புரிந்து கொள்வது இல்லை. அத்தகைய வேதனை இந்த சிறுமிக்கு வேண்டாம். பெண்ணுக்கு எந்த வயதிலும் பாதுகாப்பு இல்லை. இந்த மாதிரி செயலுக்கு காரணம் பக்குவப்படாத உங்களை மாதிரி ஆண்கள் தான். அதனால் எல்லாத்துக்கும் காரணம் ஆண்களான நீங்கள் மட்டும் தான்.இதை எல்லாம் உங்க கிட்ட போய் சொல்லிக்கிட்டு இருக்கேனே என்னை சொல்லணும்? நீங்கள் மட்டும் என்ன ஒழுங்கா?"

அவனுக்கும் சேர்த்து ஒரு குட்டு வைத்தாள். மித்ராதனோ தன்னை ஏன் அவ்வாறு சொல்கிறாள் என்று புரியாமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். பின் ஆண்கள் எல்லோரையும் சேர்த்து கூறும் போது என்னையும் சேர்த்துக் கூறி இருக்கலாம் என்று தன்னை  சமாதானம் செய்து கொண்டான். (அவள் உள்குத்தை என்று தான் நீ புரிந்து கொள்ள போகிறாயோ தெரியலை).

"அந்த மாதிரி கயவர்களை மட்டும் சொல்லி பயன் இல்லை. பெண் குழந்தைகளை பத்திரமாக பார்த்து கொள்ளாத இவர்களை மாதிரி பெற்றோர்களை தான் சொல்ல வேண்டும். இவர்களுக்கு எல்லாம் குழந்தைகள் எதற்கு?"

தன் கோபம் முழுவதும் அந்த அக்கறையில்லா பெற்றோர் மேல் வார்த்தைகளால் காண்பித்தாள்.

"நீங்க கொஞ்ச நேரம் பொறுத்து இருந்தா என்னிடம் வம்பு செய்தான் என்று அவனை போலீசில் பிடிச்சு கொடுத்துட்டு வந்திருப்பேன். எல்லாம் உங்களால் வந்தது. தவறை தட்டிக் கேட்பது அநாகரீகம் என்றால் அதை நான் திரும்ப திரும்ப செய்வேன்."

"என்னை என்ன சொன்னிங்க? நாகரீகம் இல்லாதவள் ரகளை பண்றவள் தானே சொன்னிங்க, நான் அப்படியே இருந்து விட்டு என்று போகிறேன். இனி மேல் இது போன்ற விருந்துக்கு என்னை கூட்டிட்டு போகாதீங்க"

அதற்கு மேல் அங்கு நிற்காமல் தன் அறைக்குச் சென்று கதவை தாளிட்டவளை பார்த்துக் கொண்டு இருந்தவன் அதற்கு மேல் நிற்க முடியாமல் படுக்கையில் விழுந்தான். யாருக்கும் அஞ்சாத அவளின் குணம் அவனை ஈர்த்தது. பெண் என்றால் இவள் தான் பெண், இப்படி தான் தைரியமாக இருக்க வேண்டும் என்று மனதில் எண்ணியவன், முதன் முறையாக மனைவியைப் பற்றி பெருமையாக நினைத்தான். அவன் மனதில் மனைவி மீதான வெறுப்பு சிறிது மறைந்து அவள் மீது மதிப்பு கூடியது.

அந்த நினைவில் அவன் ஒன்றை மறந்தான். அது தான் அவள் ஏன் ஆண்களை கண்டால் இவ்வளவு கோபம் ஆத்திரம் கொள்கிறாள்? தான் அவளை கணவனாக நெருங்கிய போது அவள் ஏன் தாக்கினாள்? இதை எல்லாம் அவன் சேர்த்து வைத்து பார்த்து இருந்தால் அவன் மனைவியின் நடத்தைக்கான விடையை அவன் அறிந்து இருப்பான்.

"அத்தை பிரசர் நார்மலா இருக்கு. ஆனால் சுகர் தான் கொஞ்சம் கூட இருக்கு. புட்ல கண்ட்ரோலா இருங்க. அப்புறம் கட்டாயம் வாக்கிங் போகணும்."

காலையில் மருத்துவமனைக்கு போகும் முன் இளவஞ்சி அமராவதிக்கு மருத்துவ பரிசோதனை செய்து கொண்டு இருந்தாள்.

"மாமாவை பாருங்க. எவ்வளவு கண்ட்ரோலா இருக்காங்க."

"ஆமாம் ஆமாம் பெரிய கண்ட்ரோல். உங்க மாமாவுக்கு எல்லா பக்குவம் நான் பார்க்கிறேன். எனக்கு யார் பார்க்கிறா?"

"என்ன கிழவி என்னை குத்தம் சொல்லுவது போல இருக்கே?" அப்பொழுது தான் நடை பயிற்சி முடித்து உள்ளே வந்த அருணகிரி, இளவஞ்சியிடம் கேட்டபடி மனைவியின் அருகில் அமர்ந்தார்.

"உங்களை இல்லை மாமா. சாரி அத்தை என்னால உங்களை சரியா கவனிக்க முடியல. இனி அப்படி நடக்காது."

"இளா இங்கே வாம்மா" என்று அமராவதி அவளை அருகில் அழைத்து கன்னத்தை பாசமாக வருடியவர்,
"நீ என்ன சாதாரண வேலையா பார்க்கிற. உயிர் காக்கும் டாக்டர் வேலை பார்க்கிற.. நேரம் காலம் பாராமல் ஓட வேண்டி இருக்கும். அப்படி இருந்தும் உன்னால் முடிந்ததை நீ செய்துட்டு தான் போற. அதுவே நான் வேண்டாம் என்று தான் சொல்றேன். எல்லாத்துக்கும் வேலையாள் இருக்கு. நீ உன் வேலையில் மட்டும் கவனம் செலுத்து என்ன? வேறு எதையும் போட்டு மனசை குழப்பிக்காதே." வாஞ்சையுடன் கூறியவர்,

கணவனைப் பார்த்து, "இவருக்கு என்னை பார்த்து கொள்வதை விட வேறு வேலை வெட்டி என்ன? அதான் என்

மகன் தொழிலைப் பார்த்துக்கிறான் இல்ல? வீட்டில் சும்மா இருக்கிறதுக்கு என்னை பார்க்கலாம் இல்ல?" முகத்தை நொடித்தார்.

"உன்னை பார்க்காமலா இருக்கேன்? இப்ப கூட பாரு உன்னை பார்த்துக்கிட்டு தான் இருக்கேன்." என்ற அருணகிரியை முறைத்தார் அமராவதி. இருவரையும் பார்த்து இளவஞ்சிக்கு சிரிப்பு தான் வந்தது.

"இளா உன் அத்தையை தொடர்ந்து கண்காணித்ததில இங்கே பாரு இது தான் அவள் சுகர் கூடுவதன் ரகசியம்." என்று விளம்பர பாணியில் கூறியவர், அங்கு அருகில் இருந்த அலமாரியில் இருந்து ஒரு பிளாஸ்டிக் டப்பாவை இளவஞ்சியிடம் நீட்டினார். அதை திறந்து பார்த்த இளவஞ்சிக்கு சிரிப்பை அடக்க முடியவில்லை. அதில் இருந்தது எள்ளு உருண்டைகள்.

"அத்தை............ உங்களை, இதெல்லாம் சாப்பிட்டா எப்படி சுகர் குறையும்?' என்று செல்லமாக கடிந்தவள், "எனக்கு எள்ளு உருண்டைகள் பிடிக்கும். நான் எடுத்துக்கவா?" என்று கேட்டாள்.

"வேண்டாம். வேண்டாம். இப்ப தான் நீயும் மித்ராவும் ஒன்னு சேர்ந்து இருக்கீங்க. இது இப்ப வேண்டாம்." அமராவதி அவசரமாக அவள் கையில் இருந்து டப்பாவை பறித்தார்.

மருத்துவர் இல்லையா அமராவதி என்ன சொல்ல வருகிறார் என்பதை உடனே புரிந்து கொண்டாள் இளவஞ்சி. தன் முக மாறுதலை வெளியில் காட்டாமல் இருக்க மிகவும் சிரமப் பட்டு போனாள் இளவஞ்சி. அதை அமராவதி கவனிக்கவும் தவறவில்லை.

"சரி மாமா அத்தை நான் கிளம்பறேன்." அதற்கு மேல் பேசாமல் மௌனமாக வெளியேறினாள்.

"என்னங்க இருவருக்கும் இடையில் இன்னும் பிரச்சினை சரியாக வில்லையா? அவளுக்கு நான் சொல்ல வருவது

புரியுது. ஆனாலும் ஒன்னும் சொல்லாமல் முகம் இறுகிப் போய் போறாளே."

அமராவதியின் கவலையை கண்ட அருணகிரி அவர் கையை எடுத்து தன் கையில் வைத்துக் கொண்டு, "இங்கே பாரு அம்ரு. இதை எல்லாம் எப்படி வெளியில் சொல்லிக்கிட்டு இருப்பாங்க. இந்த காலத்து பிள்ளைங்க குழந்தை வரவை தள்ளி போட்டு இருக்கலாம். அதை நாம் கேட்பது அநாகரீகம். இந்த மட்டும் ரெண்டு பெரும் சேர்ந்தாங்கலே அதுவே பெரிய விஷயம்." மனைவியை சமாதனப்படுத்தினாலும் அவருக்குள்ளும் அதே கேள்வி எழாமல் இல்லை.

இருவரின் யோசனையையும் இளவஞ்சியின் உற்சாகக் குரல் கலைத்தது.

"மாமா அத்தை செழியன் வந்து இருக்கான்."

"இதோ வர்றோம்மா. அவனை உட்கார சொல்லு." என்றபடி பெரியவர்கள் இருவரும் வரவேற்பறை நோக்கி சென்றனர்.

மாடிப்படியில் இறங்கி வரும் போதே மித்ராதன் இளவஞ்சியை கவனித்துக் கொண்டே வந்தான். செழியன் வந்து இருந்ததாலோ என்னமோ அவள் முகம் மலர்ந்து உதட்டில் புன்னகை நிறைந்து இருந்தது. அதை பார்த்ததும் அவன் அடி மனதில் புதைந்து போய் இருந்த அவள் மீதான காதல் விதை மெல்ல முளை விட ஆரம்பித்தது. அதிலும் அவள் செழியன் வாங்கி வந்து இருந்த சாக்லேட்டுகளை ஆசையுடன் அவனிடம் இருந்து வாங்கியவள் முகத்தில் ஒளிர்ந்த சந்தோசத்தைக் கண்டு மித்ராதன் முகமும் ஒளிர்ந்தது.

"சிரிக்கும் போது இவள் முகம் எவ்வளவு அழகா இருக்கு. ஆனால் இவள் ஏன் எப்பொழுதும் சிரிக்க மாட்டேங்கிறா? அதிலும் என்னிடம்..... ம்ஹூம்....... என்ன செய்வது? நான் வாங்கி வந்த வரம் அப்படி?"

தன்னை நொந்து கொண்டவன் செழியனை வரவேற்றபடி இளவஞ்சி அருகில் அமர்ந்தான். தம்பி வந்து இருந்ததாலோ என்னமோ அவள் அவன் அருகில் உட்கார்ந்ததை அவ்வளவாக கண்டு கொள்ளவில்லை.

"என்ன செழியா? உன் அக்கா என்ன குட்டிப் பாப்பாவா? சாக்லேட் எல்லாம் வாங்கிட்டு வர்ற?"

"அட என்ன அத்தான் நீங்க இப்படி கேட்டுட்டிங்க? இவள் கிட்ட காரியம் ஆகணும்னா சாக்லேட் வாங்கி கொடுத்த போதும் அம்மணி எதையும் யோசிக்காமல் ஓகே சொல்லிடுவாங்க."

"ஓஹோ...... அப்படியா ! இதை நான் கட்டாயம் நியாபகத்தில் வைச்சுக்கிறேன்." சிரித்தபடி கூறினான் மித்ராதன். அவன் சிரிப்பைக் கண்டு இளவஞ்சிக்கு

வெட்கமாக போய் விட்டது. இப்படி தம்பி தன் ரகசியத்தை போட்டு உடைப்பான் என்று அவள் நினைக்கவில்லை.

"அய்யோ என்ன செழியா இது?" என்று சிணுங்கியவளை செழியன் தன்னோடு அணைத்துக் கொண்டான். அவளும் ஆறுதலாக அவன் தோள் சாய்ந்தாள்.

நேற்று பெரிய மனுஷியாய் பேசியது என்ன? இன்று சிறு பெண்ணாய் அடைக்கலம் வேண்டி சகோதரன் தோள் சாய்வது என்ன? அதைப் பார்த்த மித்ராதன் விழிகளில் ஏக்கம் நிறைந்து இருந்தது. என்றாவது ஒரு நாள் தன் தோளிலும் இவ்வாறு சாய்ந்து ஆறுதல் தேடுவாளா என்று அவன் மனம் ஏங்கியது. தன் மனம் போகும் திசை அறிந்து தனக்குள் வெட்கியவனாய் அதற்கு கடிவாளம் போட்டு நிறுத்தினான்.

'ஏன் மித்ரா எத்தனை தடவை அடிபட்டாலும் உன் எண்ணத்தை மாத்திக்கவே மாட்டியா?' அவன் மனக் குரல் அவனைப் பார்த்து கேலி செய்தது.

"நாளைக்கு அப்பாவோட நினைவு நாள் அதான் அம்மா உங்க எல்லோர்கிட்டேயும் சொல்லிட்டு நாளைக்கு வீட்டுக்கு

வரச் சொன்னாங்க." தான் அங்கு வந்ததற்கான காரணத்தை செழியன் கூறினான்.

"என்ன செழியா இது? நீங்க நியாபகப் படுத்தி தான் எனக்கு தெரியணுமா? என் நண்பன் நினைவு தினம் எனக்கு மறக்குமா என்ன?"

"மாமா............." இளவஞ்சியும் செழியனும் ஒரே நேரத்தில் திகைத்தனர்.

"இத்தனை வருடங்களில் நான் அந்த தினத்தை மறக்கவும் இல்லை. உங்கள் வீட்டுக்கு வந்து குணாவுக்கு ஆறுதல் அளிக்கவும் மறக்கவில்லை. நீங்கள் இல்லாத போது தான் அங்கே வருவது."

இதைக் கேட்ட இளவஞ்சிக்கும் செழியனுக்கும் பேச வாய் வரவில்லை. செழியன் மனதில் தான் இவர்களை தவறாக நினைத்தது எவ்வளவு தவறு என்று வருந்தினான். மனதில் நினைத்ததை கூறி பெரியவர்களிடம் மன்னிப்பு கேட்கவும் அவன் தயங்கவில்லை.

"நீ எதுக்குப்பா வீணா மன்னிப்பு கேட்டுகிட்டு. எல்லாம் போதாத காலம்." அவனை சமாதானம் செய்தார். செழியன் விடை பெற்று கிளம்பினான்.

இளவஞ்சியின் மனமும் நெகிழ்ந்து இருந்தது.

"வாங்க.... வாங்க......" குணவதி வந்தவர்களை வரவேற்றார். எல்லோருடனும் மித்ராதனும் உடன் வந்து இருந்தான்.

மாறன் நினைவு தினம் ஆதலால் அவருக்கு படையல் போட்டு பூஜை செய்தனர். குணவதியின் கண்கள் கணவரின் நினைவில் கலங்கியது. செழியனின் கண்களும் கலங்கியது. எத்தனை ஆண்டுகள் ஆனால் என்ன? இல்லத் தலைவன் இழப்பில் இருந்து இன்னமும் முழுமையாக அவர்கள் வெளி வரவில்லை.

இளவஞ்சி அன்னையையும் சகோதரனையும் ஆறுதலாக அணைத்துக் கொண்டாள். அவளையே பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதன் அன்று போல் இன்றும் ஆச்சிரியம் அடைந்தான். அதற்கு ஒரே காரணம் இளவஞ்சி முகத்தில் சிறிதளவு கூட வேதனையின் சாயலோ, கண்களில் துளி கண்ணீரோ இல்லை. அன்று அவளை தவறாக நினைத்தவனால் இன்று அவளை தவறாக நினைக்க முடியவில்லை. அதற்கு காரணம் என்னவென்றும் அவனுக்கு புரியவில்லை.

அதன் பின் அருணகிரியும் அமராவதியும் அங்கேயே குணவதிக்கு ஆறுதலாக இருப்பதாக சொல்ல மித்ராதன் இளவஞ்சியை கூட்டிக் கொண்டு சென்றான். காரில் இருவரும் பயணித்த போதும் ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ளவில்லை. மருத்துவமனை வந்த பின் இளவஞ்சி "வருகிறேன்" என்ற ஒற்றைச் சொல்லோடு அவனிடம் விடை பெற்று திரும்பியும் பார்க்காமல் சென்றாள்.

அவனும் தனக்குள் பெருமூச்சொன்றை இழுத்து விட்டவன் தன் அலுவலகத்தை நோக்கி காரை செலுத்தினான்.

இரவு வெகு நேரம் கழித்து வீட்டிற்கு வந்த மித்ராதன் தன் அறைக்கு வந்தான். வர தாமதமாகும் என்று அவன் ஏற்கெனவே அமராவதியிடம் சொல்லி இருந்தபடியால் யாரும் காத்துக் கொண்டு இருக்கவில்லை. அப்படியே இருந்தாலும் அவன் மனைவி அவனுக்காக காத்து இருக்கப் போவது இல்லை. தன்னை சுத்தப்படுத்திக் கொண்டு வந்தவன் மின் விளக்கை அணைத்து விட்டு படுக்கையில் சாய்ந்தான். ஏதேதோ யோசனையில் இருந்தவனுக்கு உறக்கம் வர வில்லை.

அப்பொழுது தான் கவனித்தான் இளவஞ்சியின் அறையில் இருந்து வெளிச்சம் வருவதை. ஏன் இவ்வளவு நேரம் முழித்து இருக்கிறாள் என்ற கேள்வி எழுந்தது. ஏனெனில் அவள் இங்கு வந்து இத்தனை நாட்களில் அவளின் பழக்கங்கள்அவனுக்கு அத்துப்படி. அதில் ஒன்று தான்

இரவு பத்து மணிக்கு எல்லாம் அவள் உறங்கி விடுவாள் என்பது.

உடம்பு ஏதும் சரியில்லையா? கதவை தட்டலாமா? தவறாக எடுத்துக் கொள்ளுவாளோ? என்று பலவாறு யோசித்தவன், பின் முடிவுக்கு வந்தவனாய் கதவை தட்டினான். பதில் ஏதும் வராமல் போகவே கதவில் கையை வைத்து அழுத்தினான். கதவு தானாக திறந்தது. உள்ளே போகலாமா? என்று மனதிற்குள் பட்டி மன்றம் நடத்தியவன், ஒருவழியாய் உள்ளே சென்றான்.  அவன் அங்கே பார்த்த காட்சி கண்டு திகைத்து போனவனாய் அதிர்ந்து நின்றான்.

ஏனெனில் இளவஞ்சி அந்த ஒற்றை கட்டிலில் முழங்காலை கட்டிக் கொண்டு, உடம்பை சுவற்றோடு சாய்த்து முகம் மேல் நோக்கி இருக்க, கண்கள் இரண்டும் விட்டத்தை நோக்கி நிலை குத்தி நிற்க அமர்ந்து இருந்தாள். இதில் ஆச்சிரியப்பட ஒன்றும் இல்லை தான். ஆனால் அவள் கண்கள் இரண்டும் கண்ணீர் வழிய, முகம் சொல்லொண்ணா துயரத்தில் ஆழ்ந்து இருந்தது. அவள் கத்தி அழவில்லை. சின்ன கேவல் சத்தம் கூட எழவில்லை. இவ்வவளவு ஏன் அழுகையில் உடல் குலுங்கவில்லை. அவன் வருகையைக் கூட உணராமல் தனக்குள் கரைந்து கொண்டு இருந்த அவளின் நிலை கண்டு மித்ராதன் மனதில் வேதனை எழுந்தது. அவளை அள்ளி அணைத்து உனக்கு நான் இருக்கிறேன் என்று ஆறுதல் படுத்த அவன் மனம் விழைந்தது. வெகுவாக முயன்று தன் மனதைக் கட்டுக்குள் கொண்டு வந்தவன் சத்தம் இல்லாமல் அந்த அறையை விட்டு வெளியில் வந்தான்.

மறுபடியும் படுக்கையில் விழுந்தவன் மனதில் ஏகப்பட்ட குழப்பம் எழுந்தது. இளவஞ்சியை தான் சரியாக புரிந்து கொள்ள வில்லையோ? என்ற எண்ணம் எழுந்து அவனை அலைக்கழித்தது. வார்த்தைக்கு வார்த்தை "ஜடம்" என்று அவளை சொல்லியவன் அவளுக்கும் மனம் என்று ஒன்று இருப்பதை இன்று தான் உணர்ந்தான். அந்த மனதுக்குள்ளும் அன்பு இருக்கிறது என்பதைக் கண்டு கொண்டான்.

அவள் தந்தை இறந்து ஏழு வருடம் ஆகியும் அந்த துயர் அவளுக்கு போகவில்லை என்றால் அவள் மனம் தான் எவ்வளவு மென்மையானது, அதில் இருக்கும் அன்பு தான் எவ்வளவு ஆழமானது. அந்த அன்பிற்கு என்றாவது ஒருநாள் தான் உகந்தவன் ஆவோமா? என்ற ஏக்கம் அவன் மனதை வாட்டியது.

அவளை அறியாமல் அவள் மனதை அறியாமல் ஏழு வருடம் பிரிந்து இருந்த தன் மடமையை எண்ணி அவன் நொந்தான். அன்று அவள் அப்படி நடந்து கொண்டதற்கு தானும் ஒரு வகையில் காரணமோ என்ற கேள்வி அவனுள் எழுந்தது. அன்று தான் நடந்து கொண்ட முறைக்கு இன்று வருந்தினான். அவளை தான் இன்னும் பொறுமையாக கையாண்டு இருக்க வேண்டுமோ? என்று யோசித்தவனால் அதன் பின் தூங்க முடியவில்லை. அவனின் காதல் மனம் மெல்ல விழிக்க ஆரம்பித்தது.

"மாம்......" அலுவலகத்தில் இருந்து வீட்டினுள் நுழையும் போதே அன்னையை அழைத்துக் கொண்டே வந்த மித்ராதன் பெற்றோர் இருவரும் வரவேற்பறையில் அமர்ந்து இருப்பதைப் பார்த்து அங்கே சென்றான். அம்மாவின் அருகில் அமர்ந்து அவர் மடியில் தலை சாய்த்தவன் களைப்புடன் கண்களை மூடினான். அமராவதி வாஞ்சையுடன் மகனின் முடி கோதி இதமாக அவன் தலையை பிடித்து விட்டார். அதன் சுகத்தில் லயித்துப் போனவனாய்,
"மாம் உங்க கை சுகமே சுகம் தான்." அவரின் கையை பிடித்து கன்னத்தோடு வைத்துக் கொண்டான்.

"டேய் மகனே உன் அம்மாவுக்கு இப்படி இதமா தலை பிடிச்சு விட தெரியும் என்றே எனக்கு இப்ப தான்டா தெரியும்."

"ம்..... உங்களுக்கு நான் பிடிச்சு விட்டதே இல்லையா? அம்ரு அம்ரு தலை வலிக்குது பிடிச்சு விடுன்னு என்கிட்ட தானே வரணும். அப்ப கவனிச்சுக்கிறேன்."

"அதுக்கு எல்லாம் ஆள் வச்சாச்சு."

"என்னது ...... ?" அமராவதியின் முறைப்பை அருணகிரி கண்டு கொள்ள வில்லை.

"ஆமாம் பின்னே எத்தனை நாள் தான் கிழவி கையால் பிடிச்சு விட சொல்றது. அதான் ஒரு மாற்றத்துக்கு......" அவர் சொல்லி முடிக்கவில்லை அதற்குள் அவரின் காதைப் பிடித்து திருகி இருந்தார் அமராவதி.

"என்ன நான் கிழவியா? அப்ப அய்யா என்னவாம்? வயசான காலத்துல பேச்சை பாரு."

"ஐயோ அம்ரு ... என் செல்லம் என் காதை விடும்மா. வலிக்குது நான் அழுதுடுவேன்." நகைச்சுவை பாணியில் அருணகிரி பேசவும் அமராவதிக்கும் சிரிப்பு வர அவர் பிடி தளர்ந்தது. மனைவியின் சிரிப்பை ஆசையுடன் பார்த்துக்

கொண்டு இருந்த அருணகிரியின் பார்வையில் அன்பும், காதலும் நிறைந்து இருந்தது.

அவர்கள் இருவரும் சிறு பிள்ளைகள் போல் அடித்துக் கொண்டாலும் அன்பை ஒருவர் மேல் ஒருவர் செலுத்துவதில் அவர்களை யாரும் மிஞ்ச முடியாது. இந்த வயதிலும் மனமொத்து பிரியத்துடனும் காதலுடனும் இருக்கும் பெற்றோரை பார்க்க பெருமையாக இருந்தது. அவர்களைப் பார்த்துக் கொண்டு இருந்த அவன் முகத்திலும் புன்னகை விரிந்தது.

"என்னடா எங்களையே முறைச்சு பார்க்கிற? கண்ணு வைக்காதே. வேணும்ன்னா உன் பொண்டாட்டியை போய் ரசிச்சு பாரு. யாரு வேண்டாம்ன்னா?"

தங்கள் இருவரையும் பார்த்துக் கொண்டிருந்த மகனைப் பார்த்து மெதுவாக தன் அஸ்திரத்தை எய்தார் அருணகிரி.

"ஹேய் ..... டாட் .... என்ன இது?" மித்ராதன் முகத்தில் அவனையும் அறியாமல் சிவப்பு ஏறியது.

"நீங்க சொன்னாலும் சொல்லலைன்னாலும் நான் அவளை பார்ப்பேன். ரசிப்பேன். உங்களுக்கு என்ன?"

"மித்ரா கண்ணா உங்களுக்கிடையில் எதுவும்..... பழைய மாதிரி....." அமராவதி மேலும் கேட்க தயங்கினார். என்ன தான் மகனாய் இருந்தாலும் இப்பொழுது அவன் வளர்ந்த ஆண் மகன் அல்லவா?

"மாம் நீங்க கவலைப்படவே வேண்டியது இல்லை. என் பேபியை நான் தான் புரிந்து கொள்ளாமல் போனேன். இனி பழைய தப்பு நடக்க வாய்ப்பே இல்லை." என்ற சின்னவனின் உறுதியான பேச்சில் பெரியவர்கள் முகம் தெளிந்தது.

"மாம் பேபி இன்னும் ஹாஸ்பிட்டல்ல இருந்து வரலையா? ஆளை காணோம்?"

"இல்லை மித்ரா. கொஞ்சம் லேட் ஆகும் என்று போன் பண்ணி சொன்னா."

"ஓஹ் ...... ஓகே மாம் நான் குளிச்சிட்டு வர்றேன்." என்றவன் தன்னறைக்கு சென்றான். அவன் குளித்து விட்டு வந்து சாப்பிட்டுக் கொண்டு இருக்கும் போது தான் இளவஞ்சி வீட்டில் நுழைந்தாள்.

அனைவரும் உணவு மேஜையில் அமர்ந்து இருப்பதைக் கண்டு அங்கே சென்றாள். அமராவதியைப் பார்த்து புன்னகைத்தவள்,
"சாரி அத்தை கொஞ்சம் லேட் ஆகிருச்சு."

"இதுக்கு ஏண்டா சாரி எல்லாம் கேட்டுக்கிட்டு? போ போய் குளிச்சிட்டு வாம்மா."

"ம்....." என்றவள் தன்னை சுத்தப்படுத்திக் கொண்டு வந்து சாப்பிட அமர்ந்தாள்.

அமராவதி அவள் சாப்பிடும் வரை அருகில் இருந்தவர் அதன் பின் தூக்கம் வருவதாகக் கூறி அவர் அறைக்கு சென்று விட்டார். அங்கே ஹாலில் அப்பாவும் மகனும் பேசிக் கொண்டு இருக்க இளவஞ்சி அங்கே என்ன செய்ய என்று எண்ணி அறைக்குச் செல்ல மாடியேறினாள். அவள் போவதைக் கண்டு மித்ராதன் கண்கள் அவள் பின்னேயே சென்றது. மகனின் கண் அவன் மனைவி மேல் இருப்பதைப் பார்த்த அருணகிரி,
"மித்ரா தூக்கம் வந்தால் போ. நாளைக்கு பேசலாம்."

"ஏன் டாட்? நாம பேசலாம்." ஒன்றும் புரியாமல் பேசியவனைக் கண்டு வாய் விட்டு சிரித்தவர்,
"அடேய் நாங்களும் உங்க வயசை தாண்டி தான் வந்து இருக்கோம். போ போ போய் தூங்குடா மகனே." என்று நமட்டு சிரிப்பு சிரித்தபடி அவர் சென்றார். தந்தையின் கிண்டலில் முகம் சிவந்தவனாய் தனக்குள் புன்னகைத்தபடி அறைக்குச் சென்றான்.

அறைக்குள் நுழைந்தவனுக்கு வெறுமை தாக்கியது. இளவஞ்சி அவள் அறைக்குள் புகுந்து கதவை சாத்திக் கொண்டாள்.

'ம்.... கோட்டைக் கதவு சாத்தியாச்சு.' மனதில் கிண்டலாக நினைத்தவன் படுக்கையில் சாய்ந்தவனின் மனம் தந்தையின் கேலியை நினைத்தது. மனதில் எழுந்த ஏக்கம் பெருமூச்சாய் மாறி அந்த அறையையே அனலாக்கியது.

தன் யோசனையில் உழன்றவனின் காதுக்கு மெலிதான அழுகை சத்தம் கேட்டது. தடால் என்று எழுந்து அமர்ந்தான். இரவின் நிசப்தத்தில் அந்த சத்தம் மெலிதாக இருந்தாலும் அவன் காதுக்கு துல்லியமாக கேட்டது. எழுந்தவன் பால்கனி கதவை திறந்து அங்கே சென்று பார்த்தான். ம்ஹூம் .... அங்கே இருந்தும் சத்தம் வரவில்லை. கதவை சாத்தி மீண்டும் அறைக்குள் வந்தவன் காதுக்கு மீண்டும் அந்த சத்தம் கேட்க அவனுக்குமே என்ன செய்வது என்று தெரியவில்லை.

அதன் பின்னர் தான் நியாபகம் வந்தது இங்கே அவனை தவிர இன்னொரு ஜீவனும் இருக்கிறது. ஆனால் அழுகையுடன் அவளை இணைத்து வைத்துப் பார்க்க முடியவில்லை. அப்படியே அவள் அழுதாலும் சத்தம் போட்டு அழ வாய்ப்பே இல்லை. அதை தான் நேற்றே அவன் கண்டானே? இருந்தாலும் சந்தேகம் தீருவதற்காக அவள் அறை பக்கம் சென்றான். அவன் நினைத்ததுக்கு மாறாக சத்தம் அங்கே இருந்து தான் வந்தது.

"பேபி....." கதவை தட்டினான். ம்ஹூம் பதில் இல்லை. மீண்டும் பலம் கொண்ட மட்டும் தட்டினான். நேற்று போல் அறை கதவு திறந்து இருக்குமோ என்ற நப்பாசையில் கதவில் அழுத்தம் கொடுத்து பார்த்தான். அது அசையவில்லை. இளவஞ்சி உட்பக்கமாக தாழ் போட்டு இருந்தாள். ஏன் அழுகிறாள்? என்று அவனுக்குமே புரியவில்லை. ஆனாலும் அவள் அழுகையைப் பார்த்துக் கொண்டு இருக்கவும் அவனால் முடியவில்லை.

வேகமாக யோசித்தவனுக்கு அறைக் கதவின் சாவி அவன் வசம் இருப்பது நியாபகம் வர அதை போய் தேடினான். எங்கே அவன் போட்டானோ அவனுக்கே அது தெரியாது. ஒருவழியாய் எல்லாவற்றையும் இழுத்துப் போட்டு அதை தேடி எடுத்தான். கையில் சாவி கிடைத்ததும் அவசரமாக அதைக் கொண்டு அவளின் அறைக் கதவை திறந்தான்.

அங்கே இளவஞ்சி இவன் வருகையை கூட உணராமல் கட்டிலில் கவிழ்ந்து படுத்துக் கொண்டு அழுது கொண்டு இருந்தாள். மித்ராதனுக்கோ என்ன செய்வது? இவள் அழுகையை எப்படி நிறுத்துவது? என்று தெரியாமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவளோ அவன் வருகையை உணர்ந்ததாகவும் தெரியவில்லை. அவள் அழுகையை நிறுத்துவதாகவும் தெரியவில்லை. அவளை எப்படியோ போ என்று விட்டு விட்டு போக அவனுக்கும் மனசு கேட்கவில்லை.

தான் சமாதானம் செய்தால் அவள் ஏற்பாளோ என்ற தயக்கமும் எழ நின்று இருந்தவன் அவளின் அழுகை மேலும் கூடக் கண்டு அவள் அருகே கட்டிலில் அமர்ந்தான். தைரியமாக அவள் அருகே அமர்ந்தாலும் அவளை தொட்டு ஆறுதல் சொல்ல அவனுக்கு தயக்கமாக இருந்தது.

"பேபி......." என்ற சொல்லில் அவன் முகம் பார்த்தவள் ஒன்றும் பேசாமல் தலையணைக்குள் மீண்டும் முகத்தை புதைத்தாள். மித்ராதனுக்கோ ஆச்சிரியமாக இருந்தது. அவன் அவள் அருகில் அமர்ந்ததற்கு நிச்சயம் கோபப்படுவாள் என்று தான் எண்ணினான். அவள் ஒன்றும் சொல்லாதது அவனுக்குமே சிறிது தைரியத்தைக் கொடுக்க மேலும் அவளுடன் பேச முனைந்தான்.

"பேபி, என்ன பிரச்சினை? ஏன் அழற? சொன்னால் தானே தெரியும்?" என்று கேட்க,அவள் அழுகை இன்னும் கூடியது. அவனுக்கும் இப்பொழுது பதற்றம் ஆகியது. அவளுக்கு என்ன ஆச்சோ? மனம் பதறியது. பதற்றத்தின் விளைவாக கை தன்னிச்சையாக அவள் தலையை வருடியது.

"ஹேய் சொன்னால் தானே புரியும்? எதுவாக இருந்தாலும் சொல்லும்மா." அவனையும் அறியாமல் வார்த்தை கனிந்து வந்தது. அவனின் வார்த்தையில் இருந்த கனிவோ என்னமோ அவளை மீண்டும் அவன் முகம் பார்க்க வைத்தது. படுத்த வாக்கிலேயே முகத்தை மட்டும் நிமிர்த்தி அவனைப் பார்த்தாள்.

கண்களில் இருந்து கண்ணீர் வழிய அவளை பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

"பேபி, நான் என்னமோ உன்னை ஜான்சி ராணி ரேஞ்சுக்கு இமாஜின் பண்ணி வச்சு இருக்கேன். நீ இவ்வளவு தானா?" என்று மனதில் நினைத்ததை வாய் விட்டு கேட்டு விட்டான். கேட்டு விட்ட பின் தான் யோசித்தான்.

'மித்ரா போச்சு..... சும்மாவே அவள் உன்னை ஜாக்கி சான் மாதிரி பந்தாடுவா. இப்ப நீ வேற இப்படி சொல்லிட்ட. என்ன செய்யப் போறாளோ?'

இளவஞ்சியோ கண் இமைக்காமல் அவனையே பார்த்தாள். அவள் தந்தை சொல்லும் அதே வார்த்தை அவனிடம் இருந்து வரவும் அழுகையுடன் அவனைப் பார்த்தாள்.

"'பாப்பா, நான் என்னமோ உன்னை ஜான்சி ராணி அளவுக்கு கற்பனை பண்ணி வச்சு இருக்கேன். நீ இவ்வளவு தானா?"

இப்பொழுதும் அவர் குரல் அவள் காதில் ஒலிக்க அவள் தன்னை மறந்தவளாய் அவன் மடியில் முகம் புதைத்து குலுங்கினாள்.

மித்ராதனே அவளின் செய்கையில் ஒரு நிமிடம் உறைந்து போனான். தன்னவள் ஆறுதல் வேண்டி தன் மடி சாய்ந்து இருக்கிறாள் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. உறைந்து இருந்த அவனை அவன் மடி உணர்ந்த ஈரம் நிஜத்திற்கு கொண்டு வந்தது. தன்னுணர்வு அடைந்தவன் அவளின் தலையை மிருதுவாக தடவிக் கொடுத்தான்.

"பேபி, இப்பவாவது சொல்லலாமே... என்ன நடந்தது?"

அவனின் ஆறுதல் வார்த்தையாலோ என்னமோ அவள் மெல்ல வாய் திறந்தாள். கேவல்களுக்கிடையில் அவள் வார்த்தை வெளி வந்தது.

"இன்னைக்கு நடந்த டெலிவரியில்........ பிறந்த குழந்தை....... நஞ்சுக் கொடி கழுத்தை சுற்றி...... பாவம் அந்த குழந்தை வாழ்ந்து அனுபவிக்காமலேயே ....... ச்சு பாவம் அதன் அம்மா......"

அவள் சொல்வது புரியாமல் இருந்தாலும் அதன் அர்த்தம் அவனுக்கு புரிந்தது. இன்று பிரசவத்தில் பிறந்த குழந்தை இறந்து விட்டது என்று. அவனுக்கும் அதை நினைத்து பரிதாபமாக இருந்தது. அதன் அன்னை கூட இவள் அளவுக்கு அழுது இருக்க மாட்டாள் என்று எண்ணியவன் அவளை சமாதானம் செய்ய நினைத்தான்.

"பிறப்பும் இறப்பும் நம் கையில் இல்லை. இதை எல்லாம் எண்ணி அழுதால் முடியுமா? இதுவும் கடந்து போகும் என்று இதைத் தாண்டி நீ வர வேண்டாமா? இந்த ஒரு பிரசவத்தோடு உன் பணி முடிந்து விடப் போவதில்லை. இன்னமும் போக வேண்டிய தூரம் எவ்வளவோ இருக்கிறது. இதற்கு எல்லாம் கவலைப் படலாமா? அதன் பெற்றோரே இன்னொரு குழந்தை பிறந்தால் முதல் துக்கத்தை மறந்து விட்டு அடுத்த சந்தோசத்தை வரவேற்க தயாராகி விடுவார்கள். அப்படி இருக்க நீ ஏன் வீணே வருத்தப் படுகிறாய்."

"நானே இறந்து போனாலோ நீ அதை எண்ணி அழுதுட்டு இருக்க முடியுமா?......." அவன் போக்கில் பேசியவன் தான் சொன்ன வார்த்தையைக் கேட்டு தானே திடுக்கிட்டான்.

ஆனால் அவளோ எதையும் உணராமல், "தெரியலை........"

அவள் வார்த்தைகள் அவனுள் எந்த அளவு அதிர்ச்சியை ஏற்படுத்தி இருக்கும் என்று வார்த்தைகளால் சொல்ல முடியாது. கண்களை அழுந்த மூடி தன்னை நிலைப்படுத்திக் கொண்டவன், மேலும் பல ஆறுதல் வார்த்தைகள் கூறினான்.

"ம்...... ம்......" என்று கேவல்களுக்கிடையில் அழுகை மெல்ல குறைந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அழுகை நின்றதும் தான் தன் நிலையை அவள் உணர்ந்தாள். அதாவது அவன் மடியில் முகம் புதைந்து இருந்த நிலையை, தான் செய்த காரியத்தின் விபரீதம் புரிய சட்டென்று எழுந்து அமர்ந்தாள்.

அவள் எழுந்ததுமே அவள் நடப்புக்கு வந்து விட்டதை மித்ராதன் உணர்ந்து கொண்டான். அவனுக்கோ மேலும் அங்கே இருக்க சங்கடமாக இருந்தது. இப்பொழுது இருக்கும் நல்ல மனநிலையை கெடுத்துக் கொள்ள அவன் விரும்பவில்லை. அவளோ அவள் செய்த செய்கையால் அவன் முகம் பார்க்க வெட்கி தலையைக் குனிந்து கொண்டாள்.

"பேபி......." அவன் அவளை அழைக்கும் குரலில் மெதுவே அவனை நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

"குட் நைட்"

பதிலுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் மெல்ல தலையை அசைத்தாள்.
மித்ராதன் அறையை விட்டு வெளியேறிய பின் தான் இளவஞ்சிக்கு மூச்சே வந்தது. அதன் பின் தான் அவளின் மூளை சிந்திக்கவே ஆரம்பித்தது.
தான் எப்படி.......? அதுவும் அவன் மடியில்.......? என்ன நினைத்து இருப்பான்......? அவளால் கற்பனை பண்ணிக் கூட பார்க்க முடியவில்லை. வெகுநேரம் யோசித்தவளுக்கு அவன் கூறிய வார்த்தைகள் அப்பொழுது தான் நியாபகம் வந்தது. தன் தந்தை தான் சோர்ந்து இருக்கும் போதோ இல்லை அழும் போதோ கூறும் வார்த்தைகள் அவை. அதே போல் இவன் கூறியதும் அது தந்தையை நினைவு படுத்த அடுத்த கணம் தன்னை மறந்து, தான் அவன் மடி சாய்ந்து விட்டது புரிந்தது.

அதன் பின் நடந்தது எல்லாம் அவளுக்கு காணொளி காட்சியாக கண் முன் வர ஆரம்பித்தது. அவன் மடி சாய்ந்து அழுததும், அவன் தலை கோதி ஆறுதல் வார்த்தை

கூறியதும், அதில் தான் மெல்ல தெளிந்ததும் நியாபகம் வந்தது.

அவனிடம் இந்த மென்மையான அணுகுமுறையை, ஆறுதலை அவள் எதிர் பார்க்கவில்லை. அன்று அப்படி நடந்து கொண்ட மித்ராதனுக்கும் இன்று மென்மையாக நடந்து கொண்ட மித்ராதனுக்கும் மலைக்கும் மடுவுக்கும் இடையில் உள்ள வித்தியாசம் இருப்பதை உணர்ந்தாள். அவனின் பக்குவப்பட்ட பேச்சு அவனின் தற்போதைய மனநிலையை அவளுக்கு எடுத்துக் காட்டியது.

அவன் நினைத்து இருந்தால் இது தான் சாக்கு என்று அவளிடம் அத்து மீறி இருக்கலாம் அவன் அது மாதிரி எதுவும் செய்யவில்லை. இங்கு வந்த அன்றும் கூட கோபமாக பேசினானே அன்றி, அவளிடம் அத்துமீற வில்லையே. இவ்வளவு ஏன் அவள் அழுதால் என்ன? அழாவிட்டால் என்ன? என்று அவன் பாட்டுக்கு அவன் வேலையைப் பார்த்து இருக்கலாம். அவளின் துயர் கண்டு, அவள் கண்ணீரை துடைக்கிறான் என்றால் அவனுக்கும் மனது இருக்கிறதோ? அதில் அன்பு இருக்கிறதோ? அவன் நல்லவன் தானோ? தான் தான் வேண்டாததை எண்ணி அவனை வருத்தி விட்டேனோ? மனதுக்குள் உழன்றவளுக்கு விடை தான் தெரியவில்லை.

தனக்குள் உழன்றவள் மனம் இன்று பிறக்கும் போதே இறந்து பிறந்து, மொட்டிலேயே கருகி போன பெண் சிசுவை எண்ணி வருந்தியது. அவள் மருத்துவ துறையில் இறப்பு என்பது சகஜமான ஒன்று தான். அதுவும் அவள் போல மருத்துவர்கள் அதை எல்லாம் தாண்டி வர வேண்டும். அவளும் அப்படித் தான் இருந்தாள். அதாவது அப்படி இருப்பதாக எண்ணி இருந்தாள். எல்லாம் அந்த சிசுவின் இறப்பை நேரில் பார்க்கும் வரை தான். அவளுக்கு சிறிய குழந்தைகளை மிகவும் பிடிக்கும். அவள் தந்தை மாறன் கூட சொல்வார்
"பாப்பா நீ எம்.டி பண்ணும் போது பிடீயாட்றிக் எடுத்து படி" என்று. அந்த அளவுக்கு அவளுக்கு குழந்தைகளைப் பிடிக்கும்.

அதனால் தான் என்னவோ இன்று முதல் முறையாக அந்த சிசு இறந்து பிறந்ததை அவளால் ஜீரணிக்க முடியவில்லை. மருத்துவ துறை எவ்வளவோ முன்னேறி இருந்த போதும் இந்த மாதிரி இழப்புகள் ஏற்படுவதை தவிர்க்க இயலவில்லை. சில்லிட்ட அந்த சிசுவின் உடலை கையில் வாங்கியதுமே அவளுக்குள் ஏதோ உடைந்த உணர்வு. அதிலும் பிரசவித்த தாய் துடித்த துடிப்பைப் பார்த்தபின், அப்பொழுதே அழுகை பீறிட்டது அவளுக்கு.

மற்றவர்களுக்காக அழுகையை அடக்கிக் கொண்டவள் வீட்டிற்கு வந்து தனிமை கிடைத்ததும் அவ்வளவு நேரம் அடக்கி வைத்து இருந்த அழுகை அவளையும் அறியாமல் விம்மலாக வெடித்து விட்டது. இளவஞ்சியின் மனம் கணவன் புறம் இருந்து அவளின் துக்கத்திற்கு காரணமான அந்த சிசுவிடம் சென்று விட்டது. மீண்டும் கணவன் பக்கம் என்று திரும்புமோ?

இளவஞ்சியின் அறையில் இருந்து வெளியில் வந்த மித்ராதன் மனம் சொல்லொண்ணா துயரத்தில் இருந்தது. நேரே பால்கனிக்கு சென்றவன் அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்து இருளைப் போர்த்தி இருந்த வான்வெளியை வெறித்தான். இன்று தான் இளவஞ்சியின் மனதில் தனக்கு என்ன மாதிரியான இடம் இருக்கிறது என்பதை முழுதுமாக உணர்ந்தான்.

ஏழு ஆண்டுகளுக்கு முன் அவள் அவனிடம் நடந்து கொண்ட முறைக்கு அவன் என்ன காரணம் என்று தேடவில்லை. அவளின் செயலில் கோபமுற்று அயல்நாடு சென்று விட்டான். திரும்பி வந்த பின்பும் அவளுக்கு அவன் மீதான வெறுப்பு இருப்பதை உணர்ந்தான். ஆனால் அதற்கு காரணம் புகழேந்தி என்று அவனாகவே குற்றம் சாட்டினான். அதுவரை நினைத்துக் கொண்டு இருந்தவன், அதன் பின் இங்கு அவன் வீட்டிற்கு வந்த பின் இளவஞ்சியின் நடவடிக்கை, அவள் பேசிய பேச்சு எல்லாவற்றையும் ஒருங்கிணைத்துப் பார்த்தான்.

புகழை தன் நண்பன் என்று இளவஞ்சி கூறிய போது கூட அவன் எக்காளமாகத் தான் அவளை நினைத்தான். ஆனால் அந்த சிறுமிக்காக ஜான்சி ராணியாய் சிலிர்த்து நின்றாளே அன்றே அவளோடு தவறையோ இல்லை பொய்மையோ இணைத்து பார்க்க முடியாமல், அவள் மேல் அவனுக்கு மதிப்பு மரியாதை வந்தது.

அந்த நிமிடத்தில் இருந்து அவளை புகழோடு இணைத்து பேசவோ இல்லை நினைக்கவோ அவனால் முடியாமல் போனது. அந்த சமயத்தில் அவள் பேசியதை யோசித்துப் பார்க்கும் போது தான், அவனுக்குப் புரிந்தது. இளவஞ்சி வார்த்தைக்கு வார்த்தை ஆண்களைப் பிடிக்காது என்று கூறியது இப்போது தான் அவன் மூளைக்கு தாமதமாக உரைத்தது. ஏன்? என்று யோசித்தவன் கண்டு பிடித்த விடை தான் அவ்வளவு உவப்பாக இல்லை.

அந்த சிறுமியைப் பற்றி சொன்னாளே அது போல் இவளுக்கும் நடந்து......... அந்த நினைவே மனதுக்குள் கசப்பை உண்டு பண்ண, வேதனையுடன் கண்களை மூடினான். அப்படியே ஏதும் அவளுக்கு நடந்து இருந்தால் அவளை விலக்கி வைக்க அவனால் முடியுமா? முடியவே...... முடியாது என்று வாய் விட்டு கத்தியவன், அதன் பின் சுற்றுப்புறத்தை உணர்ந்து வாயை மூடிக் கொண்டான்.

அந்த நொடி அவனுக்கு தன்னவளின் மீதான தன் நேசம் புரிந்தது. அவளின் மீதான காதல் அவள் செய்கையால் செத்து மடிந்து விட்டதாக அல்லவா எண்ணி இருந்தான். இல்லை இல்லை அப்படி எண்ணி தன் மனதை ஏமாற்றி கொண்டு இருந்தான். மெர்சியிடம் இளாவின் வாசத்தை உணர்ந்த போதே அவனின் அவள் மீதான நேசத்தை அவன் உணர்ந்து தானே இருந்தான். அதன் பின் பெண்களிடம் விலகி இருந்ததும் அந்த நேசத்தால் தானே? அவன் நினைத்து இருந்தால் மறுமணம் என்றோ செய்து இருந்து இருக்கலாமே? யாருக்காக அவன் இவ்வளவு நாட்கள் காத்து இருந்தான் ஒருவேளை தன்னவளுக்காக தானோ?

நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும் இனி என்ன செய்ய வேண்டும் என்பதை மட்டும் யோசிக்க வேண்டும் என்று முடிவு செய்தான். இளவஞ்சி மனதில் தன்னைப் பற்றிய நினைவு எந்த அளவு என்பது இப்பொழுது அவனுக்கு நன்றாகவே புரிந்து போனது. அவள் மனம் பாதிப்பு அடைந்ததால் தான் ஆண்களை வெறுக்கிறாளோ? அதனால் தான் ஆண் மகனான அவனை வெறுத்தாளோ என்று பலவாறு யோசித்து அவளுக்காக மனம் வருந்தினான்.

இந்த லட்சணத்தில் அவள் மனதை அறியாமல் என்னை நேசி ! என்னுடன் குடும்பம் நடத்து ! என்று கூறினால் அவளும் என்ன செய்வாள்? தன்னை அவள் உணர செய்ய, அவள் மனதில் இடம் பதிக்க முதலில் அவன் தன் நேசத்தை அவளுக்கு உணர்த்த வேண்டும். அதன் பின் கணவனாக அவள் மனதில் புக வேண்டும். அது அவ்வளவு சுலபமாக இருக்கும் என்று அவன் எண்ணவில்லை. அவளுக்கு தன் நேசத்தை உணர்த்த அவன் மிகவும் கஷ்டப்பட வேண்டும் என்று அவனுக்கு புரிந்து தான் இருந்தது. அதற்காக எல்லாம் அவன் பின் வாங்கிட முடியுமா என்ன?

நாளை முதல் நல்ல காதலனாக மாற வேண்டும் என்று எண்ணியவன் மனதில் "திரும்பவும் முதல்ல இருந்தா......." என்று நகைச்சுவை நடிகர் ஒருவர் சொல்வது நியாபகம் வந்து அவனை சிரிக்க வைத்தது. வெகு நாட்களுக்கு பின் வாய் விட்டு சிரித்தான்.

"குட்மார்னிங் மாம்" மித்ராதன் அமராவதியின் பின் புறம் நின்று அவரை அணைத்தான்.

"டேய் தள்ளுடா ...... உனக்கு எத்தனை தடவை சொல்லி இருக்கேன் குளிக்காம என்னைக் கட்டி பிடிக்காதேன்னு? போ .... போ ... போய் குளி." சொல்லியபடி அவன் கையை பிரித்து அவன் புறம் திரும்பியவர், அப்படியே நின்று விட்டார். அவரின் அருமை மகனோ புன்சிரிப்புடன் அன்னையைப் பார்த்து கண் சிமிட்டினான்.

"எப்புடி?"

சட்டை காலரை தூக்கி விட்டபடி அன்னையை நோக்கி புருவத்தை கேள்வியாய் உயர்த்தினான். காலையிலேயே குளித்து நெற்றியில் திருநீறு துலங்க மகனை கண்ட அமராவதிக்கு மயக்கம் வராத குறை தான். எத்தனை நாள் அவனை திருநீறு வைக்க சொல்லி இருப்பார்? சாமியாவது பூதமாவது என்று வாதிடும் மகன் இந்த கோலத்தில் வந்து நின்றால் அவருக்கு மயக்கம் வராதா என்ன?

"என்னடா அதிசயமா இருக்கு?" அவனுக்கு காபியை கலந்து கொண்டே கேட்டார்.

"இந்த மாதிரி அதிசயம் எல்லாம் இனி நிறைய நடக்கும்." என்றவன் அமராவதி கொடுத்த காபியை வாங்கிப் பருகிக் கொண்டே,
"அப்படியே என் பொண்டாட்டிக்கும் காபி கலந்து கொடுங்க மாம்."

"அம்ரு இது உண்மையில் உலக அதிசயம் தான். உன் பையன் இவ்வளவு சீக்கிரம் காலையில் எழுந்ததே அதிசயம். இதில் அவன் பொண்டாட்டிக்கு காபி வேற கேக்குறான். நம்ப முடியவில்லை... வில்லை..... ல்லை." என்று அருணகிரி அவர் பங்குக்கு மகனை கிண்டல் அடித்தபடி சமையலறைக்குள் நுழைந்தார்.

"மாம் பாவம் பேபி ..... நைட்டு தூங்க லேட்டாயிருச்சு. சரின்னு நான் காபி எடுத்துட்டு போக வந்தா ஹஸ்பென்ட் அன்ட் வைப் இரண்டு பேரும் கிண்டல் பண்றிங்களா?"

மித்ராதன் பேச்சைக் கேட்டு அமராவதியும் அருணகிரியும் கண்களால் ஜாடை பரிமாறிக் கொண்டதை அவன் கவனிக்கவில்லை. பெரியவர்கள் இருவரின் முகமும் சந்தோசத்தில் மலர்ந்தது.

"மாம் காபி கலக்க போறிங்களா இல்லையா? இல்லை நானே......" பால் பாத்திரத்தை கையில் எடுக்க போனவனை தடுத்த அமராவதி,
"நீ போடுற காபியை நீயே குடிக்க மாட்ட. பாவம்டா என் மருமக அவள் நீண்ட ஆயுளோட நல்லா இருக்கணும்டா மகனே." மகனை கிண்டல் செய்தவாறு மருமகளுக்கு காபி கலந்து கோப்பையை அவன் கையில் திணித்தார்.

"மாம்" என்று சிணுங்கியவன் தன் அறை நோக்கி சென்றான்.

"என்னங்க இது அதிசயமா இருக்கு? இவனுக்கே ஒரு ஆள் எல்லாம் செய்யணும். அப்படிப் பட்டவன் இளாவுக்கு செய்றான்னா ......?" நம்ப முடியாமல் அமராவதி கணவனைப் பார்த்து கேட்டார்.

"இதில் ஆச்சிரியப் பட என்ன இருக்கு?......." கணவன் ஏதோ சொல்ல வருகிறார் என்று நினைத்து அவர் முகத்தை ஆவலுடன் பார்த்தார் அமராவதி.

"கொஞ்சம் முப்பத்தைந்து வருசத்துக்கு முன்னாடி..... நம்ம கல்யாணம் நடந்த மறுநாள் நீ நல்லா தூங்கிட்ட. நான் தான் என் அம்மாகிட்ட கேட்டு உனக்கும் சேர்த்து காபி கலந்து கொண்டு வந்தேன். என் அம்மாவும் என்னை இப்படித் தான் பார்த்தாங்க. ம்.... சரித்திரம் திரும்புகிறது."

அருணகிரி ஏதோ சொல்லப் போகிறார் என்று ஆவலுடன் அவர் முகத்தை பார்த்த அமராவதிக்கு என்னவோ போல்

ஆகிவிட்டது. மனைவியின் முகம் போகிற போக்கை பார்த்து அருணகிரிக்கு சிரிப்பு தாங்கவில்லை.

"என்ன அப்படித் தானே ....?" என்று கேட்க வேறு செய்தார்.

"ம் ...... அன்னைக்கு நீங்க பண்ண லொள்ளு இருக்கே, முதல் ஆளா எழுந்து பாத்ரூமில் உட்கார்ந்து கிட்டு ரெண்டு மணி நேரமா நீங்க வெளில வரல. அப்புறம் நான் குளிச்சு வெளியே வரதுக்குள்ள உங்க அம்மாகிட்ட ஓடிப் போய்ட்டிங்க. அன்னைக்கு உங்க அம்மா என்னை பார்த்தாங்களே ஒரு பார்வை என் ஜென்மத்துக்கும் நான் மறக்க மாட்டேன். செய்றதை எல்லாம் செஞ்சுட்டு இப்ப கிண்டல் வேறயா? அதுவும் என் மகனோட உங்களை ...... ஒப்பிட்டு ...... இது கொஞ்சம் கூட நியாயம் இல்லை."

கடைசி வார்த்தை சொல்லும் போது அமராவதியின் கை பூரிக்கட்டையை எடுத்துக் காட்டியது. அதன் பின்னரும் அங்கே நிற்க அருணகிரி என்ன முட்டாளா என்ன? அவசர வேலை இருப்பது போல் தோட்டத்து பக்கம் சென்று விட்டார்.

"குட்மார்னிங் பேபி" குளியலறையில் இருந்து முகத்தை துடைத்த படி வெளியே வந்த இவஞ்சி மித்ராதனை ஆச்சிரியமாக பார்த்தாள். கையில் காபி கோப்பையை ஏந்தியபடி அவன் நின்று இருந்தது கண்டு தான் அந்த ஆச்சிரியம்.

அவள் இங்கே வந்ததில் இருந்து இருவருமே ஒருவர் முகம் பார்த்து ஒருவர் பேசிக் கொள்வது மிகவும் குறைவு. அதுவும் சுமுகமாக பேசிக் கொள்வது என்பது நடவாத ஒன்று. அப்படி இருக்க இன்று அவனின் செயல் அவளுக்கு குழப்பத்தை விளைவித்தது.

ஒருவேளை நேற்று நடந்ததை வைத்து இன்று இவன் இப்படி நடந்து கொள்கிறானோ என்று சந்தேகம் முளைத்தது. நேற்று அவன் நடந்து கொண்ட முறையை ஒரு முறை எண்ணிப் பார்த்தவள் ச்சே ..... ச்சே ...... அப்படி எல்லாம் இருக்காது என்று தன்னை தானே கடிந்து கொண்டாள்.

"குட்...... மார்...... னிங்....."
தட்டு தடுமாறி கணவனுக்கு காலை வணக்கம் சொல்லியவள் அங்கு இருந்து நகர முற்பட்டாள்.

"வெய்ட் பேபி" அவள் செல்வதை தடுத்தவன் அவள் கை பற்றி அதில் காபி கோப்பையை வைத்து,
"இது உனக்கு தான்."

"ம் .... ம்..... தேங்க்ஸ்" அவன் முகம் பாராமல் காபியை வாங்கிக் கொண்டாள்.

"நான் உன்னிடம் கொஞ்சம் பேசணும். பேசலாமா?"

"இல்லை .... ஹாஸ்பிட்டல் போக லேட் ஆயிருச்சு." என்றபடி அவனை நிமிர்ந்தும் பாராமல் வேகமாக அங்கு இருந்து நகன்றாள். அவளின் செயல் கண்டு அவனுக்கு ஆயாசமாக இருந்தது. அவளின் மனதை எப்படி மாற்றுவது என்று அவனுக்கு தெரியவில்லை. ஆனால் அவள் அவனிடம் முகம் காட்டாமலோ இல்லை கோபமாகவோ நடந்து கொள்ளாததே அவன் மனதுக்கு இனம் புரியாத இதம் அளித்தது.

மருத்துவமனைக்கு செல்ல தயாராகி வந்தவளைக் கண்டு மித்ராதன் பிரமித்தான். எளிமையான அலங்காரத்திலும் அவள் அழகு கூடி தெரிந்தது. முகத்தில் பவுடர் பூச்சு கூட இல்லை, ஆனாலும் அவள் முகம் மாசுமருவில்லாமல் அழகாக தான் இருந்தது. அவனின் காதல் கொண்ட மனம் முதன் முறையாக தன்னவளை அணு அணுவாக ரசித்தது.

தன் அறையை விட்டு வெளியில் வந்த இளவஞ்சி, அங்கே மித்ராதன் கட்டிலில் அமர்ந்து தன்னை பார்த்துக் கொண்டு இருப்பதை கண்டு தயங்கி நின்றாள். எப்பொழுதுமே அவள் கிளம்பும் முன் கிளம்பி கீழே சென்று விடுபவன் இன்று இங்கே அமர்ந்து கொண்டு என்ன செய்கிறான்? அவள் மனதில் கேள்வி எழுந்தது. ஆனால் கேட்க தான் வாய் வரவில்லை.

இளவஞ்சி தன்னை பார்ப்பதை உணர்ந்த மித்ராதன் அவள் அருகில் வந்து, "போகலாமா?" எனக் கேட்க, என்னவாயிற்று இவனுக்கு? என்று மனதில் எண்ணிக் கொண்டே தலையை மட்டும் அசைத்தாள்.

உணவு மேஜையை அடைந்ததும் எப்பொழுதும் போல் அவனுக்கு பரிமாற போனாள். ஏனெனில் காலையில் இவர்கள் இருவரும் சீக்கிரம் கிளம்புவதால் சிறியவர்களை முதலில் உண்ண சொல்லி விட்டு பெரியவர்கள் நேரம் கழித்து உண்ணுவதாக சொல்லிவிடுவார்கள். அமராவதியின் திருப்திக்காகவோ என்னவோ காலை நேரத்தில் மட்டும் இளவஞ்சி மித்ராதனுக்கு உணவு பரிமாறி அவன் உண்ட பின்பு தான் அவள் அமருவாள். அந்த நியாபகத்தில் அன்னிச்சை செயலாக அவனுக்கு பரிமாறினாள்.

முதலில் இருந்த மித்ராதன் 'இதிலாவது புருஷன் என்கிற எண்ணம் இருக்கே' என்று  மனதில் வன்மத்துடன் எண்ணி இருந்தான். ஆனால் இன்று இருப்பதோ புதியவன் அல்லவா? அதிலும் அவள் மீதான கடலளவு நேசத்தை சுமக்கும் அவள் காதலன் அல்லவா?

"பேபி உனக்கும் தான் நேரம் ஆகிறதே. நீயும் உட்காரு." என்று சொன்னதோடு அல்லாமல் அவள் கைப்பிடித்து அவன் பக்கத்தில் அவளை அமர வைத்து அவனே பரிமாறினான்.

இளாவோ கூச்சத்துடன் தன் கையை அவன் கைகளில் இருந்து உருவ முயன்றாள். அவள் செய்கையில் தான் அவன் தன் கைப்பிடியில் அவள் கை இருப்பதை உணர்ந்து சிரித்துக் கொண்டே விடுவித்தான். அவனின் செய்கைக்கு அவள் கோபப்படாமல் இருந்ததே அவனுக்கு சந்தோசமாக இருந்தது.

"சாப்பிடு" என்று மனைவியைப் பார்த்து கூறியவன் முகத்தில் இருந்த புன்னகை மாறவில்லை.

வெளியில் வந்த இளவஞ்சி தன் இருச்சக்கர வாகனத்தை நெருங்கும் போது அவள் முன் கை நீட்டி தடுத்தான் மித்ராதன்.
"என்னுடன் வரலாமே?"

'"இல்லை அது..... சரிபட்டு வராது. நான் என் ஸ்கூட்டியிலேயே போய்க்கிறேன்." என்றும் இல்லாத திருநாளாய் இன்று என்ன தான் ஆனது இவனுக்கு? அவள் மனதுக்குள் கேள்வி குடைந்தது.

மித்ராதன் இளவஞ்சியுடன் சிறிது நேரம் செலவழிக்க விரும்பினான். காலையில் கிளம்பும் அவள், வீடு திரும்ப இரவு ஆகி விடும். அதன் பின் அவளிடம் பேச அவனால் முடியாமல் போகலாம். இப்படியே இருந்தால் அவனின் நேசத்தை அவன் எப்பொழுது தான் அவளுக்கு உணர்த்த முடியும். அதற்கு அவன் கண்டு பிடித்த வழியே இது. தினமும் அவனுடன் அவள் சேர்ந்து வரும் போது பேசுவதற்காகவாவது சிறிது நேரம் கிடைக்குமே. இந்த அருமையான வாய்ப்பை விட அவனுக்கு மனம் இல்லை.

"அது எல்லாம் சரிபட்டு வரும். நீ சரின்னு மட்டும் சொன்னா போதும்." அவன் தன் நிலையில் பிடியாய் இருக்க அவளுக்கு ஆயாசமாக வந்தது.

"இல்ல என் டைமிங் உங்களுக்கு ஒத்து வராது. நான் போய்க்கிறேன்."

"என்ன காலையில் ஐந்து மணிக்கு போவாயா? இரவில் பன்னிரண்டு மணிக்கு வீடு திரும்புவாயா? இதில் எந்த நேரம் என்றாலும் உனக்கு துணையாக ....... சாரி சாரி உன் கூட  நான் வருவேன் போதுமா? இப்பவாவது என் கூட வரலாமே."

அதற்கு மேல் அவளுக்கும் பிடிவாதம் பிடிக்க காரணம் ஏதும் இல்லை. ஆகையால் அவனுடன் செல்வதை தவிர வேறு வழி இல்லை என்று அவனுடன் புறப்பட்டாள். இதை எல்லாம் கண்டும் காணாமல் பார்த்துக் கொண்டு இருந்த பெரியவர்கள் மனதில் நிம்மதி பரவியது.

"என்ன அம்ரு இப்ப உனக்கு சந்தோசமா?" மகனும் மருமகளும் சென்ற திசையையே பார்த்துக் கொண்டு இருந்த அமராவதியின் தோளில் தட்டியபடி கேட்டார் அருணகிரி.

"'ம்..... சந்தோசமா இருக்கு. கூடிய சீக்கிரம் பேரனையோ பேத்தியையோ பார்க்கணும். பெருமாளே அப்படி மட்டும் சந்தோஷ செய்தி கிடைச்சா இந்த கிழவனை பாத யாத்திரை பண்ண வச்சு மொட்டை போட வைக்கிறேன்."

"கிழவி நீ...... என்னை பார்த்து கிழவன்னா சொல்ற. அதுவும் மொட்டை வேற போட சொல்ற?" கேலியாய் அமராவதியை அடிப்பது போல் கையை தூக்கினார்.

'"கிழவன் மொட்டை போட்டா இந்த கிழவியும் சேர்ந்து தான் மொட்டை போடும் என்று தெரியாதா இந்த கிழவனுக்கு?" அமராவதியின் வார்த்தையில் இருந்த கிண்டல் ஏனோ குரலில் இல்லை.

"அம்ரு....." அருணகிரியின் குரல் நெகிழ்ந்தது. பெண்ணிற்கு அழகே அவர்கள் கூந்தல் தான். அதையும் இழக்க தயாராக இருக்கிறாள் என்றால் மனைவியின் பேரன் பேத்தி ஆசை அவருக்கு புரிந்தது.

"எனக்கு அதை விட வேறு சந்தோசம் ஏதுங்க?"

மனம் நெகிழ்ந்தவராய் கணவன் தோள் சாய்ந்தார் அமராவதி. அருணகிரியும் மனைவியை ஆறுதலாக அணைத்துக் கொண்டார்.

மருத்துவமனை வளாகம் வந்ததும் காரில் இருந்து இறங்கிய இளவஞ்சியை,
"பேபி .........." மித்ராதன் அழைத்தான். அவன் அழைத்ததும் திரும்பி பார்த்தவளைப் பார்த்து,
"பை.... பேபி......... ஈவ்னிங் பிக் அப் பண்ண வர்றேன்."

உல்லாசமாக கையசைத்தவனைக் கண்டு பதிலுக்கு என்ன சொல்வது என்று தெரியாமல் வெறுமனே தலையசைத்தாள். அவளை எண்ணி அவளுக்கே

வியப்பாக இருந்தது என்றால் மித்ராதனுக்கோ கேட்கவே வேண்டாம். உற்சாகத்துடன் காரை எடுத்தான்.

என்னவானது இவனுக்கு? கணவனை பற்றிய சிந்தனையில் நடந்தவளுக்கு எதிரில் வந்த செவிலிப் பெண்ணின் காலை வணக்கத்தில் சுயநினைவு அடைந்தாள். என்றும் இல்லாமல் மித்ராதன் மேல் தன் எண்ணம் செல்வதை கண்டு ஆச்சிரியம் அடைந்தவள், இதற்கு அவன் எப்பொழுதும் போல் கோபமாகவே இருந்து இருக்கலாம் மனதுக்குள் நினைக்காமல் இருக்க முடியவில்லை.

அலுவலகத்துக்கு சென்று கொண்டு இருந்த மித்ராதனோ, தன் பேச்சுக்கு எதிர்பேச்சு பேசாமல் வாக்குவாதம் செய்யாமல் இருந்த மனைவியை எண்ணி வியப்படைந்தான். ஆமாம்...... ஆமாம்....... நான் எப்பொழுதும் கோபப்பட்டால் அவளும் பதிலுக்கு கோபப்படாமல் இருப்பாளா என்ன? இன்னைக்கு நான் அன்பா நடந்துகிட்டேன். அதனால அவளும் பதிலுக்கு ஒன்றும் பேசலை. மனைவியின் நடத்தைக்கு சாதகமான பதிலை அவனே சொல்லிக் கொண்டான். (ம்..... அவள் கூட அவளுக்கு இவ்வளவு சப்போர்ட் பண்ண மாட்டா! ஆனால் நீ பண்ணும் அலும்பு இருக்கே மித்ரா.!)

"பேபி ..... காலையில் தான் பேசாமல் ஓடிட்ட. நைட் எங்கேயும் ஓட முடியாதே. என் கூட பேசித் தானே ஆகணும். எப்படியும் இன்று இரவு என் மனதில் உள்ளதை நான் உன்னிடம் சொல்ல தான் போகிறேன்." முடிவு எடுத்த பின் அவன் மனம் லேசானது. சொல்லாத காதல் செல்லாது. அது போல் தன் காதல் ஆகி விடக் கூடாது என்று அவன் மனதுக்கு சொல்வது போல் அவனுக்கும் சேர்த்து சொல்லிக் கொண்டான்.

"ஹேய் இளா கிளம்பிட்டியா?" அமுதா இளவஞ்சியிடம் கேட்டபடி அவளுடன் நடந்தாள்.

"ஆமாம்........ அமுதா."

"இளா இன்னைக்கு ஒரு பொண்ணு அபார்ஷன் பண்ண வந்து இருந்தாளே. நீ கவனிச்சியா? அவளுக்கு மிஞ்சிப் போனா பதினெட்டு வயசு இருக்குமா? எல்லாத்திலேயும் அவசரம்..... இந்த மாதிரி பெண்களை எல்லாம்..... நல்லவேளை மேடம் அந்த கேசை எடுத்துக்கல. இப்பவும் எனக்கு அந்த பொண்ணை நினைச்சா ஆத்திரம் ஆத்திரமா வருது."

"அமுதா நீ பேசுறது தப்பு. நான் அந்த பெண்ணிடம் விசாரிச்சுட்டேன். அவள் மேல் எந்த தப்பும் இல்லை. பெற்றோர் இழந்த அந்த பெண் தன் அக்கா வீட்டில் தான் இருக்கிறாள். தந்தை ஸ்தானத்தில் இருந்து அவளை பாதுகாக்க வேண்டிய அவள் அக்கா கணவனே அவளின் பெண்மை பறித்து இருக்கிறான். இதை அக்காவிடம் சொல்லவும் முடியாமல் அந்த கயவனை மீறவும் முடியாமல்....... ஏற்கெனவே அவள் பயந்த சுபாவம் வேற..... அது அவனுக்கு சாதகமா போயிருச்சு. இந்த நிலையில் இப்படி ஒரு இடி. அக்காவிடம் சொல்ல பயந்து இங்கே விசாரிக்க வந்து இருக்கா. அமுதா ஒரு விஷயத்தை நீ புரிந்து கொள்ளணும். கருக்கலைப்பு தவறானது தான் இல்லை என்று சொல்லவில்லை. ஆனால் இந்த மாதிரி பாவப்பட்ட பெண்கள் பாதிக்கும் போதும் அதையே நாம் பேசிக் கொண்டு இருந்தால் நல்லாவா இருக்கு. அவளின் வாழ்க்கை இப்படியே முடிந்து போக வேண்டுமா என்ன?"'

"இளா ...... உண்மையில் அந்த பெண் பாவம் தான். இனி என்ன செய்ய போறா?" அமுதாவின் வார்த்தையில் உண்மையிலேயே வருத்தம் இருந்தது.

"எனக்கு தெரிந்த ஹோம் அட்ரெஸ் அவளிடம் கொடுத்து இருக்கேன். அவங்களுக்கும் போன் செஞ்சு

சொல்லிட்டேன். அவளும் அங்கே பாதுகாப்பாய் போய் சேர்ந்துட்டதா போன் செஞ்சா. குழந்தையைப் பற்றிய முடிவை நிதானமா யோசிச்சு எடுன்னு சொல்லி இருக்கேன். என்ன இருந்தாலும் தவறே செய்யாத அந்த ஜீவன் என்ன பாவம் பண்ணுச்சு?"

"ஓஹ் ..... இளா நீ உண்மையில் கிரேட்பா. உனக்கு எப்படி அந்த ஹோம் தெரியும்?"

"நான் என் கல்லூரி காலம் முதல் அங்கே போறேன். என்னால் முடிந்த சிறு சிறு உதவி செய்றேன். இப்ப வரைக்கும் பெரிசா செஞ்சது இல்லை. இனி மேல் அப்படி செய்ய சான்ஸ் இருக்கு."

"இளா .... அடுத்த முறை நீ போகும் போது நானும் வர்றேன் என்ன?"

"கட்டாயம் அமுதா......" என்றவள் விழி வட்டத்தில் புகழேந்தி வருவது தெரிந்தது.

"வாங்க டாக்டர் சார்......." அமுதா அவனை வரவேற்றாள்.

"வந்தேன்..... வந்தேன்....." ராகம் போட்டபடி வந்தவனைக் கண்டு இளவஞ்சிக்கு சிரிப்பு வந்தது.

"புகழ் நீங்க எப்பவுமே இப்படித் தானா? டியூட்டி முடிந்து போகும் போது கூட இவ்வளவு ப்ரெஷ்ஷா இருக்கீங்க?" இளவஞ்சியின் கேள்விக்கு வாய் விட்டு சிரித்தவன், "அதன் ரகசியம் என்ன தெரியுமா............?"

இருவரும் அவன் முகத்தை ஆவலுடன் பார்த்தனர்.

"ஏன்னா நான் வீட்டிற்கு கிளம்பும் முன் மேக்கப் போட்டுட்டு தான் கிளம்புவேன். அதான் நான் ப்ரெஷ்ஷா இருப்பதன் ரகசியம்." கூறியவனைக் கண்டு இருவருக்கும் சிரிப்பு வராமல் இருந்தால் தான் அதிசயம்.

"நீங்க சிரிக்கிறது இருக்கட்டும். தோழியர் இருவரும் ஏதோ சீரியஸா பேசியது போல் இருந்ததே?"

"டாக்டர் சார் உங்களுக்கு தெரியாதுல்ல......" என்ற அமுதா இளவஞ்சி செய்த காரியத்தை பற்றி அவனிடம் சொன்னாள். புகழ் புன்சிரிப்புடன் இதை கேட்டுக் கொண்டு இருந்தான்.

இருவரையும் பார்த்துக் கொண்டு இருந்த இளவஞ்சிக்கு ஏதோ ஒன்று வித்தியாசமாக தோன்றியது. அது புகழ் அமுதாவை பார்த்த பார்வையில் இருந்த வித்தியாசம் தான் அது. அமுதாவோ செய்தி சொல்வதில் முனைப்பாய் இருக்க. அவன் பார்வையோ அவளை ரசனையுடன் ரசித்துக் கொண்டு இருந்தது. இவ்வளவு நாளில் இதை நான் எப்படி கண்டு பிடிக்காமல் இருந்தேன்? ( உன் பக்கத்தில் உள்ளவன் மனதையையே உன்னால் கண்டு பிடிக்க முடியல? இதில் இப்படி வேற யோசிக்கிறியா ...... நல்ல ஜோக் தான் இளா. )

இந்த கதை எப்போது இருந்து ஓடுகிறது என்று யோசனையுடன் அமுதாவை பார்த்தாள். அவளிடம் அந்த மாதிரி ஒரு உணர்வு இல்லை. 'ஓ..... கதை அப்படி போகிறதா?' என்று நினைத்தவள் இருவரையும் பார்த்துக் கொண்டு அமைதியாக நின்று இருந்தாள்.

( இளா, புகழ் பார்வை எல்லாம் உனக்கு புரியுது. ஆனால் உன் ஹீரோ பார்வை மட்டும் உனக்கே ஏன் புரிய மாட்டேங்குது? அது சரி நீ தான் அவனை வில்லன் ரேஞ்சுக்கு கற்பனை பண்ணி வச்சு இருக்கியே ! )

"ஓகே டாக்டர் சார் நான் கிளம்பறேன். இளா பை"

அமுதா இருவரிடமும் விடைபெற்று செல்ல புகழின் பார்வை அமுதாவையே தொடர்ந்ததை கண்டு இளவஞ்சி, "க்கும்..." என்று தொண்டையை கனைத்தாள். அவளின் சத்தத்தில் அமுதாவின் மேல் பதித்து இருந்த கண்ணை கஷ்டப்பட்டு இளவஞ்சியின் புறம் திரும்பினான்.

"என்ன நடக்குது டாக்டர் சார்.....?" என்று குறும்பாக கேட்டவளைப் பார்த்து, கண்டு கொண்டாளே என்று "ஹி..... ஹி....." அசட்டு சிரிப்பை உதிர்த்தான்.

"அது வந்து....... வஞ்சி......"

"அட புகழுக்கு கூட வார்த்தை திக்குதே......."

"சும்மா இரு வஞ்சி......." புகழின் முகம் சிவந்தது.

"அமுதாவுக்கு இது தெரியுமா புகழ்?"

"இல்லை ...... அவளுக்கு தெரியாது." என்று சொன்னவன் பெருமூச்சொன்றை இழுத்து விட்டான்.
"அவளோட பிராக்டிஸ் முடிவதற்காக வெய்ட் பண்றேன். அதுக்கு அப்புறம் சொல்லிக்கலாம் என்று நினைத்து இருக்கிறேன்."

"குட்..... புகழ். கேட்கவே சந்தோசமா இருக்கு. அமுதா உண்மையிலேயே குடுத்து வைத்தவள். உங்க பொறுமை நிதானம் இதெல்லாம் பார்க்கும் போது பெருமையா இருக்கு." என்ற இளவஞ்சியின் வார்த்தைக்கு புன்னகையே பதிலாக தந்தான்.

இருவரும் பேசிக் கொண்டு இருக்கும் போதே மித்ராதன் கார் வருவது தெரிந்தது.
"ஓகே புகழ் அவங்க வந்துட்டாங்க. நான் கிளம்பறேன்."

"அடேங்கப்பா....... அவங்களா? வீட்டுக்காரரை கண்டதும் நண்பனை கண்டுக்காமல் ஓடுறியே வஞ்சி. அவ்வளவு அன்பா அவர் மேல்......"

"அன்பா..... அவன் உங்களை கண்டு கோபமாக ஏதும் பேசி விட போகிறானே என்ற பயம் தான்' மனதில் நினைத்தவள் வெளியில் சிரித்து வைத்தாள். மித்ராதன் இறங்கி வருவதற்குள் கார் அருகே சென்று விட எண்ணி அவள் செல்வதற்குள் அவள் நாயகனே காரை விட்டு இறங்கி இருவரையும் நோக்கி வந்தான். இளவஞ்சியின் மனம் பதட்டம் அடைந்தது. ஏதும் சொல்லி விடுவானோ என்று அச்சத்துடன் அவனையே பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"ஹாய் புகழ் எப்படி இருக்கீங்க?"

புன்னகை முகத்துடன் மித்ராதன் புகழை பார்த்துக் கேட்டதும் இளவஞ்சிக்கு மயக்கம் வாராத குறை தான். என்னடா இது இவனுக்கு புகழை கண்டாலே ஆகாது? திடீரென்று இந்த மாற்றம் எதனால்? யோசித்தவள், அதான் காலையில் இருந்து ஒரு மார்க்கமாக தான் இருக்கிறானே என்று அதற்கு விடையும் அவளே கண்டு பிடித்துக் கொண்டாள்.  ஆனால் அது ஏன் என்று தான் தெரியல?

ஆராய்ச்சியாக கணவன் முகம் பார்த்தாள்.

"நல்லா இருக்கேன். நீங்க மிஸ்டர். மித்ராதன்?"

"இந்த மிஸ்டர் எல்லாம் வேண்டாமே. என்னை மித்ரா என்றே கூப்பிடுங்கள்."

"ஓகே.... ஓகே..... நான் மித்ரா என்று கூப்பிட வேண்டுமானால் இந்த "ங்க" வேண்டாமே?"

"ஓகே டன்"

அதன் பின் புகழும் மித்ராதனும் தங்களுக்குள் சுவாரசியமாக பேசிக் கொண்டு இருக்க இளவஞ்சி தான் அவர்களை வேடிக்கை பார்க்க வேண்டியதாய் போயிற்று. ஒரு வழியாய் இருவரும் பேசி முடித்து விடை பெற இளவஞ்சியும் புகழிடம் விடை பெற்றாள்.

காரில் வரும் போது களைப்பில் இளவஞ்சி இருக்கையில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டாள். மித்ராதனும் அவளின் களைப்பு உணர்ந்தோ என்னமோ எதுவும் பேசவில்லை. இருவருக்கும் இடையில் மௌனமே நிலவியது. அவளின் அருகாமையில் அந்த பேச்சற்ற மௌனம் கூட மித்ராதனுக்கு நிம்மதியை கொடுத்தது. அமைதியான இந்த கார் பயணத்தை ரசித்தபடி அவன் காரை ஓட்டினான். அவ்வப்போது மனைவியை திரும்பி பார்க்கவும் தவறவில்லை.

*****************************************************
*********************************************

கதவு தட்டும் ஒலியில் இளவஞ்சி படித்து கொண்டு இருந்த புத்தகத்தை வைத்து விட்டு எழுந்தாள். இப்பொழுது தான் இரவு உணவு உண்டு முடித்து அவள் அறைக்கு வந்தாள். அதற்குள் யாராக இருக்கும்? என்று யோசித்தவள் பின் தனக்கு தானே தலையில் குட்டிக் கொண்டாள். அவள் கணவனை தவிர வேறு யார் தட்டப் போகிறார்கள்? ஆனால் ஏன்? மனதில் எழுந்த கேள்வியுடன் ஜாக்கிரதையாக லேசாக கதவை திறந்தாள்.

இளவஞ்சியிடம் இன்று எப்படியும் பேசி விடுவது என்று முடிவு செய்தவனாய் மித்ராதன் அவளின் அறைக் கதவை தட்டினான். சிறிது நேரம் சென்று கதவை திறந்த அவளின் செயலில் தெரிந்த ஜாக்கிரதை கண்டு அவன் மனம் வலித்தது. ஆனாலும் அவன் நடந்து கொண்ட முறைக்கு முன் அவளின் இந்த செயல் ஒன்றும் இல்லாதது. தன் மன வலியை மறைத்துக் கொண்டு,
"உன்னிடம் பேச வேண்டும். உள்ளே வரலாமா?" புன்னகையுடன் கேட்டான்.

"ம்......" தலையசைத்தவள் அவன் உள்ளே வர கதவை அகல திறந்தாள். உள்ளே வந்த மித்ராதன் அங்கு இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு,

"வா..... நீயும் உட்காரு."

"இல்லை..... பரவாயில்லை."

"நான் பேசி முடிக்கும் வரை நிற்பதானால் உனக்கு கால் வலித்து விடும். ஏனெனில் நான் பேச வந்தது ஏழு வருட கதை அல்லவா!"

விழிகள் இரண்டும் தெறித்து விடுவது போல் அவனை பார்த்தவள், அவன் உட்காரு என்பது போல் சைகை செய்ய வேறு வழியின்றி கட்டிலில் அமர்ந்தாள். என்ன சொல்லப் போகிறான்? ஏது சொல்லப் போகிறான்? அவள் மனம் சத்தமாய் மத்தளமிட்டது.

"பேபி .... நீ என்னை என்ன நினைத்து திருமணம் செய்தாயோ அது எனக்கு தெரியாது? ஆனால் நான் உன்னை நேசித்து தான் திருமணத்திற்கு சம்மதித்தேன். என் உயிர் நீ ! என் சகலமும் நீ ! என்பதை நான் முழுமையாக உணர்ந்து தான் திருமணம் செய்தேன்."

எந்த வித மேல் பூச்சும் இல்லாமல் நேரிடையாக விசயத்திற்கு வந்தான் மித்ராதன். அவன் அவளை நேசித்ததாய் சொல்லும் போது அவள் விழிகளில் ஆச்சரியம் மின்னலாய் வந்து போனது.

"இது உனக்கு ஆச்சரியமாக கூட இருக்கும். என் மனதை உன்னிடம் சொல்ல எண்ணி எத்தனையோ முறை உனக்கு போன் செய்து இருக்கேன். ஆனால் ஒரு தடவை கூட நீ எடுக்கவில்லை. அப்படி நீ எடுத்து இருந்தால் பின்னால் ஏற்பட்ட விபரீதங்கள் பலவற்றை தடுத்து இருக்கலாம்."

இதைக் கேட்டதும் இளவஞ்சியின் முகம் கன்றி கறுத்து விட்டது.

இளவஞ்சியின் முக வாடல் கூட பொறுக்காதவனாய், "ஹேய்.... பேபி.... உன்னை வருத்தப்பட செய்வதற்காக நான் சொல்லவில்லை. தவறை சரி செய்து இருக்கலாம் என்ற அர்த்தத்தில் தான் சொன்னேன். போனது போகட்டும் விடு."

அவளின் முகம் சிறிது தெளிந்ததும் மீண்டும் பேச்சை தொடர்ந்தான்.

"திருமணம் அன்று நான் நடந்து கொண்ட முறை தவறு தான். அதை சரியென்று நான் சொல்லவும் மாட்டேன். வாதிடவும் மாட்டேன். உன் மனதை அறியாமல், உன்னைப் புரிந்து கொள்ளாமல் நான் செய்த செயல் கேவலமானது..... அவமானத்துக்குரியது."

இதை சொல்லும் போது அவன் குரலில் வேதனை நிறைந்து இருந்தது. அதுவரை இளவஞ்சியின் கண்ணை பார்த்து பேசியவனால் இப்பொழுது முடியவில்லை. பிறகு

தொண்டையை செருமி தன்னை சமன் செய்து கொண்டவன் மேலே தொடர்ந்தான்.

"அன்று நடந்த செயலுக்கு உன் மேல் தான் எனக்கு கோபம் வந்தது."

இப்பொழுது இளவஞ்சிக்கு சங்கடமாக போனது. அன்று ஏதோ ஒரு கோபத்தில் அடித்து விட்டாள். ஆனால் இன்று அதை யோசிக்கும் போது அவனை நிமிர்ந்து பார்க்க முடியவில்லை.

"அதன் பின் மாமா இறந்த பின்பும் நீ வரவில்லை என்றதும் பெண்ணான உனக்கே இவ்வவளவு இருக்கும் போது ஆண் மகனாகிய எனக்கு எவ்வளவு இருக்கும் என்று கோபப்பட்டு உன்னைப் பார்க்க விரும்பாமல் யு .எஸ் போய்விட்டேன்."

அன்று அவளை ஜடம் என்று நினைத்ததை ஏனோ அவனுக்கு சொல்ல மனம் வரவில்லை. தந்தை பற்றி பேச்சு வந்ததும் இளவஞ்சியின் முகத்தில் வேதனை வந்தது.

"என் தந்தை இறந்ததற்கு நான் மட்டும் காரணம் அல்ல. நீங்களும் தான்" அவளின் முகத்தில் சிறிது கோபம் இருந்தது.

"பேபி..... சாரி... ரியலி....சாரி. உன் அப்பா இறந்தது எனக்கும் வருத்தம் தான். நானும் உன்னைப் போல் நினைத்து தான் என் அப்பாவிடம் சொன்னேன். அவர் சொல்லி தான் அங்கிளுக்கு ஏற்கெனவே அட்டாக் வந்த விஷயம் எனக்கு தெரியும். அதன் பின் தான் எனக்கும் குற்ற உணர்வு மறைந்தது."

இளவஞ்சிக்கு இது புதிய செய்தி.

"என்னை நம்பவில்லை என்றால் அப்பாவிடம் கேட்டுப் பார்." என்றவனைப் பார்த்து வேண்டாம் என்பது போல் தலையசைத்தாள். அவன் முகத்தில் இருந்த உண்மை அவளுக்கும் புரிந்து தான் இருந்தது. (அப்பாடி.... மித்ரா உன் பொண்டாட்டி முதல் முறையா உன் முகம் பார்த்து உன்னை புரிந்து கொண்டு இருக்கிறாள் அதிசயம் தான்.)

"இப்போ எதுக்கு இவன் இதை எல்லாம் பேசுகிறான் என்று உனக்கு குழப்பமா இருக்கும் இல்ல. ம் .... கட்டாயம் இருக்கும்." என்றவன் மேலும் தொடர்ந்தான்.

முதலில் அவளை மறக்க முடியாமல் தான் தவித்ததையும் அதன் பின் கொஞ்சம் கொஞ்சமாக அதில் இருந்து வெளியில் வந்ததையும் சொன்னான். முக்கியமாக மெர்சி விசயத்தையும் சொல்ல மறக்கவில்லை. அவளை மறந்து விட்டதாக தான் எண்ணி இருந்தான். எல்லாம் மீண்டும் அவளைப் பார்க்கும் வரை தான், பார்த்ததும் அவனையும் அறியாமல் அவன் நேசம் கொண்ட மனம் அவளை நாடி இருக்க வேண்டும்.

இளவஞ்சியைப் பார்க்கும் முன்பு மறு திருமணத்திற்கு பெண் பார்க்க சொன்னதையும், அவளைப் பார்த்த பின் அவளுடன் சேர துடித்ததையும் சொன்னவன், அதற்கு காரணம் புகழேந்தி என்று தப்பாக அர்த்தம் கொண்டு தற்கொலை நாடகம் ஆடி அவளை தன்னுடன் வரவழைத்தது, அதன் பின்பும் அவளைப் புரிந்து கொள்ளாமல் பேசியது, அவள் அந்த சிறுமிக்காக பேசிய போது அவள் மீதான எண்ணம்  மாறியது, அன்று அவள் தந்தை நினைவு நாளில் அவள் யாருக்கும் தெரியாமல் அழுததை கண்டு அவள் மனம் புரிந்து கொண்டது, எல்லாவற்றிற்கும் சிகரமாய் நேற்று நடந்ததை வைத்து அவளை இன்னமும் நன்கு புரிந்து கொண்டதாய் அவன் சொன்ன போது அவள் நம்ப முடியாமல் கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

திடீரென்று மித்ராதன் அவள் எதிர்பாராத நேரத்தில் அந்த செயலை செய்தான். அவள் முன் மண்டியிட்டு அமர்ந்தவன் அவளின் கரங்களை தன் இரு கரங்களால் இறுகப் பற்றிக் கொண்டான். அவனின் பிடியில் இருந்து கைகளை உருவ முயன்றபடி எழ முயற்சித்தவளை, "இப்படியே உட்காரு பேபி. பாவ மன்னிப்பு கேட்கிறவன் மண்டியிட்டு தானே அமர வேண்டும். அது தானே முறையும் கூட?" என்றவனின் பேச்சில் அப்படியே அமர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள் இளவஞ்சி.

"திருமணமான அன்று ஆதி கால மனிதன் போல் நான் நடந்து கொண்டதற்கு என்னை மன்னிப்பாயா? நான் திருமணம் ஆனவன் என்பதை மறந்து மெர்சியிடம் சென்றேனே அதற்காக என்னை மன்னிப்பாயா? மறுமணத்திற்கு பெண் பார்க்க சொன்னதற்காக என்னை மன்னிப்பாயா? புகழுடன் தேவையில்லாமல் உன்னை இணைத்துப் பேசிய என்னை மன்னிப்பாயா? இதற்கெல்லாம் சிகரம் வைத்தது போல் பொய்யான தற்கொலை நாடகத்தால் உன்னை என்னிடம் வரச் செய்த என்னை மன்னிப்பாயா?"

"நான் செய்த ஒவ்வொரு செயலுக்கும் பின்னே இருந்தது உன் மீது நான் வைத்த காதல் தான். அதை அப்பொழுது நான் உணரவில்லை. ஆனால்...... இன்று..... நான் உணருகிறேன். உன்னை புரிந்து கொள்ளாமல் உன்னை பிரிந்து இருந்தேனே என்று இப்பொழுது எண்ணித் தவிக்கிறேன். இனி உன்னை பிரிந்து என்னால் இருக்க முடியாது."

'"நடந்தது எதையும் நான் சரி என்று வாதிடவில்லை. தவறு தான்.... அதுவும் எல்லா தவறும் என் மீது தான். உன்னை புரிந்து கொள்ளாமல் நான் நடந்து கொண்டதற்கு என்னை மன்னிப்பாயா பேபி ? என்னை மன்னித்து ஏற்றுக் கொள்வாயா? கணவனாக இல்லை என்றாலும் சக மனிதனாக.... ஒரு நண்பனாக என்னை ஏற்றுக் கொள்வாயா பேபி?"

விழிகளில் எதிர்பார்ப்பையும் ஏக்கத்தையும் சுமந்தபடி கேட்டவனைக் கண்டு திகைப்புற்று பேச்சுத் திறன் அற்றவளாய், கல்லாய் சமைந்து போய் அமர்ந்து இருந்தாள் இளவஞ்சி.

இளவஞ்சியின் முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதனுக்கு அவளைப் பார்த்து பாவமாகவும், வேதனையாகவும் இருந்தது. வேறு பெண்ணுடன் கணவன் உறவாட சென்றான் என்பதைக் கேட்டும் கூட பெண்களுக்கே உண்டான பொறாமை கூட இயல்பாக

அவளிடம் எட்டிப் பார்க்கவில்லை. அப்படி என்றால் இயல்பான பெண்களின் மன நிலையில் இருந்து அதாவது இயல்பான ஆசைகள் பாசங்கள் மறைந்து, மறந்து அவள் வேறுபட்டு இருப்பது கண்டு பாவமாக இருந்தது. இத்தனை அவன் பேசியும் பதில் பேசாமல் அவள் இருந்த கோலம் மனதில் வேதனை அளித்தது.

"என்ன பேபி உன்னால் நம்ப முடியவில்லையா?" அவனே அந்த மௌனத்தை உடைத்தான்.

இளவஞ்சியோ மித்ராதன் வார்த்தைகளில் இறுகிப் போய் அமர்ந்து இருந்தாள். அவள் மனதில் புயலடித்துக் கொண்டு இருந்தது. அவள் கெட்டவளோ இல்லை, மற்றவர்களின் உணர்வுகளைப் புரிந்து கொள்ளாத ஜடமோ இல்லை. ஆனால் ஏனோ அவள் கணவனிடத்தில் மட்டுமே அவள் அந்த மாதிரி நடந்து கொண்டாள். அதற்கு காரணம் அன்று அவன் நடந்து கொண்ட செயல் தான் என்றால், அதற்கு அவன் இன்று கேட்கும் மன்னிப்பு அவளைக் குற்றவாளியாய் தனக்குள் குறுக செய்தது. அதிலும் அவன் பார்வையில் இருந்த காதல், குரலில் இருந்த தாபம் எல்லாம் அவளுக்குப் புரிய தான் செய்தது. ஆனால் ஏதோ ஒன்று அவள் மனதை அவனிடம் ஒன்ற விடாமல் பிடித்து இழுத்து வைக்கிறதே. அது ஏன்? என்ன காரணம்? விடை அவளுக்கு தெரியவில்லை.

"பேபி........"

மித்ராதன் குரலில் தன் நினைவில் இருந்து மீண்டு அவன் முகம் பார்த்தாள். அவன் முகத்தில் தெரிந்த எல்லையற்ற காதல் அவளை திணற செய்தது. இன்று மாலையில் தான் அமுதாவை காதலுடன் பார்த்த புகழின் பார்வையைக் கண்டு வந்தவளுக்கு மித்ராதன் பார்வையில் இருந்த காதல் புரிந்தது. அந்த பார்வைக்கு கொஞ்சமும் சளைக்காத பார்வையை அதில் நிரம்பி வழிந்த காதலை அவள் புரிந்து கொள்ளாமல் இருந்தாள் என்றால் அவள் மனுஷியே இல்லை.

அவன் செய்த ஒவ்வொரு செயலுக்கும் அவன் மன்னிப்பு கேட்டாலும் அதில் அவன் பக்கம் எந்த தவறும் இருப்பது போல் அவளுக்கு தெரியவில்லை. சமயம், சந்தர்ப்ப சூழ்நிலை இவை தான் அவன் அவ்வாறு நடந்து கொள்ள காரணமாய் இருந்து இருக்கிறது என்பது அவளுக்கு புரியாமல் இல்லை. அன்று அவள் நடந்து கொண்ட முறையும் தவறு தானே. அன்று ஒரு நாள் தவிர அவனும் அவளிடம் தவறாக நடக்கவோ இல்லை தவறான பார்வை பார்க்கவோ இல்லையே?

ஒவ்வொருவருக்கும் அவர்களின் செயலுக்கு அவரவர் பக்கம் நியாயம் இருக்கும். முதல் முறையாக கணவன் பக்கம் உள்ள நியாயம் அவளுக்கு புரிந்தது.

"முதலில் நா..... நான் அன்று நடந்து கொண்டதற்கு உங்களிடம் மன்னிப்பு கேட்டுக் கொள்கிறேன்."

மித்ராதன் நம்ப முடியாமல் ஆச்சரியமாய் அவளைப் பார்த்தான். ஆனால் அவளோ அதை அறியாமல் மேலே தொடர்ந்தாள்.

"ஆனால்...... அதற்காக.... என்னால் உங்களுடன் சேர்ந்து வாழ முடியுமா? என்று தெரியவில்லை. எனக்கு இந்த காதல், திருமணம் இதில் எல்லாம் விருப்பம் இருந்தது இல்லை. அன்று நடந்தற்கு நான் கோபம் கொண்டு இருந்தேன் என்றால், அதற்கு நீங்கள் மன்னிப்பு கேட்டதும் நானும் என் கோபம் குறைந்து உங்களிடம் மன்னிப்பு வேண்டுவது நியாயம். அதை தவிர வேறு எதையும் என்னிடம் எதிர் பார்க்காதீர்கள்."

"நீங்க முதலில் இருந்த மாதிரியே கோபப்பட்டே இருந்து இருக்கலாம். அதை சமாளித்த என்னால் உங்களின் அன்பை சமாளிக்க முடியவில்லை. என்னால் உங்களுடன் ஒன்றி நல்ல மனைவியாய் வாழ்வது என்பது இயலாத காரியம். நீங்க..... வேறு நல்ல பெண்ணாய் பார்த்து மறுமணம் செய்து கொள்ளுங்கள். அதற்கு நான் தடையாக எப்பொழுதும் இருக்க போவதில்லை. நம் பெற்றோரை பற்றிக் கவலைப்பட வேண்டாம். என் அம்மாவை சமாளிக்க

என்னால் முடியும். உங்களுக்கு திருமணம் முடிந்து பேரக் குழந்தைகளைப் பார்க்கும் போது உங்கள் பெற்றோருக்கும் இந்த பிரிவினை மறந்து மறைந்து போகும். எனக்கு ஏதாவது செய்ய விரும்பினால் இந்த உதவி மட்டும் செய்யுங்கள். செய்வீர்களா?"

அவன் முகம் பார்த்துக் கேட்டவளை கண்டு உனக்கு இல்லாத உதவியா என்று சொல்லத்தான் அவனும் ஆசை பட்டான். ஆனால் அந்த உதவி பொருள் உதவியோ இல்லை பண உதவியோ என்றால் பரவாயில்லை. அவன் மனைவியோ விவாகரத்து அல்லவா நாடுகிறாள்? இந்த உதவியை அவன் என்றுமே அவளுக்கு அவனால் செய்ய இயலாது. அவள் முன் மண்டியிட்டு அமர்ந்து இருந்தவன் மீண்டும் நாற்காலியில் அமர்ந்து கை இரண்டையும் கட்டிக் கொண்டு அவளை தீர்க்கமாக பார்த்தான்.

"எல்லாம் பேசி முடிச்சாச்சா பேபி.... ? இன்னும் மிச்சம் மீதி இருக்கிறதா?" அவளோ பதில் பேசாமல் தலையைக் குனிந்தாள்.

"நான் தான் சொன்னேனே வேறு பெண்ணை திருமணம் செய்து இருப்பது என்றால் என்றோ செய்து இருப்பேனே? ஏன் உனக்காக நான் காத்துக் கொண்டு இருக்க வேண்டும்? நீ நினைப்பது போல் விவாகரத்து நான் தரப் போவது இல்லை. உனக்கு நான் தான் கணவன். எனக்கு நீ தான் மனைவி. எனக்கு இது ஏழு ஜென்மத்துக்கும் தொடரணும் என்று தான் ஆசை. ஆனால் உனக்கு விருப்பம் இல்லை என்றால் அது இந்த ஜென்மத்தோடு முடிந்து போகட்டும். ஆனால் இந்த ஜென்மத்து உறவை முறிக்க முயற்சி செய்யாதே. நீ நல்ல மனைவியாய் எனக்கு இருக்க வேண்டாம். நல்ல தோழியாய் இருக்க கூடாதா? என்னை நல்ல தோழனாய் ஏற்றுக் கொள்ள கூடாதா?"

அவள் முகத்தில் சிந்தனை ரேகை பதியவும்,
"உடல் சம்பந்தப்பட்ட வாழ்க்கை மட்டும் தான் கணவன் மனைவி உறவை தீர்மானிப்பது இல்லை. நல்ல புரிதல்,

விட்டு கொடுத்தல், மன்னித்தல் என்று அதில் எத்தனையோ இருக்கிறது."

அவன் பேச பேச அவள் மனதில் ஏதோ உணர்வு அவளை ஆட்டிப் படைத்தது.

"ஏன் பேபி ...... உனக்கு என் காதல் புரியவே இல்லையா?" அவனின் ஏக்கக் குரல் அவள் இதயத்தை ஊடுருவி சென்றது. அவளால் பேசக் கூட முடியவில்லை. அவனின் காதல் அவளுக்கு புரிந்தாலும் அவளால் எதுவும் செய்ய முடியாத நிலையில், அவள் கைகள் கட்டிப் போட்டது போன்ற நிலையில் இருந்தாள்.

மித்ராதன் தன்னையே நொந்து கொண்டான். அவன் கேட்க நினைத்ததோ மன்னிப்பு. அதை பேச வந்து, இப்போ தேவை இல்லாத விசயத்தில் வந்து பேச்சு வந்து இருக்கிறது. எப்படி அவள் மனதை மாற்றுவது என்று யோசித்தவனுக்கு ஒரு எண்ணம் பளிச்சிட்டது.

"பேபி...... உன் அப்பா மேல் நம்பிக்கை இருக்கிறதா?"

இவன் ஏன் அப்பாவை இப்பொழுது இழுக்கிறான் என்று குழப்பமாய் அவன் முகத்தை பார்த்தாள். ஆனாலும் அவள் தலை "ஆம்" என்று தானாக அசைந்தது.

"குட்..... அப்படி என்றால் உன் அப்பா உனக்காக என்னை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்? அவர் மனதுக்கு ஏதோ என்னைப் பற்றி நல்ல அபிப்ராயம் தோன்றி இருக்க வேண்டும். உன்னை நான் நல்லா பார்த்துக் கொள்வேன் என்ற நம்பிக்கை கூட காரணமாய் இருக்கலாம். அந்த நம்பிக்கை வீண் ஆகலாமா? அவர் நம்பிக்கையை காப்பாற்ற நாம் முயல வேண்டாமா?"

தந்தையைப் பற்றி கூறியதும் இளவஞ்சியின் முகத்தில் பரவசத்துடன் கூடிய பிரகாசம் வந்தது. அவளின் தந்தைக்காக தானே திருமணத்தில் விருப்பம் இல்லாமல் இருந்த போதும் அவருக்காக சம்மதித்தாள்.

அவருக்காகவாவது இவனுடன் சேர்ந்து இருந்து இருக்கலாமோ?

அன்று ஒரு நாளை தவிர்த்து பார்த்தால் இவனும் அப்படி ஒன்றும் கெட்டவன் கிடையாது. அப்படி செய்து இருந்தால் ஒருவேளை தந்தை உயிருடன் இருந்து இருப்பாரோ என்று அவளால் நினைக்காமல் இருக்க முடியவில்லை. அவளின் முகத்தில் தெரிந்த பிரகாசமும், அதன் பின் வந்த குழப்பமும் கண்டு மித்ராதன் குழம்பிய குட்டையில் மீன் பிடிக்க எண்ணி மேலும் பேசலானான்.

"இங்கே பார் பேபி.... நடந்து முடிந்த எதையும் மாற்ற முடியாது. இந்த வாழ்வு எனக்கு பிடித்து தான் இருக்கிறது. அதனால் மனதைப் போட்டு வீணே குழப்பிக் கொள்ளாதே. நீ இப்படியே இருப்பது எனக்கு ஒன்றும் தொந்திரவு இல்லை. நீ எப்படி இருக்க வேண்டும் நினைக்கிறாயோ அப்படியே இரு. முடிந்தால் என்னை நல்ல தோழனாக ஏற்றுக் கொள். ஓகே பேபி..... நான் செய்த தவறுக்கு மன்னிப்பு கேட்க தான் வந்தேன். அதற்கு பதிலாக நீயும் மன்னிப்பு கேட்டுவிட்டாய். இனி நமக்கிடையில் எந்தவிதமான மனக்கசப்பும் இல்லை என்று நினைக்கிறேன். ஓகே பிரண்ட்ஸ்."

முதன் முறையாக இளவஞ்சி மித்ராதனை பிரமிப்பாய் பார்த்தாள். சத்தியமாக அவனிடம் இந்த மாதிரி பக்குவப்பட்ட பேச்சை, நிதானத்தை, பொறுமையை அவள் எதிர் பார்க்கவில்லை. அவளையும் அறியாமல் அவளது வலது கரம் நீண்டது. அவள் கை நீட்டியதை கண்டு மனதுக்குள் குதூகளித்த மித்ராதன் மிகவும் சந்தோசமாய் அவள் கையை மென்மையாகப் பற்றினான். வெண் பஞ்சு போன்ற மென்மையான அவள் கையை விட அவனுக்கு மனமே வரவில்லை. ஆனால் இப்பொழுது தான் ஏதோ மனமிறங்கி இருக்கிற மனைவியை கோபப்படுத்த அவன் விரும்ப வில்லை. பற்றிய கையை குலுக்கி ஒரு நொடியில் விடுவித்தான்.

"ஒரு நிமிஷம்......" என்று அவள் அறையை விட்டு வெளியேறியவன் சொன்னது போல் ஒரு நிமிடத்தில் திரும்பி வந்தான்.

"பேபி......."
என்னவென்று அவன் முகம் பார்த்தாள் இளவஞ்சி. அவனோ அவளை நோக்கி பெரிய சாக்லேட் கட்டியை நீட்டினான். கேள்வியுடன் பார்த்தவளை,
"நம் நட்பு ஸ்வீட்டுடன் தொடங்கட்டுமே."

"நட்பு மட்டுமே என்றால் நான் வாங்கிக் கொள்கிறேன். நட்பு மட்டும் தானே?" தலை சரித்து கேட்டவளைக் கண்டு அவன் மனம் எங்கெங்கோ பறந்து சென்றது.

முயன்று தன் மனதை அடக்கியவன், "நட்பு மட்டுமே......" என்று உறுதியாகக் கூறினான். அந்த உறுதியை தன்னால் எத்தனை நாள் காப்பாற்ற முடியும் என்ற வினாவும் அவனுக்குள் எழுந்தது. இன்றைய நட்பை முதலில் யோசிப்போம். நாளைய காதலை பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று மனதுக்குள் கூறிக் கொண்டான்.

அவனின் வார்த்தையில் நம்பிக்கை அடைந்தவளாய் சாக்லேட்டைபெற்றுக் கொண்டவள்,
"தேங்க்ஸ்"

"நட்பில் தேங்க்ஸ்க்கும், சாரிக்கும் இடம் இல்லை. நமக்குள்ளும் இந்த இரண்டும் வேண்டாமே?"

அவளின் நன்றியை மறுத்த மித்ராதனில் இளவஞ்சி தன் சகோதரனைக் கண்டாள். அவனும் இது போல் தான் கூறுவான். அவளின் மனம் மித்ராதன் வார்த்தைகளில் நெகிழ்ந்து போனது.  கல்லும் கனியுதோ?

"ஓகே..... பேபி..... குட் நைட்."

"குட் நைட்"

மெதுவாய் முணுமுணுத்தவளை கண்டு மனம் சந்தோசத்தில் அலை பாய முகத்தில் புன்சிரிப்புடன் அவள்

அறையை விட்டு வெளியில் வந்தவன் நிம்மதியாய் படுக்கையில் சாய்ந்தான். இனி வரும் காலம் வசந்த காலம் தான் என்று அவனுக்குத் தோன்றியது.

அலுவலகத்தில் வேலையில் மும்முரமாக இருந்த மித்ராதனை அவனின் அலைபேசி அழைத்தது. "பேபி காலிங்" திரையில் மின்னிய எழுத்தை கண்ட அவன் முகம் பூவாய் மலர்ந்தது. வேகமாக எடுத்து அலைப்பேசியை காதுக்கு கொடுத்தான்.

"ஹலோ மித்து ........ நான் இளா பேசறேன்." தன்னவளின் "மித்து" என்ற அழைப்பில் எப்பொழுதும் போல் உள்ளுக்குள் உருகியவன் அந்த அழைப்பிற்காக தான் பட்ட பாட்டை நினைத்து பார்த்தான். அதை நினைத்து அவனுக்கு இன்றும் சிரிப்பு வந்தது.

இன்றோடு அவனும் அவளும் நட்பு ஒப்பந்தம் போட்டு சரியாக ஒரு மாத காலம் ஆகிறது. என்ன தான் நட்பு என்றாலும் ஆரம்பத்தில் அவளை அவள் கூட்டில் இருந்து வெளிக் கொணர அவனுக்குமே மிகவும் கஷ்டமாக தான் இருந்தது. அதிலும் அவன் பார்வையிலும் செயலிலும் எந்த ஒரு வித்தியாசம் காட்டாமல் சாதாரணமாக அவளிடம் பழகுவதற்குள் திக்கு முக்காடி தான் போனான்.

அழகான மனைவி அதுவும் அவன் உள்ளம் கவர்ந்தவள், அவளை நேரில் காணும் போதெல்லாம் அவனின் உணர்வுகள் பேயாட்டம் போடத் தான் செய்தன. அதைக் கட்டுப்படுத்துவதற்குள் அவன் ஒருவழி ஆகி விட்டான். அவளிடம் தான் சத்தியம் செய்யாத குறையாக பேசிய வார்த்தைகளை முயன்று நியாபகப் படுத்தி அவளிடம் கண்ணியம் காத்தான். ஏதேதோ பேசி அவளிடம் சகஜமாக உரையாட பழகியவன் அதில் வெற்றியும் பெற்றான்.

இளவஞ்சி மித்ராதனை எப்படி அழைப்பது என்று தெரியாமல் ஒருநாள் "என்னங்க" என்பாள், மற்றொரு நாள் "ஹலோ" என்பாள். அவளுக்கே அவனை எப்படி கூப்பிடுவது என்ற குழப்பமோ என்னவோ? அதை அவள் உணர்ந்தாளோ இல்லையோ அவன் அதை உணர்ந்து கொண்டான்.

"என்னை பேர் சொல்லி கூப்பிடுவது உனக்கு என்ன அவ்வளவு கஷ்டமாகவா இருக்கிறது?"

"இல்லை...... அப்படி எல்லாம் இல்லை....... உங்களை எப்படி பேர் சொல்லி........"

"ம்........ பேர் சொல்லி எல்லாம் வேண்டாம் பேபி. என்னை உன் திருவாயால் அத்தான் என்றால் நன்றாக தான் இருக்கும்"

மனதுக்குள் எண்ணியவன் அதை வாய்விட்டா சொல்ல முடியும்?

"ஏன் உன் நண்பர்களை பேர் சொல்லித்தானே அழைப்பாய்? அது போல் என்னையும் பேர் சொல்லி கூப்பிடு. அப்படி எல்லாம் எனக்கு பேர் சொல்ல வராது என்று பத்தாம் பசலித்தனமாக கூற மாட்டாய் என்று நினைக்கிறேன்."

"ம்..... நான் ட்ரை பண்றேன்."

"இல்லை இல்லை இப்பொழுதே சொல்லு." என்று விடாப்பிடியாய் நின்றவனிடம் அவளின் கெஞ்சல் எடுபடவில்லை.

"மித்ராதன்......... இப்படி கூப்பிடவா?"

"ம்ஹூம் ..... ஏன் உன் பிரண்ட்ஸ் எல்லோரையும் இப்படித் தான் நீட்டி முழக்கி கூப்பிடுவாயா?"

அவள் தன் முழு பேரை சொல்லிக் கூப்பிடுவதற்கு ஆட்சேபம் தெரிவித்தான்.
"என்ன பேபி நீ? என்னை செல்லமாய் பேர் வைத்து கூப்பிட மாட்டாயா?" அவன் மனம் செல்லமாய் அவளுடன் சண்டை போட்டது.

"அப்போ மித்ரா.........ன்னு கூப்பிடவா?"

'குடி கெட்டது போ ...... எல்லோரும் நீயும் ஒண்ணா பேபி?' மனதுக்குள் சிணுங்கியவன்,

"என்ன பேபி எல்லோரும் நீயும் ஒண்ணா?" மனம் பொறுக்காமல் வாய் விட்டுக் கேட்டு விட்டான்.

"ஏன் நான் மட்டும் என்ன ஸ்பெசல்?"

சந்தேகம் லேசாக அவள் கண்ணில் எட்டி பார்த்தது போல் அவனுக்கு தோன்றியது.

'போச்சு மித்ரா போச்சு ..... இப்ப இவள் யோசிக்க ஆரம்பிச்சுட்டாளே, நீ உடனே ரூட்டை மாத்து.'

"ஹேய் நீ வேற மாதிரி நினைச்சுக்காதே. (அந்த மாதிரி நினைச்சா தான் தப்பில்லையே பேபி.... நீ நினைக்க மாட்டேங்கிறியே?). நீ என்னுடைய ஸ்பெசல் பிரண்ட் இல்ல அதான்"

"ஓஹ் ........" என்றவள் வேறு எப்படி .......? என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"ஹான் ...... கண்டுபிடிச்சுட்டேன். மித்து .... இது உங்களுக்கு ஓகேவா? பிடிச்சு இருக்கா?"

சிறுபிள்ளை போன்று குதூகலத்துடன் தலை சரித்து கேட்டவளைக் கண் இமைக்காமல் பார்த்தான். பெற்றோரும் நண்பர்களும் அவன் பேரை உச்சரிக்கும் போது வராத இனிமை அவள் அவன் பேர் சொல்லும் போது அதில் இருந்தது. காதில் இன்பத்தேன் வந்து பாய்ந்தது போல் இருந்தது அவனுக்கு. அவன் தலை அவனையும் அறியாமல் சம்மதமாய் ஆடியது.

அவளின் மித்து என்ற அழைப்பில் மனம் கள்ளுண்ட வண்டு போல் சொக்கித்தான் போனது. அன்று சொக்கியவன் தான் இன்னமும் எழ முடியாமல் தவிப்பது அவனுக்கு மட்டுமே தெரியும். இப்பொழுதும் அவள் அழைப்பில் மெய் மறந்து இருந்தவனை அவள் குரல் தட்டி எழுப்பியது.

"மித்து.... மித்து..... லைன்ல இருக்கிங்களா?"

"ஹான் ....... என்ன சொன்ன? இங்கே சத்தத்தில் ஒண்ணுமே காதில் விழல."

ஒரு நொடியில் ஆழ மூச்செடுத்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டான். அதற்குள் அவன் மனையாளோ,
"ஓஹ்.... பிசியா இருந்தா வேண்டாம். நான் கட் பண்றேன்."

"ஹேய் இல்லை......... இல்லை ....... நான் என் அறைக்கு வந்து விட்டேன். நீ சொல்லு."

"இல்லை வேலை முடிந்தது. அதான் நீங்க பிக் அப் பண்ண வர்றிங்களா? இல்லை நான் ஆட்டோ......"

அவள் சொல்லி முடிக்கும் முன் மணியை பார்த்தவன் மாலை ஆறு மணி என்றது.

"இல்லை இதோ நான் கிளம்பிட்டேன். நீ ரெடியா வெளியில் வந்து நில்லு." என்றவன் அதற்கு மேல் தாமதிக்காமல் அங்கு இருந்த மேலாளரிடம் வேலையை ஒப்படைத்து விட்டு காரை நோக்கி விரைந்தான். அவளின் மௌனத்தை விலக்கி சகஜமாக பழக செய்தது இந்த கார் பயணம் தானே? அதை அவன் விட்டு விடுவானா என்ன?

************************************************************************************************

"ஹாய் பேபி இன்னைக்கு சீக்கிரம் வேலை முடிந்ததா?" என்றபடி கார் கதவை திறந்து விட்டான் மித்ராதன்.

"ம்...... ஆமாம். என்னால் உங்களுக்கு தொந்திரவு?" அவள் ஏறி அமர்ந்ததும் காரை எடுத்தவன்,
"ஹேய் இதில் என்ன தொந்திரவு இருக்கு? நானே விரும்பித்தான் இதை செய்றேன்." அவளிடம் மௌனம் மட்டுமே பதிலாக வர அவனிடம் பெருமூச்சு புறப்பட்டது.

வழக்கம் போல் அவனே ஆரம்பித்தான்.

"என்ன பேபி இன்னைக்கு ஹாஸ்பிட்டல்ல என்ன ஸ்பெசல்?"

"ம்.... கார்ன் கட்லட் அண்ட் சில்லி பஜ்ஜி......" குறும்புடன் சொன்னவளைப் பார்த்து அவனுக்குமே சிரிப்பு வந்தது.

"அப்படியா..... இரண்டுமே எனக்கு பிடிச்ச ஐட்டம் தான். எனக்காக வாங்கிட்டு வந்து இருக்க கூடாதா?" சொல்லி விட்டு சிரித்தவனின் சிரிப்பில் அவளும் இணைந்து கொண்டாள். அவளின் சிரிப்பை ஆசையுடன் பார்த்தவன் அவளின் பார்வையில் தன் பார்வையை அவசரமாய் வேறு புறம் திருப்பினான்.

"மித்து ...... இன்னைக்கு டே உண்மையில் ஸ்பெசல் டே தான். இன்னைக்கு நடந்த டெலிவரியில் இரண்டு பேருக்கு ட்வின்ஸ் பிறந்தது. அந்த குழந்தைகள் சோ க்யூட் தெரியுமா? நாள் பூரா கொஞ்சிக் கிட்டே இருக்கலாம் போல் இருக்கு."

குழந்தைகளின் நினைவில் முகம் மலர்ந்து சொன்னவளைக் கண்டு அவன் முகம் கனிந்தது. அவளின் தாய்மை உணர்வு அவனுக்குப் புரிந்தது.

ம்ஹூம்........ இவளும் திருமண வாழ்க்கையை நல்ல விதமாக எண்ணி இருந்தால் அவளுடைய குழந்தையையே கொஞ்சிக் கொண்டு இருக்கலாமே? அவனின் எண்ணம் போகும் போக்கை அறிந்து அவன் தன்னைத் தானே கடிந்து கொண்டான். அவள் மனதை ஏதோ வாட்டுகிறது என்று தெரிந்தும் இந்த மாதிரி நான் யோசிக்கிறேனே என்று மனதை திட்டிக் கொண்டான்.

அப்பொழுது இளவஞ்சியின் அலைப்பேசி அழைத்தது. எடுத்து பேசியவள் முகம் யோசனையில் ஆழ்ந்தது.

"ஹேய் பேபி எனித்திங் ராங்......"

"மித்து என்னை இங்கேயே இறக்கி விடுங்களேன். எனக்கு கொஞ்சம் அவசர வேலை இருக்கு."

"அப்படி என்ன வேலை? சொன்னால் நானும் வர மாட்டேனா?"

"அப்படி எல்லாம் ஒண்ணுமில்லை. போன மாசம் ஒரு பொண்ணை இல்லத்தில் தங்க வச்சு இருந்தேன். அவள் பெயர் ஆனந்தி. பாவம் பெயரில் மட்டும் தான் ஆனந்தம் இருக்கிறது. அவள் வாழ்வில் இல்லை" என்றவள் ஆனந்தி பற்றிய தகவல்களை மித்ராதனிடம் கூறினாள். (ஆனந்தி வேறுயாரும் இல்லைங்க தன் அக்கா கணவனால் கர்ப்பம் தரிக்கப்பட்டு அதை என்ன செய்ய என்று தெரியாமல் அதை அழிக்க மருத்துவமனை வந்து இளவஞ்சியால் இல்லத்துக்கு அனுப்பட்டவள்).

"இந்த ஒரு மாத காலம் அவளுக்கு எந்த தொந்திரவும் இல்லாமல் இருந்தது. இப்போ திடீரென்று அவள் அக்காவும் அவள் கணவனும் வந்து அவளை சத்தம் போடுறாங்களாம். அதான் பயந்துட்டு எனக்கு போன் பண்ணினா?"

இளவஞ்சியின் தாய்மை குணம் கண்டு மனம் கனிந்தவன், அவளின் இந்த தைரிய குணம் கண்டு முற்றிலும் அவள் பால் ஈர்க்கப் பட்டான். பெண் என்றால்...... இவள் தான் பெண், இந்த உயரிய எண்ணம் கொண்டவள் என்னவள் என்று அவன் மனம் பெருமிதம் அடைந்தது.

"நானும் உன் கூட வர்றேன்." என்றவன் இல்லம் முகவரியை அவளிடம் கேட்டுக் கொண்டு இல்லத்தை நோக்கி காரை திருப்பினான்.

"அக்கா........."

இளவஞ்சியை கண்ட மாத்திரத்தில் ஆனந்தி அழுது கொண்டே ஓடி வந்து அவளைக் கட்டிக் கொண்டாள். இளவஞ்சியும் அவளின் பயத்தைப் பார்த்து, அவளை தோளோடு அணைத்து ஆறுதல் படுத்தினாள். மித்ராதன் இளவஞ்சியின் பின்னே நின்று அவளின் செயலை பார்த்துக் கொண்டு இருந்தான்.

"உன் கூட பிறந்த அக்கா நான் இங்கே கல்லு குண்டாட்டம் இருக்கேன். நீ எவளையோ அக்கான்னு கட்டிப்பிடிச்சி அழற?"

ஆனந்தியின் அக்கா குரல் நாரசாரமாய் ஒலித்தது. ஆனந்தியோ பதில் பேசாமல் இளவஞ்சியின் அணைப்பில் இருந்தாள்.

"அவள் கிட்ட என்ன பேச்சு? பேசாம அவளை இழுத்துட்டு வா, நம்ம கூட வராம எங்கே போக போறா?"

அந்த குரலுக்கு உரியவனை மித்ராதனும் இளவஞ்சியும் ஒரே நேரத்தில் திரும்பி பார்த்தனர். இருவர் பார்வையிலும் மிதமிஞ்சிய அருவருப்பு தெரிந்தது.

ஆனந்தியின் அக்கா அவளைப் பற்றி இழுக்க, ஆனந்தியோ பதறி,
"அக்கா நான் இங்கேயே இருக்கேன். என்னை விட்டுடு." என்று கதறி அழுதாள்.

"உன்னை நான் இங்கே விட்டுட்டு போய்ட்டா அங்கே வீட்டு வேலை எல்லாம் யார் பார்ப்பா? வாடி..."

ஆனந்தியின் கையை பிடித்து இழுக்க இப்பொழுது இளவஞ்சிக்கு கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"இங்கே பாருங்கம்மா..... அதான்.... அவ வரலைன்னு சொல்றா இல்ல? பின்னே எதுக்கு வற்புறுத்துறிங்க? ஆனந்தி மேஜர். அவள் வாழ்க்கையை தீர்மானிக்க அவளுக்கு உரிமை இருக்கு."

"இளா சொல்றதும் சரி தான். நீங்க இங்கே நின்னு சத்தம் போடாம இடத்தை காலி பண்ணுங்க."

இல்லத் தலைவி ஆனந்தியின் அக்காவை வெளியேறச் சொன்னார்.

அவ்வளவு தான் ஆனந்தியின் அக்கா கணவன் கண்டபடி பேசத் தொடங்கினான்.

"ஏய் இன்னாமே..... நீ அனாதை இல்லம் வச்சு நடத்துறியா? இல்லை பொண்ணுங்களை வச்சு எதுவும் தொழில் பண்ணுறியா?"

மித்ராதனுக்கு ஆத்திரம் வந்து அவனை அடிக்க போவதற்குள், அவன் மனையாள்ஆத்திரத்தில் அவனை அடித்து புரட்டி எடுத்து விட்டாள்.

"ஏண்டா... ஒரு சின்ன பொண்ணை சீரழிச்சு இந்த நிலைக்கு ஆளாக்கிட்டு உனக்கு வாய் வேற கேக்குதா?"

"இளா அக்கா வேண்டாம். என் அக்காவுக்கு இதுவெல்லாம் தெரியாது." ஆனந்தி இளவஞ்சியைப் பேச விடாமல் தடுக்கப் பார்த்தாள்.

"நீ சும்மா இரு ஆனந்தி. உன் அக்காவுக்கும் அவள் கணவன் யோக்கியதை தெரியட்டும்."

"ஏய் நீ ஒண்ணும் அவர் யோக்கிதை பத்தி சொல்லத் தேவையில்லை. அப்படி ஊர் உலகத்தில் இல்லாதது என்ன பண்ணிட்டார். ஏதோ ஆசைப்பட்டு அவளைத் தொட்டுட்டார். அவளுக்கும் போக்கிடம் ஏது? பேசாம எங்க கூட இருக்க வேண்டியது தானே? எதுக்கு சும்மா சிலிர்த்துக்கிறா?"

கொஞ்சமும் மன சாட்சியில்லாமல் பேசிய சகோதரியைக் கண்டு ஆனந்தி அதிர்ச்சியில் அப்படியே நின்று விட்டாள். பெண்ணுக்கு பெண்ணே எதிரி போலும். ஆனால் தன் சகோதரியே அவளுக்கு எதிரியாய் மாறி இருந்தது பெரும் கொடுமை. அப்பொழுது தான் அவளுக்கும் ஒன்று நியாபகம் வந்தது. அவன் அவளை நெருங்கும் போதெல்லாம் அக்கா வீட்டில் இருக்க மாட்டாள். அன்று அதை அந்த கயவனின் சதி என்று எண்ணியவளுக்கு இன்று அது தன் அக்காவின் சதி என்று தெரிந்ததும் மனதுக்குள் நொந்து போனாள்.

"ஏய் இதுக்கு மேலே எதுவும் பேசின நான் என்ன செய்வேன்னு எனக்கு தெரியாது? ஆனந்தி எதுக்கு பேசாம இருக்கணும்? முதல்ல குழந்தை பிறக்கட்டும் டி.என்.ஏ டெஸ்ட் பண்ணி அதுக்கு தகப்பன் இந்த அயோக்கியன்னு கோர்ட்ல நிரூபிக்கிறேன். அப்போ நீ எப்படி சிலிர்க்கிறன்னு பார்க்கிறேன்."

கோபத்தில் மூச்சு வாங்கப் பேசிய இளவஞ்சி அவர்கள் இருவரையும் முறைத்து பார்த்தாள்.

"அக்கா விடுங்கக்கா......."

ஆனந்தி இளவஞ்சியிடம் கெஞ்சும் கண நேரத்தில் அந்த கயவர்கள் இருவரும் விட்டால் போதும் என்று ஓடி விட்டிருந்தனர்.

"என்ன ஆனந்தி இது? தப்பு செய்தவர்கள் தண்டனை அனுபவிக்க வேண்டாமா? நீ ஏன் பயந்து சாகிற?"

"இல்லை அக்கா. அவங்க  இல்லை நானும் சேர்ந்து தான் தண்டனை அனுபவிக்கணும். கேஸ் நடந்தா பத்திரிகை, டிவி சேனல்ன்னு அசிங்க படுத்திடுவாங்க வேண்டாம் அக்கா. இந்த குழந்தை தகப்பன் பேர் தெரியாததாக வளர்ந்தாலும் பரவாயில்லை. அசிங்கத்திற்கு பிறந்தது என்ற அவச் சொல் அதுக்கு வேண்டாம்."

"ஆனந்தி அப்படின்னா......?"

"ஆமாம் அக்கா .... குழந்தையை பெத்துக்க முடிவு பண்ணிட்டேன்."

"குட் ஆனந்தி குட். இப்ப தான் நீ தைரியமா முடிவு எடுத்து இருக்க." என்ற இளவஞ்சி,
"ஆமாம் உன் அக்காவுக்கு நீ இருக்கும் இடம் எப்படி தெரிந்தது?"

"நான் மேரி அக்காவோட மார்க்கெட் போயிருந்தேன். அங்கே அக்கா என்னை பார்த்திட்டு அத்தானையும் கூட்டிக் கிட்டு வந்துட்டாங்க."

"ம்......... அத்தானாம் அத்தான். அந்த பொறுக்கிக்கு அது ஒண்ணு தான் குறைச்சல்." என்று முகத்தை நொடித்தவளைக் கண்டு ஆனந்திக்கும் சிரிப்பு வந்தது.

"குட் ஆனந்தி அப்புறம் இந்த மாசம் செக்கப்புக்கு வந்திட்டு போ.." என்றவாறு இளவஞ்சி ஆனந்தியை இல்லத்தினுள் அழைத்துக் கொண்டு போனாள்.

சிறிது நேரம் கழித்து வந்தவளுக்கு அப்பொழுது தான் மித்ராதன் நியாபகம் வந்தது. எங்கே அவன்? என்று அவள் தேடிய போது அவள் விழி வட்டத்தில் அவன் தெரிந்தான். சுற்றிலும் சிறுவர்கள் இருக்க அவர்களோடு கிரிக்கெட் விளையாடிக் கொண்டு இருந்தான். அவன் அவர்களுக்கு இணைந்து விளையாடியதைப் பார்க்கும் போது அவ்வளவு பாந்தமாக இருந்தது. அவளைக் கண்டதும் விளையாட்டை நிறுத்தி விட்டு அவளிடம் வந்தான்.

"சாரி...... உங்களை கவனிக்காமல்...... சாரி"

"இட்ஸ் ஓகே போகலாமா?"

"ம்......" இருவரும் காரில் ஏறி அமர காரைக் கிளப்பினான் மித்ராதன்.

இளவஞ்சிக்கு அவன் முகம் பார்க்க சங்கடமாக இருந்தது. அவன் முன்னிலையில் அந்த கயவனை அடித்ததை நினைத்து இப்பொழுது அவளுக்கே வெட்கமாக இருந்தது. (நீ கவலையே படாதம்மா. நீ அவனை அடித்ததையே மறந்துட்டு உன்னை லவ் பண்ணிட்டு திரியுது பயபுள்ள. அவன் உன்னை நிச்சயம் தப்பா நினைச்சுக்க மாட்டான்.)

"சாரி உங்க முன்னால அவனை அடித்தது....... எனக்கு வந்த ஆத்திரத்தில் என்ன செய்யறதுன்னு தெரியாம......."

"ஹேய் பேபி, நீ செய்யலைன்னா அதை நானே செய்திருப்பேன். ராஸ்கல்.........." மேலும் கெட்ட வார்த்தை சொன்னவன் அவளை உணர்ந்து நிறுத்திக் கொண்டான். அவள் ஆச்சிரியமாக பார்க்கவும்,
"அநியாயம் யார் செய்தால் என்ன? தட்டி கேட்பது தானே முறை?"

"ம்..... நீங்கள் சொல்வது சரி தான். ஆனால் எனக்கு ஏன் இந்த அளவுக்கு கோபம் வருதுன்னு தெரியல?" (ஹப்பா... இப்ப தான் கொஞ்சம் யோசிக்க ஆரம்பிச்சுஇருக்கா).

தன் முன் நெற்றியில் ஆட்காட்டி விரலால் தட்டியபடி யோசித்த தன்னவளின் அழகு அவன் மனதை மயக்கியது.

ஆனாலும் அவள் மனம் வாடுவது கண்டு மனம் பொறுக்காமல்,
"ஹேய் பேபி, இது மனுசனா பிறந்த எல்லோருக்கும் இருக்கும் இயற்கையான குணம் தான். அதனால் ரொம்ப யோசிக்காதே." (போ உனக்கு நீயே மண்ணை போட்டுக்கோ. அவ ஏதோ யோசிச்சா அதையும் கெடுத்துட்ட. உனக்கு நேரம்  சரியில்லை மித்ரா ).

"ம்..... ம்...." என்றவள் அதன் பின் வீடு வரும் வரை பேசவில்லை.

"ஹேய் பேபி, குக்கிங் ப்ரோக்ராம் எல்லாம் பார்க்கிற? பார்க்கிறதும், சாப்பிடறதும் மட்டும் தானா...... இல்லை கொஞ்சம் சமைக்கவும் தெரியுமா?"

மித்ராதன் தன் மடிக்கணினியை எடுத்துக் கொண்டு இளவஞ்சி அமர்ந்து இருந்த சோபாவின் மறு முனையில் அமர்ந்தான்.

இளவஞ்சி அவர்கள் அறையில் இருந்த தொலைக்காட்சியில் TLC சேனலில் வரும் சமையல் நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டு இருக்கும் போது தான் மித்ராதன் அவ்வாறு வினவியது. அவன் கேட்டது அவளுள் ரோசத்தைக் கிளப்ப, அவனை முறைத்துப் பார்த்தாள். அவளின் முறைப்பிற்கே அவன் உள்ளுக்குள் உருகி போனான். அவள் எந்த உணர்வும் காட்டாமல் இருப்பதற்கு இந்த முறைத்தல் கூட அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. அவளின் உணர்வை அவனிடம் வெளிப் படுத்துகிறாள் எனில், அவள் மனதுக்குப் பிடித்தவனாக தான் மாறி இருக்கிறோம் என்று அவனுக்குப் புரிந்தது.

"ம்.... போன சண்டே இறால் பிரியாணி சூப்பர் என்று, யாருக்கும் இல்லாமல் மொக்கியது யாரு? அது செஞ்சது நாந்தான் உங்களுக்கு தெரியுமா?"

"ஓ....... பேபி நீயா செஞ்சே. நான் அம்மா இல்ல செஞ்சாங்கன்னு நினைத்தேன்." அவனுக்கே அது தெரியும். அதனால் தான் அன்று அவன் கொஞ்சம் அதிகமாகவே உண்டான்.

"ம்...... நினைப்பிங்க ..... நினைப்பிங்க......." என்று முணுமுணுத்தவள்,
"என்னை கேட்கறிங்க நீங்க சமைப்பிங்களா?"

"என்னைப் பார்த்து இப்படி ஒரு கேள்வி கேட்டுட்ட? நான் நல்லா சமைப்பேன். யூஎஸ் ல இருக்கும் போது செல்ப் குக்கிங் தான்."

"பரவாயில்லையே கை வசம் நல்ல தொழில் இருக்கு போல." என்று கூறி சிரித்தவளின் சிரிப்பில் அவனும் இணைந்து கொண்டான்.

"மித்து........"

"என்ன சொல்லு பேபி?"

"நீங்க ஒரு உதவி செய்வீங்களா?"

"உனக்கு இல்லாத உதவியா பேபி, என்னனு சொல்லு?"

வாய் சொல்லி விட்டாலும் மனதுக்குள் அவன் பதறிக் கொண்டு இருந்தான். அன்றைக்கு மாதிரி ஏதாவது கேட்டு விடுவாளோ, என்று மனதில் பயம் எழுந்தாலும் அதை மறைத்துக் கொண்டு அவள் முகம் பார்த்தான்.

"இல்ல..... ஆனந்திக்கு........"

இளவஞ்சி ஆனந்தி பற்றிச் சொன்னதும் தான் மூச்சு சீரானது. ச்சே ..... கொஞ்ச நேரத்தில் மனுசனை என்ன பதறு பதற வச்சுட்டா மனதுக்குள் செல்லமாக வைதான்.

"ம்.... அவளுக்கு என்ன? ஏதாவது பிராப்ளமா?"

"இல்லை.... இல்லை.... பிராப்ளம் எல்லாம் இல்லை. அவள் ஏதாவது வேலை பார்த்து குடுக்க சொன்னாள்? அதான் உங்க ஆபிசில் ஏதேனும் வேலை இருந்தால்......., உங்களுக்கு சிரமமா இருந்தா வேண்டாம்."

"ஹேய்  இதில் என்ன சிரமம்? அவளை நாளைக்கே என்னை வந்து பார்க்க சொல்லு."

அலுவலகத்தில் இல்லாத வேலையை தன் மனைவிக்காக உருவாக்கியபடி அவசரமாகச் சொன்னான்.

"தேங்க்ஸ் மித்து..... தேங்க்ஸ்."

"ஹேய் உதை பட போற. நமக்குள் தேங்க்ஸ் எல்லாம் வேண்டாமே."

"ஓகே ..... ஓகே ..... தேங்க்ஸ் வாபஸ் பாஸ்" என்று கூறி சிரித்தவளைக் கண்டு என்றும் போல் இன்றும் அவன் மனம் மயங்கியது.

****************************************************************************************************

மித்ராதனின் கண்கள் இளவஞ்சியை தேடியது. சென்னையில் இருந்த போதாவது அவளின் முகத்தை பார்த்துக் கொண்டு இருப்பான். ஏதோ கொஞ்சம் பேச்சு வார்த்தையாவது இருக்கும். ஆனால் அவனின் சொந்த கிராமத்திற்கு வந்ததில் இருந்து அவளைக் கண்ணால் காண்பது கூட அரிதாக இருந்தது.

ஆம் .... அவனின் சித்தப்பா மகன் திருமணத்திற்கு சொந்த ஊருக்கு வந்து இருந்தான். வீட்டில் உறவினர்கள் கூட்டம் சூழ இருப்பதால் அவளை தனித்துப் பார்க்க கூட முடியவில்லை. அவனுக்கும் பகல் பொழுதில் திருமண வேலைகள் பார்ப்பதற்கே நேரம் சரியாக இருந்தது. சரி இரவில் தங்கள் அறையில் பார்த்துக் கொள்ளலாம் என்று எண்ணி ஆவலாக இருந்த போது அவனின் அறையைப் பகிர்ந்து கொள்ள ஒன்று விட்ட சகோதரர்கள், அத்தை மாமா பசங்கள் என படையெடுத்து வர மனதினுள் நொந்தே போனான்.

மறுநாள் காலையில் எழுந்ததும் தன் அம்மாவிடம் தான் நேரே சென்றான்.
"மாம் பேபி எங்கே? பார்க்க கூட முடியல."

அமராவதிக்கு மகனின் ஏக்கம் கண்டு சிரிப்பு பொத்துக் கொண்டு வந்தது.

"இளா காலையிலே எழுந்து நம்ம சின்ன அப்பத்தா வீட்டுக்கு போயிட்டாளே."

"ஹான் ....... அவளுக்கு அங்கே என்ன வேலை?" எரிச்சலுடன் மொழிந்தான் மித்ராதன்.

"டேய்..... உனக்கு என்னடா வேணும்? காலையில் எழுந்ததும் இவ்வளவு கோபம் வருது........ ம்?"

"மாம் என்ன இது நைட்டாவது பேபியை ரூமுக்கு அனுப்பி வச்சு இருக்கலாம்ல? அவளைக் கண்ணுல பார்த்து ஒரு நாள் ஆச்சு."

அவனுக்கு அவளைக் கண்ணால் பார்த்தால் மட்டும் போதும். அவன் மனம் அமைதி அடைந்து விடும். அதை நினைத்து அவன் சொல்ல, அவன் அன்னையோ வேறு நினைத்துக் கொண்டார்.

"டேய் ஊருக்கு வந்து எங்களை கேவலப் படுத்தாதே. இங்கே எல்லாம் இப்படித் தான். நீ அடிக்கடி வந்தால் தானே தெரியும். நீ மட்டுமா உன் பொண்டாட்டியை பிரிஞ்சு இருக்க உன் வயசு பசங்க எல்லாம் தான் அப்படி இருக்காங்க. என்கிட்ட பேசின மாதிரி வேற யார் கிட்டேயும் பேசிடாதே. எனக்கு என்று வாய்த்து இருக்கே பாரு."

அன்னையின் பேச்சில் முதலில் புரியாமல் பார்த்தவன், எல்லோரும் தான் பிரிந்து இருக்கிறார்கள் என்று கூறியதும் அவனுக்கு புரிந்து போனது. அவன் என்ன நினைத்து சொல்ல, அவன் அன்னை என்ன நினைத்து கொண்டார்  என்பது புரிய அவன் முகம் கூச்சத்தில் லேசாக சிவந்தது.

"மாம்......" என்று சிணுங்கியவனை,

"போடா.... போய் குளிச்சுட்டு வா. இன்னைக்கு நைட் ஊருக்கு போய்டலாம். அதுக்கு அப்புறம் உன் பொண்டாட்டியை உன் பக்கத்திலேயே வச்சுக்கோ." கிண்டலுடன் கூறினார்.

"அம்ரு......" அதற்குள் அருணகிரி குரல் ஒலித்தது.

"போங்க மாம்..... நான் மட்டும் வைப்பை தேடலை, இன்னொரு ஆளும் தன் துணையைத் தேடுறார்."

நக்கலுடன் கூறியவன் தோளில் அமராவதி இரண்டி அடி செல்லமாக வைத்தவர்,
"உன் அப்பா தானே உன்னை போல் தான் இருப்பார்?"

"மாம் ஒரு சின்ன திருத்தம். என்னை போல் அவரில்லை, அவரை போல் நான்."

"போடா போக்கிரி......" சிரித்தபடி அமராவதி சென்று விட்டார்.

குளித்து முடித்து திருமணத்திற்கு ஏற்ற உடையை அணிந்து கொண்டு வெளியில் வந்தவன் கண்கள் தன்னவளைத் தேடியது. அப்பொழுது அமராவதி அவன் பின்புறம் நின்று அவன் தோளைத் தட்டி,
"மித்ரா......"

"ச்சு ..... சும்மா இருங்க மாம்." தன்னவளைக் காண முடியாத எரிச்சலில் அன்னையிடம் தன் கோபத்தை வார்த்தையில் காட்டினான்.

"டேய்...... இங்கே பாருடா."

மித்ராதன் தோள் தொட்டு அமராவதி திருப்ப,

"இப்ப என்னத்துக்கு................." என்றவனின் பேச்சு அமராவதியின் பின் நின்று இருந்த இளவஞ்சியைக் கண்டதும் அப்படியே நின்றது. மெல்லிய சரிகை கொண்ட பட்டு புடவையில், குறைந்த நகைகள், எளிமையான அலங்காரத்தில் அழகாக இருந்தவளைக் கண்டு அவன் மனம் மயங்கி தன்னிலை மறந்து நின்று இருந்தான்.

"மகனே இப்படியாடா எங்களை கேவலப்படுத்துவ? முதல்ல உன் வாட்டர் பால்சை மூடு. இப்பவே வீடு மிதக்குது. இன்னும் கொஞ்ச நேரத்தில் ஊரே மிதக்க போகுது." என்று மகனுக்கு மட்டும் கேட்கும் குரலில் கூறியவர் அவன் விலாவில் தன் புறங்கையால் இடித்து அவன் மயக்கத்தைக் கலைத்தார்.

"ம் ...... சொல்லுங்க மாம்." அமராவதியிடம் கேட்டாலும் கண் இளவஞ்சியை பார்த்துக் கொண்டு இருந்தது. அவளோ எப்பொழுதும் போல் அவனைப் பார்த்து புன்னகையை சிந்திக் கொண்டு இருந்தாள்.

"மித்ரா, நீ இளா கூட சேர்ந்து முதல்ல போ, நாங்க பிறகு வர்றோம்."

"எல்லோரும் சேர்ந்தே போகலாம் மாம்."

"இவ்வளவு வருஷம் கழிச்சு சேர்ந்து இருக்கீங்க. எல்லார் கண்ணும் உங்க மேல் தான் இருக்கும். இனியும் மத்தவங்க பேச்சுக்கு ஆளாக வேண்டாம். கல்யாணம் முடியும் வரை இரண்டு பெரும் சேர்ந்தே இருங்க. என்ன இளா உனக்கும் சேர்த்து தான் சொல்றேன் புரிஞ்சதா? நீங்க ரெண்டு பெரும் எந்த அளவு உங்க ஒற்றுமையைக் காண்பிக்கிறீங்களோ அந்த அளவுக்கு மத்தவங்க தேவையில்லாமல் பேசுவது குறையும்."

"சரி அத்தை" என இளாவும், "ஓகே மாம்" என்று மித்ராவும் ஒரு சேர கூறினர்.

"சரி கிளம்புங்க" என்றவாறு அமராவதி உள்ளே சென்று விட,

"வா.... போகலாம்." என்று மித்ராதன் மனைவி கையைப் பிடித்து கூட்டிக் கொண்டு சென்றான். அதன் பின் திருமண மண்டபம் சென்றும், அவன் அவள் கையை விடவே இல்லை. எப்பொழுதும் தன்னுடனே வைத்துக் கொண்டான்.

இளவஞ்சியும் அமராவதியின் வார்த்தைக்காக அவள் கையை உருவிக் கொள்ளவில்லை. அவனுடன் சேர்ந்தே திருமண நிகழ்ச்சியில் கலந்து கொண்டாள்.

அப்படி இருந்தும் ஒரு வயதான அம்மா மித்ராதனிடம் வம்பு இழுத்தாள்.
"ஏண்டா மருமகனே இந்த சீமை அழகி தான் உன் பொண்டாட்டியா?"

"ம்..... ஆமாம் அத்தை."

"ம் ..... பார்க்க அழகா தான் இருக்கா? பின்னே ஏன்ப்பா இத்தனை வருஷம் பிரிச்சு வெளிநாட்டில் போய் இருந்தே?"

அந்த அத்தையம்மாவின் கேள்வியில் இளவஞ்சி மிரண்டு தான் போனாள். அவள் இந்த சொந்த பந்தங்களைப் பற்றி எப்பொழுதும் யோசித்தது இல்லை. இந்த ஏழு வருடமும் இப்படித் தான் தங்களைப் பற்றி பேசி இருப்பார்களோ? அவள் அன்னையைப் பொறுத்த வரையில் அந்த கவலை இல்லை. எந்த சுப நிகழ்ச்சிக்கும் கணவன் இல்லை என்ற ஒரு காரணத்தை கூறி தவிர்த்து விடுவார். ஆனால் மாமா அத்தை பாவம், இத்தனை வருடங்களில் எவ்வளவு அவச்சொல் தாங்கி இருக்க வேண்டும். அப்படி இருந்தும் அவளிடம் இது நாள் வரை அதை சொல்லிக் காட்டியது கூட இல்லை. அவளுக்கு பெரியவர்களை நினைத்துப் பெருமையாக இருந்தது.

"அத்தையம்மா உங்கள் கேள்வியிலேயே விடை இருக்கு. என் மனைவி படிப்பை முடித்தவுடன் தான் எங்களுக்கு இடையில் எல்லாம் என்று சொல்லி விட்டாள். அவள் படிப்பு முடிய ஏழு வருடம் ஆகும். அதுவரை இவ்வளவு அழகான பொண்டாட்டியைப் பக்கத்தில் வச்சுகிட்டு பிரம்மச்சரிய விரதம் காக்க முடியுமா என்ன? நீங்களே சொல்லுங்க பார்ப்போம்."

"அதானே..... நீ சொல்றதும் ஒரு விதத்தில் சரியா தான் இருக்கு."

"ம் .... அப்படி சொல்லுங்க. அதான் அவள் படிப்பு முடியும் வரை நான் இந்த பக்கம் வரவில்லை. அவள் படிப்பு முடிந்த மறுகணம் நான் அவளைத் தேடி வந்துட்டேனே?"

மித்ராதன் பேச பேச இளவஞ்சி முகம் வெட்கத்தில் சிவந்தது. என்ன இது அந்த அம்மா தான் பேசுறாங்க என்றால் இவனும் சரிசமமாக பேசுகிறானே என்று மனதில் நினைத்தவள் வாய் திறந்து பேச முடியாமல் அப்படியே நின்றாள்.

"அழகு பெத்த சிலையாட்டம் பொண்டாட்டி இருக்கிறப்போ உன் பாடு கஷ்டம் தான் மருமகனே. சரி ... சரி .....விடு. இந்த ஊர்க்காரங்க சொன்னாங்களேன்னு உன்கிட்ட வந்து கேட்டது தப்பு தான் ராசா . இந்த அத்தையை மன்னிச்சுக்கோ."

இது தான் கிராமிய குணம். எதையும் மனதில் வைக்காமல் வெளிப்படையாய் கேட்டு விடும் குணம். அதே சமயம் தவறு தன் மீது என்று தெரிந்தால் உடனே மன்னிப்பை வேண்டும் நல்ல இதயம் கொண்டவர்கள் இந்த வெள்ளந்தி மனிதர்கள்.

"அத்தே வயசில பெரியவங்க நீங்க போய் என் கிட்ட போய் மன்னிப்பு எல்லாம் கேட்டுக்கிட்டு?" என்றவன் அவர் காலில் விழுந்து வணங்கினான். அவனைத் தொடர்ந்து இளவஞ்சியும் காலில் விழுந்து வணங்கினாள்.

"அம்மாடி ...... மகளே ...... என்ற மருமகன் பாவம். இனியாவது அவனை நல்ல விதமாய் கவனிச்சுக்கோ என்ன? கூடிய சீக்கிரம் பேரனையோ பேத்தியையோ பார்க்கோணும் என்ன கண்ணு?" என்ற அந்த அம்மாவின் பேச்சில் முற்றிலும் முகம் சிவந்தவள் என்ன செய்வது என்று தெரியாமல் கணவனின் முதுகுக்குப் பின்னே தன் முகத்தை மறைத்தாள்.

"அட..... இங்கே பாரு டாக்டர் பொண்ணு வெட்கப்படுது பாரேன்." என்றவாறு அத்தையம்மா உள்ளே சென்றாள்.

"ஹப்பா..... போயிட்டாங்களா?" என்று மித்ராதன் முதுகு பக்கம் இருந்து வெளி வந்தவள் பெருமூச்சொன்றை வெளிவிட்டாள். அவனோ ஆறுதலாக அவளைப் பார்த்து புன்னகைத்தான். அவனுக்கு தெரியும் அவளின் செயல் தன்னிச்சையான ஒன்று என்று. அங்கு இருந்தவர்களில் அவன் மட்டுமே அவளுக்கு அறிமுகம் ஆனவன். அதனால் தான் அவன் பின்னே வந்து அவள் ஒளிந்தாள் என்று. அது காதலால் அல்ல என்பதும் அவனுக்கு தெரியும். அது காதல் இல்லை என்றாலும் அவள் தன்னை நாடியதே அவனுக்குப் போதுமானதாக இருந்தது.

அன்று இரவு சென்னை கிளம்பி போகும் போது மித்ராதன் காரை ஓட்ட அருகில் இளவஞ்சி, பின் இருக்கையில் அருணகிரி, அமராவதி அமர்ந்து இருந்தனர். சிறிது தூரம் சென்றதும் பெரியவர்கள் தூங்கியதும் மித்ராதன் இளவஞ்சியிடம் பேச்சை ஆரம்பித்தான்.

"சாரி..... பேபி..... காலையில் அத்தையிடம்......."

இளவஞ்சிக்கு அவன் சொல்ல வந்தது புரிந்து தான் இருந்தது.

"இல்லை நான்தான் மன்னிப்பு கேட்கணும். இந்த மாதிரி எல்லாம் கேட்பாங்கன்னு நான் கொஞ்சம் கூட நினைச்சு பார்க்கலை. என்னை பத்தி மட்டும் யோசித்து சுயநலமாய் இருந்து விட்டேன். நீங்கள் தான் என்னை மன்னிக்க வேண்டும்."

"பேபி, நம்மிடையே சாரி எல்லாம் வேண்டாம் என்று ஏற்கனவே சொல்லி இருக்கேனே?"

"அப்போ நீங்களும் சாரி வாபஸ் வாங்குங்க."

"ஓகே ஓகே வாபஸ், போதுமா பேபி." என்றவனின் பேச்சில் கலகலவென சிரித்தவளைக் கண்டு அவன் நெகிழ்ந்தது.

கொஞ்ச நேரம் பேசிக் கொண்டு இருந்தவள் பிறகு தூங்கிப் போனாள். தூக்கத்தில் தலை சரிந்து விழுந்தவளை தன் தோளில் தாங்கிக் கொண்டவன் மனம் என்றுமில்லாத நிம்மதி அடைந்தது. தன்னவளின் அருகாமை அவளிடமிருந்து வந்த அவளுக்கே உரித்தான பிரத்யேக நறுமணம் அவனை மயக்கியது. அவளின் அருகாமை தந்த மயக்கத்திலும் சந்தோசத்திலும் கார் அவன் கையில் வேகமாக பறந்தது.

அதன் பின் வந்த நாட்கள் வேகமாக சென்றது. நாட்கள் மாதங்களாகியது ஆம் ஆறு மாதங்கள் கடந்து விட்டது. மித்ராதன் - இளவஞ்சி நட்பு என்றும் போல் தொடர்ந்தது. அவள் நட்பாக அவனை நெருங்கி பேச பேச அவனோ மனம்

முழுதும் காதலை வைத்துக் கொண்டு அதை வெளிக்காட்ட முடியாமல் தவித்துக் கொண்டு இருந்தான்.

ஆனந்திக்கும் பிரசவத்திற்கு நாட்கள் நெருங்கிக் கொண்டு இருந்தது. புகழ் காதல் கதை அப்படியே தான் இருந்தது. அதற்கும் கடவுள் முடிவு கட்ட நாள் குறித்தான் போலும்.

இளவஞ்சியும் அமுதாவும் வேலை முடிந்து பேசிக் கொண்டே வாகனம் நிறுத்துமிடம் வரை வந்து இருந்தனர்.

"ஓகே ..... அமுதா ..... நாளை பார்க்கலாம்" என்றவாறு கார் கதவை திறந்தாள் இளவஞ்சி. ஆம்..... இளவஞ்சி இப்பொழுது கார் ஓட்டக் கற்றுக் கொண்டாள். அதற்கு மித்ராதனும் ஒரு காரணம். அவள் அவனை தொந்திரவு பண்ணுவதாக நினைக்கும் அவளின் குற்ற மனப்பான்மையை போக்க அவளை காரோட்ட பழகச் சொன்னான். இப்பொழுது அவள் தான் அவனை காலையில் அலுவலகத்தில் விட்டு விட்டு, பின் மாலை வேலை முடிந்ததும் அவனைக் கூப்பிட்டுக் கொண்டு வீட்டிற்கு செல்வாள்.

அப்பொழுது பார்த்து அமுதாவின் கைப்பேசி அழைத்தது. இளவஞ்சி அமுதாவும்  கிளம்புவதற்காக அவள் பேசி முடித்து வரும்வரை காத்திருக்களானாள். பேசி முடித்து கைப்பேசியை அணைத்த அமுதாவின் முகம் லேசாக சிவந்து இருந்தது.

"என்ன அமுதா? என்ன விஷயம்?"

"உன் கிட்ட மறைக்க என்ன இருக்கு இளா?  வீட்டில் மாப்பிள்ளை பார்த்து இருக்காங்க. இன்னைக்குப் பெண் பார்க்க வர்றாங்க."
முகம் சிவக்க  சொன்னவளைப் பார்த்த இளவஞ்சி, மனதில் புகழை நினைத்து நொந்தாள். நண்பனுக்காக வருத்தப்படுவதா? இல்லை தோழிக்காக சந்தோசப்படுவதா? என்று அவளுக்கு தெரியவில்லை. என்ன சொல்வது என்று தெரியாமல் நிமிர்ந்தவள்

அமுதாவிற்கு பின் நின்று கொண்டு இருந்த புகழை கண்டு அதிர்ந்தாள்.

இளவஞ்சியின் அதிர்ந்த நிலையை தப்பாக நினைத்த அமுதா,
"இளா நீ நினைக்கிற மாதிரி அலங்காரம் பண்ணிக்கிட்டு காபி தட்டை ஏந்திக்கிட்டு அவங்க முன்னாடி போய் நிற்கிறது இல்ல. இன்னைக்கு நைட் ஹோட்டல்ல டின்னரில் மீட் பண்ண போறோம். பிடிச்சு இருந்தா தான் மேற்கொண்டு பேசுவாங்க."

இளவஞ்சியின் முற்போக்கு சிந்தனைகள் பற்றி அவள் தோழிக்கா தெரியாது. அதான் அவளுக்கு அமுதா விளக்கி சொல்லிக் கொண்டு இருந்தாள்.

"ம்....... அப்புறம் அமுதா..... வாழ்த்துக்கள்." புகழின் வார்த்தைகளின் நிதானம் இளவஞ்சி வயற்றில் பயப் பந்தை கிளப்பியது.

புகழின் வார்த்தையில் அவன் புறம் திரும்பிய அமுதா, "தேங்க்ஸ் டாக்டர் சார்" விகல்பம் இல்லாமல் அவன் வாழ்த்தை ஏற்றுக் கொண்டாள்.

"ஏண்டி இளா நீ ஒண்ணும் சொல்ல மாட்டேங்கிற?" என்று கேட்கும் அமுதாவிற்கு என்ன பதில் சொல்வது என்று தெரியாமல் புகழையே பார்த்துக் கொண்டு இருந்தாள் இளவஞ்சி.

"அமுதா மாப்பிள்ளை என்ன பண்றார்? உங்களுக்கு இதில் விருப்பம் தானா?"

"மாப்பிள்ளை பிசினெஸ் பண்றார். பெரிசா மறுக்க காரணம் ஏதும் இல்லை. முதல்ல நேரில் பார்த்து பேசினதுக்கு அப்புறம் தான் முடிவு செய்யணும். இப்போதைக்கு என் விருப்பம் எதுவும் இல்லை."

புகழின் உள்நோக்கம் தெரியாமல் வெள்ளையாக அவனைப் பார்த்து சிரித்தாள் அமுதா.

அமுதாவின் அருகில் வந்த புகழ் அவள் கண்களை உற்று நோக்கி,
"ஏய்...... யார் கிட்ட என்ன சொல்லிக்கிட்டு இருக்க? என் நெஞ்சு நிறைய உன் மீதான காதலை சுமந்து கிட்டு இருக்கிற என்கிட்டேயே நான் மாப்பிள்ளை பார்க்க போறேன், பிடிச்சு இருந்தா கல்யாணம்ன்னு சொல்ற. எவ்வளவு தைரியம் உனக்கு?" கோபத்துடன் அமுதாவைப் பார்த்து உறுமினான்.

"புகழ் என்ன இது? நீங்க ஒரு டாக்டர்.... இப்படி பிகேவ் பண்ணலாமா? கொஞ்சம் கண்ணியத்துடன் நடந்துக்கோங்க. ப்ளீஸ்...."

இளவஞ்சி தான் புகழை அதட்டினாள். அமுதாவோ பேச இயலாமல் பயத்தில் அப்படியே உறைந்து போய் நின்று இருந்தாள்.

"வஞ்சி, நீ பேசாம இரு. காதல்ல கண்ணியம் பார்த்தா காரியம் நடக்காது. அப்புறம் அவள் கல்யாணத்துக்கு நான் போய் "எங்கிருந்தாலும் வாழ்க" என்று ஆசிர்வாதம் பண்ண சொல்றயா?  என்னால அது முடியாது, இப்பவே அவள் எனக்கு ஒரு பதில் சொல்லணும்."

"புகழ்..... என்ன இது?" இளவஞ்சிக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

அதற்குள் கொஞ்சம் சுதாரித்து இருந்த அமுதா கொஞ்சம் தைரியம் வரப் பெற்றவளாய்,
"இளா......  அவர் என்னைக்காவது என்னை விரும்பறேன்னு சொன்னாரா? இல்லை நான்தான் அவரை விரும்பிட்டு இப்போ அவரை ஏமாத்த பார்க்கிறேன்னா? இதில் எது நடந்ததுன்னு இவ்வளவு கோபப்படுறாருன்னு நீயே கேளு."

புகழ் இப்பொழுது ஆச்சரியமாக அமுதாவைப் பார்த்தான். அவள் சொல்வதும் சரிதானே. அவன் எங்கே அவன் காதலை சொன்னான். சொன்னால் தானே அவளுக்கும் தெரியும். ஹப்பா ..... இந்த காதல் வந்தால் கண்ணியம்

நிதானம் எல்லாம் மறந்து போய்விடுமோ? தன் பொறுமை எங்கே போனது என்று அவனுக்கே வியப்பாய் இருந்தது.

"வஞ்சி.... அதான் இப்ப சொல்லிட்டேனே. என்ன பதில்ன்னு சொல்ல சொல்லு?"

இளவஞ்சி இடையில் மாட்டிக் கொண்டு முழித்தாள். "இளா ...... இப்ப தானே சொல்லி இருக்கார். கொஞ்சம் யோசித்து சொல்றேன்னு சொல்லு."

"வஞ்சி..... எப்போ யோசிக்க போறாளாம்? அந்த மாப்பிள்ளையை போய் பார்த்து அவன் என்னை விட பெட்டரா இருந்தா என்னை கழட்டி விடலாம் என்ற ஐடியால யோசிக்க போறாங்களாமா?"

"இளா, வார்த்தையை அளந்து பேச சொல்லு. அவருக்கே அவர் மேலே நம்பிக்கை இல்லைன்னா எனக்கு எப்படி வரும்?"

"அட....... அடடா....... என் மேல் எனக்கு நம்பிக்கை இல்லாமலா அவளிடம் பேசிக் கொண்டு இருக்கிறேன்."

"ஆமாம்..... அவர் மேல் அவருக்கு நம்பிக்கை இல்லை தானே? இருந்து இருந்தால் இப்படி ஒரு வார்த்தை சொல்லி இருப்பாரா? அவரை யாருக்கு தான் பிடிக்காது. அதை ஏன் அவர் புரிந்து கொள்ள மாட்டேங்கிறாருன்னு தெரியல."

"வேற யாருக்கும் பிடிக்க வேண்டாம். உனக்கு என்னைப் பிடித்து இருக்கிறதா?" இப்பொழுது அமுதாவிடம் நேரிடையாகக் கேட்டான் புகழ்.

"இளா......" அமுதா இளவஞ்சியை தேட அவளோ காரில் ஏறி அமர்ந்தபடி,

"நீங்களாச்சு....... உங்கள் காதலாச்சு...... பை" என்று காரை கிளப்பினாள்.

அவள் செல்வதை உணர்ந்து அமுதா திகைப்புடன் புகழை பார்த்தாள். இவ்வளவு நேரம் இருந்த வாய் துடுக்கு போன இடம் தெரியவில்லை. எப்பொழுதும் அவன் ஒரு

மருத்துவன் என்ற ரீதியில் அவன் முகம் பார்த்து பழகி இருக்கிறாள் தான், இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் இன்று அவள் முன்னாள் நிற்கும் புகழ் புதியவன். அவன் காதல் பார்வை புதிது. அது அவள் மனதைப் படபடக்க செய்து அவள் உணர்வை தட்டி எழுப்பியது புதிது. இன்று எல்லாமே அவளுக்கு புதிதாக இருந்தது.

"ம்..... நான் கேட்டதற்கு என்ன பதில்?"

அமுதாவின் முகத்தில் இருந்தே அவள் மனம் கொஞ்சம் புகழுக்கு புரிய ஆரம்பித்தது. அவனின் உதட்டில் உல்லாச புன்னகை குடியேறி இருந்தது.

"இன்னைக்கு அந்த மாப்பிளையை நான் பார்க்க போவதாய் இல்லை போதுமா?"

அவளின் பதிலில் ஒரு நொடி யோசித்தவன் முகம் அடுத்த நொடி மலர்ந்தது.

"ஹேய்......" என்று ஆனந்தத்தில் அவளைத் தூக்கி சுற்றினான்.

"ஐயோ விடுங்க...... யாராவது பார்க்க போறாங்க?"
அவளுக்கு பதில் பேசாமல் தன் காரின் பின் பக்க கதவை திறந்த புகழ், அவளை உள்ளே தள்ளி தானும் அவள் அருகே அமர்ந்து கார் கதவை சாத்தினான்.

"இப்போ யாரும் பார்க்க மாட்டாங்க ஓகேவா?"

"ஐயோ..... டாக்டர் சார்..... நீங்க பண்றது டாக்டர் மாதிரியில்ல. ஒரு ரௌடி மாதிரி இருக்கு."

"அப்படியா இருக்கு? ம்..... இருக்கும்..... இருக்கும்..... நான் தான் ரௌடி ஆச்சே....! ஒரு சின்ன திருத்தம் வெறும் ரௌடி இல்லை காதல் ரௌடி. இந்த காதல் ரௌடி என்ன பண்ண போறான்னு தெரியுமா?"
சொல்லிக் கொண்டே வந்தவன் அவள் எதிர்பாராத விதமாய் அவள் இதழை சிறை செய்தான். நீண்ட நேரம் சென்றும் அவளை விட மனம் இல்லாமல் விட்டவன்

அமுதாவின் கண்ணில் இருந்து கண்ணீர் வரக் கண்டு பதறினான்.

"ஹேய் செல்லம் .... உனக்கு பிடிக்கலைன்னா இனி இந்த மாதிரி செய்யல. ஓகேவா? இதுக்கு போய் ஏன் அழுற? உனக்கு எல்லாம் யார் டாக்டர் பட்டம் கொடுத்தது?"

"அதே தான் நானும் கேட்கிறேன் உங்களுக்கு எல்லாம் யார் டக்டர் பட்டம் கொடுத்தது? ஒரு டாக்டர் இப்படி தான் பிகேவ் பண்ணுவாங்களா?"

"ஏய் டாக்டரும்  மனுஷன் தான். காதல் வந்தால் எல்லா மனிதனும் ஒண்ணு தான். ஓகே நான் பண்ணியது தப்பு தான் சாரி..... மன்னிச்சுக்கோ செல்லம்."

அவள் கையை எடுத்து தன் கன்னத்தோடு வைத்துக் கொண்டவன் உண்மையாகவே மன்னிப்பு கேட்டான்.

புகழின் கண்ணில் இருந்த காதல் அமுதாவை என்னமோ செய்ய,
"நான் இதை வேண்டாம் என்று சொல்லலை. கல்யாணத்திற்கு அப்புறம் தான் சிலது இருக்கணும், நான் சொல்ல வருவது புரியுதா?"

"புரியுது செல்லம் நல்லாவே புரியுது. கூடிய சீக்கிரம் முகூர்த்த நாள் பார்க்க சொல்ல வேண்டியது தான். இனியும் தாங்காது. நாளைக்கே அப்பாவிடம் சொல்லி உன் அப்பாவிடம் பேசச் சொல்றேன். நாம இப்போ கிளம்பலாமா?" என்றவன் அமுதாவையும் அழைத்துக் கொண்டு கிளம்பினான். என்றும் இல்லாத மகிழ்ச்சியில் இருவர் உள்ளமும் நிறைந்து இருந்தது.

காரில் சென்று கொண்டு இருந்த இளவஞ்சி புகழை பற்றி தான் யோசித்துக் கொண்டு இருந்தாள். பக்குவப்பட்ட அதுவும் மனநல மருத்துவனான அவனுக்கே இவ்வளவு கோபம் வருகிறது என்றால் மித்ராதன் அவள் மேல் கொண்ட கோபம் நியாமானதே என்று தான் தோன்றியது. அதிலும் அவனின் அன்றைய உணர்வுகள் அவளுக்கு

இன்று புரிந்தது. தான் அவனுக்கு எந்த வகையிலும் நியாயம் செய்ய வில்லை என்று புரிந்த போது துக்கம் தொண்டையை அடைத்தது. திருமணம் ஆகியும் பிரம்மச்சரியம் இருக்கும் அவனைக் கண்டு அவளுக்கு பரிதாபமாக இருந்தது. இதற்கு எல்லாம் எப்படி பிராயசித்தம் செய்ய போகிறோம்? என்று அவளுக்குத் தெரியவில்லை.

மனம் தன் போக்கில் யோசித்துக் கொண்டு வர, கை தன்னிச்சையாய் காரை இயக்கி மித்ராதன் அலுவலகம் முன் நின்றது. அங்கே அவள் கண்ட காட்சி அவளுக்கு மகிழ்ச்சியை அளித்தது. அவள் பிரயாசித்தம் செய்வதற்கான நேரம் வந்து விட்டது என்று அவள் மனம் தெளிந்தது.

வீட்டிற்கு கிளம்ப எண்ணி அலுவலகத்தை விட்டு வெளியே வந்த மித்ராதன் அப்பொழுது தான் வெளியே சென்று கொண்டு இருந்த ஆனந்தியை கவனித்தான். அவள் நடையில் ஏதோ தடுமாற்றம் இருப்பதை உணர்ந்து அவள் அருகில் வேகமாக சென்றான். நிலை தடுமாறி கீழே விழ இருந்தவளை தன் கரங்களில் தாங்கியவன், அவள் தன்னை நிலைப்படுத்திக் கொண்டதும் அவளை நேராக நிறுத்தினான்.

"ஏன் ஆனந்தி மயக்கமாக வருகிறதா?"

"இல்லை ஏதோ நியாபகத்தில்...... சற்று நிலை தடுமாறி விட்டேன். வேறு ஒன்றுமில்லை."

"என்னம்மா இது? இந்த மாதிரியான நேரத்தில் சற்று கவனமாக இருக்க வேண்டாமா?" என்று அவளை கைத்தாங்கலாக அழைத்து சென்றான்.

அவள் வேண்டாம் என்று மறுத்த போதும் அவன் விடவில்லை. அவள் செல்லும் ஆட்டோவில் அவளை ஏற்றி அனுப்பி வைத்தான். ஆனந்தியை அனுப்பி வைத்து விட்டு நிமிர்ந்தவன் கண்ணில் தங்கள் கார் அங்கு நிற்பது பட தன்னவளை நோக்கி ஆவலுடன் சென்றான். பாவம் அந்த ஆவலை அவள் குலைக்க போவது அவனுக்கு அந்த நேரம் தெரியவில்லை.

இளவஞ்சி ஆனந்தியை கைத்தாங்கலாக மித்ராதன் கூட்டிக் கொண்டு வரும் போதே பார்த்து விட்டாள். அவன் இந்த மாதிரி மனைவி குடும்பம் சகிதமாக வாழ வேண்டும் என்று நினைத்தவளுக்கு அபொழுது தான் அந்த யோசனை உதித்தது.

ஏன் அந்த மனைவி ஆனந்தியாக இருக்க கூடாது என்று அவள் மனம் விபரீத முடிவு எடுத்தது. இன்று எப்படியும் மித்ராதனிடம் அவன் வாழ்வு பற்றிப் பேசி முடிவு எடுக்க வேண்டும் என்று முடிவு செய்து கொண்டாள்.

"ஹாய்......."

மித்ராதன் தன்னைச் சுற்றி பார்த்தான். இளவஞ்சி தன்னை தான் கூப்பிடுகிறாளா? என்ற சந்தேகம்.

"மித்து ...... உங்களைப் பார்த்து தான் சொன்னேன்."

"ஓ....... என்னைத் தான் கூப்பிட்டாயா?" என்றவாறு அவன் காரில் ஏறி அமர, அவள் காரைக் கிளப்பினாள்.

"பின்னே.... வேறு யாரை கூப்பிடறேன் என்று நினைச்சிங்க?" மித்ராதன் வாய் திறப்பதற்குள் இளவஞ்சியின் கைப்பேசி அழைத்தது. அதை எடுக்கப் போனவளை அவன் முறைத்தான்.

"ப்ளீஸ் மித்து...... புகழ் தான் பேசுறாங்க...... ப்ளீஸ்."

"சரி ஸ்பீக்கர் போன்ல பேசு." என்றவன் ஸ்பீக்கர் மோடில் போட்டான்.

"ஹாய் புகழ் சொல்லுங்க"

"வஞ்சி...... அயம் சோ ஹாப்பி. என் செல்லம் என் லவ்வை ஒத்துக்கிட்டா."

இது எப்ப இருந்து என்பது போல் மித்ராதன் இளவஞ்சியைப் பார்க்க அவள் பிறகு சொல்கிறேன் என்பது போல் சைகை செய்தாள்.

"ஹேய் புகழ் உண்மையிலேயே சந்தோசமான விஷயம் தான்."

"எங்கே அமுதா அவள் கிட்ட போனை குடுங்க."

"அமுதா .... கங்க்ராட்ஸ். புகழ் ரொம்ப நல்லவர். அவர் உன்னை ஏக்கத்துடன் பார்க்கும் போதெல்லாம் எனக்கு கஷ்டமா இருக்கும். இப்பவாவது அவர் காதலை உணர்ந்தாயா?" இளவஞ்சி மேற்கொண்டு என்ன பேசினாளோ எதுவும் மித்ராதன் காதில் விழவில்லை.

'இங்கே பாருடா...... அம்மணிக்கு காதல் ஏக்கம் எல்லாம் புரிந்து தான் இருக்கு. என்ன ஒரு அட்வைஸ்...... ஆனால் பக்கத்தில் இருக்கிற என்னோட ஏக்கம் தான் புரிய மாட்டேங்குது. நல்லா வந்து வாய்ச்சாடா...... உனக்குன்னு......' விதியை எண்ணி தன்னையே நொந்து கொண்டான்.

கைப்பேசியை வைத்து விட்டு மித்ராதனிடம் புகழ் அமுதா காதலைப் பற்றி பேசிக் கொண்டு வந்தவள் ஆனந்தியை மறந்து போனாள்.

இரவு உணவு வேளை முடிந்ததும் தங்கள் அறைக்கு வந்த இளவஞ்சி மித்ராதனை தேடிப் போனாள். அவனோ மடிகணினியில் மூழ்கி இருந்தான்.

"மித்து நீங்க ப்ரீயா?"

"ஹேய்..... எதுவும் பேசணும் என்றால் பேசு. உனக்காக பிரீயாக்கிட்டா போச்சு." என்றவன் மடிக்கணியை அணைத்தான்.

"மித்து..... ஆனந்தியைப் பத்தி..... என்ன நினைக்கிறிங்க?"

"ம்..... அவளுக்கென்ன நல்ல பெண்." இளவஞ்சியின் உள்குத்து அறியாமல் அவன் சொல்ல அவள் முகம் மலர்ந்தது.

"அவள் வாழ்க்கை இப்படியே போய்டணும் என்று நினைக்கிறிங்களா? செய்யாத தப்புக்காக அவள் சிலுவை தாங்கணுமா மித்து."

"பேபி நான் அப்படி சொல்லலியே? அவள் வாழ்க்கை இப்படி முடிந்து போக கூடாது என்று தான் ஆசைப்படறேன். பாவம் அவளுக்கு இனி மேலாவது நல்ல வாழ்க்கை அமையணும்."

"மித்து நான் சொல்றேன்னு தப்பா நினைச்சுக்காதிங்க. நீங்க ஏன் ஆனந்திக்கு வாழ்க்கை தரக் கூடாது? நீங்கள் இப்படி உங்கள் வாழ்க்கையை அழித்துக் கொண்டு எனக்காக எல்லாம் செய்வதைப் பார்க்கும் போது எனக்கு

குற்ற உணர்ச்சி தான் எழுகிறது. எனக்காக நீங்கள் உங்கள் வாழ்க்கையைப் பற்றி யோசிக்க கூடாதா?"

மித்ராதன் தன் காதில் கேட்ட விஷயத்தை நம்ப முடியாமல் அதிர்ச்சியாகி நின்று விட்டான். எந்த கணவனுக்கும் அவன் நிலை வரக் கூடாது. அவனின் உயிர், அவனில் பாதியானவள் வாயில் இருந்து இந்த வார்த்தை வருவதற்காகவா, அவன் அவளை உயிருக்கு உயிராக காதலித்தான்? தூங்கும் போது கூட அவன் மனம் "பேபி பேபி" என்று அவளை தானே நினைக்கிறது.

இவ்வளவு ஏன் அவன் இதயம் ஒவ்வொரு முறை துடிக்கும் போது "பேபி பேபி" என்று தானே துடிக்கிறது? எப்போது தான் இவள் தன்னை புரிந்து கொள்ளப் போகிறாளோ என்று அவனுக்கு ஆயாசமாக இருந்தது.

இளவஞ்சியோ அவனின் அதிர்ந்த நிலையை வேறு மாதிரி எண்ணிக் கொண்டாள்.

"மித்து.... நீங்க..... அந்த குழந்தையை பற்றி கவலை பட வேண்டாம். நான்..... நான் என் குழந்தையாக தத்து எடுத்துக் கொள்கிறேன். என் வாழ்க்கைக்கும் ஒரு பிடிப்பு வேண்டாமா? நீங்கள் ஆனந்தியை மட்டும் ஏற்றுக் கொண்டால் போதும். உங்களால் மட்டுமே அவளை நல்லா பார்த்துக்க முடியும் ஏனென்றால் உங்களை மாதிரி நல்லவங்களை இந்த காலத்தில் பார்ப்பது கஷ்டம். என்ன மித்து உங்களுக்கு சம்மதம் தானா?"

அந்த நிலையிலும் அவளின் நல்லவன் என்கிற வார்த்தை அவனுக்கு இதம் அளித்தது. பதில் பேசாமல் அவளைப் பார்த்தான்.

"என்ன மித்து சம்மதம் தானே?"

"என் சம்மதம் மட்டும் போதுமா? ஆனந்தி என்ன நினைக்கிறாள் என்று தெரிய வேண்டாமா?" நிதானமாக அவளைப் பார்த்து கேட்டான்.

"ஆனந்தி என்ன சொல்வாள்? அதெல்லாம் சம்மதம் என்று தான் சொல்வாள். உங்களை மாதிரி ஒருத்தரை யாராவது வேண்டாம்ன்னு சொல்வாங்களா? ம்.." அவனையே திருப்பி கேள்வி கேட்டாள்.

'அதான் நீ இருக்கிறாயே?' மனதுக்குள் கூறியவன், "நாளை அவளை கேட்ட பின் முடிவு செய்து கொள்ளலாம். எனக்கு தூக்கம் வருது குட்நைட்" என்று சொல்லி படுக்க சென்றான்.  இளவஞ்சியோ சாதித்த மனப்பான்மையோடு குதூகலத்துடன் உறங்க சென்றாள்.

காலையில் எழுந்ததில் இருந்து பரபரப்புடன் அங்குமிங்கும் அலைந்து கொண்டு, கிளம்பிக் கொண்டு இருந்தவளைப் பார்த்து மித்ராதனுக்கு எரிச்சலாக வந்தது. 'ம்ஹும்..... கணவனுக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைக்கிற பெண் உலகத்திலேயே இவள் ஒருத்தியாகத் தான் இருப்பாள். இவளை என்ன செய்தால் தகும்?' என்று ஆத்திரத்தில் பற்களை கடித்தான்.

"மித்து..... இந்த சர்ட் உங்களுக்கு நல்லா இல்லை. வேற......" என்று அவன் ஆடைகளை கலைத்து ஒரு சட்டையை எடுத்துக் கொடுத்தாள்.

'இதப்பார்றா ஒரு நாளும் நான் என்ன சர்ட் போட்டு இருக்கேன்னு கவலைப்படாத அம்மணி இன்னைக்கு இப்படி சூப்பரா செலெக்ட் பண்ணிக் குடுக்கிறதை பாரு.' மனதில் நினைத்தவன் ஒன்றும் பேசாமல் அதை அணிந்து கொண்டான்.

"மித்து, ஏன் இவ்வளவு மெதுவா சாப்பிடுறிங்க?"
"மித்து, ஷூ லேஸ் கட்ட இவ்வளவு நேரமா?"
அவனைப் படுத்தி எடுத்து விட்டு ஒரு வழியாய் கிளம்பி அவன் அலுவலகம் வந்தடைந்தனர். ஆனால் ஆனந்தி இன்னமும் வேலைக்கு வராததை உணர்ந்து இளவஞ்சிக்கு ஏமாற்றமாக போனது.

"மித்து..... ஹாஸ்பிட்டலுக்கு லேட்டாகிடுச்சே..... இப்ப என்ன செய்ய?"

"நீ இப்ப போ. ஈவ்னிங் நீ பார்க்க வருவேன்னு ஆனந்திக் கிட்ட சொல்லி வைக்கிறேன்."

"தேங்க்ஸ் மித்து. மறக்காம சொல்லிடுங்க." என்றவாறு அவள் புறப்பட்டுப் போனதும் ஆற்றல் எல்லாம் வடிந்தார் போல் இருக்கையில் தொப்பென அமர்ந்தான் மித்ராதன்.

மாலையில் எப்பொழுதும் வரும் நேரத்தை விட சற்று முன்னதாக கிளம்பி வந்த இளவஞ்சியை மித்ராதன் ஆச்சரியமாகப் பார்த்தான். 'ம்..... பெர்மிசன் போட்டு வந்து இருப்பா போலிருக்கே. நடத்து.... நடத்து.....' மனதுக்குள் சொல்லிக் கொண்டான்.

"மித்து.... ஆனந்தி எங்கே? வர சொல்லுங்க?"

"இதோ......." என்றவன் ஆனந்தியை அழைத்தான். உள்ளே வந்த ஆனந்தி இளவஞ்சியைப் பார்த்ததும் ஓடி வந்து கட்டிக் கொண்டாள்.

"அக்கா ..... நீங்க வர்றிங்கன்னு சொல்லவே இல்லையே?"

"நான் வர்றது இருக்கட்டும். நிறைமாச பொண்ணு இப்படியா ஓடி வர்றது?" அவளை செல்லமாக கடிந்து கொண்டாள் இளவஞ்சி.

"ஆனந்தி, இங்கே வா..... இளா.... நீயும் தான்.... உட்காருங்க."

இருவரும் அமர்ந்ததும் மித்ராதன் நேரிடையாக விசயத்திற்கு வந்தான்.

"ஆனந்தி உங்க அக்கா என்னமோ உன் கிட்ட பேசனும் என்று சொன்னாங்க. ஆனா அதை அவங்க சொல்றதை விட நான் சொன்னா பெட்டரா இருக்கும் என்று நினைக்கிறேன். உன் வாழ்க்கை இப்படி பாழாகிடக் கூடாதுன்னு இளா கவலைப் படறா. அதனால என்னை....."

அவன் தொண்டை பேச முடியாமல் சதி செய்ய, அதை செருமி சரி செய்தவன்,

"உன்னை நான் கல்யாணம் பண்ணிக் கொள்ள வேண்டுமாம்."

இதைக் கேட்டு அதிர்ந்த ஆனந்தி திகைத்து போனாள். ஆனாலும் சில நொடிகளில் தன்னை சமாளித்துக் கொண்டாள்.

"அண்ணா..... என்ன பேச்சு இது? உங்களை என் கூடப் பிறக்காத சகோதரனா தான் நினைச்சு இருக்கேன்." ஆனந்தியின் அண்ணாவில் மித்ராதன் கவலை எல்லாம் அகன்றவனாய் நிம்மதியானான்.

"இதை உன் அக்கா காது பட சத்தமா சொல்லு." என்றவன், "ஆனந்தி உனக்கு நான் அண்ணன் என்றால் என் மனைவி உனக்கு அண்ணி தானே? இனி மேல் இளாவை அண்ணி என்றே அழை. அப்படியாவது அவளுக்கு புத்தியில் உறைக்கட்டும்."

"அக் ..... சாரி .... அண்ணி. இனி மேல் இந்த மாதிரி பேச்சுக்களை விடுங்கள் என் வாழ்க்கை முழுதும் எனக்கு என் குழந்தை போதும். அதுவும் உங்கள் வாழ்க்கையை பாழாக்கிக் கொண்டு எனக்கு வாழ்க்கை கொடுக்க நினைத்த உங்க உயர்ந்த உள்ளம் யாருக்கும் வராது. நீங்க தெய்வம் அண்ணி. அண்ணா நீங்களும் தான் .... இதற்கு மேல் இதை பற்றி பேசுவதற்கு ஒன்றும் இல்லை. நான் வர்றேன்" என்றவள் கிளம்பி வெளியேறினாள்.

வீடு வந்து சேரும் வரை இளவஞ்சியும், மித்ராதனும் எதுவும் பேசிக் கொள்ளவில்லை. அவன் மனம் உலைகளமாய் கொதித்துக் கொண்டு இருந்தது.

தங்கள் அறைக்கு வந்ததும் கை நீட்டி இளவஞ்சியை தடுத்தவன்,
"உன்னிடம்..... நான் பேசணும்."

என்னவென்று புரியாதவளாய் அவனை ஏறிட்டுப் பார்த்தாள். 'பண்றது எல்லாம் பண்ணிட்டு ஒண்ணும் தெரியாத பேபி மாதிரி லுக் விடறத பாரு. பேபி பேபின்னு

கூப்பிட்டு புத்தியும் பேபியாவே மாறி போச்சு' அவளை மனதில் திட்டிக் கொண்டவன் அவளை தீர்க்கமாகப் பார்த்தான்.

"இவ்வளவு நாள் நான் நல்ல நண்பனா நடந்து கிட்டேன்னு நினைக்கிறேன். இன்னைக்கு ஒரு நாள் உன் கணவனா நான் பேசவா?" அவளிடம் அனுமதி கேட்ட மித்ராதனை அவன் சொல்வது விளங்காமல் பார்த்தாள்.

"என் வாழ்வு பாழாகக் கூடாதுன்னு நீ நினைக்கிறது பார்க்கும் போது, எனக்கு சந்தோசமா தான் இருக்கு. அதற்கு நீ என்ன பண்ணி இருக்கணும்? ஒரு நல்ல மனைவியா நீ மாற முயற்சி பண்ணியிருக்கணும்."

"மித்து..... நான் தான் சொன்னேனே?"

"ஷ்...... நான் பேசி முடிச்சிக்கிறேன். அதுக்கு அப்புறம் நீ பேசு." வாயில் விரல் வைத்து அவள் பேசுவதை தடுத்தவன், மேற்கொண்டு பேசலானான்.

"சரி...... உனக்கு அது பிடிக்கலை. நானும் உன் மனம் புரிந்து நல்ல நண்பனாக இருக்க சம்மதித்தேன். அப்படித்தான் இன்று வரை இருக்கிறேன்னு நினைக்கிறேன். இல்லை நான் வேறு மாதிரி உன்னிடம் நடந்து கொண்டேனா? இல்லை ஒரு பார்வையிலாவது என் மனதை காண்பித்தேனா? இந்த இரண்டும் நடக்கவே இல்லை. பின்னே எதுக்கு இப்போ என் வாழ்வு பற்றி புதுசா யோசிக்கிறே?"

"நான் தான் சொன்னேனே. எனக்கு உன் அருகாமை போதும். இந்த வாழ்வே எனக்கு சந்தோசமாகத் தான் இருக்கிறது. இப்போ நீ நடந்து கொண்ட முறை தான் எனக்கு மிகவும் கஷ்டமா, வருத்தமா இருக்கு." என்றவனின் குரலில் இருந்த வருத்தம், வேதனை அவளை உலுக்கியது.

"அதிலும் என்னை விட பதினான்கு வயது சின்ன பொண்ணைப் போய் எனக்கு கல்யாணம் பண்ணி வைக்க நினைத்த உன் பெருந்தன்மையை என்னவென்று

சொல்வது? நீ எல்லாம் அதிகம் படிச்ச அதிமேதாவி இல்லையா? அதான் உன் மூளை இந்த மாதிரி குறுக்கே யோசிக்கிறது." என்று அவன் சொன்னதும் தான் அவளுக்கே அது புத்தியில் உரைத்தது.

"கிட்டத்தட்ட ஒரு தலைமுறை இடைவெளி அதிகம் உள்ள சின்ன பெண்ணை,ச்சீ.....ச்சீ.... உன்னிடம் இதை நான் எதிர்பார்க்கலை இளா. ஆனந்தியின் அக்கா கணவனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம் இருக்கு? ம்... சொல்லு பார்ப்போம். உன்னைப் பற்றி நான் என்னனென்ன நினைத்து இருக்கிறேன். எவ்வளவு மரியாதை வைத்து இருக்கேன்னு தெரியுமா?" என்று அவன் நெஞ்சை தொட்டுக் காண்பித்தவன்,

"ஆனால் நீ இப்படி பொய்த்து போவாய் என்று நான் நினைக்கவில்லை. அதுவும் எப்படி? அந்த குழந்தையை தத்தெடுத்துக் கொண்டு நீ வாழ்ந்து விடுவாயாமா? உனக்கு குழந்தை ஒன்று இருந்தால் அது என்னுடைய குழந்தையாகத் தான் இருக்க வேண்டும். அதுவும் உன் வயிற்றில் உதித்த என் குழந்தையாக தான் இருக்க வேண்டும்" அவன் பேச பேச அவளுக்குத் தலை சுற்றியது.

"மித்து நான் தான் சொன்னேனே. என்னால், குடும்ப வாழ்வு என்பதை நினைத்துக் கூட பார்க்க முடியல. இதில் குழந்தை எப்படி?"

"எப்பொழுதுமே அவசரம் தானா? ஆமாம், எனக்கு ஒரு சந்தேகம்...... நீ கைனகாலஜிஸ்ட் தானே? இல்லை அதுவும் உனக்கு மறந்து போச்சா என்ன?" என்று கூறியதும் அவனைப் புரியாமல் பார்த்தாள் அவன் மனையாள்.

"இப்பொழுது மருத்துவம் எவ்வளவோ முன்னேறி விட்டது. அது டாக்டரான உனக்குத் தெரியாதா? உடல் சார்ந்த உறவு இல்லாமல் செயற்கை முறையில் கருத்தரிப்பது என்று ஒன்று உண்டு அல்லவா?"

இப்பொழுது இளவஞ்சி அவனைப் பிரமிப்புடன் பார்த்தாள்.

"ஏன் நாமும் அந்த மாதிரி குழந்தை பெற்று இருக்கலாமே? உன் மனம் கொஞ்சம் மாறியதும் இதை உன்னிடம் சொல்லி, உன் சம்மதம் பெற வேண்டும் என்று இருந்தேன். அதற்குள் என்னவெல்லாமோ நடந்து விட்டது. உனக்காக ஒவ்வொன்றையும் யோசித்து பண்ணும் என்னை இன்னும் ஏன் உயிரோடு நோகடிக்கிறாய் பேபி? நான் என்ன செய்தால் உனக்கு பிடிக்கும் சொல்லு. ஆனால் உன்னை பிரியும் நிலையை மட்டும் உருவாக்கி விடாதே. அது மட்டும் என்னால் தாங்க முடியாது. ஏன்னா நான் உன்னை அந்த அளவுக்கு லவ் பண்றேன்" என்று வேதனையுடன் கூறியவன் அவளைப் பார்க்க விரும்பாமல் கண்ணை மூடிக் கொண்டான்.

இளவஞ்சி திகைப்பு பிரமிப்பு என்று உணர்வுகளால் ஆக்கிரமிக்கப்பட்டு அப்படியே நின்று இருந்தாள். அவள் மேல் மித்ராதன் வைத்து இருந்த அன்பு காதல் அவளை பிரமிக்க வைத்தது. மனைவி என்ற சொந்தத்தை எடுத்துக் கொள்ளாமலே தாய்மை என்ற பந்தத்தை தர நினைத்த அவனின் பரந்த மனம் கண்டு பிரம்மித்தாள்.

எத்தனை ஆண்கள் இது போல் இருக்கிறார்கள்? இவனுக்கு மட்டும் என்ன அத்தனை அன்பு என் மீது? எத்தகைய காதல் அவள் மீது அவனுக்கு இருந்தால் இந்த மாதிரி ஒரு முடிவு எடுத்து இருப்பான்? அவனுக்காக நான் என்ன செய்து இருக்கேன்? இது வரை அப்படி ஒன்றும் இல்லை தான். ஆனால் இப்பொழுது அவனுக்காக எதையாவது செய்ய வேண்டும். அது என்ன? என்பதை அவள் யோசிக்கும் போதே, அவனுக்காக எதையும் செய்ய அவள் மனம் தயாராக உள்ளதை, அதாவது தன் உயிரையும் தர அவள் மனம் விளைவதை உணர்ந்தாள்.

ஒருவருக்காக மற்றவர் எதையும் செய்ய தயாராக இருப்பதற்கு பெயர் என்ன? ஒருவருக்காக மற்றவர் தன் உயிரையும் விட துணிவதற்கு பெயர் என்ன? இதற்கு எல்லாம் விடை என்ன என்று கேட்டால் அவளால் சொல்ல முடியாது. ஆனால் ஏதோ ஒரு உணர்வு அவள் அடி மனதில் இருந்து எழுந்து அவளை ஆட்டுவித்தது.

காலமெல்லாம் அவன் அருகாமையில், அவன் அன்பில், அவன் பாதுகாப்பில் வாழ அவள் மனம் விரும்பியது. இத்தகைய உயர்ந்த பண்பு உடையவன் தன் கணவன் என்று அவள் மனம் பெருமிதம் அடைந்தது. என்றும் அவன் அவளுக்கு மட்டுமே வேண்டும் என்று மனதில் தோன்றியது. அவனை எதற்காகவும் விட்டு தர முடியாது என்று மனதில் தோன்றிய எண்ணத்தை அவளால் அடக்க முடியவில்லை.

தன் தாய்மைக்கு மரியாதை செலுத்திய அவனை கிடைப்பதற்கரிய பொக்கிஷமாய் எண்ணி பாதுகாக்க வேண்டும் என்று அவள் மனம் அவனை ஆராதிக்க தொடங்கியது. அதற்கு மேல் தாள மாட்டாதவளாய் கண்களில் கண்ணீர் வழிய மித்ராதன் காலில் அப்படியே தொய்ந்து போய் விழுந்தாள் இளவஞ்சி.

"ஹேய் பேபி, என்ன இது?"

இளவஞ்சியின் செயலில் மனம் பதறிப் போய் அவள் எதிரே மண்டியிட்டு அமர்ந்தான் மித்ராதன். அவளோ பதில் பேசாமல் கண்களில் இருந்து கண்ணீர் அருவியாய் கொட்ட அவனையே பார்த்த வண்ணம் அப்படியே சிலை போல் அமர்ந்து இருந்தாள்.

மித்ராதனுக்கோ உள்ளுக்குள் தவிப்பாக இருந்தது. தான் பேசியது கொஞ்சம் அதிகம் தானோ? என்ன இருந்தாலும் இப்படி பேசி இருக்க கூடாது..... பாவம் பேபி.... என்று மனதுக்குள் தன்னை கடிந்து கொண்டவன், தன்னவளுக்காக பரிதாபப் பட்டான்.

"பேபி.... ப்ளீஸ்.... அழாதே..... சாரி..... நான் இனி மேல் இப்படி பேசலை, அதே மாதிரி நீயும் இந்த மாதிரி நடந்து கொள்ளாதே என்ன? நான் என்னைக்கும் உன் பெஸ்ட் பிரண்ட் தான். ஓகேவா?"

எல்லா தவறையும் அவன் மீதே போட்டுக் கொள்கிற கணவனைப் பார்த்தவள் கண்ணில் இன்னும் கண்ணீர் பெருகியது. அவனின் பேச்சில் உணர்வு அடைந்தவளாய் அவன் கையை பற்றி,
"மித்து ..... என்னை மன்னிப்பிங்களா?"

மித்ராதன் அவள் தன் கையைப் பற்றி இருப்பதை நம்ப முடியாமல் அவளையே வைத்த கண் வாங்காமல் பார்க்க,
"மித்து, நா.... நான் உங்களை ரொம்ப படுத்திட்டேன் இல்ல? சாரி மித்து...., உங்க அன்பை புரிஞ்சுக்காம ரொம்ப படுத்திட்டேன் இல்ல. சாரி மித்து....., எனக்காக பார்த்துப் பார்த்து நடந்து கொண்ட உங்களை நான் ரொம்ப படுத்திட்டேன் இல்ல. சாரி மித்து, நான் நல்ல பெண்ணே இல்லை என்ன மித்து? இருந்து இருந்தா உங்களை புரிஞ்சு இருப்பேனே? இப்படி உங்களை வேதனைப் படுத்தி இருக்க மாட்டேனே? ப்ளீஸ் மித்து..... எனக்கு ஒரு சந்தர்ப்பம் கொடுங்க."

"உங்கள் அன்பைப் பார்க்கும் போது எனக்கும் எல்லா பெண்களை மாதிரி வாழ வேண்டும் என்று ஆசை வருது. அதுவும் உங்க அன்பில்....., உங்க காதலில்......., உங்க பாதுகாப்பில் வாழ வேண்டும் என்று எனக்கு தோணுகிறது. என்னைப் புரிந்து கொள்வீங்களா?"

மித்ராதன் நம்ப முடியாமல் அப்படியே அவள் எதிரே அமர்ந்தான். இது எப்படி சாத்தியம்? அவன் பேபி அவனைப் புரிந்து கொண்டாளா? அவனுடன் வாழ வேண்டும் என்று எண்ணுகிறாளா? யாரிடமும் எதுக்காகவும் தலை வணங்காத அவன் மனைவி, அவனை வருத்தியதற்காக வருத்தம் கொள்கிறாளா?

எதற்காகவும் அழாதவள் இன்று அவன் பொருட்டு அழுகிறாள் என்றால், அவள் மனதில் நான் இருக்கிறேன்.... அவளை நான் பாதிக்கிறேன்..... மித்ராதன் சிறகில்லாமல் வானில் பறந்தான். அவள் நான் உன்னை காதலிக்கிறேன் என்று சொல்லவில்லை தான். ஆனால் அவனுடன் வாழ அவள் விருப்பம் என்று சொன்னாளே அந்த சொல் ஒன்று போதாதா? உலகையே வென்று விட்ட உணர்வு அவனிடத்தில்..... உணர்வுகளின் பிடியில் பேச முடியாமல் இளவஞ்சியையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

"மித்து, நான் உங்களை ரொம்ப வேதனைப்படுத்திட்டேன் மித்து. எனக்கு தெரியும் உங்களால என்னை மன்னிக்க முடியாது என்று, ஆனால் நீங்களே என்னை மன்னிக்கலைன்னா வேறு யார் என்னை மன்னிப்பாங்க? ப்ளீஸ்..... மித்து.... எனக்கு ஒரு சான்ஸ் குடுத்து பாருங்களேன்."

மீண்டும் கெஞ்சிய இளவஞ்சியின் குரலில் தன்னுணர்வு பெற்றவன், மெல்ல அவள் கையை தட்டிக் கொடுத்தான்.

"என்ன பேபி இது? நமக்குள் சாரி எல்லாம் எதுக்கு? என் நன்மைக்காக தானே இவ்வளவு செஞ்ச? ஆனால் இப்பவாவது உணர்ந்தாயே என் நன்மை நீ தான்னு. உன்னை மன்னிக்காமல் வேறு யாரை நான் மன்னிக்க போறேன். அதுவும் நமக்குள் மன்னிப்புக்கு என்றுமே

அவசியம் கிடையாது. ஏழு வருஷம் உனக்காக காத்து இருந்த நான் உனக்கு ஒரு சந்தர்ப்பம் என்ன? எத்தனை சந்தர்ப்பம் வேண்டுமானாலும் கொடுப்பேன். இப்பவும் நான் சொல்றேன் எனக்காக உன்னை உன் மனதை வருத்தும் செயல்களை நீ செய்ய வேண்டாம். நீ என் பக்கத்தில் இருந்தால் போதும். பேபி நான் ஒன்று சொல்லவா? நீ நல்ல பெண்ணே இல்லை என்று சொன்னாய் இல்லையா? அதற்கு நான் பதில் சொல்லவா? நீ ரொம்ப.. ரொம்ப... நல்ல பெண் அதனால் தான் உன்னை இந்த அளவுக்கு வருத்திக் கொள்கிறாய், என் பேபி எப்பவும் நல்ல பெண் தான்."

"மித்து....... தேங்க்ஸ் மித்து"

"பேபி இன்னைக்கு நான் ரொம்ப சந்தோசமா இருக்கேன். உனக்கு தான் நான் தேங்க்ஸ் சொல்லணும்."

அதற்குள் மித்ரனின் அலைப்பேசி அழைத்தது. எடுத்துப் பார்த்தவன் அவளிடம்,
"அம்மா" என்று உரைத்து விட்டு அலைப்பேசியை உயிர்பித்து காதில் வைத்தான்.

"மித்ரா சாப்பிடணும்ன்னு எண்ணம் இருக்கிறதா இல்லையா? மணி என்னன்னு தெரியுமா?"

"ஓ.... சாரி மாம்...... டென் மினிட்ஸ்ல வந்திடறோம்." என்று அலைப்பேசியை அணைத்தவன்,

"பேபி..... மாம் சாப்பிட கூப்பிடறாங்க. இதுக்கு மேலே இங்கே இருந்தோம் ஓட்டியே மனுசனை கொன்னுடுவாங்க. குளித்து விட்டு வா போகலாம்."

இருவரும் குளித்து விட்டு கீழே இரவு உணவு உண்ண சென்றனர்.

"என்னடா..... என் மருமக பொண்ணை நீ என்ன சொன்ன? அழுத மாதிரி இருக்கு?"

அமராவதியின் கண்ணில் இருந்து இளவஞ்சியின் அழுத முகம் தப்பவில்லை. அவள் அழுததற்கு மகனைப் பிடித்துக் கொண்டார்.

அமராவதியின் அன்பில் மனம் நெகிழ்ந்த இளவஞ்சி, "இல்ல அத்தை..... அவர் மேல் எந்த தப்பும் இல்லை. நானாக தான்...."

"பொய் சொல்லாதே இளா. இவனைப் பத்தி எனக்கு நல்லா தெரியும்."

"மாம் இது அபாண்டம்..... நான் அவளை எதுவும் சொல்லவில்லை."

"பாவம் அத்தை அவர்...."

"நீ சொல்றதால விடுறேன்." மருமகளிடம் சொன்னவர் மகனிடம்,

"இளா சொன்னதால் நீ தப்பிச்ச........." சுட்டு விரலை ஆட்டி மகனை எச்சரித்தார்.

"மாம்......" என்று சிணுங்கிய மகனை,

"மகனே, குடும்ப அரசியலில் இது எல்லாம் சகஜம்டா..... உனக்கு ஒண்ணு தெரியுமா மித்ரா? இளாவாவது பரவாயில்லை. கல்யாணமான புதிதில் உன் அம்மா அழுத அழுகையில் சென்னையில் வெள்ள அபாய அறிக்கை விட்டாங்கன்னா பார்த்துக்கோ." என்று மகனை ஆறுதல் படுத்துவது போல் மனைவியை வாரினார் அருணகிரி. அவரின் கேலியில் இளாவுக்குமே சிரிப்பு வந்தது.

"ம்..... போதுமே.... என்னை  பேசுவது என்றால் உங்களுக்கு அல்வா சாப்பிவது மாதிரின்னு எனக்கு தெரியாதா? இளா முகத்தில் சிரிப்பை பார்த்ததால் உங்களை சும்மா விடறேன், இல்லை......."

அமராவதி சொல்லியதும் தாமதம் மீண்டும் அங்கே சிரிப்பலை எழுந்தது.

உணவு முடிந்து தங்கள் அறைக்கு வந்ததும் மித்ராதன் இளவஞ்சியைப் பார்த்து,

"குட்நைட் பேபி" என்றவாறு மடி கணினியை எடுத்துக் கொண்டு கட்டிலில் அமர்ந்தான். ஆனால் அவளோ தன் அறைக்கு போகாமல் அவன் அருகே வந்து நின்றாள். என்ன? என்பது போல் அவளைப் பார்த்தான் மித்ராதன்.

"மித்து...."

"ம்...... சொல்லும்மா........"

"நான் சொல்றேன்னு தப்பா எடுத்துக்க மாட்டிங்களே.....?"

"பேபி, நீ என்ன சொன்னாலும் நான் தப்பா எடுத்துக்க மாட்டேன், சொல்லு?"

"மித்து...... எனக்கு காதலைப் பத்தி எதுவும் தெரியாது. அந்த உணர்வுகளை எப்படி வெளிப்படுத்தணும் என்று தெரியாது. மொத்தத்தில் காதல் உணர்வு ரொம்ப கம்மி. ஆனால் எனக்கு உங்களைப் புரிந்து கொள்ளணும்.... அதுக்கு நான்..... நீங்க தான் எனக்கு காதலை புரிய வைக்கணும்."

இளவஞ்சியின் குனிந்த தலையைப் பார்த்து மித்ராதனுக்கு சிரிப்பு வந்தது. ஆனாலும் அதை அடக்கியபடி,

"பேபி ..... உன்னிடம் இதை நான் எதிர்பார்க்கலை. நான் மட்டும் என்ன காதலுக்காக யுனிவர்சிட்டி போய் படித்து கோல்ட் மெடல் வாங்கிட்டா வந்தேன்? ம் ..... என்ன இது?"

இளவஞ்சி அவனின் பதிலில் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தாள். ஆனால் அவன் பேசியதற்கு எதிர்மாறாய் அவன் கண்கள் சிரித்தது.

"ஹேய்.... பேபி பயந்துட்டியா? சும்மா விளையாடி பார்த்தேன். காதல் என்பது ஒரு உணர்வுன்னு நீயே சொல்லிட்ட. அது தானா தான் வரணும். உனக்கு என் மேல் அந்த உணர்வு நிச்சயம் வரும். எனக்கு அந்த நம்பிக்கை

இருக்கு. மனதை போட்டுக் குழப்பிக்காம போய் தூங்கு. போ பேபி"

அவன் சொல்லியும் அங்கு இருந்து போகாமல் அவனையே பார்த்துக் கொண்டு இருந்த இளவஞ்சியைப் பார்த்து,

"நான் தான் சொல்றேன்ல. உன்னை கஷ்டப்படுத்தும் எதுவும் நீ செய்ய வேண்டாம். போடா ... போய் நிம்மதியா தூங்கு."

"மித்து...... உங்க மனதில் என் மேல் காதல் இருக்கு தானே?"

"ஹேய் பேபி...... அதுல உனக்கு என்ன சந்தேகம்?"

"அப்போ எதுக்கு அதை வெளிக்காட்டிக்காம இருக்கீங்க? நீ காட்டினா தானே எனக்கும் புரியும். நீங்க இப்படி நண்பன் நண்பன்னு சொன்னா...... எனக்கும் பிரண்ட் பீலிங் தான் வருது."

இளவஞ்சி சொல்ல வந்தது புரிந்ததும் மித்ராதன் முகம் பிரகாசம் ஆனது.

"பேபி..... நீ இந்த போடு போடுவன்னு நான் எதிர் பார்க்கவேயில்லை. இது எப்படி எனக்கு புரியாம போச்சு"

"ம்..... அதுக்கு இங்கே இருக்கணும்."

தன் தலையை சுட்டிக் காண்பித்தாள் இளவஞ்சி.

"ஒரு நாளுக்குள் இத்தனை முன்னேற்றமா? பேபி நீ இந்த ஸ்பீடில் போனேன்னு வைய், என்னால் தாங்க முடியாதும்மா சாமி" என்று அவளை கிண்டலடித்தவன்,

"பேபி..... நீ கேட்டு நான் என்றைக்கு மறுத்து இருக்கேன். நாளையில் இருந்து பாரு. நீயே அய்யாவோட பெர்பார்மன்ஸ் பார்த்து காதல் மன்னன் பட்டம் கொடுக்க போற."

"போங்க..... மித்து" என்று சிணுங்கியவளாய் தன் அறைக்கு ஓட்டம் எடுத்தாள் அவன் மனையாள்.

மித்ராதனோ அதற்கு மேல் வேலை செய்ய மனம் இல்லாதவனாய் மடிகணினியை மூடி வைத்து விட்டு படுக்கையில் சாய்ந்தான். இன்று நடந்தது எல்லாம் மனதில் படம் போல் ஓட, மனம் மகிழ்ச்சியில் துள்ள, தூக்கம் அவனை தழுவ வெகு நேரம் ஆனது.

"பேபி..... எழுந்திரு..... என்ன இவ்வளவு நேரம் தூக்கம்?"

மித்ராதன் குரலில் அடித்து பிடித்து எழுந்தவள் மணியை பார்த்தாள். அதிகாலை ஐந்து என்று காட்டியது.

"குட்மார்னிங்..... சீக்கிரம் கிளம்பு"

"குட்மார்னிங் ..... இவ்வளவு சீக்கிரம் எங்கே?"

இன்னமும் தூக்கம் கலையாதவளாய் கேட்டாள் இளவஞ்சி.

"ஹேய் தூங்குமூஞ்சி, எழுந்திரு ......வாக்கிங் போகலாம்?"

"நான் வரல. நீங்க போங்க." போர்வையை இழுத்துப் போர்த்திக் கொண்டு மறுபடியும் தூங்க ஆரம்பித்தாள்.

"நீ தானே சொன்னே? என் காதலை நான் காட்டிக் கொண்டே இருக்கணும்ன்னு. இப்ப நீயே வர மாட்டேன்னு சொன்னா எப்படி?" மித்ராதனின் வார்த்தையில் சட்டென்று எழுந்தாள்.

"மித்து, டென் மினிட்ஸ்..... வந்துடறேன்."

தனக்காக வேகமாக குளியலறை நோக்கி ஓடியவளைக் கண்டு அவன் மனம் கனிந்தது.

"வாவ்..... சென்னையில் இவ்வளவு அழகான இடமா? சூப்பர்."

அழகிய தென்னந் தோப்பை சுற்றி நடந்து கொண்டே மித்ராதனிடம் கேட்டாள் இளவஞ்சி.  கைகள் இரண்டும் கன்னம் தாங்கி இருக்க கண்களை அகல விரித்து ஆச்சரியப் பட்டவளை கண் இமைக்காமல் பார்த்தான்.

"இந்த தோப்பில் நாம் இருவரும் மனம் விட்டு பேசிக் கொண்டு நடந்து போக வேண்டும் என்று என்னுடைய நெடு நாள் கனவு இன்னைக்கு தான் நனவாகி இருக்கு பேபி."

கண்களிலும் குரலிலும் காதல் வழிய சொன்னவனைக் கண்டு இளவஞ்சி நெஞ்சம் உருகியது. கடைசி வரை இவன் அன்பை புரிந்து கொள்ளாமல் போய் விட்டோமே என்று. இதற்கு எல்லாம் என்ன செய்து அவள் ஈடு கட்ட போகிறாள்? அவளுக்கே தெரியவில்லை.

"மித்து..... எவ்வளவு வேலை இருந்தாலும் தினமும் இங்கே வந்து விடணும். ஓகேவா?" அவளின் குரல் கம்மி இருந்தது அவனுக்குப் புரிந்தது.

"இனி அதை எல்லாம் நான் மிஸ் பண்ணவே மாட்டேன் பேபி..... சரி வா.... அந்த பக்கம் போய் பார்க்கலாம். ரோஜா தோட்டம் இருக்கு."

பேச்சை மாற்றி அவளை வேறு பக்கம் அழைத்து போனான். விடிந்தும் விடியாததுமாய் இருந்த அந்த காலை வேளையில் அவனுடன் பேசிக் கொண்டு நடப்பது இளவஞ்சிக்கு சுகமானதாக தான் இருந்தது.

நடை பயிற்சி முடிந்து வீட்டிற்கு வந்து சிறிது ஓய்வு எடுத்து விட்டு, குளித்து வந்தவளின் கை பிடித்து அவள் அறைக்கு அழைத்து வந்தான் மித்ராதன்.

"என்ன மித்து?"

அவன் பதில் பேசாமல் அங்கு இருந்த பெரிய அலமாரி ஒன்றை திறந்தான். அது எப்பொழுதும் மூடியே இருக்கும். அவளுக்கு என்று வேறு ஒரு அலமாரி இருந்ததால் அவளும் அதை திறக்க நினைக்கவில்லை. மித்ராதன் அதை திறந்ததும் இளவஞ்சி கண்கள் அகல விரித்து திகைத்து போய் அப்படியே நின்று விட்டாள்.

அதில் இருந்தது எல்லாமே பெண்கள் உடைகள் . புடவைகள், சுடிதார், ஜீன்ஸ், அதற்கு ஏற்றார் போல் கைப்பைகள், காலணிகள். உள்ளே இருந்த மற்றொரு

கதவை திறந்தான். அங்கு இருந்ததை பார்த்ததுமே புரிந்து போனது. அவை எல்லாம் நகைப் பெட்டிகள் என்று.

"மித்து....."

அவள் பார்வை புரிந்து,
"எல்லாம் உன்னுடையது தான். நம் திருமணம் முடிவான தினத்தில் இருந்து உனக்காக நான் வாங்கியவை தான் இது. உன்னிடம் கொடுக்க சரியான சந்தர்ப்பம் அமையவில்லை. என்னுடைய பரிசை ஏற்றுக் கொள்வாயா பேபி?"
குரலில் எதிர்பார்ப்புடன் அவளைப் பார்த்து கேட்டான்.

"மித்து, இது எல்லாம் கொடுத்து தான் உங்க அன்பு எனக்கு புரியணும் இல்ல."

"அப்போ உனக்கு வேண்டாமா பேபி?"
அவன் குரலில் இருந்த வலி இளவஞ்சியைப் பாதித்தது.

"நான் அப்படி சொல்லலியே?"
தலை சரித்து வினவியவளைக் கண்டு அவன் முகம் மலர்ந்தது.

"அப்படி என்றால் சரி..... ம்..." என்று அலமாரியில் எதையோ தேடியவன்,
"இந்தா இன்றைக்கு இந்த புடவை கட்டு. அதற்கு மேட்சிங்கா ...... ம்... இந்த நகை பொருத்தமாக இருக்கும்."

"தேங்க்ஸ் மித்து." என்று வாங்கியவள்,
"ரொம்ப பழக்கமோ?"

"என்ன பழக்கம்?"

"இல்ல இவ்வளவு அழகா செலெக்ட் பண்ணி இருக்கிங்களே? அனுபவமோ என்று கேட்டேன்."

"ம்...... நல்லா கேட்டே போ..... அவனவன் ரெண்டு மூணு கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோசமா இருக்கான். நான் ஒண்ணே ஒண்ணு பண்ணிட்டுக் கிட்டு தவிச்சுக்கிட்டு

இருக்கேன். இதில் நீ வேற" என்றவன் குரலில் அடக்க மாட்டாமல் இளவஞ்சி வாய் விட்டு சிரித்தாள். அவளின் சிரிப்பில் மனம் கனிந்தவன் தானும் உடன் சேர்ந்து சிரித்தான்.

"சரி...... நீ உடை மாற்று" என்று வெளியே சென்றவனின் கண்ணியம் கண்டு மனதில் பெருமிதம் அடைந்தாள்.

புடவையை உடுத்திக் கொண்டு வந்தவளின் அழகு கண்டு பிரமித்து போய் கட்டிலில் அமர்ந்து இருந்தவன் தன்னையும் அறியாமல் எழுந்து நின்றான். இளவஞ்சி அழகு தான், ஆனால் இன்று ஏனோ அவள் அழகு கூடி தெரிந்தது.

"பேபி இந்த புடவையில் நீ எவ்வளவு அழகா இருக்கே தெரியுமா?" மித்ராதனின் பார்வையிலும் பேச்சிலும் லேசாக முகம் சிவந்தது இளவஞ்சிக்கு.

யாரும் அவளை இது போல் பார்த்தது இல்லை, ரசித்தது இல்லை. அப்படியே யாரும் பார்த்து இருந்தாலும் அவள் அதை என்றுமே கண்டு கொண்டது இல்லையே? முதன் முறையாக அவனின் வார்த்தை அவளின் மனதை ஏதோ செய்தது.

"மித்து.... போகலாமா?"

அவளின் பேச்சிலேயே தன்னுணர்வு அடைந்தவன், "ம்.... போகலாம் பேபி." என்று அவளுடன் இணைந்து நடந்தான்.

எப்பொழுதும் அலுவலகம் செல்லும் வழியில் செல்லாமல் கார் வேறு பாதையில் செல்வதை கண்டதும், "மித்து, எங்கே போறோம்?'

"கோவிலுக்கு...... இன்று தான் புதியதாய் வாழ்க்கையை தொடங்கி இருக்கிறோம். அதற்காக தான்" இளவஞ்சி பதில் பேசவில்லை. ஆமோதிப்பதாய் தலையை ஆட்டினாள்.

கோவிலில் கடவுளைப் பிரார்த்தித்த போது இருவர் மனதிலும் இனி வரும் வாழ்வு நன்றாக இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளே இருந்தது. மித்ராதன் கோவிலில் கொடுத்த குங்குமத்தை எடுத்து அவள் நெற்றி வகிட்டில் வைத்து,
"பேபி..... நீ எப்பொழுதும் இப்படி குங்குமம் வைக்க வேண்டும். இப்போ நீ எவ்வளவு அழகாய் இருக்கிறாய் தெரியுமா?"

அவனின் மெல்லிய தீண்டல் அவள் மனதை நிறைத்தது.

மருத்துவமனை வந்த பின்பும் அவன் கூறிய வார்த்தைகள் அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருந்தது.
மின்தூக்கியில் வரும் போது அங்கு இருந்த கண்ணாடியில் அவள் முகம் பார்த்தாள். என்றும் இல்லாத வண்ணமாக அவள் முகம் மலர்ந்து புன்னகையுடன் பிரகாசித்தது. நெற்றியில் அவன் வைத்து விட்ட குங்குமம் அவளுக்கு என்றும் இல்லாத அழகை தந்தது. தன்னையே தனக்கு புதிதாக பார்ப்பது போல் இருந்தது அவளுக்கு. அவள் வாய் அவளையும் அறியாமல் முணுமுணுத்தது.

"தேங்க்ஸ் மித்து......"

வேலைக்கு வந்த சில மணி நேரங்களில் மித்ராதனிடம் இருந்து குறுஞ்செய்தி வந்ததது.

"ஐ லவ் யூ பேபி .... யூ டூ?"

சிரித்தபடி பார்த்து இருந்தவள், புன்னகை முகம் ஒன்றை திருப்பி அனுப்பினாள். உடனே அவனிடம் இருந்து பதில் வந்தது.

"உணர்ந்தாயா அன்பே..... என் காதலை?"

அதற்கும் புன்னகையையே பதிலாக அனுப்பினாள். அதன் பின் வேலை நெருக்கடியில் அலைப்பேசியை மறந்து போனாள். உணவு இடைவெளியின் போது தான் அதை எடுத்துப் பார்த்தாள்.
"என்ன செய்கிறாய் பேபி?",

"உன் நியாபகமாய் இருக்கிறது பேபி",  "பெர்மிஷன் போட்டு வருகிறாயா?" இறுதியாக
"சாப்பிட்டாயா?" என்று வந்து இருந்தது. அதைப் பார்த்து அவளுக்கு சிரிப்பு வந்தது.

"நான் சாப்பிட்டு விட்டேன். ஒழுங்கா சாப்பிட்டு விட்டு வேலையை பாருங்க." செய்தியை அனுப்பி விட்டு அவனின் பதிலுக்காக அலைப்பேசியை பார்த்துக் கொண்டு இருந்தாள்.

"நீ தானே சொன்னாய். இப்ப நீயே இப்படி சொல்றியே? உன் கூட டூ" என்று வந்த பதிலைப் பார்த்து அவளுக்கு மீண்டும் சிரிப்பு தான் வந்தது.

அன்றைக்கு இரவு தங்கள் அறைக்கு போகவே தயங்கினாள் இளவஞ்சி. மித்ராதனின் பார்வைகள் செயல்கள் எல்லாமே அவளுக்கு புதிதாக இருந்தது. அதுவும் இரவு உணவின் போது அவன் பெற்றோருக்கு தெரியாமல் அவன் அவள் கையைப் பிடித்து உணவை எடுக்க வைத்து அவன் வாயில் ஊட்டி விட செய்து விட்டான். அவனின் செயலில் இளவஞ்சிக்கு தான் வியர்த்து விறுவிறுத்து போய்விட்டது. அவனோ அவளைக் கண்டு கண் சிமிட்டி சிரித்தான். அதைக் கண்டு அவள் தான் தலையை குனிய வேண்டியதாகி விட்டது.

அவள் அறைக்குள்ளே நுழைந்ததும் மித்ராதன் அவள் எதிரில் வந்து நின்றான்.

"பேபி..... தேங்க்ஸ் பேபி. இன்றைய நாள் நல்ல நாளாக அமைந்ததற்கு ரொம்ப தேங்க்ஸ். இந்த உலகத்திலேயே சந்தோசமானவன் நான் தான் என்பேன். அந்த அளவுக்கு என்னை நீ சந்தோசப்படுத்தி இருக்கிறாய்." என்றவன் அவள் கையில் பெரிய சாக்லேட்டை வைத்தான்.

"தேங்க்ஸ்........ எல்லாத்துக்கும்." என்றவள் முகம் லேசாக சிவந்தது.

"ம்.... அப்படியா பேபி...... என் காதலை நான் நன்றாக உணர்த்தினேனா? நீ உணர்ந்தாயா? இல்லை என்றால் சொல் நாளையில் இருந்து இன்னும் நன்றாக உணர்த்துகிறேன்."

அவனின் வார்த்தையில் தான், அவளுக்கு தான் சொல்லியது புரிந்தது.

"குட்நைட் மித்து......" என்றவள் அவன் முகம் பார்க்காமல் தன் அறைக்கு ஓடினாள்.

"குட்நைட் பேபி" என்று பதிலுக்கு சொன்னவன் அவளின் ஓட்டத்தைக் கண்டு வாய் விட்டு நகைத்தான்.

'"பேபி..... நீ இப்போ கேம்ப் போய்த்தான் ஆகணுமா?"

இளவஞ்சி தன் உடமைகளை பிரயாணத்திற்காக எடுத்து வைத்துக் கொண்டு இருந்தவள், அவன் புறம் திரும்பினாள்.

"மித்து ...... இந்த கேம்ப் முதல்லிலேயே பிளான் பண்ணியது. இப்போ போய் நான் வர மாட்டேன் என்றால் நல்லா இருக்குமா? என் பணியில் இது எல்லாம் செய்து தான் ஆகணும். செய்ய மாட்டேன்னு சொல்ல முடியாது, சொல்லவும் கூடாது. ப்ளீஸ் மித்து என்னை புரிந்து கொள்ளுங்கள்."

மித்ராதன் அவளைத் தவிப்பாய் பார்த்தான். அவனின் தவிப்பு அவளுக்கு புரியுமா? இல்லை புரியாதோ? அவனால் அவளை விட்டு ஒரு நொடி கூட இருக்க முடியாது. இந்த நிலையில் அவள் அவனை விட்டு ஐந்து நாள் மருத்துவ முகாமுக்கு போகப் போகிறேன் என்றால்...... அவன் நிலை ..... ? நினைத்துப் பார்க்கவே அவனால் முடியவில்லை. அவளில்லாமல் அவன் தனித்து இருப்பதா?

முடியவே முடியாது? தன் ஏக்கத்தை, தவிப்பை கண்களில் தேக்கியபடி அவளைப் பார்த்தான்.

"பேபி.... ப்ளீஸ்."

அவனின் குரலில் இருந்த தவிப்பு அவளுக்கு புரிந்து தான் இருந்தது. காதல் இவ்வளவு தவிப்பு கொடுக்குமா? என்று அவளுக்கு புதிராக இருந்தது. அவனின் தவிப்பு அவளுக்கு இல்லையே? அவன் அவளின் காதலனாக மாறி இதோ ஒரு மாதம் ஓடி விட்டது. அவளுக்கு அவனைப் பிடித்து தான் இருந்தது இல்லை என்று சொல்ல முடியாது. ஆனால் அவனின் இந்த தவிப்பு, ஏக்கம் அவளுக்கு ஏன் வரவில்லை? அவளுக்கே அது ஏன் என்று தெரியவில்லை?

"மித்து, நான் எங்கும் போய்விட மாட்டேன். சமத்தா ஐந்து நாள் கேம்ப் முடிந்ததும் உங்களிடமே திரும்பி வந்து விடுவேன். போதுமா?"

அவனின் மன நிலை மாற்ற வேண்டி தான் அதை சொன்னாள். ஆனால் அதுவோ அவனை இன்னும் வேதனைப் படுத்தியது.

"பேபி, அன்றைக்கு நான் சொல்லியதை நீ மறக்க வில்லை தானே? அன்று ஏதோ தெரியாமல் பேசி விட்டேன்."

என்று? யோசித்தவளுக்கு புகழுடன் மருத்துவ முகாம் பற்றி பேசிக் கொண்டு இருக்கும் போது மித்ராதன் குறுக்கிட்டு பேசியது நியாபகம் வந்தது.

"ஐயோ மித்து... அதை நினைத்து நான் சொல்லவில்லை, சும்மா ஜோக்கிற்கு தான் அப்படி சொன்னேன். உங்களைப் பத்தி எனக்கு தெரியாதா என்ன? ப்ளீஸ் மித்து..... சிரித்த முகமாய் வழியனுப்புங்க."

அவளின் சொல்லுக்கு கட்டுப்பட்டு மனதை திடப்படுத்திக் கொண்டு வழியனுப்பினான்.

ஆனால் பேருந்து கிளம்புவதற்கு முன் அவள் கையை பிடித்துக் கொண்டு,
"ஐ மிஸ் யூ பேபி" என்று சொல்லிக் கொண்டே இருந்தான்.

எத்தனை தடவை சொன்னான் என்றால் அது அவனுக்கே நினைவில் இல்லை. அவனுக்கு அவ்வளவு நேரம் தைரியமூட்டி விட்டு பேருந்து கிளம்பும் போது இளவஞ்சிக்கும் ஏதோ ஒரு உணர்வு நெஞ்சையும் வயிற்றையும் சேர்த்து பிசைந்தது. அது என்ன உணர்வு? அவளுக்கு புரியவில்லை.

இளவஞ்சிக்கு மருத்துவ முகாம் வந்த முதல் நாளே பகல் பொழுதெல்லாம் வேலையே சரியாக இருந்தது. இரவு தன்னை சுத்தப் படுத்திக் கொண்டு உணவு உண்ண புகழ் அமுதாவுடன் சென்றாள். புகழ் - அமுதா காதல் இப்பொழுது எல்லோருக்குமே தெரியும். இரு வீட்டிலும் திருமணத்திற்கு

சம்மதம் சொல்லி விட்டதால் இருவரும் காதல் வானில் சிறகடித்து பறந்தனர்.

மூவரும் உணவு எடுத்துக் கொண்டு ஒன்றாக அமர்ந்தனர். புகழ் தன் கையை வைத்துக் கொண்டு சும்மா இருக்காமல் அமுதாவிற்கு முதல் வாய் உணவை ஊட்டி விட்டான்.

"டாக்டர் சார், இளா இருக்கிறாள், கொஞ்சம் அடக்கி வாசிங்க."

"முதல்ல இந்த டாக்டர் சார்ன்னு கூப்பிடறதை நிறுத்து, என்னமோ வயசான பீலிங் வருது" என்று அமுதாவை முறைத்தவன், இளவஞ்சியிடம் திரும்பி,
"வஞ்சி வீட்டில் மித்ரா ஊட்டி விடுவது வேறு மாதிரி இருக்கும். அப்படித்தானே .... வஞ்சி?"

"டா... சாரி .... புகழ் அது எப்படி ஊட்டி விடுறது வேறு மாதிரி இருக்கும்? எல்லோரும் கையால் தானே ஊட்டி விடுவாங்க."

அமுதா அதிபுத்திசாலியாய் கேள்வி கேட்டாள்.

"அடக் கடவுளே, உன்னையெல்லாம் வைத்துக் கொண்டு நான் என்ன தான் செய்ய போகிறேனோ?" தலையில் கை வைத்தான் புகழ்.

"இளா, நான் கேட்பதில் என்ன தவறு? நீயே சொல்லு......" அமுதா இளாவை துணைக்கு இழுத்தாள்.

இளவஞ்சியின் முகம் ரத்த நிறம் கொண்டது. அவர்கள் சொல்லியது போல் இல்லை என்றாலும் அவள் கணவனும் அவளை ஊட்டச் செய்து தானும் அவளுக்கு ஊட்டி விட்டு தான் உணவையே உண்பான். இப்பொழுது அவன் ஊட்டாமல் அவளுக்கு உணவு உள்ளே செல்ல மறுத்தது. உணவை அளைந்து கொண்டு அப்படியே அமர்ந்து இருந்தாள்.

"என்ன இளா சாப்பிடலை?" அமுதா கேட்கவும் தான், தான் உண்ணாமல் இருப்பதை உணர்ந்தாள்.

"ப்ச்ச்சு..... சாப்பிட பிடிக்கல அமுதா..." என்றவள் அதற்கு மேல் உண்ணாமல் எழுந்தாள். அவளுடன் மற்ற இருவரும் எழுந்தனர்.

புகழ், அமுதாவிற்கு தனிமை கொடுக்க எண்ணி இளவஞ்சி அவர்களை விட்டு விலகி வேறு பக்கம் நடந்தாள். ஆனாலும் அவர்களின் கொஞ்சல் கெஞ்சல் எல்லாம் அவள் காதில் விழுந்து கொண்டு தான் இருந்தது. அதிலும் புகழ் அமுதா கன்னத்தில் கொடுத்த முத்தம் பார்த்து விதிர்த்து போய் அவர்களை விட்டு இன்னும் தூரம் சென்றவள் மனம் மித்துவுக்காக ஏங்கியது.

மித்ராதன் ஒவ்வொரு நாளும் அவளுக்கு தன் காதலை உணர்த்திய போதும் மறந்தும் அவளை அணைத்ததோ, முத்தம் கொடுத்ததோ இல்லை. நடக்கும் போது அவள் கையைப் பிடிப்பான் அவ்வளவு தான். மற்றபடி அவளிடம் தள்ளி நின்றே பழகினான். அவனின் கண்ணிய காதல் நினைவுக்கு வந்து அவனைப் பார்க்க வேண்டும் என்ற எண்ணத்தை தூண்டியது.

காலையில் எழுந்ததில் இருந்து இரவு படுக்கும் வரை அவன் பேசும் ஒவ்வொரு வார்த்தைகளையும் எண்ணி எண்ணி பார்த்தவள் மனம் அவனை காண ஆவல் கொண்டது. அவனின் அருகாமையை அவள் மனம் நாடியது. மித்து..... மித்து...... என்று அவள் மனம் சத்தமாய் புலம்பியது. அவளையும் அறியாமல் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. வந்த முதல் நாளே இப்படி என்றால் இன்னும் நான்கு நாட்கள் இருக்கிறதே என்று நினைத்தவளுக்கு பெருமூச்சு வந்தது.

அவளின் நினைவை அறிந்தோ என்னவோ மித்ராதன் அவளுக்கு அலைப்பேசியில் அழைத்தான். அவன் அழைப்பை கண்டவள் மனம் துள்ளியது.

"ஹலோ......" என்றவள் குரலில் இருந்த ஏக்கம் தவிப்பு எல்லாம் அவள் கணவனுக்குமே தெரிந்து தான் இருந்தது. ஆனால் மனைவி அதை உணர்ந்தாளோ இல்லையோ என்ற நினைப்பில் அவன் தவித்தான். ஆனாலும் அவன்,

அவள் அருகில் இல்லாத ஏக்கத்தை வெளிப்படுத்த தவறவில்லை.

இளவஞ்சியோ வேறு எதுவும் பேச தோன்றாமல் அவன் பேசுவதை மட்டும் கேட்டுக் கொண்டு இருந்தாள். அவன் அழைப்பை வைத்த பின்பும் அலைபேசியையே ஆசையுடன் பார்த்துக் கொண்டு இருந்தாள்.

மித்ரனின் நினைவுகளின் தாக்கத்தில் மறுநாள் இளவஞ்சிக்கு காய்ச்சல் வந்து விட்டது. அவனை நினைத்து ஏங்கி ஏங்கியே உடல் நெருப்பாக கொதித்தது. எழக் கூட முடியாமல் இருந்த அவளின் நிலை கண்டு புகழ் அவளை வீட்டிற்கு அனுப்பி வைத்தான். இளவஞ்சிக்குமே மித்ராதனை பார்க்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்ததால் அவளும் அதை மறுத்து பேசவில்லை.

வீட்டிற்கு வந்தவளை அமராவதி தான் வரவேற்றார்.

"என்ன இளா, ஐந்து நாள்ன்னு சொல்லிட்டு போன அதுக்குள்ளே வந்துட்ட?" என்று அவள் அருகில் வந்தவர் அவள் முகம் சரியில்லாமல் இருப்பதை கண்டு, அவள் நெற்றியில் கழுத்தில் கை வைத்து பார்த்தார்.

"என்ன இளா காய்ச்சல் கொதிக்குது? மாத்திரை போட்டாயா?"

"ம்.... போட்டேன் அத்தை" அவருக்கு பதில் கூறினாலும் கண்கள் கணவனை தான் தேடியது.

"அப்படின்னா சரி..... ரூமில் போய் ரெஸ்ட் எடு. தூங்கி எழுந்ததும் கஞ்சி போட்டு எடுத்துட்டு வர்றேன்."

"அத்தை அவர்..... எங்கே?" மகனை தேடிய மருமகளின் பார்வையில் அமராவதிக்கு சிரிப்பு வந்தது.

"நீ வர ஐந்து நாளாகும்ன்னு அவன் சூரத் வரை போயிருக்கானே. உன்னிடம் சொல்லலியா?"

"இல்லையே அத்தை..."

"நீ வருத்தப் படுவேன்னு சொல்லாம இருந்திருப்பான். சரி நீ போய் படும்மா"

அறைக்கு வந்ததும் இளவஞ்சிக்கு அழுகை அழுகையாய் வந்தது. அவனில்லாத வெறுமை அவளைத் தாக்கியது. உடல் நிலை சரியில்லாத அவள் மனம் அவன் அருகாமையை நாடியது. இந்நேரம் அவன் அருகில் இருந்தால் எப்படி தனக்காக துடித்து போயிருப்பான்? எப்படி கண்ணும் கருத்துமாக அவளை கவனித்து இருப்பான்? சிறிது நேரம் அழுகையில் கரைந்தவள் மனம் அதன் பின்பு அவன் மீது கோபம் கொண்டது.

அவனை பார்க்க ஆசையுடன் நான் வந்தால் அவன் வடக்கே ஓடிப் போய் விட்டானா? அதுவும் ஒரு வார்த்தை என்னிடம் சொல்லவில்லை. உன்னை பார்க்காமல் இருக்க முடியவில்லை பேபின்னு புலம்ப மட்டும் தெரியும். ஆனால் இங்கே வந்து பார்த்தா தானே தெரியுது இவன் லட்சணம்? வரட்டும் இந்த இளவஞ்சி யாருன்னு காட்டறேன். மனதில் கருவிக் கொண்டவள் படுக்கையில் விழுந்தாள். அதன் பின் அவன் அழைப்பை அவள் எடுக்கவே இல்லை.

மித்ராதன் பயந்து போய் அமராவதியை அழைத்து பேசினான். அவன் அன்னை அவள் இங்கே வீட்டில் இருப்பதாக சொன்னதும் தான் அவனுக்கு போன உயிர் திரும்பி வந்தது. அதுவும் காய்ச்சலோடு இருப்பதாக கூறவும் அங்கே அவனுக்கு வேலை ஓடவே இல்லை. அதனால் அவளை சீக்கிரமே பார்க்க விரும்பி வேலையை அவசரமாக முடித்தவன் நான்காம் நாள் காலையில் வீட்டிற்கு வந்து சேர்ந்தான்.

"குட்மார்னிங் பேபி"

காலை வணக்கத்துடன் தன் எதிரில் நின்றவனைக் கண்டு கண் இமைக்க மறந்து அவனையே பார்த்தாள். இமைத்தால் எங்கே அவன் காணாமல் போய் விடுவானோ என்ற பயமோ?

"ஹேய் பேபி, என்ன ப்ரீஸ் ஆகிட்ட?"

அவன் தன் கையை அவள் முன்னே ஆட்டினான். அவனின் செயலில் தன்னுணர்வு பெற்றவள், "எங்கே போனிங்க?" கோபமாய் அவனை பார்த்தாள். அவளின் இந்த கோபம், அதுவும் அவன் மீது ஏற்பட்ட உரிமை கோபம் அவனுக்கு புதிது. அவளின் கோபம் ஒருபுறம் மகிழ்ச்சியைக் கொடுத்தாலும் மறுபுறம் அது அவன் மனதை பாதித்தது.

"அட.... என் பேபிக்கு கோபமெல்லாம் வருமா ம்....?" என்று ஒற்றை புருவம் உயர்த்தி வினவியவன், அவளின் முகம் திருப்பலை கண்டு அவள் முன் வந்து நின்றான்,

"இந்த வேலை ரொம்ப நாளா செய்யணும்ன்னு நினைத்து தள்ளிப் போட்டுக் கொண்டே இருந்தேன். ஏன்னா .... உன்னை விட்டு என்னால் போக முடியவில்லை. நீயும் கேம்ப் என்று கிளம்பி போனதும் சரி நாமும் இந்த வேலையை முடித்து விட்டு நீ வருவதற்குள் வந்து விடலாம் என்று தான் போனேன் பேபி. நீ இப்படி திடீர்ன்னு வந்து நிப்பேன்னு எனக்கு என்ன தெரியும்? காய்ச்சல் எப்படி இருக்கு பேபி?"

அவள் நெற்றியில் கை வைத்து பார்க்க வந்தவனின் கையை தட்டி விட்டவள்,

"உன்னை பார்க்காம இருக்க முடியலைன்னு வாயால் மட்டும் தான் சொல்றது. நான் அங்கே போனதும் நீங்க பாட்டுக்கு வெளியூர் போயிட்டிங்க இல்ல? நான் உங்களைப் பார்க்க ஓடி வந்தா, ஆளைக் காணோம். எனக்கு எப்படி இருக்கும்? எல்லாம் வாய் சொல் மட்டும் தான், செயலில் இல்லை அப்படித்தானே? அதுவும் என்னிடம் சொல்லாமல் கூட  போயிட்டிங்க, அவ்வளவு தான் என் மேல் உங்களுக்கு காதலா?"

"நான் என்னமோ உங்களை அலைப்பாயுதே மாதவன் மாதிரி என்னைப் பார்க்க வருவிங்கன்னு நினைச்சா நீங்க ஊரை விட்டு ஓடிப் போய்ட்டிங்க..."

பேசிக் கொண்டே ஒவ்வொரு வார்த்தைக்கும் சராமாரியாக அவனை அடித்தாள்.

ஒரு கட்டத்திற்கு மேல் அடி பொறுக்காதவனாய் மித்ராதன் அவள் கையை பிடித்து தடுத்து அவளை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். அவளோ அந்த செயலை எதிர்ப்பார்த்தவளாய் அவன் மார்பில் முகம் புதைத்து விக்கி விக்கி அழுதாள். மித்ராதன் அவள் அழுது ஓயும் வரை தலையை தடவிக் கொடுத்து சமாதானம் செய்து கொண்டு இருந்தான். அவளின் அழுகை குறைந்தது போல தோன்றியதும் அவள் காதுக்கு அருகில் குனிந்து,

"பேபி..... நான் ஒரு ரகசியம் சொல்லவா?"

"ம்......."

"எனக்கு காதல் உணர்வே கிடையாது, எனக்கு காதல்ன்னா என்னன்னே தெரியாதுன்னு ஒரு பேபி சொல்லிச்சு, ஆனால் அந்த பேபியே இப்போ காதலிக்குது." ஆச்சரியமாக அவனைப் பார்த்தவளை,

"அந்த பேபி யாரை காதலிக்கிறாள் என்று தெரியுமா? மித்து..... உன் மித்துவை...!!!"

"மித்து....." நம்ப முடியாமல் அவனைப் பார்த்தாள்.

"எஸ்..... மித்துவே தான்"

"நான் உங்களை..... எப்படி?"

"இப்போ நீ சொன்ன ஒவ்வொரு வார்த்தையும் நீயே யோசித்து பார். உனக்கே புரியும்."

"மித்து, இது தான் காதலா?"

"எஸ் பேபி இது தான் காதல். உனக்கு என் மேல் காதல் வந்தாச்சு. நான் வச்ச டெஸ்ட்டில் நீ பாஸாயிட்ட"

அவனின் கேலியில் அவன் மார்பிலேயே முகம் புதைத்தாள்.

"ஹேய்...... பேபி மனுசனை ரொம்ப சோதிக்கிற. நானே என்னை கட்டுப்படுத்திக் கிட்டு இருக்கேன். நீ இப்படி கிட்டே வந்துட்டு என்னை குறை சொல்லக் கூடாது?"

மீண்டும் அவன் கேலியில் இன்னமும் அவன் மார்பில் ஒன்றினாள் அவன் மனையாள்.

மித்ராதன் அதற்கு மேல் பொறுக்க முடியாமல் அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்தான்.

"பேபி.... உனக்கு பிடித்து இருக்கா?" என்று அவன் கொடுத்த ஒவ்வொரு முத்தத்திற்கும் அணைப்பிற்கும் அவளை கேட்டுக் கொண்டே முன்னேறினான். இளவஞ்சியிடம் இருந்து "ம்..." என்ற பதில் தவிர வேறு எதுவும் வரவில்லை. ஆனாலும் அவனோ அவளின் விருப்பத்தை மதித்தான்.

"பேபி உனக்கு சம்மதம் தானே........"

அதற்கும் "ம்....." என்றவளைக் கண்டு அவனுள் அடக்கி வைக்கப்பட்ட உணர்வுகள் மேலெழுந்தன. மேலும் மேலும் முன்னேறியவனை அவளும் தடுக்கவில்லை. இத்தனை நாள் தாபம் அவனுள் பொங்கி எழுந்த போதும் அவளைக் கண்ணாடி பாத்திரம் போல் மெதுவாக தான் கையாண்டான்.

அப்பொழுது தான் இளவஞ்சி தன்னுள் ஏற்பட்ட அந்த வேறுபாட்டை உணர்ந்தாள். மித்ராதனை அவள் மனம் ஏற்றுக் கொண்டு விட்டது என்று அவளுக்கு தெள்ளத் தெளிவாக புரிந்தது. அவனின் மீது கரை காணாத காதல் இருப்பதை உணர்ந்து தான் இருந்தாள்.

ஆனாலும் அவனின் இந்த செயலை ஏன் மனம் அருவருத்து வெறுக்கிறது? அவனைத் தட்டி விட்டு எழுந்து செல் என்று மனம் கூக்குரல் எழுப்புகிறேதே ஏன்? இது தவறு என்று மனம் பதைபதைக்கிறதே ஏன்?

என் கணவன் தானே இவன்? இவனுக்கு இல்லாத உரிமையா என்று மனம் நியாயம் சொன்னாலும், அவனை தள்ளி விடத் தானே கைகள் துடிக்கிறது ஏன்?

அன்று அவனை அடித்து தள்ளி விட்ட இளவஞ்சியால் இன்று அப்படி செய்ய முடியவில்லை. அன்று அவனை குறை சொன்ன இளவஞ்சியால் இன்று அவனை குற்றம்

சொல்ல முடியவில்லை. தவறு முழுவதும் தன்னிடம் தான் என்று அந்த நொடி அவளுக்கு புரிந்தது. என்ன செய்வது? என்று தெரியாமல் அவள் கண்ணில் இருந்து கண்ணீர் வடிந்தது.

உணர்வின் பிடியில் இருந்த மித்ராதனோ, இளவஞ்சியின் உணர்வற்ற தன்மையை மிகவும் தாமதமாக தான் உணர்ந்தான். சட்டென்று உணர்வை அடக்கியவன் அவளை விட்டு விலகி அமர்ந்தான்.

கண்களில் கண்ணீர் வழிய கண் மூடி படுத்து இருந்தவளைக் கண்டு அவன் மனம் வலித்தது. அடுத்த நொடி அவளை அள்ளி எடுத்து தன் நெஞ்சோடு அணைத்துக் கொண்டு, அவளின் கண்ணீரை துடைத்தான்.

"பேபி.... பேபி இங்கே பாரு..... உனக்கு ஒண்ணும் இல்லை. கண்ணை திற பேபி" என்று அவள் கன்னத்தை தட்டினான்.

மித்ராதன் தட்டியதில் கண் திறந்தவள்,
"மித்து..... ஐம் சாரி .... மித்து" என்றவள் அவன் நெஞ்சில் முகம் புதைத்து அழுதாள்.

"உங்க உணர்வுகளோட விளையாடுறதே எனக்கு வேலையா போச்சு. என்னை மன்னிப்பிங்களா மித்து? இல்லை என்னை மன்னிக்கவே கூடாது நீங்க..... எல்லா தவறையும் என் மீதே வைத்துக் கொண்டு உங்களை மன்னிக்க சொல்வதே என் வேலையா போச்சு." என்று பொங்கி பொங்கி அழுதவளை எப்படி சமதானம் செய்வது? என்று தெரியாமல் அவளை தன்னுடன் சேர்த்து இறுக அணைத்துக் கொண்டான்.

கணவன் அணைப்பில் கொஞ்சம் கொஞ்சமாக அவளின் அழுகை குறைந்தது.  ஆனாலும் தேம்புவது நிற்கவில்லை. அவளின் அழுகை குறைந்தது கண்டு மித்ராதன் அவள் நெற்றியில் மென்மையாக தன் இதழை ஒற்றினான்.

"ஹேய் பேபி, இப்ப என்ன நடந்து போச்சுன்னு நீ இப்படி அழற. நம்ம காலம் இதோடு முடிந்து போறது இல்லை.

இன்னும் பரந்து விரிந்து நமக்காக காத்து இருக்கு. சோ..... யூ டோன்ட் வொர்ரி பேபி."

அவனின் வார்த்தையில் மெல்லிய புன்னகை அவள் உதட்டில் உதித்தது.

"இந்த வயசுக்கும் மேலேயா காலம் காத்து இருக்க போகுது."

"என்ன இப்படி சொல்லிட்ட? அவனவன் நாற்பது வயசில் கல்யாணம் பண்ணிக்கிட்டு அதுக்கு அப்புறம் குழந்தைகள் பெத்துக்கிறான். அப்படி பார்த்தா..... நமக்கு இன்னும் எட்டு வருஷம் இருக்கு. நீ கவலை படாதே பேபி"

அவன் பேச்சில் அவள் முகம் தெளிந்தாலும்,

"மித்து..... உங்களுக்கு என் மேல் கோபம் வரலியா? சாரி மித்து, என்னால் முடியலை. நானும் எவ்வளவோ ட்ரை பண்ணி பார்த்தேன் மித்து..... என்னால்..."

"பேபி..... ப்ளீஸ் பேபி..... நீ இப்படி சொல்வது தான் எனக்கு கஷ்டமா இருக்கு? நான் தான் சொன்னேனே, உன்னை வருத்தும் எந்த விசயத்தையும் எனக்காக நீ செய்ய வேண்டாம் என்று, இந்த மாதிரி நீ என் கை அணைப்பில் காலம் முழுதும் இருந்தால் போதும், எனக்கு கோபமே வராது."

கணவனின் வார்த்தையில் மனம் நெகிழ்ந்து போய் அவன் மார்பில் முகம் புதைத்தாள். அவனோ அவளைத் தட்டிக் கொடுத்து ஆறுதல் படுத்தினான்.

என்ன தான் மனைவியை சமாதானப் படுத்தினாலும் அவன் மனதில் ஏன் இப்படி? என்ற கேள்வி எழத் தான் செய்தது. எதனால் அவளுக்கு இயல்பான வாழ்க்கை வாழ முடியவில்லை? ஆண்களை வெறுப்பதற்கும், அன்று அந்த சிறுமிக்காக சண்டை போட்டதற்கும், இன்று அவனுடன் ஒன்ற முடியாமல் தவிப்பதற்கும் ஏதும் சம்பந்தம் இருக்குமோ?

அவன் மனதில் கேள்வி எழுந்தது. ஆனால் அவள் மனம் எதையும் உணர்ந்தாக தெரியவில்லையே? அப்படி அவளுக்கே தெரியாமல் என்ன தான் நடந்து இருக்கும்? யோசித்தவனுக்கு விடை தான் தெரியவில்லை. அவளுக்கு என்ன நடந்து இருந்தாலும் அவளை அவனால் விட முடியாது என்பதை மட்டும் அந்த கணம் மனப்பூர்வமாய் உணர்ந்தான். அவனின் அணைப்பு இறுகியது.

அவனின் இறுகிய அணைப்பில் முற்றிலும் தன்னை தொலைத்த இளவஞ்சியோ தன்னவனின் தன்னலமற்ற அன்பிற்கு, காதலுக்கு தன்னையே பரிசாக கொடுத்தால் அன்றி வேறு ஏதும் அதற்கு ஈடாகாது என்று மனதில் எண்ணியவள், தன்னிலைக்கான தீர்வு என்ன? என்று யோசிக்க ஆரம்பித்தாள்.

"புகழ், நான் உங்களை மீட் பண்ணனும். எப்ப மீட் பண்ணலாம்?"

"ஹேய் வஞ்சி, என்ன இது பெர்மிசன் எல்லாம் கேட்டுக் கிட்டு? அதுவும் ஒரே ஹாஸ்பிட்டல்ல இருந்துட்டு?"

"புகழ் நான் உங்க கூட பேசணும், நீங்க எப்ப ப்ரீன்னு சொல்லுங்க?" இளவஞ்சியின் குரலில் இருந்த பதற்றம் அவனை யோசிக்க வைத்தது.

"ம்...... ஏழு மணிக்கு மேல் நான் ப்ரீ தான், நீ அப்போ வா"

"ஓகே புகழ், ஏழு மணிக்கு வர்றேன், பை"

அலைப்பேசியை வைத்த இளவஞ்சி மனதில் ஏகப்பட்ட குழப்பம். என்றைக்கு அவளுக்குத் தான் பிரச்சினை என்று உணர்ந்தாளோ, அன்றிலிருந்து அவளால் நிம்மதியாக இருக்க முடியவில்லை. புகழ் மருத்துவ முகாம் முடித்து எப்பொழுது வருவான் என்று எதிர்ப்பார்த்து இருந்தவள், இதோ அவனை சந்திக்க முடிவு செய்து அவனிடம் பேசியும் விட்டாள்.

இளவஞ்சிக்கு தன் மனதில் தான் ஏதோ பிரச்சினை இருக்கிறது என்பதை உணர்ந்து தான் இருந்தாள். அதனால் தான் மனோதத்துவ நிபுணனான தன் நண்பன் புகழின் உதவியை நாடினாள்.

காரில் சென்று கொண்டு இருந்த மித்ராதன் மனதிலும் குழப்பமே இருந்தது. காலையில் இளவஞ்சியை மருத்துவ மனையில் இறக்கி விட்டவன், முக்கிய வேலை இருப்பதாக காரை தன்னோடு எடுத்துக் கொண்டு வந்து விட்டான். அவன் மனைவியின் செய்கைக்கான விடை ஒருவேளை அவள் தாய் அறிந்து இருப்பாரோ என்று நினைத்து, குணவதியை சந்திக்க சென்று கொண்டு இருந்தான். இளவஞ்சியின் வாடும் மனதை மாற்றவே அவள் அன்னையை நாடி வந்தான்.

"வாங்க மாப்பிள்ளை."

மருமகனைக் கண்டதும் குணவதி ஆர்வமாய் வரவேற்றார். இரவு நேர வேலை என்பதால் அப்பொழுது தான் வேலை முடித்து வந்து இருந்த இளஞ்செழியனும் தன் அக்கா கணவனை வரவேற்றான்.

"இளா எப்படி இருக்கிறாள்?"

"ம்.... அவளுக்கென்ன ஆன்ட்டி.... அவள் நன்றாக இருக்கிறாள்." என்று மாமியாரிடம் கூறியவன், இளஞ்செழியனிடம்,
"நீ சொன்ன மாதிரி, உன் அக்காவிடம் காரியம் ஆகணும் என்றால் சாக்லேட் கொடுத்தால் போதும்."

"ஹா...... ஹா..... உங்களுக்கும் அதே நிலைமை தானா?"

அடக்க மாட்டாமல் சிரித்தான் செழியன். சிறிது நேரம் மைத்துனனிடம் பேசிக் கொண்டு இருந்த மித்ராதன், மெதுவே பேச்சை எடுத்தான்.

"செழியா.... உன் அக்காவிற்கு கிப்ட் கொடுக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அவளோட சிறு வயது போட்டோ இருந்தால்...... கொஞ்சம்......"

"அய்யோ..... என்ன அத்தான் இது? இதுக்கு போய் தயங்கிக்கிட்டு" என்றவன் இளவஞ்சியின் சிறு வயது புகைப்படம் அனைத்தையும் எடுத்துக் கொண்டு வந்து கொடுத்தான்.

குண்டு கன்னங்களும் துருதுருவென அலைபாயும் கண்களுமாய் கொள்ளை அழகாய் இருந்த இளவஞ்சியின் சிறு வயது புகைப்படம் மித்ராதனிடம் பெரும் ஏக்கத்தை உண்டு பண்ணியது. அவளை போல் அழகிய பெண் குழந்தை தங்களுக்கு பிறப்பது போலும் அதை கொஞ்சுவது போலவும் கனவு கண்டவனுக்கு அந்த நினைவே தித்திப்பாய் இருந்தது.

"அத்தை, சிறு வயதில் இளா எப்படி? ரொம்ப குறும்பா..... இல்லை அமைதியா?"

"என்ன இப்படி கேட்டுடிங்க மாப்பிள்ளை ...... அவள் கால் ஓரிடத்தில் நிலைத்து நிற்காது. அங்கேயும் இங்கேயும் பட்டாம்பூச்சி போல் ஓடிக் கொண்டே இருப்பாள்."
மகளின் சிறு வயது நியாபகம் வந்தவுடன் குணவதியின் முகம் அந்த நாள் நியாபகத்தில் கனிந்தது.

"ஆமாம் ஆன்ட்டி, இளாவுக்குள் இன்னும் அந்த குறும்பு இருக்க தான் செய்கிறது. இளா மாதிரி தைரியமான பொண்ணு பார்க்க முடியாது." மனைவியைப் பற்றி பெருமிதத்துடன் ஒலித்தது மித்ராதனின் குரல்.

"அவளுக்கு தைரியம் இருக்கிற அளவுக்கு கோபம் அதிகம் வரும் மாப்பிள்ளை. ஊரில் உள்ள எல்லா ஆண் பிள்ளைகளிடமும் கோபம் தான் சண்டை தான். ஏன் தான் இப்படி இருக்கிறாளோ என்று தெரியவில்லை. உங்களிடம் எப்படி இருக்கிறாள்?"

"சேச்சே..... என்னிடம் கோபப்பட மாட்டாள்." அவசரமாக மறுத்தான்.

அதன் பின் குணவதியிடம் பேசிப் பார்த்தும் உருப்படியாய் எதுவும் அவனுக்கு கிடைக்கவில்லை. இளவஞ்சியைப் போல் அவள் வீட்டாருக்கும் அவள் மனதை வாட்டும் விஷயம் என்னவென்று தெரியவில்லை. அதன் பின் விடை பெற்று வெளியில் வந்தவன், அவளை அப்படியே ஏற்றுக் கொள்வது என்ற முடிவுக்கு வந்தான்.

"வா..... வா.... வஞ்சி உன் வரவு நல்வரவு ஆகுக...!"

தன் அறைக்குள் வந்த இளவஞ்சியை ஆர்ப்பாட்டமாய் வரவேற்றான் புகழேந்தி.

இளவஞ்சியோ அவனிடம் எப்படி ஆரம்பிப்பது? என்று ஒத்திகை பார்த்துக் கொண்டு இருந்தாள். தன்னிடம் உள்ள ஆர்ப்பாட்டம், மகிழ்ச்சி அவளிடம் இல்லாததை

கவனித்தான். அவளின் கலங்கி இருந்த முகமே புகழுக்கு அவளின் மன நிலையை காட்டிக் கொடுத்தது.

"வஞ்சி, என்ன ஆச்சு? ஏன் இப்படி இருக்கிறாய்?"

"புகழ்..... நா..... நான் இப்பொழுது தோழியாய் வரவில்லை. ஒரு பேஷண்டாய்.... வந்து இருக்கிறேன்." தலையை குனிந்து கொண்டவளைக் கண்டு புகழ் குழம்பித்தான் போனான்.

"என்ன வஞ்சி என்னவெல்லாமோ சொல்கிறாய்?"

"புகழ் நான் சொல்வதைக் கேட்ட பின் நீங்கள் முடிவு செய்யுங்கள்?" என்றவள் தன் வாழ்க்கையில் நடந்த அனைத்து விஷயங்களையும் சொல்ல ஆரம்பித்தாள்.

தன் திருமண வாழ்வு... .அதன் பின் வந்த பிரிவு...... கட்டாயத்தின் பேரில் சேர்ந்து வாழ சென்றது....... கணவனின் அன்பில் தான் கொஞ்ச கொஞ்சமாக மாறி அவனுடன் வாழ ஆசைப்பட்டது....... ஆனால் தன்னால் முழுவதுமாய் அவனுடன் மனம் ஒன்ற முடியாமல் தவிப்பது வரை சொல்லி முடித்தவள், முகம் மூடிக் கொண்டு அழ ஆரம்பித்தாள்.

"அவராக இருக்கக் கண்டு என்னை சகித்து கொள்கிறார் புகழ். வேறொரு ஆண் பிள்ளையாய் இருந்தால் நீ என்ன பெரிய இவளா? என்று கூறி என்றோ வேறொரு திருமணம் செய்து கொண்டு போயிருப்பார்கள். ஆனால் இவர், என் குறை தெரிந்தும், ஒரு வார்த்தை கடிந்து கொள்ளாமல் நான் மட்டுமே வேண்டும், வேறு எதுவும் வேண்டாம் என்கிறார். நான் சொல்ல வருவது புரிகிறதா புகழ்? அதாவது, தாம்பத்திய வாழ்வு வேண்டாம் என்கிறார். என் நிலை புரிந்து அவர் என்ன சொன்னார் தெரியுமா? செயற்கை முறையில் குழந்தை பெற்றுக் கொள்ளலாம் என்று கூட சொன்னார். எனக்காக பார்த்து பார்த்து செய்யும் அவருக்கு, நான் ஏதாவது செய்ய வேண்டும். அதற்கு நான் சரியாக வேண்டும். அதற்காக தான்

உங்களை தேடி வந்து இருக்கேன் புகழ்.... எனக்கு என்ன தான் ஆச்சு? எனக்கு மட்டும் ஏன் புகழ் இப்படி?"

தேம்பி தேம்பி அழுபவளை திகைத்துப் போய் பார்த்துக் கொண்டு இருந்தான். இளவஞ்சியிடம் ஏதோ இருப்பது புகழுக்கு புரிந்து தான் இருந்தது. அதுவும் ஆண்களிடத்தில் அவள் காட்டும் உதாசீனம், வெறுப்பு எல்லாம் அவன் கண்ணால் பார்த்து இருக்கிறானே? ஆனால் அவளுக்குள் இப்படி ஒரு பிரச்சினை இருக்கும் என்று அவனும் எதிர்ப்பார்க்கவில்லை.

அதிலும் அவள் கணவனைப் பற்றி சொன்னதைக் கேட்டதும், அவனுக்கு மித்ராதன் மேல் பிரமிப்போடு கூடிய மரியாதை வந்தது. என்ன ஒரு ஆண்மகன் இவன், இப்படியும் ஒருவன் இருப்பானா? இந்த அளவுக்கு மனைவியை நேசிப்பவர் இருக்க முடியுமா? ஏன் அவன் கூட இந்த அளவுக்கு இருப்பானா என்பது சந்தேகம் தான்.

"வஞ்சி, உண்மையில் உன் கணவர் கிரேட். இப்படியும் ஒரு மனிதரா?"

புகழின் வார்த்தையில் இளவஞ்சியின் முகத்தில் கணவனை நினைத்து பெருமிதம் வந்தது.

"உண்மை தான் புகழ் ..... நான் கூட அவரை சரியாகப் புரிந்து கொள்ளாமல் படுத்தி எடுத்து இருக்கிறேன். அத்தனையும் பொறுத்துக் கொண்டு என்னுடன் இருக்கிறாரே..... உண்மையில் கிரேட் தான்."

"அது என்னவோ உண்மை தான் வஞ்சி, உன்னை பொறுத்து போகிறாரே... உண்மையில் பாராட்டப் பட வேண்டியவர் தான் உன்னவர்."

புகழின் கிண்டலில், "என்ன புகழ் இது?" என்று சிணுங்கினாள் அவன் தோழி. புகழ் பேசி பேசியே இளவஞ்சியை சாதாரண மன நிலைக்கு கொண்டு வந்தவன், மெல்ல மெல்ல அவளின் கடந்த காலத்தைப் பற்றிக் கேட்டான்.

என்ன முயன்றும் அவளிடம் இருந்து எந்த தகவலையும் அவனால் பெற முடியவில்லை. ஏனெனில் அன்பான அரவணைப்பான குடும்பத்தில் பிறந்து வளர்ந்த இளவஞ்சிக்கு மனம் பாதிக்கும் அளவுக்கு எந்த ஒரு சம்பவமும் நடந்ததாய் நினைவில் இல்லை. அப்படி இருந்தும் அவள் மனதில் அப்படி என்ன ரகசியம் இருக்கிறது என்று மனோதத்துவ மருத்துவனான அவனால் கூட கண்டு பிடிக்க முடியவில்லை.

புகழ் மனதில் குழப்பம் இருந்தாலும் இளவஞ்சியிடம் நம்பிக்கையூட்டும்படி பேசியவன், மேலும் அவளுக்கு சிகிச்சை தொடர அவளின் ஒத்துழைப்பு அவசியம் என்று கூறினான்.

"நிச்சயம் புகழ்.... கட்டாயம் ஒத்துழைப்பேன்" என்றவளின் அலைப்பேசி ஒலித்தது. அதை எடுத்து பார்த்தவளின் முகம் மலர்ந்தது.

"புகழ் அவர் தான்"

"ஓகே எனக்கும் வேலை முடிந்தது, வா போகலாம்." என்றவன் அவளுடன் நடந்தான். தூரத்தில் மித்ராதன் காரில் சாய்ந்து நின்று கொண்டு அவளுக்காக காத்துக் கொண்டு இருப்பதை பார்த்த இளவஞ்சி,
"புகழ், அவருக்கு நான் சிகிச்சைக்கு வருவதைப் பற்றி சொல்ல வேண்டாம். சொன்னால், உன்னை வருத்தும் விஷயம் எதுவும் நீ செய்ய வேண்டாம் என்பவர், இதையும் வேண்டாம் என்பார். அதனால்......"

"வஞ்சி, இதை நீ சொல்லித் தான் நான் செய்ய வேண்டுமா என்ன? என் பேஷண்ட் விஷயங்களை நான் யாரிடமும் பகிர்ந்து கொள்ள மாட்டேன். அதிலும் நீ என் தோழி. உன்னை பற்றி ....அதுவும் உன் கணவனே என்றாலும் உன் விருப்பம் இல்லாமல் சொல்ல மாட்டேன். இவ்வளவு ஏன் அமுதாவிடம் கூட சொல்ல மாட்டேன்.... மகிழ்ச்சி தானே?"

"புகழ்...." என்றவளின் கண்களின் கலங்கியது. அதற்குள் அவர்களும் மித்ராதன் இருக்கும் இடம் வந்து இருந்தனர்.

மித்ராதனை பார்க்கும் பொழுது புகழுக்கு மரியாதையே தோன்றியது. இப்படியும் ஒரு மனிதனா? என்று பிரமிப்புடன் அவனைப் பார்த்துக் கொண்டு இருந்தான்.

"புகழ் என்ன உன் பிரண்ட்.... இப்போ எல்லாம் எதுக்கெடுத்தாலும் அழுகிறாள்? இதற்கு ஏதும் மருந்து வைத்து இருக்கிறாயா? அழும் போது பார்க்க சகிக்கவில்லை."

அவளின் கலங்கிய கண்கள் மித்ரதனின் கண்ணில் இருந்து தப்பவில்லை. அவளின் மனதை மாற்ற கேலி பேசினான்.

மித்ராதன் பேச்சில் தன்னை சுதாரித்த புகழ், "அதானே மித்ரா..... நானும் வேறு ஏதும் தோழி கிடைத்தால் மாற்றி விடலாம் என்று இருக்கிறேன். ஆனால் யாரும் கிடைக்க மாட்டேன் என்கிறார்கள்... அதனால் தான் அழுதாலும் பரவாயில்லை என்று சகித்துக் கொண்டு இருக்கிறேன்."

அவனும் பதிலுக்கு கிண்டலடித்தான். புகழின் பேச்சில் மித்ராதன் சிரிக்க அவனோடு புகழும் சேர்ந்து கொண்டான்.

"உங்க ரெண்டு பேரையும்....."

கோபமாக பேச முயன்று தோற்றவளாய் இளவஞ்சியும் அவர்களோடு இணைந்து நகைத்தாள்.

மித்ராதனும் இளவஞ்சியும் விடை பெற்று சென்றதும், புகழின் மனதில் இளவஞ்சியின் நிலை பற்றியும், அதை எப்படி சரி செய்வது என்ற எண்ணம் மட்டுமே இருந்தது. வீட்டிற்கு சென்றும் வெகு நேரம் யோசித்தவன் கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது இளவஞ்சியை தமிழ் நாட்டில் சிறந்த மனோதத்துவத்த நிபுணரான அவனின் குருவிடம் அழைத்து செல்வது என்று முடிவெடுத்தான். அவரின் அனுபவத்திற்கு அவரால் மட்டுமே இளவஞ்சியின்

மனநிலையை கையாள முடியும் என்று எண்ணினான். அதன் பின்னரே அவனால் நிம்மதியாக உறங்க முடிந்தது.

மறுநாள் நினைத்தது போல் தாமதம் செய்யாமல் அவனின் குருவான ராஜிடம் இளவஞ்சியை அழைத்துச் சென்றான் புகழ். அவரும் இளவஞ்சியிடம் பேசிப் பார்த்து அவளின் மன நிலை என்ன என்பதை புரிந்து கொண்டார். அவருக்கு இதற்கான தீர்வு 'தரவுத் துயில்' (hypnotism) மட்டுமே என்று முடிவுக்கு வந்தார். அதன் மூலம் தான் அவளின் ஆழ் மனதில் என்ன  இருக்கிறது என்பதைப் புரிந்து கொண்டு அதற்கான சிகிச்சையை செய்ய முடியும் என்று எண்ணி இளவஞ்சியிடம் பேசினார்.

"இங்கே பாரம்மா..... இதற்கு உன்னோட பூரண ஒத்துழைப்பு தேவைப்படுது. அதை எல்லாம் விட எங்கள் மேல் உனக்கு நம்பிக்கை இருக்க வேண்டும். அப்படி இருந்தால் மட்டுமே இதில் வெற்றி பெற முடியும். டாக்டரான உனக்கு நான் சொல்வது புரியும் என்று நினைக்கிறேன்."

இளவஞ்சியோ எதை தின்றால் பித்தம் தெளியும் என்ற நிலையில் இருந்தால் இதில் ராஜ் சொன்னதைக் கேட்டு பலமாக தலையாட்டினாள்.

புகழ் மித்ராதனிடம் சொல்லி விடலாமா? என்று கேட்ட போது, இளவஞ்சி வேண்டாம் என்று விட்டாள். சொன்னால் அவன் இது வேண்டாம் என்று தான் சொல்வான் என்று கூறி மறுத்து விட்டாள். அமுதா கூட புகழிடம் கேட்க தான் செய்தாள்.

"என்ன புகழ்... இளாவும் நீங்களும் சேர்ந்து எங்கே செல்கிறீர்கள்? அடிக்கடி நீங்கள் இருவரும் காணாமல் போய் விடுகிறீர்கள்?"

"அமுதா என்ன...... சந்தேகப்படுகிறாயா?" புகழ் கோபத்துடன் கேட்டான்.அவன் கோபம் பார்த்து அமுதா கண்ணில் கண்ணீர் எட்டிப் பார்த்தது.

"புகழ் நான் போய் உங்கள் இருவரையும் எப்படி....? இளா.... உங்களுக்கு மட்டும் பிரண்ட் இல்லை எனக்கும் தான். நீங்கள் என்னைப் புரிந்து கொண்டது அவ்வளவு தானா?"

கண்களில் வலியுடன் கேட்டவளை புகழ் தன்னோடு அணைத்துக் கொண்டான்.

"அமுதா கணவன் மனைவிக்குள் உள்ள ரகசியத்தை எப்படி எல்லோரிடமும் சொல்ல முடியாதோ, அது போல் தான் நண்பர்களிடையே உள்ள ரகசியமும். உனக்கு புரியும் என்று நினைக்கறேன்.'

"ம்..... புரிந்தது." என்றவள் அதன் பின் இருவரிடமும் எதுவும் கேட்கவில்லை.

நான்கு நாட்களுக்கு பின் இளவஞ்சியை தரவுத் துயில் (hypnotism ) ஆழ்த்தி அவள் மனதில் புதைந்து இருந்த ரகசியங்களை வெளிக் கொணர்ந்தார் டாக்டர். ராஜ். அவள் மனதில் இருந்த விஷயம் அவள் வாயால் கேட்டதும் புகழும் ராஜும் ஆச்சரியத்தின் உச்சிக்கே சென்று விட்டனர்.

அப்பொழுது இளவஞ்சி பதினோரு வயது சிறுமி. அந்த வயதுக்கே உரிய துருதுருப்புடன் இருப்பவள். கோடைகால விடுமுறையைக் கழிக்க எண்ணி பாட்டியின் வீட்டிற்கு அன்னையுடனும் தம்பியுடனும் சென்றாள். தந்தை பணி நிமித்தம் காரணமாக வரவில்லை. இளவஞ்சிக்கு அம்மா வழி பாட்டி வீட்டிற்கு செல்ல எப்பவுமே விருப்பம் தான். பச்சை பசேலென்று இருக்கும் வயல்களுடன் கண்ணுக்கு குளிர்ச்சியாய் இருக்கும் அந்த கிராமம் எப்பொழுதுமே அவளுக்கு பிடிக்கும். என்றும் போல் சந்தோசத்துடன் அங்கு வந்தவள், வந்த மூன்றாம் நாள் பெரியவளாகி விட்டாள். என்னவென்று தெரியாமல் அழுது கரைந்தவளை குணவதி தான் சமாதானம் செய்தாள்.

பாட்டிக்கு சந்தோசமாக இருந்தது. அந்த விசேசத்தை ஊரைக் கூட்டி கொண்டாட முடிவு செய்தார். பின்னே அவருக்கு இருக்கும் ஒரே பேத்தி இளா தான். அவளை பற்றிய கற்பனை அவருக்கு மட்டும் இருக்காதா என்ன?

மாறனுக்கும் குணவதிக்கும் அவர் செய்வது பிடிக்கவில்லை என்றாலும் பெரியவர் மனதை நோக வைக்கவும் விருப்பம் இல்லை.

பாட்டி சொன்னது போல் பெரிய விழா எடுத்தனர். இளவஞ்சி ஊரார் முன்னிலையில் அலங்காரத்துடன் அமரவே முடியாது என்று அழுதாள். அவளை சமாதானம் செய்து உட்கார வைப்பதற்குள் குணவதி தான் பெரும் பாடுபட்டார்.

பயத்துடன் அமர்ந்து இருந்த இளவஞ்சி, அங்கு இருந்த பெண்கள் பேசிய பேச்சு கண்டு இன்னமும் பயந்து போனாள். அவர்கள் பேசிய பேச்சுகளும் அப்படித் தான் இருந்தது.

"பொண்ணுங்க சமைஞ்சாளே பார்த்து சூதானமா நடந்துக்க தெரியணும். அப்படி நடந்துக்க தெரியலைன்னா இந்த காலத்துல பொழைச்சுக்க முடியாது. அந்த காலம் மாதிரியா மத்தவங்க கிட்ட பெண் பிள்ளைகளை விட்டுட்டு போக முடியுது. எங்கே போனாலும் வெரசா ஓடி வர தான் மனசு துடிக்குது."

"நீ சொல்றதும் சரி தான். நம்ம சாந்தியோட பொண்ணை அவளோட வாத்தியே கையை பிடிச்சு இழுத்து இருக்கிறான். அது மட்டுமா... இன்னைக்கு நியூஸ்ல பார்த்தேன் சின்ன புள்ள அது என்ன பாவம் பண்ணிச்சு. அதை போய் சீரழிச்சு கொன்னு இருக்கானே படுபாவி, அவன் கட்டையில் போக..."

"அதெல்லாம் விட தகப்பனே பெத்த பொண்ணுன்னு பார்க்காம தப்பா நடந்துக்கிறானே இதை எங்கே போய் சொல்ல? ம்.... தாய்ன்னு ஒருத்தி இருக்கும் வரை தான் தகப்பன் உறவு எல்லாம்..."

அவர்களுக்குள் பேசியவாறே இளவஞ்சிக்கும் இலவசமாக அறிவுரை கூறிச் சென்றனர். அவர்கள் பேச்சில் இன்னமும் பயந்து  தனக்குள் ஒடுங்கி போனாள்.  அங்கு கிராமத்தில் இருந்த நாட்கள் எல்லாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு

சம்பவம் சொல்லி அப்படி இருக்காதே..... இப்படி நடந்து கொள்ளாதே..... என்று கூறி சென்றனர். அவர்கள் கூறியதை முழுவதுமாய் புரிந்து கொள்ள முடியவில்லை என்றாலும், பெண்ணுக்கு ஆண்களால் தவறு இழைக்கப்படுகிறது என்று மட்டும் புரிந்தது.

இயல்பிலேயே மெல்லிய மனம் படைத்த இளவஞ்சியால் அவர்கள் கூறியதை ஜீரணிக்க முடியவில்லை. இதை எல்லாம் கேட்டுக் கொண்டு இருந்த குணவதி அப்படி எல்லாம் ஒன்றும் இல்லை என்று இளவஞ்சியை தேற்றினார். இளவஞ்சியும் அந்த நேரம் சமாதானம் அடைந்தாள்.

சென்னை வந்த பிறகு இயல்பு வாழ்க்கைக்கு வந்தவளுக்கு, பிரச்சினை மீண்டும் செய்தித்தாள் மூலம் வந்தது. மாறன் தன் மக்கள் தினமும் செய்தித்தாள் படிப்பதை எப்பொழுதும் விரும்புவார். அப்போது தான் பொது அறிவு வளரும் என்று அவருக்கு நம்பிக்கை.

அப்படி ஒரு நாள் செய்தித்தாள் படிக்கும் பொழுது, சிறுமி ஒருத்தியை வன்புணர்ச்சி செய்த கும்பல் ஒன்று அவளைக் கொன்று கிணற்றில் வீசி எறிந்து விட்டு சென்றதை, கொட்டை எழுத்தில் போட்டு இருந்தது அவள் கண்ணில் பட்டது. அன்று கிராமத்து பெண்கள் கூறியது கட்டுக் கதை என்று மனதின் ஓரம் இருந்த எண்ணம் தவிடு பொடியானது. அவர்கள் உலக நடப்பைத் தான் கூறி இருந்தார்கள் என்று இளாவுக்கு புரிய ஆரம்பித்தது.

இயல்பிலேயே புத்தி கூர்மை நிரம்பப் பெற்ற இளவஞ்சி அதன் பின் செய்தித்தாளை உன்னிப்பாக கவனித்துப் படிக்க ஆரம்பித்தாள். இந்தியாவில் மட்டுமில்லாமல், உலக அளவில் பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடப்பதை அறிந்தாள். என்னவென்று தெளிவாகப் புரியவில்லை என்றாலும் பெண்கள் பாதிக்கப் படுகிறார்கள் என்பதும், பெண்களை பாதிப்புக்கு உள்ளாக்குவோர் அனைவரும் ஆண்கள் என்பதும் புரிந்தது.

இந்த உலகத்தில் ஆண்களுக்கு மட்டுமே நீதி, இந்த உலகம் ஆண்களுக்கானது என்று நினைத்தாள். பெண்களைக் காப்பாற்ற வேண்டிய சட்டமும், அதைச் செய்யாமல் அநீதி இழைப்பதை, மலைவாழ் பெண்ணொருத்தி வனத் துறையினராலும் காவல் துறையினராலும் பாதிக்கப்பட்டதை செய்தியில் கண்டு அறிந்தாள். சிறுமி தான் என்றாலும் தன்னுடைய இனம் பாதிக்கப்படுவதை அவளால் உணர முடிந்தது.

தன் மனதை அவ்வளவு சீக்கிரம் வெளிப்படுத்தாத இளவஞ்சி, இதை மட்டும் எப்படி தன் பெற்றோரிடம் கூறுவாள்? அதனால் தன் மனதுக்குள்ளேயே போட்டு மருகினாள் அந்த பதினோரு வயது சிறுமி.

அன்று மனதில் ஆண்கள் மேல் ஏற்பட்ட வெறுப்பு, அவள் வளர்ந்த பின்பும் மாறவில்லை. முதலில் அவள் தன்னை காப்பாற்றிக் கொள்ள கராத்தே வகுப்புக்கு செல்ல ஆரம்பித்தாள். மாறனும் அவளை ஊக்குவித்தார். ஆரம்பத்தில் ஆண் என்ற ஒரே காரணத்திற்காக மாறனிடம் சற்று விலகித் தான் இருந்தாள். அவளின் விலகல் அறிந்தோ என்னமோ மாறன் அவளை அழைத்துப் பேசினார். மகள் பெரியவள் ஆனதால் தன்னிடம் விலகல் காண்பிக்கிறாள் என்று எண்ணினார்.

"பெரியவள் ஆனாலும் நீ எனக்கு மகள் தான் டா. உன்னை பார்க்கும் போதெல்லாம் முதன் முதலில் மருத்துவமனையில் பார்த்த அந்த குட்டி குழந்தை தான் நியாபகம் வருது. "

மனம் நெகிழ்ந்து கூறியவரை "அப்பா" என்ற கூவலுடன் அணைத்துக் கொண்டாள் இளவஞ்சி. அதன் பின் தந்தை, தம்பி இரு ஆண்கள் தவிர யாரிடமும் அவள் இயல்பாக பழகவில்லை.

அவள் அருகில் ஆண்கள் வந்தாலே இவர்களால் தனக்கு ஏதும் தீங்கு வந்து விடுமோ என்று பயந்தாள். அப்படி பள்ளிப் பருவத்தில் ஒரு நாள் அவளை விட பெரிய மாணவன் ஒருவன் யாரும் அற்ற தனிமையில் அவளை

கட்டிப் பிடித்து முத்தம் கொடுக்க நினைக்க, அவள் மனமோ "அவனை அடித்து வீழ்த்தி நீ தப்பி செல்" என்று வேகமாக ஆணையிட்டது.  அடுத்த கணம் அவனை அடித்து நொறுக்கி விட்டாள் நம் ஜான்சி ராணி.

அந்த பையன் திரும்ப பள்ளிக்கு வரவே பதினைந்து நாள் ஆனது. அவன் மூலம் விஷயம் அறிந்த மற்ற பையன்களும் அவளிடம் இருந்து விலகியே இருந்தனர். அதன் பின் ஆண்கள் என்றாலே தள்ளி தான் நின்றாள். அவளிடம் பேசும் உடன் படிக்கும் ஆண்களிடம் அவர்கள் கேட்கும் கேள்விக்கு பதில் சொல்லி விட்டு, அதற்கு மேல் நிற்காமல் சென்று விடுவாள்..

வளர வளர அந்த கிராமத்து பெண்மணிகளை இளவஞ்சி மறந்து போனாலும் அவர்கள் வித்திட்ட ஆண்கள் மீதான வெறுப்பு மட்டும் அவள் மனதில் விருட்சம் போல் வளர்ந்து இருந்தது. தனக்குள் ஒரு வட்டம் போட்டு, அதற்குள் வாழத் துவங்கினாள். தன் கண் முன்னால் ஆண்களால் பெண்கள் பாதிக்கப்படுவதை பார்க்கும் போது, தன்னால் முடிந்தவரை தட்டிக் கேட்க ஆரம்பித்தாள். இந்த வெறுப்பு வளர்ந்து திருமணமான பின்பு கணவன் என்கிற ஆண் அவளைத் தொடும் போதும் தொடர்ந்தது தான் பரிதாபத்தின் உச்சம்.

இளவஞ்சி பேசப் பேச, புகழ் திகைத்து போய் என்ன சொல்வது என்று தெரியாமல் அப்படியே அமர்ந்து இருந்தான். சின்ன வயதில் பார்த்த, படித்த சில விஷயங்கள் எந்த அளவுக்கு அவளின் மனதை பாதித்து இருக்கிறது என்றும், வளர்ந்த பிறகும் அந்த பாதிப்பு தொடர்வதையும் எண்ணி மனம் வருந்தினான். எது எப்படியோ அவள் மனதின் வலி தெரிந்து விட்டதால், இனி அவளை எளிதில் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கை அவன் மனதில் எழுந்தது.

இளவஞ்சியிடம், "உங்கள் மனதை வாட்டும் விஷயம் இது தான், பாலில் ஒரு துளி விஷம் போல் இந்த எண்ணம் உங்கள் மனதில் விழுந்து விஷத்தை கலந்து விட்டது.

இதில் இருந்து நிச்சயம் உங்களால் வெளி வர முடியும்." என்று கூறினார்.

புகழிடம், "புகழ் இனி இளவஞ்சிக்கு நீங்களே அவளுக்கு ட்ரீட்மென்ட் கொடுக்கலாம், என்னிடம் வர வேண்டும் என்ற அவசியம் இல்லை" என்று கூறியவர், இளவஞ்சியை வெளியில் இருக்க பணித்து விட்டு, அவளுக்கு எந்த மாதிரியான ஆலோசனைகளைத் தர வேண்டும் என்று புகழிடம் விளக்கி கூறினார்.

வெளியில் அமர்ந்து இருந்த இளவஞ்சியோ, சின்ன சின்ன விஷயங்கள் எந்த அளவுக்கு தன் மனதை பாதித்து இருக்கிறது என நினைத்தவள், எப்படியும் தன்னால் இதிலிருந்து வெளிவர முடியும் என்று நம்பினாள். ஏனெனில் இப்பொழுதே ஏதோ மனதில் இருந்த பாரம் குறைந்து லேசானது போல் எண்ணம் அவளுள் தோன்றியது. நம்பிக்கையுடன் புகழின் வரவிற்காக காத்து இருந்தாள்.

இரவு வீட்டிற்கு வந்தும் உடல் அசதியாக இருந்தது போல் தோன்ற இளவஞ்சி உணவு உண்டு விட்டு படுக்க போய்விட்டாள். மித்ராதன் அவளின் முகம் பார்த்து எந்த கேள்வியும் கேட்கவில்லை. அவளின் மனதை வருத்த அவன் விரும்பாததால், அவள் எப்பொழுதும் தன் அறையிலேயே படுத்து உறங்கினாள். அது போல் அவளுக்கும் தன்னுடைய மனநிலை சரியாகாமல் அவனின் உணர்வுகளோடு விளையாட விருப்பம் இல்லை.

மித்ராதன் சிறிது நேரம் மடிக்கணினியில் வேலை செய்தவன் அதன் பின் படுக்க சென்றான். அவன் படுத்து பத்து நிமிடம் கழித்து, "மித்து......" என்ற இளவஞ்சியின் குரலில் கண் விழித்தான்.

"என்ன பேபி?"

"நா..... நான் இங்கே படுத்து கொள்ளவா? அங்கே தனியாக படுப்பதற்கு என்னவோ மாதிரியாக உள்ளது." தயங்கி தயங்கி அவனிடம் கேட்டாள்.

'என்றும் இல்லாமல் இன்று மட்டும் என்ன?' மனதில் எழுந்த கேள்வியை தன்னுள் புதைத்து விட்டு, "வா...... இங்கே படுத்துக் கொள்." என்று அவளுக்கு இடம் விட்டு ஒதுங்கி படுத்தான். அவன் அருகில் படுத்தவள் கண் மூடிக் கொண்டாள்.

மித்ராதனோ கைகளை தலைக்கு அணைவாக கொடுத்தபடி தன்னவளை தான் பார்த்துக் கொண்டு இருந்தான். கண்கள் மூடி இருந்தாலும் இளவஞ்சி அங்கேயும் இங்கேயும் என்று திரும்பி திரும்பி படுத்தாள். அவள் செய்கையிலே அவள் தூங்கவில்லை என்று அவனுக்கு புரிந்தது.

சிறிது நேரம் பொறுத்து பார்த்தவன் அவள் அருகில் வந்து, "பேபி" என்றவன் மெல்ல அவளது தலையைக் கோதி விட்டான். அவன் செயலிலும் அழைப்பிலும் கண் முழித்துப் பார்த்தவள், அருகில் கணவன் முகம் இருக்க மனதில் ஏதேதோ எண்ணங்கள் அழுத்த, "மித்து உங்களை நான் அணைத்துக் கொள்ளவா?" என்றாள்.

அவளின் வார்த்தையில் மித்ராதன் அவளை அணைத்துக் கொண்டான். பின் தன் நெஞ்சில் அவளை சாய்த்து தலை கோதி அவளை தூங்கச் செய்தான். இளவஞ்சி அவனின் செயலில் மனதில் எழுந்த அலைப்புறுதல் குறைந்து அவனை அணைத்துக் கொண்டு நிம்மதியாக உறக்கத்தில் ஆழ்ந்தாள்.

சிறு குழந்தை போல் தூங்கும் தன் மனையாளை பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதனின் முகத்தில் புன்னகை நிறைந்தது. அந்த நிறைவில் என்றுமில்லாத மன நிம்மதியுடன் அவனும் உறங்கினான்.

புகழ் "வஞ்சி, ஆண்களில் கெட்டவர்கள் இருக்கிறார்கள் என்பது போல் பெண்களிலும் கெட்டவர்கள் இருகிறார்கள். அதற்காக எல்லா பெண்களும் கெட்டவர்களா என்ன?" என்று பல உதாரணங்களை அவளுக்கு எடுத்துச் சொல்ல ஆரம்பித்தான்.

"இப்பொழுது உனக்கே புரியும். உன் தந்தை, தம்பி, கணவன் எல்லோருமே ஆண்கள் தானே, அவர்கள் எல்லோரும் கெட்டவர்களா?"

புகழின் கேள்விக்கு இல்லை என்று தலையசைத்தாள் இளவஞ்சி.

"இவ்வளவு ஏன் உன் நண்பன் புகழ்.... சாட்சாத் நானே தான்... நான் ஆண் மகனில்லையா? அப்ப நானும் கெட்டவன் தானா?" என்றவனின் கேலியில் இளவஞ்சிக்கு சிரிப்பு வந்தது.

"தட்ஸ் குட் இப்படித்தான் சிரித்த முகமாய் இருக்க வேண்டும். கொஞ்சம் கவுன்சிலிங் கொடுத்தால் சரியாக போய் விடும். அதே மாதிரி நான் கொடுக்கும் மாத்திரையையும் சரியாக எடுத்துக் கொண்டால் இந்த பிரச்சினை எல்லாம் தூசி மாதிரி பறந்து ஓடிப் போய்விடும்."

"வஞ்சி, வருகிற இரண்டாம் தேதி எனக்கும் அமுதாவிற்கும் கல்யாணம்."

"ஹேய்.....புகழ் கையை கொடுங்க. கங்கிராட்ஸ்...... இன்னும் ஒரு மாதம் கூட இல்லையே?"

"ஆமாம் வஞ்சி அந்த சோகக் கதையை ஏன் கேட்கிற? எங்க வீட்டில் ஒரு கிழவி இருக்கு. அதுக்கு நான் எப்போது கல்யாணத்திற்கு சம்மதம் சொல்வேன் என்னை உடனே சம்சாரி ஆக்கலாம் என்று காத்துகிட்டு இருந்தது. இப்ப சம்மதம் கிடைத்ததும் அதுக்கு சும்மா இருக்க முடியலை. பேரன் கல்யாணத்தைப் பார்த்தே ஆகணும் என்று ஒரே பிடிவாதம். நானும் ஏன் கிழவி உயிரை வாங்கறன்னு கேட்டா, என்ன தெரியுமா சொல்லுது? எவ்வளவு நாள் தான் டிவி சீரியல் பார்த்து பொழுது ஓட்டுறது. ஒரு சேஞ்சுக்கு உன் கல்யாணத்தைக் காரணமா வச்சு எனக்கு கொஞ்சம் டைம் பாஸ் ஆகும்ன்னு சொல்லி என்னை கவுத்திடுச்சு. சோ.... சாட்" என்று போலியாய் வருத்தப் பட்டவனைக் கண்டு சிரிப்பு வராமல் இருந்தால் தான் அதிசயம்.

வாய் விட்டு சிரித்தவளை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டு இருந்தான் நட்புக்கு இலக்கணமாய் நடந்து கொண்ட புகழ்.

இளவஞ்சி அமுதாவிடம் திருமணத்திற்கு வாழ்த்துக் கூறியவள் தானும் புகழும் எங்கே சென்று வந்தோம்? தனக்கு ஏற்பட்ட பிரச்சனை எல்லாம் அவளிடம் கூறினாள். அமுதா அவளை அணைத்துக் கொண்டாள்.

"இளா, இதை எல்லாம் என்னிடம் சொல்ல வேண்டும் என்ற அவசியம் இல்லை. இருந்தாலும் உன் நட்பிற்காக நீ சொல்லி இருக்கலாம். எனக்கு என் தோழி பற்றியும் தெரியும், என் புகழை பற்றியும் தெரியும்."

இப்பொழுது இளவஞ்சி அமுதாவை தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டாள்.

ஒரு பக்கம் சிகிச்சை நடந்து கொண்டு இருக்க மறு பக்கம் இளவஞ்சி மித்ராதனுடன் மனதளவில் இன்னும் ஒன்றினாள். தன் சிறு வயதில் நடந்த நிகழ்வுகளை எல்லாம் பகிர்ந்து கொண்டவள், தன் விருப்பு வெறுப்புகளை மறைக்காமல் அவனிடம் கூறினாள். அதே போல் அவனுக்கு பிடித்தது பிடிக்காதது எல்லாவற்றையும் கேட்டுத் தெரிந்து கொண்டாள். இந்த சிகிச்சை விஷயம் தவிர இருவருக்கும் இடையில் வேறு எந்த ஒளிவும் மறைவும் இல்லை.

இந்நிலையில் தான் எழில் தன் திருமண நாள் விழாவுக்கு மித்ராதனையும் இளவஞ்சியையும் அழைத்து இருந்தான். இளஞ்சிவப்பு சுடிதாரில் தேவதை போல் இருந்த மனைவியைக் கண்டு மனம் மயங்கி தான் போனது மித்ராதனுக்கு. அவள் அருகில் வந்தவன் அவள் நெற்றியில் அழுந்த முத்தமிட்டான். அவனின் இதழ் ஒற்றல் இளவஞ்சியின் ஆழ் மனதை ஊடுருவி சென்றது.

கண் மூடி இருந்தவளை தோள் தட்டி அழைத்தவன், "வா.... போகலாம்" என்று அழைத்துக் கொண்டு எழிலின் வீட்டிற்கு சென்றான்.

நண்பர்கள் அனைவரும் கூடி இருந்ததால் கிண்டலுக்கும் கேலிக்கும் அங்கே பஞ்சம் இல்லை. இளவஞ்சியோ எழிலின் மனைவி சித்ராவுடன் அமர்ந்து கொண்டாள். அவள் மடியில் எழில் - சித்ரா தம்பதியின் மகள் இருந்தாள். ஆசையுடன் அந்த சிறுமியை கொஞ்சியவளைக் கண்ட சித்ரா,
"இவ்வளவு ஆசை இருந்தால் சீக்கிரம் ஒரு குழந்தை பெற்றுக் கொள்ளுங்கள் இளா"

சித்ரா கூறியது கேட்டு இளவஞ்சியின் கன்னம் வெட்கத்தில் சிவந்தது. அவளையும் அறியாமல் அவள் கண்கள் கணவனைத் தேடியது. அந்த நேரம் அவனும் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான். அவனின் பார்வையில் மேலும் சிவந்தவள் அவசரமாய் தலை குனிந்தாள்.

உணவு உண்டு முடிந்ததும் நண்பர்களுக்குள் அரட்டை களை கட்டியது. ஆளாளுக்கு ஒன்றை செய்ய மற்றவர்கள் அதைப் பார்த்து ரசித்து சிரித்து கொண்டு இருந்தார்கள். அப்பொழுது எழில் கிடார் ஒன்றை எடுத்து வந்து மித்ராதனை வாசிக்க சொன்னான்.

"மித்ரா.... உன் பேவரிட் சாங் வாசிடா. எவ்வளவு நாள் ஆச்சு உன் மியூசிக் கேட்டு..."

மற்ற நண்பர்களும் ஆமாம் என்று குரல் எழுப்பினர்.

"அது மட்டும் வேண்டாமே" என்றவன் வேறு பாட்டு வாசிக்க ஆரம்பித்தான். இளவஞ்சி அவன் வாசிக்கும் அழகில் மனம் மயங்கி நின்றாள். மித்ராதன் வாசித்து முடித்ததும் எல்லோரும் கை தட்டி பாராட்டினர். அதன் பின்னரும் அவனை அந்த பாடலை வாசிக்க சொல்ல அவனோ மனைவியை பரிதாபமாகப் பார்த்தான்.

"மித்து, ஏன் யோசிக்கிறிங்க? அவ்வளவு சொல்றாங்க இல்ல?"

"பேபி அவங்க என்ன வாசிக்க சொன்னாங்கன்னு தெரிஞ்சா அப்புறம் நீ ரொம்ப வருத்தப்படுவ.... வேண்டாம் பேபி" அவளுக்கு மட்டும் கேட்கும் குரலில் சொன்னான்.

"பரவாயில்லை மித்து வாசிங்க..... நான் ஒண்ணும் சொல்ல மாட்டேன்."

வேறு வழியின்றி மித்ராதன் அந்த பாடலை வாசித்தான். அதைக் கேட்ட இளவஞ்சி கண்கள் வெளியில் தெறித்து விடுவதை போல் அகல விரித்து அவனைப் பார்த்தாள்.

"மன்றம் வந்த தென்றலுக்கு மஞ்சம் வர நெஞ்சம் இல்லையோ
அன்பே என் அன்பே
தொட்டவுடன் சுட்டதென்ன கட்டழகு வட்ட நிலவோ
கண்ணே என் கண்ணே
பூபாளமே கூடாதெனும் வானம் உண்டோ சொல்....

தாமரை மேலே நீர்த்துளி போல் தலைவனும் தலைவியும் வாழ்வதென்ன
நண்பர்கள் போலே வாழ்வதற்கு மாலையும் மேளமும் தேவையென்ன
சொந்தங்களே இல்லாமல் பந்த பாசம் கொள்ளாமல்
பூவே உன் வாழ்க்கை என்ன சொல்

மேடையை போலே வாழ்க்கை அல்ல நாடகம் முடிந்ததும் விலகி செல்ல
ஓடையை போலே உறவும் அல்ல பாதைகள் மாறியே பயணம் செல்ல
விண்ணோடு தான் உலாவும் வெள்ளி வண்ண நிலாவும்
என்னோடு நீ வந்தால் என்ன"

ஏன் அந்த பாடல் வேண்டாம் என்று மித்ராதன் கூறினான் என்று இப்பொழுது அவளுக்கு புரிந்தது. அவர்களின் வாழ்க்கையை சொல்வது போல் அல்லவா இருக்கிறது அந்த பாடல். அதிலும் அவன் அந்த பாடல் வரிகளை இசை கருவியில் மீட்டினாலும் அவன் கண்கள் அவனையும் அறியாமல் அந்த பாடல் வரிக்கான பொருளை அவளிடம்

யாசித்துக் கொண்டு தான் இருந்தது. அவனின் யாசிப்பில் உள்ளம் உருகி நின்றவளின் கண்கள் காதலை பிரதிபலித்தது.

அவன் வாசித்து முடித்ததும் எல்லோரும் கை தட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். இளவஞ்சிக்கோ கணவனை கட்டித் தழுவிக் கொள்ள வேண்டும் என்று மனதில் எழுந்த ஆவலை முயன்று கட்டுப்படுத்திக் கொண்டாள்.

வீட்டிற்கு வந்ததும் அவனை ஆரத்தழுவி தன் மகிழ்ச்சியை காட்டியவள்,
"சோ ஸ்வீட் மித்து.... எவ்வளவு அழகா வாசிக்கிறிங்க."
மனதார அவனைப் பாராட்டினாள். அவனும் சிறு புன்னகையுடன் அதை ஏற்றுக் கொண்டான்.

பின் அவள் முகத்தை தன் இரு கரங்களில் ஏந்தி அவள் கண்களுக்குள் கூர்ந்து பார்த்தவன்,
"பேபி, உனக்கு எதுவும் கஷ்டமாக இல்லையே? அதனால் தான் நான் ரொம்ப யோசித்தேன். நீயே கேட்கவும் தான் வேறு வழியின்றி..."

எப்பொழுதும் தன் மனைதை பற்றியே யோசிக்கிறானே இவனுக்கு என்று ஒரு மனம் இருக்காதா? இளவஞ்சியின் மனதில் வலி ஏழுந்தது.

"மித்து, எப்போதும் என்னை பற்றியே யோசிக்கிறிங்களே, உங்களை பற்றி யோசிக்க மாட்டிங்களா? நான் இப்படி இருப்பது உங்களுக்கு.."

"ஹேய் பேபி, உன்னைப் பற்றி யோசிக்காமல் வேறு யாரைப் பற்றி நான் யோசிக்க போகிறேன்? நீ தேவதை பேபி... உன் தைரியம், யாருக்காவது ஏதாவது ஒன்று என்றால் அதை கண்டு பொங்கி எழும் உன் குணம், இப்படி உன்னைப் பற்றி சொல்லிக் கொண்டே போகலாம். அத்தகைய குணம் கொண்ட தேவதையைப் போற்ற வேண்டாமா? உன்னைப் பற்றி யோசிக்காமல்....., உன்னை நேசிக்காமல்..... என்னால் எப்படி இருக்க முடியும்?" என்ற மித்ராதன் இளவஞ்சியை அணைத்துக் கொண்டான்.

கணவனின் பதிலில் மனதின் வலி பறந்து விட அவன் அணைப்பில் இன்னமும் ஒன்றிக் கொண்டாள்.

ஒரு மாதம் என்று இருந்த புகழ் - அமுதா திருமண நாளும் வந்தது. மிக எளிமையாக திருமணம் நடத்த வேண்டும் என்று புகழ் சொல்லி இருந்தபடியால் அனாவசிய ஆடம்பரம் அங்கே தவிர்க்க பட்டது. மித்ராதனும் இளவஞ்சியும் தம்பதி சமேதராய் வந்து மணமக்களை வாழ்த்தினர். அன்று மருத்துவ மனையில்  நடக்க இருந்த சத்திர சிகிச்சை அனைத்தும் இலவசமாக செய்து கொடுக்க சொல்லி கட்டளையிட்டு இருந்தான் புகழ்.

இளவஞ்சியிடம் சொன்னது போல் புகழ் அவன் உயிராக நினைத்த அவனின் மனைவி அமுதாவிடம் கூட இளவஞ்சியின் மனநிலையைப் பற்றிச் சொல்லவில்லை. அந்த அளவுக்கு அவளின் நட்பைப் போற்றினான்.

சிகிச்சை மேற்கொண்ட இளவஞ்சியின் மனநிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்பட்டது. முன்பு போல் ஆண்களைக் கண்டால் வெறுப்போ ஒதுக்கமோ வருவதில்லை. பெண்களிடம் பழகுவது போல் இயல்பாக அவளால் பழக முடிந்தது. அதற்கு முக்கிய காரணம் அவள் கணவனே என்றால் அது மிகையாகாது. அந்த அளவிற்கு அவளுக்கு பாதுகாப்பு உணர்வை அவன் ஏற்படுத்தி இருந்தான்.

ஆணுக்கும் அன்பு உண்டு, தாய்மை உணர்வு உண்டு என்பதை அவனிடத்தில் அவள் கண்டாள். அவனின் காதலில் கனிந்த அவள் முகம் எப்பொழுதும் புன்னகையை சிந்தியபடி இருந்ததால்  அவள் அழகு முன்பை விட கூடித் தெரிந்தது. தன் கணவனுக்கு தன்னை பரிசளிப்பதற்கான நேரம் வந்து விட்டதை உணர்ந்த இளவஞ்சி அதற்கு தங்களது எட்டாவது திருமண நாளைத் தேர்ந்தெடுத்தாள்.

மித்ராதன் - இளவஞ்சியின் எட்டாவது திருமண நாள் விழா கொண்டாட்டத்திற்காக அவர்களின் வீட்டு தோட்டம் வண்ண விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருந்தது. இவ்வளவு நாள் கொண்டாடாமல் இருந்ததற்கு எல்லாம் சேர்த்து வைத்து இந்த தடவை இளவஞ்சி திருமண

நாளைப் பெரிதாக கொண்டாட வேண்டும் என்று ஆசைப்பட்டாள். மனைவி சொன்ன பிறகு அதில் யோசிக்க ஒன்றும் இல்லையே? அவள் எண்ணப்படி அவன் செயலாற்றினான்.

விழாவிற்காக மித்ராதன் தேர்ந்தெடுத்த அழகிய பட்டுப் புடவையில் வைர நகைகள் மின்ன வந்த இளவஞ்சியின் அழகை விழியகற்றாது பார்த்து நின்றான். அவளுக்கு இணையாக கோட் சூட் அணிந்து கம்பீரமாக வந்து நின்றவனைக் கண்டு, அவள் மனமும் மயங்கியது. அவன் அழகு முதன் முதலாக அவள் கருத்தில் விழுந்து மனதில் பதிந்தது. ஏனோ அன்று தான் திருமணம் ஆனது போல் இருவர் மனமும் வானில் பறந்தது.

விழாவிற்கு வந்த ஆனந்தி ஒரு ஓரத்தில் அமர்ந்து விழாவை வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள். தூரத்தில் இருந்து அவளையே கவனித்துக் கொண்டு இருந்தான் இளஞ்செழியன். உயரமாக இருந்தாலும் அந்த வயதிற்கே உரிய சதைப் பிடிப்பு இல்லாமல் வயிறு மட்டும் குழந்தை உண்டாகி இருப்பதற்கு அடையாளமாய் பெரிதாக இருந்தது. உதடு சிரித்தாலும் கண்கள் பயத்தைப் பிரதிபலிப்பதாய் இருந்ததைக் கண்டு செழியனுக்கு மனம் வலித்தது. அவளைக் கண்ட உடன் மனதில் ஏதோ இனம் புரியாத ஒரு பரபரப்பு. அவளிடம்  பேச வேண்டும் என்று எண்ணி அவளிடம் சென்றான்.

"ஹாய்" தன் காதுக்கு அருகில் ஒலித்த குரலில் பதறி திரும்பியவள், அங்கு ஒரு ஆண்மகன் அமர்ந்து இருப்பதை உணர்ந்து எழ முயன்றாள்.

"ஹேய்..... ரிலாக்ஸ்..... உன் பேர் ஆனந்தி தானே?"
ஆம் என்று தலையை ஆட்டியவள் குழப்பமாய் அவனைப் பார்த்தாள்.

"நான் இளவஞ்சியின் தம்பி"

"ஓ....  அண்ணியின் தம்பியா? வேறு யாரோ என்று பயந்து விட்டேன்."

சகோதரியின் பேரைக் கேட்டதும் தன்னுடன் இயல்பாய் பேச ஆரம்பித்தவளைக் கண்டு கொஞ்சம் நம்பிக்கை வந்தது அவனுக்கு. அதிலும் அவள் அண்ணி என்று தன் சகோதரியை அழைத்தது அவனுக்கு புன்னகையை வரவழைத்தது.

"அண்ணியா .... அப்படி என்றால் பரவாயில்லை. நான் கேட்க வந்த விஷயம் ஈசியாக முடியும்" என்றவனைப் புரியாமல் பார்த்தாள் ஆனந்தி.

"நான் உன்னை திருமணம் செய்ய ஆசைப்படுகிறேன் ஏஞ்சல்..... உனக்கு சம்மதமா?"

அவனின் பேச்சில் திடுக்கிட்டவள் வேகமாக எழுந்து நடக்கும் போது கால் இடறி விழப் பார்த்தாள். அடுத்த நொடி செழியன் அவளை கீழே விழாமல் பிடித்து இருந்தான். அவனின் கண்களை நேருக்கு நேராக சந்தித்த ஆனந்தியின் மனம் மெல்ல அவனிடத்தில் மயங்கியது. என்ன தான் குழந்தையை சுமந்தாலும் மனதளவில் அவள் ஒரு கன்னிப் பெண்ணே. அவளுக்கும் காதல் கல்யாணம் என்று ஏகப்பட்ட கனவுகள் இருந்தது. அதை எல்லாம் அக்காள் கணவன் என்ற காமுகன் கானல் நீராக்கினான். அவனின் காமத்திற்கும் அவசரத்திற்கும் உண்டான குழந்தையை அவள் சுமந்தாலும் அவள் மனம் காதலுக்கு ஏங்கியது அவளுக்கு மட்டுமே தெரியும்.

செழியன் அவள் பார்வையிலேயே அவள் மனதைப் புரிந்து கொண்டவன் அவளை நேராக நிற்க வைத்தான்.
"அக்காவிடம் நம் திருமணம் பற்றி பேசலாமா?"

அவனின் கேள்வியில் அது வரை சஞ்சரித்துக் கொண்டு இருந்த மாய வலை அறுந்தது ஆனந்திக்கு.

"வேண்டாம்..... இது நடக்காது" என்று கூறியவள் வேகமாக முன்னே நடந்தாள். செழியன் புன்னகையுடன் அவள் போவதையே பார்த்துக் கொண்டு இருந்தான்.
விழா முடிந்து தன் அறைக்கு வந்த மித்ராதன் திகைத்துப் போய் அப்படியே நின்றான். அவனால் தான் காணும்

காட்சியை நம்ப முடியவில்லை. பூ அலங்காரத்துடன் இருந்த கட்டிலும் அதன் அருகே இவன் வருகை கண்டு கண்களில் காதலை சுமந்து கொண்டு அவனையே கண் இமைக்காமல்பார்த்துக் கொண்டு இருந்த மனைவியையும் பார்த்தவன் நம்ப முடியாமல் அவளருகே வந்தான். இதற்காக தான் அவனை மதியத்தில் இருந்து அறைப் பக்கம் வர விடாமல் செய்தாளா?

"பேபி.... இது எல்லாம் என்ன.... ? நான் தான் வேண்டாம் என்று சொன்னேனே?"

அவளின் பதிலை எதிர்பாராமல் பூ அலங்காரங்களை கழட்ட தொடங்கினான். அவன் கை பற்றி தடுத்த இளவஞ்சி, "மித்து...." என்றாள் சிணுங்கலாய். அவள் சிணுங்கல் மொழி கூட அவனால் உணர முடியாமல் காரியத்தில் கண்ணாய் அவன் இருக்க, வேறுவழியின்றி அவனைத் தன்புறம் திருப்பியவள் அவனை இறுக அணைத்துக் கொண்டாள்.

அன்றைய நாள் நினைவில் அவன் "வேண்டாம் பேபி....." என்க, அவளோ "வேண்டும்....." என்று அவன் மார்பில் முகம் புதைத்துக் கொண்டாள். நம்ப முடியாமல் ஒற்றை விரல் கொண்டு அவள் முகத்தை நிமிர்த்தியவன் அவள் கண்களை ஊடுருவிப் பார்த்தான். அவனின் பார்வையை தாங்க முடியாமல் முகம் செவ்வானமாக மாற மீண்டும் அவன் மார்பில் முகம் புதைக்க இடம் தேடினாள் அவன் மனையாள். ஆனாலும் மித்ராதன் அவளுக்கு பிடித்து இருக்கிறதா? சம்மதமா? என்று கேட்டுக் கொண்டே இருக்க, ஒரு கட்டத்திற்கு மேல் பொறுக்க மாட்டாதவளாய் தன் இதழ் கொண்டு அவன் வாயை மூடினாள். அதன் பின்னே அங்கே மௌனமான காதல் நாடகம் அரங்கேறியது. காத்து இருந்தவனின் காத்திருப்பு வீண் போகவில்லை.

"பேபி..... செம ஸ்பீட்.... இவ்வவளவு நாள் இதை எல்லாம் எங்கே வச்சு இருந்தே?" கண் சிமிட்டி சிரித்தான் மித்ராதன்.

"மித்து....." அழகாய் வெட்கப்பட்டாள் இளவஞ்சி. அவளின் வெட்கத்தை ஆசை தீர பார்த்துக் கொண்டு இருந்தான்

அந்த அன்பு கணவன்.

"எனக்காக சகித்து கொண்டாயா பேபி? உனக்கு வருத்தம் ஒன்றும் இல்லையே?"

அவளை தன் நெஞ்சில் சரித்து அவள் தலை கோதியபடி கேட்டான்.

"ஏன் மித்து, நான் நடந்து கொண்டது உங்களுக்கு கடனே என்று கடமைக்காக மட்டும் தான் இருந்ததா? அதில் காதல் இல்லையா?"

"சேச்சே.... நான் அப்படி சொல்லலை பேபி.... உனக்கு கஷ்டமாக இருந்ததா என்று தான்....."

"நான் உங்களிடம் ஒன்று சொல்வேன் என்னை திட்டக் கூடாது?"

"உன்னைப் போய் நான் திட்டுவேனா பேபி.... என்ன சொல்?"

அவள் மூக்கை ஆட்டியபடி விளையாட்டாய் வினவினான்.

புகழிடம் சிகிச்சை எடுத்துக் கொண்டது, தன் ஆழ்மனக் காயங்கள் எல்லாவற்றையும் அவனிடம் சொன்னாள். அவன் எதுவும் பேசாமல் அவளையே பார்த்துக் கொண்டு இருந்தான்.

"மித்து.... நான் உங்களிடம் சொல்லாமல் இருந்தது தவறு தான். நான் சொல்லி இருந்தால் நீங்கள் வேண்டாம் என்று தான் தடுத்து இருப்பிங்க. நீங்க என் மேல் வைத்த காதலுக்கு என் தாய்மைக்கு கொடுத்த மரியாதைக்கு என்னால் என்னை கொடுத்தால் மட்டுமே ஈடாகும். ப்ளீஸ் மித்த .... தயவு செய்து என்னை புரிந்து கொள்ளுங்கள்."

மித்ராதனோ அவளை உணர்ச்சி இல்லாத பார்வை ஒன்றை பார்த்தான்.

"என்னை அந்த அளவுக்கு கேவலமாக எண்ணி விட்டாயா? வெறும் உடல் கவர்ச்சிக்காக மட்டும் நான்

ஆசைப்படுவதாக எண்ணி விட்டாயா?"

"இல்லை மித்து என் நிலையில் இருந்து பாருங்க, எனக்கு உங்களுடன் வாழ முடியாமல் எத்தனை கஷ்டமா இருக்கு தெரியுமா? சரி.... உங்களுக்காக இல்லை எனக்காக.... எனக்காக மட்டுமே நான் ட்ரீட்மென்ட் போனேன் போதுமா? எனக்கு உங்களுடன் வாழ வேண்டும் என்று ஆசையா இருக்கு மித்து...... நிறைய குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டும் மித்து." என்று கதறி அழுதவளைக் கண்டு அவனால் கோபத்தை இழுத்துப் பிடித்து வைத்திருக்க முடியாமல், அவளைத் தன்னுடன் சேர்த்து அணைத்தான்.

"இல்லை டா பேபி.... நான் அப்படி சொல்லவில்லை." என்று அவள் முகம் முழுவதும் தன் இதழை ஒற்றி முத்தத்தால் மன்னிப்பு கேட்டான்.

"ம்...." என்று அவன் மனையாள் அழுகையைக் குறைத்தாள்.

"ஏன் பேபி இப்படி ஒரு எண்ணம் உனக்கு வந்தது? எந்த ஒரு விசயமும் நாம் பார்க்கும் கண்ணோட்டத்தில் தான் இருக்கிறது. உனக்கு ஒரு கதை தெரியுமா? தருமரின் பார்வையில் அனைவரும் நல்லவர்களாக தான் தெரிந்தார்களாம். ஆனால் துரியோதனன் பார்வையில் அனைவரும் கெட்டவர்களாக தான் தெரிந்தார்களாம். அனைத்தும் நாம் பார்க்கும் பார்வையில் தான் இருக்கிறது கண்ணம்மா"

"நீங்கள் சொல்வது சரி தான் என்றாலும், ஆண்கள் பெண்களுக்கு எதிராக செய்யும் வன்முறைகள் தினமும் நியூஸ் பேப்பரில் வருகிறதே, அப்போ அது எல்லாம் பொய்யா?"

"இல்லை பேபி, அப்படி என்று நான் சொல்ல மாட்டேன். ஆண்களிலும் நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று தான் சொல்கிறேன். ஏன் உன்னைச் சுற்றி ஆண்கள் யாராவது தவறானவர்கள் இருக்கிறார்களா? இல்லை தானே.... மீடியாக்களுக்கு வேறு வேலை என்ன? எப்பொழுதும் கெட்டதை போகஸ் பண்ணுவதே அவர்களுக்கு

வேலையாய் போச்சு. எத்தனை ஆண்கள் நல்லவர்கள் இருக்கிறார்கள் தெரியுமா? ஏன் அவர்களை எல்லாம் மீடியா போகஸ் பண்ணுவது இல்லை. அதைக் காட்டினால் யார் பார்க்கிறார்கள்? அதனால் தான் அவர்களும் பரபரப்பிற்கு இந்த மாதிரி செய்தி போடுகிறார்கள். நாம் நல்லதை மட்டுமே எடுத்துக் கொள்வோம் பேபி. கெட்டதை விட்டுவிடுவோமே? அன்னப் பறவை போல் நாமும் வாழ கற்றுக் கொள்ள வேண்டும் பேபி. அதையும் மீறி இந்த மாதிரி ஆண்களும் இருக்க தான் செய்கிறார்கள். அவர்களை என்ன செய்ய? சட்டம் கடுமையாக்கப்பட்டால் ஒழிய இந்த தவறு நடப்பதை தடுக்க இயலாது." நீளமாய் பேசியவனைப் பிரமிப்பாய் பார்த்தாள் இளவஞ்சி.

"ஹேய்.... உட்கார்ந்து கொண்டே தூங்குகிறாயோ?"

"இல்லை புகழிடம் ட்ரீட்மென்ட் போனது வேஸ்ட்ன்னு நினைத்துக் கொண்டு இருந்தேன். பேசாமல் உங்களிடம் ட்ரீட்மென்ட் எடுத்து இருக்க வேண்டும். சூப்பர் மித்து." அவனை கிண்டல் செய்யும் பாவனையில் தன் பிரமிப்பை மறைத்தாள்.

"கொழுப்பா உனக்கு?"

அடிக்க கையை ஓங்கியவனிடம் இருந்து தப்பிக்க அவன் மார்பிலேயே தஞ்சம் புகுந்தாள் அவன் மனையாள். அவளின் செயலில் மீண்டும் நெகிழ்ந்தவன் சற்று முன் கற்றுக் கொடுத்த பாடத்தை வேறு செய்முறையில் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தான். அவளும் அதை ஒழுங்காக சிரத்தையுடன் கற்றுக் கொண்டாள்.

சில மாதங்களுக்குப் பிறகு.......

"இளமாறன், இளவரசன், இளவரசி" என்று தங்கள் குழந்தைகள் காதில் சொன்ன மித்ராதனும் இளவஞ்சியும் ஒருவரை ஒருவர் பார்த்து புன்னகைத்துக் கொண்டனர்.

ஆம்.... இளவஞ்சிக்கு ஒரே பிரசவத்தில் மூன்று குழந்தைகள் பிறந்தது. பெரியவர்கள் அனைவரும்

சந்தோசத்தில் மிதக்க, மித்ராதன் மனைவியை எண்ணி பெருமிதம் அடைந்தான்.

"மித்து..... உங்கள் வாழ்க்கையை எட்டு ஆண்டுகள் பாழாக்கியதற்கு என்னால் முடிந்த சிறிய பரிசு.... பிடித்து இருக்கிறதா மித்து?"

கண்களில் காதல் வழிய சொன்னவளை தன்னுடன் அணைத்துக் கொண்டான்.

"ரொம்ப ரொம்ப பிடிச்சு இருக்கு பேபி." என்றவனால் சந்தோசத்தில் எதுவும் பேச முடியவில்லை. தன் தாய்மைக்கு மரியாதை செய்தவனுக்கு தன்னால் முடிந்த அளவு பதில் செய்ய வேண்டும் என்று அவள் மனதில் எழுந்த தாகம் அவளுக்கு இப்பொழுது தான் அடங்கியது. அவனில் அணைப்பில் கட்டுண்டு எல்லை இல்லாத நிம்மதி அடைந்தாள்.

"அத்தான்.... போதும் போதும்.... எல்லோரும் உங்களை தான் பார்க்கிறார்கள்? நீங்க விட்ட ஜொள்ளில் வீடே மிதக்குது?" செழியன் மித்ராதனை கிண்டல் அடித்தான். அன்றைய நாள் நினைவில் மனைவியையே வைத்த கண் வாங்காமல் பார்த்துக் கொண்டு இருந்த மித்ராதன் மைத்துனன் கேலியில் நிமிர்ந்தான். இளவஞ்சியும் தம்பியின் கேலியை உணர்ந்து ஓடிவிட்டாள்.

"எப்படி... நீ ஆனந்தியைப் பார்த்து விடற ஜொள்ளில் உன் ஏரியாவே மூழ்கி போய் விட்டதாமே அது போலவா?" பதிலுக்கு மைத்துனன் காலை வாரினான் மித்ராதன்.

"அத்தான் ஆளை விடுங்க...." என்றவன் ஆனந்தியின் சேலை முந்தானையில் தன்னை மறைத்துக் கொண்டான்.

"என்னங்க இது விடுங்க? எல்லோரும் பார்க்கிறாங்க பாருங்க..." அழகாய் வெட்கப்பட்டாள் ஆனந்தி.

"ஆனந்தி...." என்று செழியன் அவள் அருகில் வந்து கை பிடிக்க,

"அய்யோ அத்தான் விடுங்க....."

"விடுவதற்கா உன்னை போராடி கைப்பிடித்தேன்?"

மையலுடன் கூறியவனைக் கண்டு ஆனந்தியும் மயங்கினாள். திருமணமே செய்து கொள்ள முடியாது என்று பிடிவாதமாக இருந்தவளை, தன் பேச்சால் பாதி மாற்றி, இளவஞ்சியின் மூலம் முழுதாக கரைத்தான். அதன் பின்னரே ஒரு வழியாய் அவளும் சம்மதித்தாள். செழியன் அவளுக்கு குழந்தை பிறக்கும் முன் திருமணம் நடக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தான். ஏனெனில் குழந்தை அவன் குழந்தையாக பிறக்க வேண்டும் என்று விரும்பினான்.

அரை மனதாய் சம்மதித்து இருந்த ஆனந்தியின் மனம், அவன் பேச்சில் அப்படியே அவன் காலடியில் விழுந்தது. அவர்களின் பெண்ணரசிக்கும் ஓராண்டு முடிந்து மூன்று மாதங்கள் ஆகிறது.

புகழும் அமுதாவும் விழாவுக்கு வந்து இருந்தனர். தோழியை கணவன் மற்றும் குடும்பம் சகிதம் பார்ப்பதற்கு இருவருக்கும் மகிழ்ச்சியாய் இருந்தது.அதற்கு தானே அந்த நண்பனும் பாடுபட்டான். இளவஞ்சிக்கு பயிற்சி முடிய இன்னும் ஒரு வருடம் இருக்கிறது. மித்ராதன் மனைவிக்கென தனியாக மருத்துவமனை கட்டிக் கொடுப்பதாக கூறிய போது இளவஞ்சி மறுத்து விட்டாள். புகழின் மருத்துவ மனையிலேயே தொடர்ந்து வேலை செய்யப் போவதாக கூறி விட்டாள். தன் வாழ்க்கையை மீட்டெடுக்க உதவி செய்த நண்பனுக்கு, அவனின் நட்பிற்கு அவள் தகுந்த மரியாதை செய்ய நினைத்து தான் அவ்வாறு கூறியது. அதைக் கேள்விப் பட்டதும் புகழ் மனம் நெகிழ்ந்து போய்விட்டான். பேர் வைக்கும் வைபவம் மகிழ்ச்சியாய் நடந்து முடிந்தது.

அருணகிரி, அமராவதி, குணவதி மூவரும் குழந்தைகள் யார் ஜாடை என்று விவாதத்தில் ஈடுபட்டு இருக்க மெதுவே மித்ராதன் மனைவியை தங்கள் அறைக்கு அழைத்து வந்தான்.

"என்ன மித்து இது? குழந்தைகள் கீழே இருக்கு? பசியில் அழப் போறாங்க" என்று கேட்டவளின் கையில் பெரிய சாக்லேட் கட்டியை வைத்தான். அதைப் பார்த்ததும் இளவஞ்சியின் கண்கள் பெரிதாக விரிந்தது.

"தேங்க்ஸ் மித்து" என்று ஆசையாய் அதைப் பிரிக்க போனவளை தடுத்து அவன் பிரித்தான். சாக்லேட்டின் ஒரு துண்டை உடைத்தவன் அவளைப் பார்க்க, அவளோ அவனை ஆர்வமாய் பார்த்தாள். அவளின் ஆர்வத்தை கண்டவன் அதை தன் வாயில் போட்டு விட்டு நமட்டு சிரிப்பு ஒன்றை மனைவியைப் பார்த்து உதிர்த்தான்.

"மித்து...... எனக்கு இல்லையா?" சிறுபிள்ளையாய் சிணுங்கினாள் அவன் மனைவி என்னும் குழந்தை.

"உனக்கு இல்லாததா பேபி?" என்று சொன்னவன் அவள் இதழ் நோக்கி குனிந்தான். நேரம் சென்று கொண்டு இருக்க அவனோ அவளை விடுவிக்க மனம் இல்லாதவனாய் அவள் இதழில் மயங்கி இருக்க, அவள் தான் சுய நினைவுக்கு வந்தாள்.

"என்ன மித்து இது?"

அவளின் வார்த்தைகளில் இருந்த கோபம் குரலில் இல்லை. சாக்லேட்டின் தித்திப்பை விட அவன் தந்த முத்தத்தின் தித்திப்பு அவளுக்கு இனிமையாய் இனித்தது. மனம் மயங்கி, அவன் சட்டை பொத்தானை திருகியபடி,
"மித்து, அத்தை மாமா அம்மா என்ன நினைப்பாங்க?"

"அவங்களும் இதையெல்லாம் கடந்து தான் வந்திருப்பாங்க." என்றவன் மேலும் அவள் இதழை நாட அவனைத் தள்ளி விட்டவள்,
"குழந்தைகள் பசியில் அழப் போறாங்க."

"அதெல்லாம் அழ மாட்டங்க. அவங்களுக்கு தெரியும் அப்பாவுக்கும் அம்மாவுக்கும் முக்கியமான வேலை இருக்குன்னு." என்றவன் அவளின் இதழில் அழுத்தமாக தன் முத்திரையை பதித்தான். அவளும் அதில் ஒன்றி

போனவளாய் அவன் பின்னங் கழுத்தில் கைகள் பின்ன அவன் முகத்தை தன் பக்கமாய் வளைத்தாள்.

இருவரும் மயங்கி நின்ற வேளையில் குழந்தைகளில் ஒன்று அழும் குரல் அந்த தாய்க்கு மட்டுமே கேட்டது. சட்டென்று உணர்வுகள் அறுந்து விழ கணவனை தள்ளி விட்டவள், "குழந்தை அழுது மித்து" என்று கீழே செல்ல முற்பட்டாள்.

அவள் செய்கையில் அவன் முகம் சுருங்க வேறு பக்கம் திரும்பிக் கொண்டான். கீழே செல்ல எத்தனித்தவள் அவன் செய்கையில் மீண்டும் அவன் அருகே வந்து அவன் கன்னத்தில் அழுந்த முத்தமிட்டு, "சாரி மித்து..... இப்போதைக்கு இதை வச்சுக்கோங்க. நைட் பலமா ட்ரீட் தர்றேன்." என்று கண் சிமிட்டி சொன்னவள் சிட்டாய் பறந்து விட்டாள்.

மனைவியின் செய்கையில் திகைப்புற்று கன்னத்தை தடவிக் கொண்டு அவளைப் பார்த்தவன் மூளைக்கு, அவள் சொல்லியது மிகவும் தாமதமாய் புரிந்தது. அது புரிந்ததும் அவன் முகத்தில் புன்னகை மீண்டது. கீழே படியில் இறங்கிச் செல்லும் மனைவியை பார்த்துக் கொண்டு இருந்தவன் என்றும் போல் இன்றும் அவள் அழகில் மயங்கி நின்றான். இரும்பு போன்றவளை தன் அன்பால் வளைத்த அந்த காதல் கணவன் வாழ்வில் இனி என்றும் இன்பம் மட்டுமே!!!

***** வேண்டுதல் நிறைவேறியது *****